௨௰௪

கந்தசாமி பிள்ளை மெஞ்ஞான

பாண்டி வெண்பா மாலைக்கு

பெண்ணும் பதிப்பிக்க

கிரந்தம் ... 4.

வைத்தியநாத செட்டியார்

0-12M.K54,N
N04
11942
~~11924~~

ஓம்

சுந்தரகணேசஸஹாயம்

REGISTERED
MADRAS

மதுரைமாநகரம்

சுந்தர ஜெயவீர சூர தீர கவிராஜ

கந்தசாமிப்பிள்ளை அவர்களால்,

இயற்றப்பட்ட

# மானிட வாழ்வானந்த மென்னும்

# மதிப்பிரகாசவிளக்கம்.

T. வரதராஜுலுசெட்டியார்

அவர்களால்,

சென்னைப்புரசை

"கணேச" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904

Copy right Registered.

இதன் விலை ரூ-1.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

மாதம் 19 வருடம்

செப்பனிட்டு முடித்த

மாதம் 19 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

0-1892 MK54, M
N04

21/8/1905

119483

ஓம்

சுந்தரகணேசர்துணை.

மானிட வாழ்வானந்த மெனும்

# மதிப்பிரகாச விளக்கம்.

இஃது

மதுரைமாநகரம்

சுந்தர ஜோதிர் குரு கவிராஜ

கந்தசாமிபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

முதற்பதிப்பு. காப்பி 1000

T. வரதராஜுலுசெட்டியார் அவர்களால்,

சென்னப்பட்டணம்

"கணேச" அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

நெ. 11, வெங்கடாசலமுதலி தெரு, வேப்பேரிபோஸ்டு, சென்னை.

1904

Copy right Registered.

இதன் விலை ரூ. 1 | [Price Re. 1

# LORD & CO.

**DRUGGIST & OPTISIONERS,**

No. 6. EVENING BAZAAR HIGH ROAD, MADRAS.

அதிக வாசனையுள்ள சண்பகப்பூ எண்ணை.

இத்தைலம் ஒரு வாரத்திற்குள் மயிர் வளரச்செய்வதில் அதிக மேன்மையுள்ளதென்று அநேகமான ஜனங்களால் உபயோகித்து சந்தோஷப்பட்டு நற்சாக்ஷிப் பத்திரம் அளித் திருக்கிறார்கள், கூந்தலின உற்பத்தி ஸ்தானத்தில் இத்தைலத்தை நன்றாய்த் தேய்க்கும் பக்ஷத்தில் மயிரின் வேர்களில் நுழைந்து செழிப்பாயும், மிருதுவாயும், நெருக்கமாயும், அழகாயும் வளரச்செய்து கருப்புப் பட்டுத் தக்கத்தக்க பிரகாசஞ் செய்து குல்லைடையும் அழிக்கும், அதிக அமர்ச்சியினால் மயிர் உதிர்ந்து பிளவுபட்டு, கட்டை பாய்ந்துபோன போதிலும்அழகாய் வளரச்செய்யும். இந்த சொல்ப விலையுள்ள இத்தைலம் இவ்வளவு ஆரோக்கியத்தைக் கொடுக்குமோ வென்று சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் இதை உபயோகிக்கிறதற்குமுன் கூந்தலை மெல்லிய டேப்பினால் அளந்துகொண்டு பிறகு தைலத்தை உபயோகித்த ஒருவாரமானபின்பு மேற்படி டேப்பைக்கொண்டு அளந்து பார்த்தால் அப்போது உண்மை விளங்கும். புட்டி 1-க்கு ரூ. 1—0—0. ஒரேகாலத்தில் மூன்றுபுட்டிவாங்கினால் ரூ. 2-8-0. 6-புட்டி ரூ. 4—0—0.




பிரௌன்ஸ் ரிங்வோரம் கியூர்.

படைச்சங்காரணி.

இது மேகப்படை, மேகசாரகப்படை, சொப்பசாரகப்படை, ஸ்நானபானங்கள் அசட்டை செய்வதினால் உண்டாகும் படை, பெண்களுக்கும், புருஷர்களுக்கும், இடுப்பிலும் மற்றபாகங்களிலும் கொஞ்சம் சொறியாய் காண்பித்து அதிக சீக்கிரத்தில் விசேஷமாய்ப் படர்ந்து ரூபத்தை மாற்றி நமைச்சல் உண்டுபண்ணி ஓயாமற் சொறியும்படி செய்கிறது. இப்பேர்ப்பட்ட கஷ்ட வியாதியை தப்பாமல் எடுத்துவிட்டதற்கு இரேசொட் ஒளஷதமிதுவே, இதை அநேகமான ஜனங்கள் வாங்கி உபயோகித்து சந்தோஷப்பட்டு நற்சாக்ஷிப்பத்திரம் அனுப்பியிருக்கிறார்கள்.

புட்டி 1-க்கு அணா 0—8—0. டஜன் 1-க்கு ரூ. 4. 2-பாகம் கொண்ட புட்டி 1-க்குஅணா 0—12—0. 4-பாகம் கொண்டபுட்டி1-க்கு ரூ. 1-4-0.

☞ வேண்டியவர்கள் சென்னை யீவினிங்பஜார் ரோட் No. 6 லார்ட் அண்டு கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கப்பூர், ரெட்டால், மோரிசுத்து, V. P. சிஸ்டம் கிடையாதபடியால் முன்பணம் அனுப்பவும்.


ஓம்

சுந்தர கணேசர் துணை.

---

மானிட வாழ்வானந்த மென்னும்

# மதிப்பிரகாச விளக்கம்.

ஸ்ரீ ருலாவிய பரதகண்டத்திற் சிறந்தோங்கிய, "வானுலாவிய நக்ஷத்திரங்களின் மத்தியில் பூரணச்சந்திரன் பிரகாசிப்பது போல்" மாநிலத்தோர் மனமகிழ்வெய்தி களிப்புறுந் தன்மையாய்ச் செழிப்புற்றிலகும், அழகமைந்த மாடமாளிகை கூடகோபுரலங்கார சிங்கார வைபவமாய்விளங்கும் கோசலைமாநகரத்தைப் பரிபாலனஞ் செய்திருந்த அமிர்தவாசகமஹாராஜன் சிம்மாசனத்தமர்ந்து குடிகளிடத்திற் கருணைவாய்ந்து மனுநீதி முறைப்படி செங்கோலைக் கரத்திலேந்தி தனது ஆஞ்ஞைக்குட்பட்ட சிற்றரசர் திறைசெலுத்த நிரவீரப்பிரகாசமாய் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனனென் றவனியோர் புகழ்ந் துரைப்பச் சிறப்பெய்திய கீர்த்திவாய்ந்து, தர்மசொருபியாய் அவனியோர்புகழ அரசுரிமைபுரியுங்காலத்தில் தனது பத்தினியாகிய கமலநயனி கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்து, ஓர் சுபதினத்தில் "பூர்ணச்சந்திரன் பூதலம் வந்துதித்ததுபோல" அழகலங்கிர்த சிங்கார வடிவமைந்த ஓர் ஆண்மகவை ஈன்றனள்.

இங்ஙனமிருக்க, தாதிகள்மனமகிழ்ந்து அரண்மனையிற்சென்று அமிர்தவாசகமஹாராஜனுக்குத் தெரிவித்ததனும், அவ்வேந்தன் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவனாய் மனோல்லாசத்துடன் மைந்தன் ஜனித்த சுபசெய்தியைப் புகன்ற சேடியர்கட்கும் வேண்டிய வெகுமதி யளித்து, அருகிலிருந்த அமைச்சர்களால் ஜோதிடகலித வல்லோரை வரவழைத்து மைந்தன் ஜாதகங் கணித்து மதிவதனனென நாமகரணம்புரிந்து, தன்தேசத்தில் வசிக்குளவும் மாந்தர் கட்கும் சர்க்கரைவழங்கி ஆயலர், யாசகர், ஜோகி, சந்நியாசிகட்குக்

தானதர்ம பரோபகாரம் புரிந்து குழந்தையைக் கரத்திலேந்தி உச்சி முகந்து இனிமைசேர் கனிவாயினால் முத்தமிட்டு, எமது சந்ததி ...ருக வந்துதித்த செல்வக் களஞ்சியமே! யென, மனோல்லாசத்து ...னது புத்திரனைத் தன் பத்தினியின்பாற் றந்தனன்.

அப்பால், இராஜபத்தினி தனது மைந்தனாகிய மதிவதனனுக்குப் பாலூட்டி சீராட்டி நாளுக்குநாள் மேன்மையாக வளர்த்துவருகையில் மதிவதனனுக்கு ஐந்துவயதான பிறகு தந்தையாகிய அமிர்தவாசகமஹாராஜன் மனோல்லாசமெய்தியவனாயுளமகிழ்ந்து, தன் மைந்தனுக்கு வித்தியாப்பியாசஞ் செய்விக்கவேண்டுமென் றுன்னினவனாய் மந்திரியையனுப்பி வேதோபாத்தியாயரை வரவழைத்து நற்சுப முகூர்த்தத்தில் தனது புத்திரன் நற்கலைபயில, வித்தியாப்பியாசஞ்செய்து வைப்பீரெனலும்; அவ்வேதியனும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, மதிவதனனுக்கு வித்தியாப்பியாசஞ்செய்து எழுத்து, அசை, சீர், தளை முதலாகிய இலக்கண இலக்கியம் யாவும் நன்குணர்ந்து தேர்ச்சியடைய கற்பித்து நான்கு வேதம், ஆறுசாஸ்திரம், பதினென் புராணம், அறுபத்து நான்கு கலைஞானமும், மதுவிக்ஞானமும் கற்பித்துவருகையில் மதிவதனன் ஓர்நாள் தனது புத்தி நுட்பத்தை யநுசரித்து, ஆசிரியனைப் பணிந்து தன் மனதிலுற்றவை யனைத்தும் சொல்வதாயினன்.

மதிவதனன்:—சுவாமின்! உலகிலுதித்த மாந்தர்கள் யாவரும் பிர்ம்ம சிருஷ்டியினுதித்தவர்களென்று சகலசாஸ்திரபுராணங்களிலும் முறையிடுகின்றனவே! அவ்வாறிருக்க சிலர் ஆபத்திற் சிக்கி யாக்கையிலாவியைச் சுமந்திருப்ப தெவ்விதமென சிந்தித்து, துஷ்டர்களிடுக்கணாற் றுயருற்று வையகத்தில் வாழுவொழிப்ப தெவ்வாறெனவும், மனங்கசந்து, வயிற்றை வளர்ப்பதற் கேற்றதகைய மார்க்கந் தேடுவோமென சந்ததமுஞ் சிந்தைமேலிந்து வறுமைநோயாற் கலங்கும் எம்மைத்தன் மையத்தவர்களாயும், சிலர் திவ்யசொரூபம்வாய்ந்து தமது சரீரத்தை தங்கமயமென் றிலங்கும் சுவர்ண சொரூபியென சூழ்புவியோர் மதித்துப் புகழ்ந்து துபசரித்துப் போஷிப்பதற்கேற்ப திரவிய சம்பன்னராய் யாதொரு மனக்கவலையுமின்றி, மநுகுலத்திற் கீர்த்தியுற்று சிறப்பெய்திய மஹாராஜாக்களாய்வாழ்ந்திருப்பதும் யாதுகாரணமோ? இவை, என்மனதில் சந்தேகமெய்துகிறது.



ஆகையால், இஃதுண்மை யாதோ? நீரென்மீது கருணைவாய்ந்து யான் நன்குணரும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்குவீரென, வினவுதலும்; ஆசிரியன் மொழிகுவதாயினன்.

ஆசிரியன்:—அப்பா! மதிவதனா! நீ இராஜாம்ச மானகையால் கல்வியின் நுட்பங் கண்டுணர்ந்து அவற்றின் சாராம்சங்களையும் கவனிக்கலாயினை. ஆயினும், அதிதீவிர பக்குவமுற்ற மாணாக்கனுக்கு உண்மையினை யுணர்த்துதல் ஆசிரியன் கடனென, சதுர்மறை சாஸ்திரபுராணங்களிலும் முறையிடுவதால் நின் புத்தி சாதுர்யத்தினால் வினவிய கேள்வியின் இரகஸ்யார்த்தங்களை விபரமாய் நவில்குதும் கவனமாய்க் கேண்மின்.

இராஜபுத்ரா! நான்முகன் மாந்தரைச் சிருஷ்டிக்கும்போதே இன்னாருக் கின்னவிதமென்று அவரவர்க்கு விதித்த விதிப்படியே சுகாசுகானுபவங்களை யனுபவிப்ப துலகியற்கை யாதலின், அவ்வாறே அவனியிலுதித்த மனிதர்கட் கத்தகைய விபரீத வாழ்வெய்துகின்றன. இவற்றை விரித்துரைப்பின் விசேஷமாகும்.

மதிவதனன்:—குருநாதா! தேவரீர் நவின்றவிதமே மதிப்பினும் இஃதுண்மையின் காரண இரகஸ்ய மர்மார்த்தமெனக்குச் சரியாய் விளங்கவில்லை. அஃதெனெனில் சகல பிள்ளைகளையும் ஒரே வயற்றிற் சுமந்து ஈன்ற அன்னை சில பிள்ளைகட்கு மாத்திரம் தேனும் பாலும் திவ்யான்னமுந் தந்து, சில பிள்ளைகட்குக் கஞ்சியுந் தண்ணீரும் வார்த்து அடித்துத் துன்புறச் செய்வளோ? அத்தகைய தாய்க்குச் சமனதாய்ச் சகல மாந்தரையும் சிருஷ்டிக்கும் பிர்ம்மதேவன் சிலருக்கு மாத்திரம் ஞாலத்திற் கீர்த்திப்பிரகாசமாய் வாழ்ந்திருக்கும் நல்ல விதிவிதிப்பதும், சிலருக்கு ஆற்றொணா துன்பத்தாற் களைத்திளைத்து வயிற்றை வளர்ப்பதற்குச் சக்தியின்றி வையகத்தோரிகழ வறுமை நோயாற் பாதலிக்கும்படியாகவும் விதிப்பதேன்? இஃதுலைவியமன்றோ? சுவாமின் அறிவிலிய மாந்தர் யாதொரு துர்க்குணத்தினால் வஞ்சனை செய்வாராயின் அறிஞராற் பழிதேடிக்கொண்டு பாபிகளென வசைமொழி யேற்று காண்போரிகழுந் தன்மையாய் அபகீர்த்திக் குள்ளாகின்றனரே. சதுர்மறை புகழும் சர்வஞ்ஞனாகிய பிர்ம்மதேவன் வஞ்சகம் புரிகுவரோ?

என், வினவியதைக் கவனித்த ஆசிரியன் மனமகிழ்ந்து இராஜ புத்ரா! நின்மனதிலுற்ற ஐயமற யான்தெளிவெய்தும் கதாசக்யானங்களாற் சுருதி, யுக்தி, அனுபவ, திருஷ்டாந்த மெனும் ஞானாமிர்தநீதிசாஸ்திர மனைத்தும்புகலுதும் கவனிப்பாயென்க, மதிவதனன் மனோல்லாச மெய்தி ஆசிரியன் திருவடியைப் பணிந்து பக்தி விஸ்வாச முறை வழுவுறாது துதித்து, சுவாமின்! அனுக்ரகஞ் செய்விரென, ஆசிரியன் பக்திமார்க்கத்திற்சிறந்த கதாசக்யானங்களைப் புகல்வதாயினன்.

## சுந்தரவதனி சரித்திரம்.

இராஜபுத்திரா!

சீர்மிகுந்திலகும், நெடியகடல் சூழ்ந்த இப்பரதகண்டத்தின்கண் சிறப்புற்றோங்கி தென்னை, கமுகு, வாழை, பனை, சந்தம், பேரீச்சம், மாதுளை, பலா, வில்வம், மா, கொய்யாமுதலிய விருக்ஷங்கள் சூழ்ந்து விளங்காநின்ற, சுந்தரபுரிநகரில் உத்தம சீலனாகியும் சற்குணோத்தமனாகியும் பத்தினி சகிதனாய் வாழ்ந்திலகும், மணிபத்திரனென்னும் ஓர் கப்பல்வர்த்தகன் அநேக தீவுகளிற்சென்று, வர்த்தகஞ் செய்து திரவியங்களைச் சம்பாதித்து தனவந்தனாயிருந்தும் புத்திரபாக்கிய மில்லா மனக்கவலையால் கடவுளடியையனவிருத்தி பக்தியோடு தொழுதும், அனேக தேவாலயங்களுக்கும் மஹோற்சவம் முதலானவைகளும் மனமகிழநடாத்தி ஆதுலர்க் கன்னமளித்து, ஏழைகளுக்குபகாரஞ் செய்தும் இவ்வண்ணமாக அநேகவித தான, தருமம், பரோபகாரமும் நடாத்திவரும் நாளில் பகவானருள் கூர்ந்து கிருபாநோக்க மெய்தலும் அவன் பத்தினியாகிய ஞானவல்லி சில காலஞ்சென்று, கர்ப்பவதியாயிருந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். அவ்வர்த்தகன் மனமகிழ்ந்து அந்நகரத்தோர்க்கு சர்க்கரைவழங்கி ஜோதிடரை யழைத்து மைந்தனுக்கு ஜாதகம் கணித்து கமலாசனன் என நாமகரணஞ் சூட்டி வளர்த்து வருகையில், ஞானவல்லி மறுபடியும் சிலநாள் சென்று பின்னர் கர்ப்பவதியாகி இன்னோர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அதற்கும் விசித்திரசன் என்று பெயரிட்டுவளர்த்து வருகையில் பின்னும் அவ்



வர்த்தகன் மனைவிஓர்பெண்குழந்தையை யீன்றனள். அம்மகவுக்கும் அவ்விதமே ஜாதகங்கணித்து சுந்தரவதனியென நாமகரணஞ்சூட்டி சீராட்டி, ஆபரணம் பூட்டி அன்புடன் வளர்த்து நல்லசுபமுகூர்த்தத்தில் அம்மூவரையும் கல்வி கற்கும் பொருட்டுபள்ளியில் விடுத்தனர்.

பிறகு, அம்மூவரும் அநேக நீதி சாஸ்திர புராணங்கள் யாவுங் கற்றுக் கொண்டு வருகையில், சில நாள் சென்றபின் தாயாகிய ஞானவல்லி சொர்க்க பதவியடைந்தனள். பிறகு மணிபத்திரனென்னும் வர்த்தகன், இந்த புத்திரரையும், புத்திரியையும் காப்பாற்றி வருகையில், ஒரு நாள் தான் கப்பல் வர்த்தகம் செய்யும் பொருட்டு தீவாந்தரங்களிற் செல்வோ மென்று உத்தேசங் கொண்டு மைந்தரை யழைத்து ஆலோசிக்க, அவர்களும் சம்மதித்து யாங்களும் உம்முடன் வருகிறோ மென்று பிரயாணப் பட்டு சாமான்கள் யாவும் சேகரஞ் செய்து, தந்தையுடனே இம்மூவரும் கப்பலேறி பிரயாணமாகும் போது, மாரிகால மானதால் நடுவழியில் காற்றும், மழையும் மின்னலிடியைத் துணையாய்வகித்து நெறநெறவென பொழியும் போது, கிடுகிடு வென்றோர் பேரிடி கணகணவென் றொலித்து, திடீரென வீழ்ந்தமையால் கடலிலுள்ள ஜலராசிகள் கலங்கவும், இவர்களிருந்த மரக்கலமானது பொடிப் பொடியாயுடைந்து தண்ணீரில் மிதக்க, அப்போது அந்நால்வரும் கடலில்குதித்து, ஒடிந்த மரத்துண்டுகளைப் பிடித்தபடியே மெள்ள மெள்ள நீந்திக் கொண்டு காசிரிதேசக் கடற் கரையில் வந்து மனம்பதறி கலங்கினார்கள்.

மணிபத்திரன்:—ஆ! மைந்தரே இனியாது செய்வோம், நமது பகைஞரைப் போல் காற்றும், மழையும் மின்னலிடியைத்துணையாய்க் கொண்டுவந்து நமது கப்பலையும் சுக்கல்சுக்கலா யொடித்து ஆஸ்திகளையும் நாஸ்திகமாய் நடுக்கடலிலமிழ்த்திவிட்டு நம்மை இவ்வண்ணம் நிராதரவாய் செய்தமையால் என் ஆவிகலங்குதே விசனமேலோங்குதே, எவ்வாறுய்வேன், மைந்தரே.

கமலாசனன்:—தந்தையே! ஈதென்ன விந்தை? இந்நகரி லுதித்த மாந்தரெல்லாம், முன்னோருரைப்படியே சுகதுக்கமிரண்டும் சமமாக வெண்ணி யிருக்கவேண்டுமே, நீவி ரிவ்விதமாய்த் துயருற்று பூமியில் விழுந்து துயரப்பட்டால் அறியாதவர்களாகிய யாங்களென்ன செய்வோம். இனி துயரப்படுவதாலாய பயனென்? சாந்தமாயிருப்பீர்.

மணிபத்திரன்:—மைந்தர்காள்! இனி ஜீவித்துய்வதற்கென்னுலாகாது கண்சுழலது, வாயடைக்கின்றது, என்னை வீணாய்த் தொந்தரை செய்யவேண்டாம்.

வித்திரேஸன்:—தந்தையே! பசியால் மெலிந்தீரோ? ஆ! அண்ணு! இதென்ன விந்தை? "மரணமூர்ச்சையுற்றவர்போல" ஒன்றும் பேசாமலிருக்கின்றீரே.

சுந்தரவதனி:—ஆ! என்செய்வோம்? அண்ணு! தாயற்றபிள்ளைகளாகிய நம்மை அழைத்துக்கொண்டுவந்து இங்கு தியங்கும்படியாய் விடுத்து, தந்தை மோசஞ்செய்குவார்போற் சந்தேகமாயிருக்கின்றதே.

கமலாசனன்:—அம்மா! நீ அஞ்சவேண்டாம். தந்தை பசியால் களைத்திருக்கின்றார். ஆதலின், நீங்களிருவரும் இவரைப் பார்த்துக் கொண்டிருப்பீராகில் யான் இந்நகரத்துட் சென்று யாதேனும் தின்பண்டங்களும் நன்னீரும் கொண்டுவந்து கொடுத்துக் களையைத் தீர்க்கிறேன்.

சுந்தரவதனி:—அப்படியேசெய்வீர் அண்ணு.

வித்திரேஸன்:—அம்மணி! தந்தையைத்தூக்கி உட்காரவைத்தேன், இவர்முகத்திலும் தேகத்திலுமுள்ள மணலைத் துடைப்பாயம்மா.

சுந்தரவதனி:—நல்லதண்ணு.

கமலாசனன்:—தந்தையே! இந்த ரொட்டித் துண்டுகளைப்புசித்து இந்த ஜலத்தை யருந்திக் களைதெளிவீர்.

மணிபத்திரன்:—(ரொட்டியைத்தின்று ஜலமருந்திக் களைதெளிந்து.) ஆ! மைந்தரே! நாமினி எவ்விதமாய் பிழைப்போம் எவ்வாறுய்வோம்? எனக்கு ஒன்றும் தோற்றவில்லையே. இவ்விபரீதத்திற் கென்செய்குதுமென அயர்ச்சியுற்றேன் யானேவே.

கமலாசனன்:—தந்தையே! இதற்காக தைரியத்தைவிடலாமா? அன்றியும், ஊழ்வினைப்பயனு லெய்தும் சரீரம் வாய்த்துள்ள மாந்தர்கட்



மை சந்ததமும் சன்மார்க்கத்துடனே ஏகபத்தினிசமேதனுய் இல்லறநிலைவழுவாதிலகும், மாந்தர்களுண்டோவென்று வினவ, அருகிலிருந்தசபையோரெல்லாம் ஆலோசனைமேலிருந்தார்களே யன்றி அவ்வினாவிற்குமாறுத்திரம் மனதிற் கெட்டாமல் மயங்கியிருக்குந்தருணத்தில் பிரமரிஷியாகியவசிஷ்டரெழுந்து ஹே! புரந்தரா! பூவுலகின்கண் பரதகண்டத்திற் சிறப்புற்றோங்கிய அயோத்தியாபுரியைப் பரிபாலனஞ் செய்யும் அரிச்சந்திரமகாராஜனே உத்தமசீலன், பொய்யைக் கனவிலும் நினையாமல் மெய்யாபரணனுகிய சத்தியபாஷன் உத்தமகுணம் பொருந்திய பத்தினிசமேதனுய் விளங்கி இத்தரணியிலுள்ள பரஸ்திரீகளின்மீது இச்சையின்றிய பரமதயாளன். அவ்வரசன் ஆளுகைக்குட் பட்ட நகரமெங்கும் கோட்சொல்லும் குடிகளே கிடையாது, இத்தகைய நற்குணம் பொருந்திய உத்தமனுகிய அனைத்தீசனொருவனை யன்றி வேறொருவரைச் சொல்லப்படாது அமரேந்திராவென் றுரைத்தனன்.

இங்ஙனமிருக்க, இந்திரன் மனப்பூரித்துசுவாமின்! இத்தகைய உத்தமகுணம் பொருந்திய சர்ச்சனனை சிஷனுகக்கொண்ட தமது பெருமையை யெங்களால் வர்ணிக்கத் தரமோவென்று புகழ்ந்து, சபையோர்களே இம்மஹரிஷிக்கு எல்லோரும் வந்தனம் புரிவீர்களென்று அதிவிநயத்துடன் புகல, அவ்வாறே யாகுகவென்று அனைவருமெழுந்து வசிஷ்டரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். இவையாவும் அருகிலிருந்து பார்த்து மனந்தாளாத விஸ்வாமித்திர மஹாரிஷி கோபாவேசத்துடன் திடீரென் றெழுந்து சபையோர் நலங்குப்படியாக ஆரண்யத்திலுள்ள மிருகேந்திரன் கர்ச்சிக்குந்தன்மையாய் ஆக்ரமித்து பல்லை நெறநெறவென கடித்து. ஹே! தேவேந்திரா!

அவ்வசிஷ்டன் புகன்றதும், நீயவனைப் புகழ்ந்ததும், இச்சபையோ ரவனைக்கொண்டாடியதும் பார்த்தால் அரசனில்லாவூரில் அஸ்வமேதயாகஞ் செய்தேனென் றிசைக்கும் ஆச்சர்யத்தைப்போ லிருக்கின்றதே சபாஷ்! பொய்யனை மெய்யனென்றும், சர்க்குணனை சற்குணனென்றும் பற்காமியை சுவாமியென்றும், துர்க்குணனை சர்க்குணனென்றும் பலவாய் வாயில்வந்தபடி வெறியனைப்போற் பிதற்றினால் உம்மைப்போ லொத்தவர்கள்தான் சரிசரியென்று தலையசைப்பார்களல்லது விவேகிகளொருக்காலு மொப்புக்கொள்ளார்கள். இவ்வசிஷ்டனை

குச் சுகதுக்கம் வாய்ப்பதென்பதை கவனித்துணர்கிலீரோ? தந்தையே! மாநிலத்தோர் புகலருங் கீர்த்திவாய்ந்து பொறுமையிற் சிறந்து தரணியைப் புரந்த மெய்யாபரணனாகிய அரிச்சந்திர மஹாராஜன் தனது கால வித்தியாசத்தினால் அகஸ்மாத்தாய் கிடைத்தன ஆற்றொணா ஆபத்தெய்தி அரசுரிமையை விடுத்து ஆரண்ய வாசியாயலைந்து மனைவி மைந்தரைப் பிரிந்து மயான காவலனாகி மஹாதுயரடைந்து, மதிமயங்கி விசனமெய்துந் தருணம் பரமனருள் சுரந்து கிருபாநோக்க மெய்த தனக்குற்ற ஆபத்தனைத்தும் ஆதித்தனைக் கண்ணுற்ற பனிபோற் பறந்து மனைவி மைந்தருடன் சுகஜீவியாய்த் தனது தேசத்தில் வந்து சிம்மாசனத் தமர்ந்து தேவாதி தேவர்களும் புகழ்ந்துரைப்பச் செங்கோலைக் கரத்திலேந்தி இராஜரீகஞ் செய்துக் கொண்டிருந்ததைக் கேள்வியுற்றீரன்றோ? தந்தையே! நமக்கும் அவ்விதமே நற்கால மெய்திடில் நமது குலாசாரப் படியே வர்த்தகஞ் செய்து ஜீவிப்போ மென்றுணர்வீர்.

மணிபத்திரன்:—மைந்தா! நீ மொழிந்தவையுணர்ந்த என் மனம் சந்தேக மெய்தலாயின. ஆகையால், அந்த அரிச்சந்திரன் சரிதையையான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

கமலாசனன்:—தந்தையே முற்காலத்திலே அயோத்தியாபுரியைப் பரிபாலனஞ் செய்து நீதிவழுவாமலரசுபுரிந்த சத்தியசீலனாகிய அரிச்சந்திரன் இல்லறமார்க்கத்திற் கிசைந்தவிதமாய் மதிதய மகாராஜன் புத்திரியாகிய சந்திரவதியை மணம்புரிந்து மகிழ்வுடன் வாழும்நாளில் லோகிதாசனென வோர்புத்திரனையீன்று அக்குழந்தையை நாளுக்குநாள் மேன்மையாக வளர்த்து, ஐந்து வயதில் வித்தியாப்பியாசஞ்செய்து, தானதர்மபரோபகாரம் புரியுந் தருணம், இந்திரலோகத்தில் முப்பத்துமுக்கோடிதேவரும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், சித்தவித்யாதரர்களும் புடைசூழ இந்திராணி சமேதனாய் தேவேந்திரன் கொலுவமர்ந்திருக்க, அத்தருணத்தில் ஆயிரங்கண்ணன் தபோதனர்களைநோக்கி, ஹே, மஹானுபாவர்காள்! அடியேன் மனதிலோர் சந்தேகமுளது.

அதென்னவெனில் பூலோகத்து மாந்தரில்யாவரேனும் பொய் சொல்லாமை, புறங்கூறாமை பரஸ்திரீ கமனஞ் செய்





வரோ. இவன் சிறந்தாகிய அரிச்சந்திரனெவ்வளவு? இவர்களுடைய பூர்வீகமெனக்குத்தெரியாதோ? யானிருப்பதையும் கவனியாமற்படிக்கு இத்தகைய வீணுரைத்தையைப் புகன்றனை, பார்த்தனையாவென் றுரைக்க, வசிஷ்டர் சினங்கொள்ள, இவ்விருவரும் வெகுநேரம் சச்சரவுசெய்யலாயினர்.

இங்ஙனம் இவ்விருவரும் தர்க்கம்புரிவதைக் கண்ணுற்ற தேவேந்திரன் பயந்து இருவரையும் சமாதானஞ் செய்ய நாதமுனிவரெழுந்து வசிஷ்டரைப் பார்த்து அவ்வரிச்சந்திரன் பொய்யுரைப்பானாகில் என்னசெய்வாய் சொல்லுகவென்று, வினவ அதற்கு வசிஷ்டரெழுந்து சபையோரைப் பார்த்து அவ்வரிச்சந்திரன் பொய்புகல்வானாகில் தன்தலையை சிரைத்து கட்குடத்தை சிரமீதேற்றிக்கொண்டு தென்றிசை வழியாய்ப் போய்விடுவேன் மறுபடியும் தபவேடங் கொள்ளேனென்று, கொடிய சபதஞ்செய்தனர். பிறகு விஸ்வாமித்திரரெழுந்து அரிச்சந்திரன் சாவில் ஒரு பொய்யேனும் வருவிக்காவிடுவேனாகில் யான் அருமையாய்ப்புரிந்த தபத்திற்பாதியவனுக்களித்து இவ்வசிஷ்டனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேனென்று புகன்றனர். அப்போது! தேவரெல்லோரும் சரி சரியென்றொப்புக்கொண்டார்கள். அத்தருணம் வசிஷ்டர் அமரருடைய சாவலிலிருக்கவும், விஸ்வாமித்திரரெழுந்து சுக்கிரனையும், அக்கினியையும், எமதருமனையும், சுப்பிரமணியரையும் மஹாவிஷ்ணுவையும் பணிந்து, சுவாமிகள் உங்களையானழைக்கும்போது எனக்குத் துணையாக வந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து அன்னோரைச் சம்மதிக்கும்படி தந்திரஞ்செய்து, அயோத்தியாபுரிக்குவந்து, அரிச்சந்திரனைக் கண்ணுற்று அரசே! யான் ஓர் யாகஞ்செய்ய வேண்டும் அதற்கு ஓர் யானைமீது ஓர் வல்லவனேறி தனுசைக்கரத்திலேந்தி கவணெறிந்தால் அதுவெவ்வளவு உயரத்திலேகின்றதோ அவ்வளவு பொன் தரவேண்டுமென்றனன்.

இங்ஙனம், கௌசிகன் வாய்மையுணர்ந்த வேந்தனும் அவ்விதமே பொற்குவையலைத் தருதலும், முனிவன் அப்பொருளை அவனிடமேயிருத்தி கானகத்தில் வந்து மிருகங்களை சிருஷ்டித்து நகரிலேவி குடிகளிட்ட பயிரையழிக்க அன்னோர் முறையிட்டு வேந்தனிடம்புகல அரிச்சந்திரன் ஆயுதமேந்தி கானிற்சென்று விலங்குகளைக்கொல்லும்போது ஓர் பன்றியானது வீராவேசங்கொண்டு சேனைசயின்யங்களை அழிஞ்செய்ய, வெஞ்சயர்க்கஞ்சா விஜய பரா

ரமணுகிய அரிச்சந்திரன் முனிந்து அந்தப்பன்றியை சின்னபின்னஞ்செய்து துரத்துதலும்; கௌசிகமுனி சினந்து, நடனப்பெண்களை சிருட்டித்தனுப்ப அம்மாதர்கள்வந்து நாட்டியம்புரிந்து அரசனைக் களிக்கச்செய்து தங்களை சுகிக்கும்படிவேண்ட அமைச்சன்முனிந்து அன்னோரையடித்துத் துரத்துதலும், அப்பெண்களோடிவந்து முனிவனிடத்தில் முறையிட்டழக்கண்ணுற்ற கௌசிகன் சினந்தோடிவந்து அமைச்சன் கலங்க அரசனையுதைத்து அடடா! துன்மார்க்கா ஆசையாய்வந்த ஸ்திரீகளை அடித்துத் துரத்தலாமா? இப்போதிவர்களை மணம்புரிந்துக் கொள்வையேல் நன்கு, மறுக்கிலோ தீதடைவாய் யென்க. வேந்தனயந்து சுவாமின், பரஸ்திரீகமனம் பரலோகநாசனமாதலின் என் நாடுநகர முழுமையும் நீர் விரும்பிக்கேட்கில் என் மனந்துணிந்து உமக்களிப்பேனல்லது இக்கொடிய தீவினைக் குட்பட்டேனென் றுரைக்கலாயினன்.

அப்பால், கௌசிகன் இதுதானுற்ற தருணமென்று, அரிச்சந்திரா! ஏதோநின்மனவாக்கு காயமொன்று சேர்ந்து உன்கரத்தை எனக்கு தாரைவார்ப்பாயென்க; அரசன் அப்படியே யாகுகவென்னத்தத்தஞ்செய்ய, தபசிரேஷ்டன் தங்களினத்தினராகிய தபசிகளைவரவழைத்து அந்நகரில் பிரவேசஞ்செய்வீரென்றறைந்து, அரிச்சந்திரனை மனைவிமைந்தன் மந்திரியுடன் துரத்தியதுமன்றி; சுக்கிரனையழைத்து நட்சத்திரேசன் வேடம்புனைந்து அரிச்சந்திரனிடம் முன்னந் தானமாக வாங்கி அவன் பொக்கிஷத்திற் றனேயிருத்திய பொன்னைவாங்கிக்கொண்டுவாவென்னலும் அவ்வாறே அவ்வேதியன் மிகவும் வற்புறுத்த வேந்தன் தனதுமனைவிமைந்தரையாகிலும் விற்றுக் கொடுப்பேமென்று காசிபட்டணத்தில் விலைகூற விஸ்வாமித்திரன் ஏவலால்வந்த அக்கினிபகவான் பிராமணவேடந்தாங்கி அரசனெதிர்வந்து அவன் மனைவிமைந்தரை விலைக்கு வாங்கிக்கொள்ள தாகன் தன்கூலிக்கு யாது மார்க்கமென்றறைய தானும்விலைபடுவோமென்று மந்திரியால் விலைகூற முனிவனுக்ஞையால் எமன் சுடலைகாக்கும் வெட்டியான்போல வந்து அரசனையும் விலைக்கு வாங்கியபின்னர் காகெண்டனுக்ஞையால் லோகிதாஸன் தர்ப்பைகொய்யும் பொருட்டு வனத்திற்கேக முனிவனத்தருணத்தில் சுப்பிரமணியரை அரவமாக வந்து அந்தச்சிறுவனைக் கடிப்பிக்க அயலாத்துச்சிறுவரோடிவந்து சந்திரவதிக்குமொழிதலும், அவளழுதோடிவந்து அந்தணன் பால்விடைபெற்று ஆரண்யமணுகி அரவாலிறந்த சுதனைக்கரத்திலேந்தி மயா



னத்திற் செ[illegible] தகனஞ்செய்யுந் தருணம், ஆண்டையின் சொற்போல் மயானங்காவற்புரியும்மன்னன்கண்டு யாரென்றுவினவி மைந்தனெனத் தெரிந்து, மனைவியுந் தானும் வெருவாய்த் துயரப்பட்டு மந்திரியால் மனந்தேர்ந்தனர்.

அப்பால், அரிச்சந்திரன் சந்திரவதியைப்பார்த்து பெண்ணே உன்னை அடிமையாய்க்கொண்ட ஐயர்பாற் புகன்று காற்பணமும் முழச்சீலையும் வாங்கிக் கொண்டுவருவையாகி லுன் மைந்தனைத் தகனஞ்செய்வேனென்க; கணவன் கூறிய மொழிக்கிணங்கிய சந்திரவதி திரும்புகையில், விஸ்வாமித்திரன்வேண்டுகோளால் மாயன் கள்ளனைப்போற் காசிமன்னன் புதல்வனைக்கவர்ந்து கொன்று அம்மாதுவரும் மார்க்கத்திலெறிய மதிதயன்புதல்வி தன் சுதனேயென்றுகரத்திலெடுக்க காவலாளிகள் கள்ளியெனக் கயிற்றாற் பிணைத்து அடிமேலடியடித்து தமது அரசன் முன்விட்டு ராஜதண்டனைப் பிரகாரம் மயானங்காப்போனாகிய அரிச்சந்திரனிடம் விடுத்து இம்மாதை இருதுண்டாக்குவாயென்றதை கவனித்துணர்ந்தகௌசிகனோடிவந்து காதலியை வெட்டத் துணிந்த கணவன் கரத்தைப் பிடித்துக்கொண்டு! ஹே! மன்னா நீ யாது குரூரகொடுமைசெய்ய நினைந்தனை? இனியாகிலும் யெனக்குக் கொடுத்த நாட்டைத்தருகிலேனென, ஓர் மொழியுரைப்பயே லிறந்தசுதனை யெழுப்பியீந்து உன்னை பழையபடி யரசனுக்குவேனென, சத்தியபாஷன் சினந்து சுவாமின்! இக்காயமோ நீர்மேற் குமிழி. ஆதலின், பொய்யுரைத்து புவியில் வாழ்ந்து இத்தேகத்தைச்சுமந்து திரிதலினும் சத்தியத்தை நிலைநிறுத்தி இச்சொத்தை யாக்கையைவிடுத்து, இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமடைவதே இலக்கியமெனக் கருதி, மறுமுறை மாதை வெட்டுதலும் தேவர்களால் அவ்வாளாயுதம் பூமாலையாகவிழ்தலும் அன்னோர்மேலாணைகூறி மூன்றும்முறை வெட்ட பரமன் ப்ரத்யக்ஷமாகி இறந்தசிறுவனை யெழுப்பித்தர அந்தந்த தேவர்களுக் காக்ஞாபித்தனர்.

அப்பால் சுப்பிரமணியர் லோகிதாஸனை யெழுப்பவும் மாயன் சுதாகரனை யெழுப்பவும் அக்கினியும் எமனும் தங்கள் சுயரூபத்தைக்காட்ட முநிச்சிட்டை அரிச்சந்திரன் [illegible] அவன் மனமகிழச்செய்ய விஸ்வாமித்திர மகாரிஷியுந்தயந்தோர்ந்தமையால் தன்தவத்திற்பாதி அரிச்சந்திரனுக்களித்து அடியேன் செய்த குற்

றத்தை மன்னித்தருள்வீரென்று பரமனை [illegible] ர் சுரந்து இந்திரனை நோக்கி தேவர்கள் புடைசூழ ஆ[illegible]ரத்தக்கேகி அரிச்சந்திரனுக்கு மகுடம்புனைவீரென் றுக்ஞாபித்து கைலைக்கேகினர். ஆதலின்! இத்தகைய துன்பமனுபவித்தோரெல்லாம் சுகப்படவில்லையா? இவ்விதமே நமக்கும் பகவான் அணைசெய்குவர் அஞ்சாதிர் தந்தையே!

மணிபத்திரன்:—ஆ! ஜெகதீஸ்வரா! யென்செய்வேன். கையிலோர் காசுமின்றி சுயதேசத்தை விடுத்து பரதேசத்தில் வந்து நிராதரவாய் மயங்குகின்றோமே யாது செய்வோம்? மைந்தரே.

வித்திரேஸன்:—தந்தையே! சகலமுந்தெரிந்த வல்லோராகிய நீரிவ்விதம் துயரப்படுவீரேல் நாங்கள் யெவ்விதமுய்குவோம். தைரியத்தைவிடாதீர். இனிநாம் பிழைக்கும்மார்க்கத்தைத்தேடவேண்டியது ஆதலின், நாமினி யெங்கனமாகிலும் சென்றுயாசகம் செய்து ஜீவிப்போம் வருவீர்.

மணிபத்திரன்:—சரி! அப்படியே செய்வோம் வருவீர்கள் மைந்தரே.

இவ்விதமாய் இந்நால்வரும் ஆலோசனை செய்துகொண்டிருக்கும்போது அந்நகரில் வசிக்கும் ஓர் வர்த்தகனாகிய குணசீலனென்பவனுடைய வேலைக்காரனாகிய மனோல்லாசனென்பவன் அம்மார்க்கமே வந்து அவர்களோடு வந்திருக்கும் சுந்தரவதனியென்னும் பெண்ணைக்கண்டு ஆசையுற்று இவ்வண்ணம் அழகுடைய ஸ்திரீயையும் பிரமனுற்பத்தி செய்தானல்லவா? அவனுக்கு யான் வந்தனம் புரிகின்றேன். ஆ! ஆ! கருத்த மேகத்தையொத்த கூந்தலும் சேப்பிலே போன்ற புருவமும் பூரணச்சந்திரனொளிபோற் பிரகாசிக்கும், நெற்றியும் கெண்டைமீன்போன்ற இருவிழிகளும், குமிழமலர்போன்ற நாசியும்; முல்லையரும்பு போன்ற பற்களும், கொவ்வைக் கனிபோன்ற உதடும், ஆலிலைபோன்ற வயிறும், செங்கிரைத் தண்டுபோற் சிங்காரசொரூப தேஜஸமைந்த முகவுஜீகாசரீரம் வாய்த்த அன்ன நடையும் சிங்கத்திடையும் பொருந்திய இம்மாதை கடவுள் சிருஷ்டித்து நமக்கெதிரில் விடுத்தனர். பார்த்தனையா! நாம் செய்த புண்ணியமே புண்ணியம். நம்போல் அதிர்ஷ்டானுகூலருமுளரோ? இம்மாதையன்றி வேறு ஸ்திரீயை யான் கனவிலும் நினையேன். கருத்திலுமுன்னேன். இவ்வழகியுடன் வாழ்வதன்றி



யாக்கையைச் சுமந்து திரியேன். இதோ யான்சென்று கைப்பற்றுவேன். ஆ! மனமே சற்று பொறு நிதானித்தல்லவோ யாதொரு காரியமும் செய்யவேண்டும். அன்றி, விட்டிற்பூச்சி விளக்கொளியைத் தாவி மடிவதுபோலாகு மென்செய்வது. ஏனெனில், யாம் ஆவலோடுசென்று அம்மாதின் கையைப்பிடித்தால் அவளுக்குமூன்று ஆண்பிள்ளைகள் காவலிருக்கின்றார்களே. நம்மை இலேசாக விடுவார்களா? வயறு அன்னத்தை மறந்து வாளுள் வையகத்தைத் துறந்து ஆத்மாவானிலடைந்து சரீரம் மயானத்திற் சேரும் மார்க்கத்தை யல்லவோ காண்பிப்பார்கள், இதற்கென் செய்வோம்? கையில்செல்வப் பொருளிருப்பினும் அவர்களுக்குத் தக்கேனும் அம்மாதை மணம்புரிந்து சுகானந்தத்தை யனுபவிப்போம். ஈதன்றி முடவன் தேனுக்கிச்சித்துத் தியங்கல்போல மயங்கலாகாது. ஆதலின் விளாங்கனிக்கு ஆசையுற்றத் தந்திரசாலிகள் அவ்விருக்ஷத்தின் மீதிருக்கும் வானரத்தின்மீது கல்லெறிந்தால் அவ்வானரம் விளாங்கனியைப் பறித்தெறிய அதைப்பெற்றுக் கொள்பவர்போல உபாயஞ் செய்யவேண்டும். ஆதலின் இவர்களை எவ்விதமேனும் நமது எஜமானாகிய குணசீலன் வீட்டுக்கழைத் தேகுவோமாகி லவனிம்மாதி னழகைப் பார்த்தவுடனே ஆவல்மீறி மணந்துக்கொள்வான். நாம் அத்தருணத்திற் பக்குவமாக அவனில்லா சமையமறிந்து இந்தப் பெண்ணை எவ்விதமேனுந் தந்திரஞ்செய்து மறுநகர்க்கழைத்து செல்வதே நலம். இவ்விதயோசனை நமக்குப் புகட்டிய கடவுளுக்கு யான்வந்தனம் புரிகின்றேன்.

மணிபத்திரன்:—மைந்தர்காள் துரிதமே வருவீர்கள் இந்த நகரத்திலெங்கேனுஞ் சென்று யாசகம் செய்து இன்றையபொழுதை கழித்து விடுவோம்.

பிள்ளைகள்:—அப்படியே செய்வோம் தந்தையே.

மனோல்லாசன்:—நீங்கள் யாரையா!

மணிபத்திரன்:—யாங்கள் கப்பல் வர்த்தகர். கடலில் மரக்கலமமிழ்ந்து எம்மை யிவ்வண்ணமாக்கியது மஹாப்ரபு!

மனோல்லாசன்:—அஞ்சவேண்டாமையா வர்த்தகரே! எங்களெஜமானாகிய குணசீலன் சமுகம் வருவீரேல் உமக்கு யாதேனும் பொருளுதவி செய்குவர். என்னோடு வருகின்றீரா!

மணிபத்திரன்:—அப்படியே மஹா சந்தோஷம். எப்படியாகிலு முமது எஜமானிடம் புகன்று எங்களுக்கு யாதேனுந் திரவிய சகாயஞ் செய்வீரேல் காலமுள்ள வரையினு மும்மைமறக்கிலோம் மஹானுபாவரே.

மனோல்லாசன்:—சபாஷ்! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலாச்சுது! நல்லது என் பின்னே வருவீர்கள்.

மணிபத்திரன்:—நல்லதையா!

மனோல்லாசன்:—இவர்தான் எங்களெஜமானாகிய குணசீலன் கண்ணுற்றீரன்றோ? மெத்தவும் யோக்கியர். தர்மசொரூபி, இவர்போற் சாந்தகுணம்வாய்ந்த ஐஸ்வரியவான்களெங்கணுங் கிடையாதென் றறிவீர்கள். ஆயினும், உங்கள் அதிர்ஷ்டானுகூலத்தினால்தான் இங்குவந்து சேர்ந்தீர்கள்.

மணிபத்திரன்:—யாவும் உமது தருமந்தான் மஹாப்பிரபு.

குணசீலன்:—அடா! மனோல்லாசா!

மனோல்லாசன்:—ஏன்? மஹாப்பிரபு!

குணசீலன்:—அவர்கள் யாவர்? யாது காரியார்த்தமாக அழைத்து வந்தனை? தெரியப்படுத்துவாய்.

மனோல்லாசன்:—ஐயனே யான் காலையில் கடற்கரை வழியாகச் செல்லும்போது இவர்கள் தமது கப்பல் கடலில் மூழ்கிவிட்டதே, இனி எவ்வாறு ஜீவிப்போமென தாயற்ற பிள்ளைகளைப்போற் பரதவித் தழுதுகொண்டிருந்தார்களாதலின் தருமமே யோருருவாகச் சமைந்திலகிய நினது சமுகத்திற் கழைத்துவந்தேன். மற்ற சங்கதியாவு மன்னோரையே விசாரித்திற் றெரியவரும் மஹாப்பிரபு.

குணசீலன்:—நீங்கள் யாரையா? இந்தப் பிள்ளைகள் யாவர்? இப்பெண் உமக்கென்ன வேண்டும்? யாது காரணமாயிங்கு வந்தீர்? இவ்வனைத்தும் யான் கவனித்துணர விபரமாய்த் தெரியப்படுத்துவீர்.



மணிபத்திரன்:—ஐயா! சுந்தரபுரியில் பேரோங்க வர்த்தகஞ்செய்யும் மணிபத்திரன் என் பெயர்தான். இவ்விரண்டு சிறுவரும் அப்பெண்ணும் எனதுமக்களென் றறிவீர். இவர்களின்தாய் இறந்ததும்பா லிவர்களைத் தனியே விடாமல் என்னோடு அழைத்துக்கொண்டு அநேகதீவுகளிற் சென்று வர்த்தகஞ் செய்யும் பொருட்டு கப்பலேறி வரும்போது நடுக்கடலில் காற்று மழையும் மின்னலிடியுந் துணையாகக்கொண்டுவந்து மரக்கலத்தில் மோதியுடைத்து விட்டு எங்களை இவ்வண்ணம் நிராதரவாய் விடுத்தது, ஆதலின் இனி எவ்வாறுய்வோமென் றேங்கித் தவித்திருக்கையில் இம்மஹானுபாவருமிடத்தில் அழைத்து வந்தனர் மஹாப்பிரபு.

குணசீலன்:—நல்லது! இப்பெண்ணுக்கு மணமாயிற்றா?

மணிபத்திரன்:—இன்னும் ஆகவில்லை.

குணசீலன்:—அப்படியானால் எனக்கு உமது புத்திரியை விவாகஞ் செய்துவையும், யானுமது மருகனாகில் உமக்கினியாதோர் குறையும் வந்துறாதென்றறிவீர்.

மணிபத்திரன்:—அப்படியே மஹாபாக்கியம். உமதிஷ்டம்போல எனது புத்திரியை நல்ல சுபமுகூர்த்தத்தில் மணம்புரிந்தருள்வீர் மஹானுபாவரே. என, குணசீலன் சம்மதித்தனன்.

இவ்விதமாக குணசீலனானவன் மணிபத்திரனுரைத்த வார்த்தையை சிரமேற் கொண்டு உடனே பந்துஜனங்களையும் புரோகிதரையும் வரவழைத்து நல்ல சுபமுகூர்த்தத்தில் மணவரையிற்றி சுந்தரவதனியை மணம்புரிந்து சிலகாலம் வரையினும் மனோல்லாசமாய் வாழ்ந்திருக்கையி லோர்நாள் தனது மாமனாராகிய மணிபத்திரனுக்குப் பதினாயிர மோஹராக்கள் கொடுத்து வர்த்தகஞ் செய்யுமென்று அனுப்பினன். அதற்கவ் வர்த்தகன் சம்மதித்து தன் குமாரர்களையு மழைத்துக் கொண்டு டில்லி நகருக்குச்சென்று ஜவுளி வியாபாரஞ் செய்துக் கொண்டிருந்தனன்.

அப்பால் குணசீலன் தன் தேவியாகிய சுந்தரவதனியுடன் மனமகிழ்ந்து வாழுநாளி லோர்தினம் இவனுடைய பிராண சிநேகித

னாகிய ஓர் வர்த்தகன் தன் வீட்டில் விருந்தென்று சீட்டெழுதி வேலைக்காரனிடம் கொடுத்தனுப்ப, அதனைக் கண்ட உடனே தன் பத்தினியை பத்திரமாயிருக்கும்படி ஆக்ஞாபித்து மனோல்லாசனை யழைத்து யான் வருமளவரையினு மிங்குதானே காவலிருவென்று கட்டளையிட்டு, தனது நண்பனகத்திற் சென்றான். அத்தருணம் சமய மெப்போதென்று காத்திருந்த மனோல்லாசனானவன் இரவலுடுபாவனையால் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு சுந்தரவதனியின் முன்னே வந்து நின்று தன்னுடன் அந்நியதேசத்திற்கு வருவாயென்று அனேகவிதமாயவளைப் புகழ்ந்து வர்ணித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அம்மாதரசி சந்தேகமாய்ப் புகலலாயினள்.

சுந்தரவதனி:—ஆ! இவனார்? இராஜாதிபதியைப்போற் சிங்காரமாய் சேவித்த பொன்னாபரணங்களும் வைரத்தின கசிதமாகிய பட்டாம்பர பூஷணாதிகளு மணிந்துகொண்டு, சுகந்தகஸ்தூரி முதலிய வாசனை திரவியங்களை தேகத்தில் பூசிக்கொண்டு வந்து, பித்தனைப்போற் பிதற்றிக்கொண்டு நம்மெதிரில் நின்று அநேக விதமாய் புகழ்ந்து நம்மையவனோடு அந்நியதேசத்திற்கு வரும்படி வேண்டுகின்றானே! இஃதென்ன ஆச்சரியம்! நமது மணாளனும் அருகிலில்லையே காவலிருந்த மனோல்லாசனையுங் காண்கிலேனே! இனியாதுசெய்வேன்! நல்லது இனி தைரியத்தை விடப்போகாது. இனி நமது கற்பு நிலைமைக்குக் கடவுள்தான் காவலாயிருப்பர். நாம் இவனை யாரென்று வினவுவோமாக. ஐய! நீர் யாவர்! யாதுகாரணமாக இங்குற்றீரோ? வறிதேலென் தெரிவிப்பீர்.

மனோல்லாசன்:—ஆ! என் ஆசைக்கிசைந்த அழகலங்கிர்த சிங்கார முகவசீகர சுந்தரவதனி ஆதியில் நீங்கள் கையிலுள்ள பொன் பொருள் ஆஸ்தியனைத்தும் கடலில்லாஸ்திகமாயொழிந்து விட்டு அநாதையாய் தியங்கும்போது உங்களுக்குற்ற ஆபத்தைத் தவிர்த்து எங்களெஜமானிடம் அழைத்துக் கொண்டு வந்து நல்ல ஸ்திதியில் நிலைநிறுத்திய மனோல்லாசன் யானல்லவோ?

சுந்தரவதனி:—ஆ! அண்ணா! எங்குவந்தீர்? இதோ இந்த ஆசனத்திலமரும். இந்த உடுபாவனை யெல்லாம் உமக்குயார் கொடுத்தார்கள்? வெகுவேடிக்கையாகச் சிங்காரித்துக்கொண்டிருக்கின்றீரே.



மனோல்லாசன்:—என்! ஆசைக்கிசைந்த அமிர்தவாசகி! யானின்றையதினம் உன்னுடன் அந்நியதேசஞ் செல்வதற்காக மனங்கனிந்துத் தந்திரமாக எனதுநண்பர்களிடம் சென்று நவரத்தின கசிதமாய் விளங்கும் இந்த ஆடை ஆபரணங்களனைத்தும் இரவலாகவாங்கிக் கொண்டு வந்தேன். ஹா! மாதே! என் அழகைப் பார்த்தனையா? உன்னழகும் என்னழகும் எவர்களுக்கு உவமையாகுமென்று நீயே சற்று நிதானமாக யோசித்துப்பார்ப்பாயாக. சுந்தரவதனி! நமதுரூப சௌந்திரியத்தை இவ்வுலகத்தினர் காணுவரேல் இதென்ன, மதனும் ரதியும் இதோ வந்திருக்கின்றனரே, யாவர் புண்ணியவசமோவென்று ஆனந்தங்கொண்டு சந்தேகிக்கத் தடையுளதோ? (பெரு களிப்பு)

சுந்தரவதனி:—அண்ணா! இன்றைக் கென்னவேனும் லாகிரிவஸ்துக்களைச் சாப்பிட்டீரோ என்னவோ? எனக்கொன்றுந் தோற்றவில்லையே வெனினில் வெறிகொண்ட பித்தனைப்போல சித்தப்பிரம்மையுற்றவராய் ஏதேதோ பிதற்றுகிறீரே யென்று யான் சந்தேகிக்கிறேன்.

மனோல்லாசன்:—ஹா! சுந்தரவதனி, யான் அவ்வண்ணமாய் லாகிரிவஸ்துக்களை யொன்றும் புசிக்கவில்லை. ஆயினும் இன்றெனக் குன்மீதுற்ற ஆசையால் மதி மயங்கியிருக்கின்றேன், ஆதலின் எஜமான் வருவதற்கு முன்பாக மறுநகர்க்குச் செல்வோம் வருவாய் மாதரசே!

சுந்தரவதனி:—அண்ணா! யாது மொழிபுகலவந்தீர்? எங்களுடைய உடற் ஆபத்தைத் தவிர்த்து அன்னமளித்துக் காப்பாற்றிய உமது தங் பிறப்புக்குச் சமானமாகிய சகோதரரைப் போன்ற உமது தங்கையாகிய என்னோடு இந்த இழிவான வார்த்தையை பாஷிப்பது உமது திருவுளத்திற்கு வெறுப்பைத் தரவில்லையா? ஐயோ பாதகங்களி லொன்றாகிய விபசாரத்துவத்தில் வைத்ததையோ வீராதி வீரரும் இராஜாதி இராஜர்களும் மானமற்று மதிகுலைந்து மறக்கின்றார்களே! ஆதலின் இக்கொடிய செய்கைக் குடன்படாதீர் முற்காலத்திலே,

—+—

வெண்பா.

"பத்துதலை ராவணனும் பராக்கிரமஞ்சேர் கீசகனும்
உத்தமப்பெண் மாதரைக்கண் டிச்சித்து—எத்திசையும்
வன்மையாய்க் கீர்த்தியுறும் வாணா ளிழந்துயிரை
அன்னியர்மா ரொழித்தாரே."

ஆகலின்! அற்பசுகத்துக் கிச்சித்து ஆயுள்வரையினும் அழியா அபகீர்த்தி யடைவது அறிஞர்களுக் கழகல்லவே, அண்ணா! ஆண்பிள்ளையாகப் பிறந்து அநேக நீதிநூல் கற்றும், அடாத பாவச் செய்கைக்குப் பாத்திரராவது யோக்கிய மல்லவே.

மனோல்லாசன்:—பெண்ணே! நீயுரைப்பதை கவனிக்கிலகமேது?

சுந்தரவதனி:—அண்ணா அவனியினதிக்கில்! அறிவுடைமையை ஆபரணமாகப் பூண்டு உத்தம கன்னியை மணந்து உலகத்தோர் மதிக்க இல்லறநீதி வழுவின்றி நன்மனதமைந்து புத்திர பாக்கியத்தோடு வாழ்பவர்கள் இகத்தில் கீர்த்தியும்பரத்தில் முக்தியும் அடைகுவரென் றுலோசிப்பீர்.

மனோல்லாசன்:—ஆ! பெண் ஆசைக்கிசைந்த அமிர்தரசமே! இப்போது நீயுரைத்த வண்ணமே நாமிருவரும் இணங்கி வாழ்ந்திருப்போம் வருவாய் அழகுசுந்தரி.

சுந்தரவதனி:— வெண்பா.

கோபிப்பா ரையன் கொதித்தாலச் சைவ்யார்நீ
ஆபத்திற் காத்த பொன்னண்ணனே—பாப
பழிவார்த்தை பாஷிப்போர் பாரோரிகழ
அழிக்கிடுவா ரென்றே அறி.

அண்ணா! ஆபத்தைத் தவிர்த்து அன்னங் கொடுத்தவன் உடன்பிறந்தாங்கிய சகோதரனென்று மனுதர்ம சாஸ்திர முறையிடுவதால் நீரிவ்வண்ணம் என்னை இச்சிப்பது தருமமல்ல! ஆதலின், இதோ யானுனக்கு இக்நூறு மொகருக்கள் தருகிறேனிதை பெற்றுக்கொண்டு எத்தேசத்திலேனுஞ் சென்று, என்னினு மழகுள்ள கன்னிகையை மணம்புரிந்து சுகித்திருப்பாய்.

மனோல்லாசன்:—ஆ! அன்னநடை மின்னனொளியே! அமிர்தமொழியே! ஆசைக்கிசைந்த அழகலங்கிர்த சுந்தரவதனி! உன் வடிவுக் கிணங்கவும் வேறுஸ்திரீயும் இவ்வுலகிலுளரோ?



இவ்விதமாக சுந்தரவதனியும் மனோல்லாசனும் பரிஷித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் விருந்துண்ணப் போயிருந்த குணசீலன் வீட்டுக்குவரும்போது இவ்விருவர் வேடிக்கையும் பார்த்து வீராவேசங்கொண்டு அருக்கோபத்துடன் அடா! மனோல்லாசா என்னடா? வென்று அதட்டின சத்தத்தைக்கேட்ட மனோல்லாசனென்பவன் திடுக்கிட்டு இடியொன்று பேரொலியைக் கேட்டபெருச்சாளியைப்போற் கலங்கி மனந்திகைத்து மதிமயங்கி வீட்டின் உள்ளறையிற்றானே அங்கு மிங்குமாயோடித் திரிகையில், அவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்ட குணசீலன் முனிவுடனவனை நோக்கி அடா பாடலே! இக்குற்ற சேதியாவும் என்முன் னெடுத்துரைப்பையேல் மன்னிப்பேன் இல்லையேலுனை யிவ்வாளுக் கிரையாக்குவேனென்றறைய அன்னோன் மனது அஞ்ஞான சாகரத்தினின்று கரையேறாதிருந்தமையால் தன்னுயிரைக் காக்கும்படி ஏதேனும் தந்திரவார்த்தை புகலநாவெழாமல் ஐயனே! மெய்யனே! அன்னை தந்தையை விடுத்தானந்தர் வாலென் யாக்கையைச்சுமந் திவ்வவனியி லுயிர்த்திருக்கும்படியாய் காப்பாற்றிய துய்யனே! இன்றனியாபமாய் என்னுயிர் நீங்காவண்ணங் காத்திரக்ஷித்து அஞ்சேலென்று அபயாஸ்தந் தந்திருளும் அழகிய கையனே! யென்று அவன் கரத்தை முத்தமிட்டுக் கண்ணிலொற்றிக்கொள்ளவே, இரகஸ்யமர்ம மின்னதென்றுங் கவனித்துணராத குணசீலனுக்கு மனமிரங்கி சொல்வதாயினன்.

குணசீலன்:—அப்பனே! எனதாருயிர் நண்பனுடைய புத்திரனே! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யானுன்னைக்கொல்வேனோ? கொன்றும் இந்தத்தொல்லுலகிலுய்வேனோ? நின்மனதிலுற்றதை புகல்வாய்.

மனோல்லாசன்:—(இது நான் நல்ல தருணம்) ஐயனே! என் மனதிலோர் ஆசையிருக்கின்றது அதையுமது சமுகத்தில் தெரியப்படுத்த யோசிக்கிறேன்.

இங்ஙனம், மனோல்லாசன் புகன்ற வார்த்தையைக்கேட்ட குணசீலன் மர்மத்தையறியாதவனாதலால் தான் வேறு விதமாயோசிப்பதாயினன்.

குணசீலன்:—(தனக்குள்தானே கிஞ்சிற்று ஆலோசித்து) இச்சிறுவன் தின்பண்டத்துக்காகினும் ஆடையாபரணத்திற் காகினும் காசு வேண்டியதைப் பற்றி ஆசையாய் நாமில்லாத சம

யம் நமதுமனையாளாகிய சுந்தரவதனியைக் கேட்டு வாங்கிக் கொள்வோமென்று யோசித்து வந்தவன் நம்மைக்கண்டவுடனே பயந்து இலைத்தோட்டலானென்போலிருக்கின்றது. நாம் இதையுணராமல் வேறு விதமாயோசித்துத் தீமை செய்ய நினைந்தோமே பார்த்தனையா? ஆதலின் "ஆராய்ந்தறியான் றிராவசையுளாவன்" என்னுங் கதை போலாகுமே யென்று தன்னைத்தானே வெறுத்துக் கொண்டு மனோல்லாசனை முத்தமிட்டுத் தன் மடிமீது உட்காரவைத்துக் கொண்டு தனது கைக்குட்டையால் அவன் முகத்தைத் துடைத்து அப்பனே! உனக்கு வேண்டியவற்றை கேட்பையேல் உடனே யான் தருவேனடா! கண்மணி! இது வரையிலும் உன் தந்தையைவிட மேன்மையாக என்னை நம்பியிருக்கும் உனக்கு யாதொரு குறையு மணுகாதென்றறிவாய். ஆதலின் உனக்கென்ன வேண்டும் தெரிவிப்பாய்.

மனோல்லாசன்:—ஐயனே! இது வரையினு மெனக்கு அன்னங் கொடுத்துக் காப்பாற்றி இரக்ஷித்தீரே அது பெரிய காரியமல்ல. தற்சமயம் மதனென்னும் போர்வீரன் கருப்பு வில்லைக் கரத்திலேந்தி மலர்க்கணைகளை யென்மீது விடுத்துக் கொடும்போர் செய்து என் ஆவியைத்துன்பப்படுத்துகிறான். அவனுனுவத்தையடக்கி அமிர்த மொழியாளென்னுஞ் சுந்தரவதனி என்னுவலைத்தீர்க்கும் விதமாய் கிருபைகூர்ந்தருளச் செய்வீர்.

சுந்தரவதனி:—அடாபாவி இப்படியுஞ் சொல்லலாமா?

மனோல்லாசன்:—ஆ! அன்னமே!சொர்ணமே ! மன்மதன் கணையால் கலங்குமென் காதலைத் தீர்ப்பாய்.

இவ்விதமாய் இவ்விருவ ருரைத்த மொழியையுணர்ந்த குணசீலன் ஆச்சர்யமடைந்து "கருநாகங் கால்விரலிற் கடித்த உடனே விஷமானது சிரசுவரையிலேறுவதுபோல" கோபாவேசங் கொண்டு ஆக்ரமித்து பல்லைநெறநெற வெனக்கடித்து தன்கரத்திலிருந்த கத்தியால் மனோல்லாசன் மூக்கை யறுத்துத் துரத்திவிட அவன் குய்யோமுறையோ வென்று கூச்சலிட்டுக்கொண்டு ஓடிவிட்டதை கண்ணுற்ற சுந்தரவதனி மனந்தாளாமல் ஆ! அண்ணா! அண்ணா வென்று அழுதுக் கொண்டிருந்தனள்.



குணசீலன்:—பெண்ணே! அடாதகாரியஞ்செய்தோர் படாதபாடுபடுவார்கள். ஆதலின்! அந்தத்துன்மார்க்கப்பயல் தனக்குணத்தானுனைத்தாயென்றும் என்னை எஜமானென்றும் உணராமல் கேவலமாகநினைந்து உன்னை இத்தகைய அவமதிப்பாய்ச் சொன்னதினாலவன் மூக்கறுபட்டு முகத்தைக் காட்டாம லோடிப் போய் விட்டான். அவனை நினைந்து நீ துயரப்படுவது நன்கல்லமாதே.

சுந்தரவதனி:—நாதா! நீர் சொல்வது நீதிக்கு விரோதமாயிருக்கின்றனவே! அவனோ நம்மிடவூழியன்! அவனை யொருபொருட்டாக நினைந்து அவ்வண்ணஞ் சொல்லியதாலவன் மூக்கை யறுத்துத் துரத்திவிட்டேனென்கிறீரே இது ஞாயந்தானோ?

குணசீலன்:—பெண்ணே நீ மொழிந்தவார்த்தை யுண்மைதான், ஆயினும், அவன் நமது அடிமைப் பயலானதால் அவன் புகன்றதுர்ப்பாஷைக்குத் தகுந்த விதமாய்த் தண்டனை செய்தேன் இதைக் குறித்து நீ விசனப்படவேண்டாம். என்றனன்.

இவ்விதமா யிருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தபடியே இவர்களுக்குண்டாகும், துர்க்கால நிமித்தமாக கிரகசாரபலனும் சரியாய் வந்தொத்துக்கொண்டமையால்குணசீலன் அநேகவிதமாயசமாதானஞ்செய்து மனைவியின்கண்ணைத்துடைக்கும்போது அவள் பிணங்கிக்கொண்டு திரும்புகையில் சுந்தரவதனியின் சுண்டுவிரலின் கூர்மையான நகமானது கணவன் கண்ணிற்பட்டு கலங்கிவிட்டதைக் கண்டு ஆ! இதென்ன விந்தையென்று திப்பிரமையோடு அசைவற்று நின்றுவிட்டாள்.

பிறகு, குணசீலன் கண் கலங்கியதால் துடிதுடித்து பெருங்குரலிட்டு அழுத ஓசையையருகிலிருந்தவர்கள் ஓடிவந்து பார்த்து அக்கண்ணுக்கு அவுஷத முதலானவைப் புகட்டி சொஸ்தப்படுத்தினார்கள். பிறகுகுணசீலனுக்குஆறாத்துயரமும் தீராக்கோபமும் அதிகரித்து அருகிலிருந்த வூழியனை யழைத்து அவனிடமோர் நிருபமெழுதித் தந்து இந்தக்ஷணமே நீ டில்லி நகருக்குச் சென்று அங்கு வர்த்தகஞ் செய்யும் மணிபத்திரனை உடனே வந்து இக்கொடிய துன்மார்க்கியை அழைத்தேகும்படி புகலுவாயென்க.

அன்னோன் அக்கருத்துக் கிசைந்திருப்ப ... டுத்தலும் கொண்டு கர்னகமார்க்கமாய் வருகையில் முன்னம் கூறப்பட்ட மனோல் லாசனானவன் அவ்வாரணியத்தில் தனியே துயரப்பட்டழுதுக் கொண்டிருப்பதைக் கண்ணுற்று பரிதாபத்துடன் அருகிற் சென்ற மையால் உடனே அரசனுக்கு மேலுமேலுந் துயரமதிகரித்துக் கோவென்று கதறியழுதனன்.

ஊழியன்—வந்தனம் மனோல்லாசா!

மனோல்லாசன்:—அப்பா! என்கதி யிவ்வண்ணமாச்சுது பார்த்தனையா?

ஊழியன்:—மனோல்லாசா! அழவேண்டாம் விதி வந்தா லனுபவிப்பதல்லாது விடுமா?

மனோல்லாசன்:—அப்பா! எனக்குயானே இங்கு தேடிக்கொண்டேனே! அந்நரவிச்) கடற்கரையில் இக்கற்றவர்களாய் இயங்கி நிற்போரை யான் நமது எஜமானாகிய குணசீலனிடமழைத்து வரவிடி லென்னாக்கும் போகாதே என்கதியு மிவ்வாறாகாதே! ஐயகோ வென்று கதறியழுதனன்.

ஊழியன்:—மிகவும் மனமுருத்த மடைந்து ஐயா துயரப்பட வேண்டாம் பகவான் கிருபையாலுமது மூக்கு முன்போலவே சவுக்கியமாகும். முற்காலத்திலே அநேக ரிவ்வண்ணமே கிரகசாரகுணத்தினால் வெகு துன்பப்பட்டு திரேகங்குன்றி கைகாலறுபட்டு பாதவிக்கையில் பகவானருள் சுரந்து அன்னோர் ஆபத்தை தவிர்த்து அறுபட்ட அவயவங்களை சவுக்கியப்படுத்தி ஆதரிக்க வில்லையா?

மனோல்லாசன்:—ஆ! இதென்ன ஆச்சரியம்? அவயவத்தி லேதேனும் அறுபட்டுப்போயிருந்தாகில் அவன் ஆயுளோடல்லவா சரீரம்மயானத்திற்கேகும் வரையில் அங்கவீனமா யிருக்குமல்லது பழயபடி துண்டித்த மூக்கு ஒட்டிக்கொள்ளுமா? இதென்ன ஆச்சரியம்.

ஊழியன்:—ஐயா! ஆதியில் அஸ்திரபுரியையரிபாலனஞ்செய்துவந்த சமேரந்திர மஹாராஜன் தன்னு அருந்தவப்புத்திரனாகிய சரங்கதரனுக்கு சித்திராங்கியை பாணிக்கிரகணஞ்செய்யவேண்டுமென அந்



தணர் மூலப ... ன் திருவுருவப்படத்தை யனுப்பினன். அ... கும் வடிவலங்காரத்தைக் கண்ணுற்றதி... ஜன் மனமகிழ்ந்துபடத்தை தனதுபுத்திர... அன்னவள் ஆங்...மீத இவ்வழகனல்லது வேறொருவரை விரும்பேனென்று பிதாவுக்குரைக்க அதற்கவனும் சம்மதித்து, அம்மாதின் வடிவலங்கார மமைந்த படத்தை வேதியர்கரத்திலீந்தனன். அன்னோனதைக் கொணர்ந்து நரேந்திரன் பாலளித்தனர். அதைக் காணவே கிழவரசனுக்கு ஆவல்மீறி பித்தனைப்போற் கண் தெரியாமலலைந்து தன் மகனுக்கென்று நியமித்த கன்னியை மருகியென் றுணராமல் மதிமயங்கி, ஆ! அன்னமே மின்னற்கொடியே! முத்தந்தருவாய் திருவுருவே யென்று பிதற்றிக்கொண்டு அங்ஙனே மூர்ச்சித்து விழுந்து மறுபடியுந் தனக்குத்தானே தேற்றியெழுந்து மனதைத் திடப்படுத்தி சற்றுநேரம்யோசித்து, அந்தணரை வரவழைத்து, அரசுக்குரிய வீரவாளாயுதத்தை அவர்கையிற்றந்து நீரவணேகி அந்தக் கன்னியை இவ்வாளிற்கு மாலை சூட்டுக வென்றேயும் அதற்கவள் மறுக்கில் எமது சந்திர வம்சத்தினர்க் கிதுவே யார்க்க மாதலின் நீயும் இதற்கிசைவா யெனப் புகலுக வெனக் கட்டளை யிட்டனுப்பினன். அக்கருத்துக்கிசைந்த அந்தணரும் அவ்வாறேயாகுகவெனச்சம்மதித்து வாளைக் கரமேந்திச் சென்று சித்திராங்கதராஜனுக் கறிக்கையிட அவ்வரசன், நன்கென மகளையழைத்து சந்திராயுதத்திற்கு மாலை சூட்டச்செய்து பல்லக்கின் மீதேற்றி பந்துவர்க்கம்புடைசூழ அனந்திரபுர மனுப்பினன்.

பிறகு; கிழவரசனாகிய நரேந்திரன் மனோல்லாசத்துடன் தனக்கென வுற்ற மணமகள் பாலயனென்று வியப்புறுந் தன்மையாய் வேடம் புனைந்து, நரைத்த மயிர்களுக்கு கறுப்பு வர்ணந் தட்வி சிவி சிறுக்கறுத்து முகக்ஷவரஞ் செய்து, கதம்ப கஸ்தூரி புனுகு ஜவ்வாது முதலாகிய வாசனாதிரவிய மனைத்தும் திருமேனியி லணிந்து, கண்ணுக்கு மையிட்டு காதில் நவரத்தின கசிதமயமாய் விளங்கும் நவசகுண்டலமணிந்து அதற்கிசைந்த ஆடையாபரணாலங்கிர்தனாய்த் தன்னுடைய மந்திரி பிரதானியர் புடைசூழ்ந்தாரத்தக்கதாய்ச்சென்று, மணமகளுடன்வந்தவரையுமுபசரித்துவிருந்

[illegible]ட்டு மனமகிழச் செய்தனுப்பி [illegible] சுப முகூர்த்தத் [illegible]தில் சித்திராங்கியிருக்கும் மாளிகை [illegible]ள் தாதிகளுக் [illegible]கெச்சரித்துச் சிங்காரிக்கச்செய்து [illegible]பரண சிங்கா [illegible]ரலங்கிர்தனுய் அக்கன்னிகையின் மு[illegible] [illegible]ரது, அம் மாதுசிரோன்மணி யுற்றுப்பார்த்து இது என்ன அவலக்ஷணம்? நம்மை இக்கிழவரசனுக்கு மனைவியாயிருக்கவோ? நமது தந்தை இவ் விடமனுப்பினர்.

ஐயகோ! என் செய்வேனென்று மனம்பதைத்து, நல்ல திருக்கட்டும் அருகில் வந்தவுடன் யாரென்று விசாரிப்போம். சாரங்கதரனென்றால் சம்மதிப்போம் இல்லையேல் நிராகரிப்போமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் நரேந்திரன் வந்து, நாயகி! வருவாய் முத்தந்தருவாயென்னனும். அம்மாது இக்கிழவன்செய்த மோசத்தைப் பார்த்தனையா! தன் சுதனுக்கென்று பொய்வார்த்தைப் புகன்று சந்திராபுரத்திற்கு மாலைசூட்டச்செய்திவன் வரவழைத்து, தன்னை மருவவருவா யென்பதடாத பாபச் செய்கையல்லவா? ஆயினும், நாயகற்கொரு தந்திரஞ்செய்திவனை ஏமாற்றுவதனன்கென மதித்து, அரசே! எனக்கு விவாகமானதின் பிறகு; எனிஷ்ட தெய்வத்திற்கு ஆறுமாதம் வரையினும் விரதானுஷ்டானவிதிமுறை பிசகாமல் மனப் பூசை செய்கிறேனென்று யான் பிரார்த்தித்துக் கொண்டதாலவ்வண்ணமே யான் விரதமனுஷ்டிக்க வேண்டுமென்றனள். அதற்கு நரேந்திரன் ஒப்புக்கொண் டவ்வண்ணமே யாருகவெனஆக்யாபித்து தோழிகளா லவளுக்குரியவையாவுங் குறைவுறாது தருகவென்றோதி கட்டளையிட்டுச் சென்றனன்.

பிறகு; சில்நாட்கழித்து அஸ்தினபுரியில் மிருகங்கள திகரித்து காட்டை விடுத்து நாட்டில் வந்து குடிகளிட்ட பயிரையழிக்க ஆரம்பித்ததைக் கண்டோர் மனமருண்டு அரசனுக்குரைக்க அப்போதே நரேந்திரன் வேடர் வில்லியர்புடைசூழ வேட்டைக்குப் போயினன். பிறகு, இராஜகுமாரனுகிய சாரங்கதரன் தன்தந்தை வேட்டையாடச் சென்றதா லவர்வருமளவும் ஏதேனும் ஓர் அற்புதானந்தமாய் நந்தவன மணுகி பாச்சிகையுருட்டி சூதாடுவோமென்று தன் நண்பனுகிய சுமந்திரனுக்குப் புகல அன்னோன் சூதாடலாதவா தென்றுமறுக்க அஃதேதென்ன இராஜபுத்திரன் கேட்குதலும்,



உமது மூதாதைகளெல்லோரும் சூதினாற்றான் பகைஞர் கையில் இராச்சியமீந்து வனமணுகி அநேகதுன்பமனுபவித்து முடிவில் ஒருவரையொருவரெதிர்த்துப் போர்செய்தெல்லோரும் போர்க்களத்திலுயிரிழந்தார்கள். ஆகலின், அக்கொடிய சூதினையொழித்து வேறு விதமாகிய விளையாடலே உத்தமமென; இராஜகுமாரன் சம்மதித்துப் புறுபந்தயம் விடுவோமென்றிருவருங் கூடிவிளையாடுகையி லிச்சிறுவன் விடுத்த புறுவானது அந்தரமார்க்க மெழும்பி அவனியோர் கண்டதிசயிக்கப் பறந்துவந்து சித்திராங்கியின் மாளிகையில் வந்துட்கார்ந்தவுடனே தோழி யதனைப்பிடித்து தங்களரசி கையிற்றந்து அம்மணி இப்புறுவைப் பார்த்தனையா? இது நமது இளவரசனுடைய புறு! இதன் வடிவலங்காரத்தைப் பார்த்தனையாவென, அவளும் சமயம் வருமென்று காத்திருந்த காதலி யாகையால், இப்புறுவைத் தேடிக்கொண்டுவரும் என்பிராணநாதனையெப்படியாகினும் கண்ணுற்று அவன் தந்தையாகியகிழவரசன் செய்தமோசத்தையும் சகலருமறியப் புகன்று அவனை அவமானஞ் செய்வோமென்று கருதி தோழியைப்பார்த்து பெண்ணே! புறுவை தேடிவருபவரை என்னிடமழைத்து வருவீரென்று கட்டளையிட்டனள்.

பிறகு; சாரங்கதரன் சுமந்திரனைப் பார்த்து மந்திரி! இதோ பார்த்தனையா என்புறுவானது என்சிற்றன்னைமாளிகையிலுட்கார்ந்தது யான்போயதைவாங்கிக்கொண்டு வருவேனென்க, அமைச்சன் அநேகவிதமாய் வேண்டாமென்று தடுத்தும்: "விநாச காலே விபரீதபுத்தி" யென்றாற்போல் சுமந்திரன்வார்த்தையைத்தடுத்து மாளிகைக்குட் சென்று சிற்றன்னையே! புறுவைத் தருவீரெனலும், அதற்கவ ளன்னோன் கச்சைபிடித்துக் கொண்டு ஆசை நாயகா முத்தந்தருவீரெனலும் கேட்ட சிறுவன் பயந்து கச்சையையறுத்துக் கொண்டு ஓடிப் போய்சுமந்திரனிடம்உற்றதையுரைத்து துயரப்பட, அன்னோன் அவனைத்தேற்றி அஞ்சேலென தைரியம்புகன்று அரண்மனைக் கழைத்துச்செல்ல சித்ராங்கி மனங்கசந்து இத்தேகமினி வேண்டுவ தில்லையென வெறுத்து, கரத்திலணிந்திருந்த வளையலையொடித்து தேகமெல்லாங் கிழித்துக்கொண்டு பூமியில் வீழ்ந்தனள்.

அப்பால், வேட்டைக்குச் சென்ற நரேந்திரன் அரண்மனை சேர்ந்து அன்னம் புசித்திளைப்பாறிய பிறகு உல்லாசமாய் சித்தி

ராங்கியின் மாளிகைக்குச் சென்றவுடனே அக்கன்னிகையின் தலை
மயிரவிழ்ந்து பூமியிற்புரளவும், ஆடையாபரணமெல்லாஞ் சிதறுண்டு
அலங்கோல மாயிருப்பதையுங் கண்டு வியப்புற்று. ஹே! மாதரசி
யுனக் கிவ்வண்ணம் யார் செய்தனர்? சொல்லையேல் அன்னோர்
சிரசை இக்கட்கத்தினால் வெட்டியெறிவேனென்னலும், அரசேயுனது
புத்திரனென்னை இவ்வண்ணமாயடித்துத் துன்படுத்தினானென்க, கிழ
வரசன் சினந்து பெண்ணின் மேலுற்ற ஆசையால், தன் அருந்தவப் புத
ல்வன் மீது சினந்து யார் தடுக்கினும் பணியேனென்று கொலை
ஞரை யழைத்து இவன் வலது கரத்தையும் இடது காலையும் வெட்
டு வீர்களென்று கட்டளையிட, அன்னோ ரவனை ரணக்களமழைத்துச்
செல்வதைக்கண்ட தன் தாயின் துயரத்தையகற்றி அம்மனீ அஞ்
சேலென கையமர்த்திக் கொலைஞருடன் செல்லும் மார்க்கத்தில் சித்
திராங்கி யோடிவந்து. ஆ! நாதா! அனியாயமா யுயிரிழப்பதுநலமல்ல.
இனியாகிலுமென் இஷ்டத்தை பூர்த்திசெய்வீராகில் உன்னை விட்டுவி
டும் படியாகச் செய்வேனென்றறைதலும் அவன் சம்மதியாது சிற்
றன்னையே போய்வருகிறேனென்று கொலைக்களமணிகி கொலைஞரால்
கால்கை யறுப்புண்டு பரமனைதியானிக்க அவர் கிருபாநோக்கத்தால்
கைகால் வளர்ந்து வந்தன.

பிறகு; அம்மார்க்கத்தில் மச்சமுனிதனது சிஷ்யவர்க்கத்துடன்
வரும்பொழுது இச்சிறுவனுடைய அழுகுரலைக் கேட்டு
அருகிற்சென்று விசாரித்து அவனுடைய திருமேனிமுன்னினு மதிக
மாக பிரகாசிக்கச் செய்து அவனுக்கு ஞானோபதேசஞ் செய்தனர்.
இவையாவுங் கண்ட மந்திரி அரசனிடஞ்சென்று நிகழ்ந்தவற்றையு
ரைக்க அரசன்யாவையும் தீரவிசாரித்து, ஆ! என் அருந்தவப்புதல்வா!
கொடுங்கோன்முறைப்படி நின்னைத்தண்டித்தே னென்று விசனப்
படவும் அருகிலிருந்தோர் தேற்றினார்கள்.

பிறகு; தோழி தன்னுடைக்குள்ளாகவும் சித்திராங்கி அக்கினியிற்
பாயவும் நேரிட்டது. நரேந்திர மஹாராஜன் தனது மைந்தனா
கிய சாரங்கதரனை வந்து, இராஜரீகம் புரிவாயென்று அவன் கரத்திற்
செங்கோலீந்துமகா தபசிரேஷ்டர்களருளினால் தபஞ்செய்யவனமே
குவேனென்க. அக்கோட்பாட்டுக்குச் சாரங்கதரன் மனமொவ்வாமல்
மந்திரியாகிய சுமந்திரனை அவ்வவஸ்தினுபுரியைப்பரிபாலிக்கும்படி மகு



டம் புனைந்து செங்கோலீந்து, தாம் நாளதுவரையிலும் அழியாத
கீர்த்தி பெற்றிருக்கின்றனரே. ஆதலின், நீர் இவ்வனத்திலிருக்கும்
தபோதனர்களின் கிருபையால் சுகமடைவீர், அஞ்சவேண்டாமையா.

மனோல்லாசன்:—அப்பா! ஆதியில் எனது தாய்தந்தையர்களிவ்வார்
த்தையையனுவளவுஞ் சட்டைபண்ணாமல் குணசீலன் வீட்டு
வேலைக்காரனைப்போலவேநடிருந்தபடியினாலல்லவோகொஞ்ச
மேனும் அச்சமன்றி, என்மூக்கையறுத்துத் தூரத்தினான் பார்த்
தனையா அன்றியும், என்னாலல்லவோ அந்தசுந்தரவதனியெனும்
பெண்ணைமனையாளாகக் கொண்டான், அப்படியிருக்க அவனை
யான் இச்சித்தேனென்று இவ்விதமாகிய கொலைத்தொழிலுக்குச்
சமானமாகிய அநியாயஞ்செய்தனனே இது ஞாயந்தானோ?

ஊழியன்:—ஐயா! மனோல்லாசா! உலகத்தின்கண் உலாவுமாந்தர்
களின் நிலைமையைக் கேளும். கேடுவருமுன்னே மதிகெட்டுவரு
மென்பார் அத் தன்மையாகவே ஓரதிசயம் யாவரும் வியப்புறும்
படி யாச்சுது அதனைச் சொல்லவென்றால் எனக்குச் சிரிப்புவரு
கின்றது.

மனோல்லாசன்:— டடா! அதென்ன விந்தையோ? யானதை யறிய
வேண்டும் தெரிவிப்பாய்.

ஊழியன்:—ஐயா! உமது மூக்கையறுத்துத் தூரத்தியகுணசீலன் சுந்தர
வதனியை முத்தமிடப்போய் அந்தப் பெண்ணின் கண்டுவிரலின்
நகத்தினால் கண்ணை கலக்கிக்கொண்டுதுய்யோ முறையோவென்
று கூச்சலிட்டனன். இவ்வோசையைக் கேட்டோரெல்லாம்
திடுக்கிட்டு இஃதென்னகோஷ்டமென ஓடிப்போய்ப்பார்த்து
நேத்திரத்திற்குத் தகுந்த அவுஷதங்கடவி சொஸ்தப்படுத்தி
நிகழ்ந்தவற்றை விசாரித்தோம்! ஒற்றைக்கண்ணன் உங்களூலவ
ரால் நடந்த சங்கதியாவும் ஒன்றுகூட விடாமல் புகன்று, தன்
மாமனாரகிய மணிபத்திரன் இந்தக்ஷணமே வந்து சுந்தரவத
னியை அழைத்துக்கொண்டுபோகும்படியாய் இங்கிருப்பெழுதி
என் கையிற்றந்தனன் பார்த்தனையா?

மனோல்லாசன்:—அடடா! இதென்ன ஆச்சரியம்! மெய்தானோ? தெரி
விப்பாய்.

ஊழியன்:—ஆம் உண்மைதான். நீரும் என்னோடுவருகின்றீரா?

இவ்வண்ணமாய்ப் புகன்ற ஊழியன் வார்த்தையைக் கேட்ட மனோல்லாசனென்பவனுக்கு மேலும்மேலும் சந்தோஷமதிகரித்து பழையபடியே தன் மனதை மோகானந்த சாகரத்தில் மூழ்கிக்கலங்கும்படிசெய்து மூக்கறுந்த தென்னும் கவலையில்லாமல் ஆ! ஹா! இனி நமக்கு நற்காலம் வாய்த்தது இவன் டில்லிநகருக்குப் போய் மணிபத்திரனுக்கு கடிதத்தைக் கொடுத்தவுடனே அவன் வந்து சுந்தரவதனியை அழைத்துக்கொண்டு இம்மார்க்கமே செல்வான். அத்தருணம், நாம் ராஜாளியானது மரத்தின்மீதுவட்டமிட்டுக்கொண்டிருந்தவண்ணமே கீழ்மேலிருக்கும் புறா உயரவெழும்பும் சமயத்தில் திடீரென பாய்ந்து பிடித்துக்கொண்டு பறந்தோடுந் தன்மையாகவே! நாமும் இவ்வண்ணமே பதுங்கியிருந்து அவளை கைப்பற்றுவோமென்று மனதிலெண்ணி ஊழியனைப் பார்த்து நானிங்குதானிருப்பேன். நீபோய் வருவாயென    அனுப்பிவிட்டனன். இம்மொழியைக் கேட்டவிறுவன் அவ்விடமகன்    டில்லிநகருக்கேகி அங்குவர்த்தகஞ்செய்யும் மணிபத்திரன் முன்ப    சென்று வணக்கமாய் முழந்தாள் மீதுட்கார்ந்து வந்தனஞ்செ    தன்னெஜமான் புகன்றவற்றை ஆதியோடந்தமாய்ப் புகன்று    பத்திரத்தையுங் கையிற் றந்தனன். அன்னோனதைவாங்கி தன்குமார    னாகிய கமலாசனனென்பவனிடம் கொடுத்து வாசிக்கச்செய்து சகல சங்கதியும் விரிவாயுணர்ந்துபுற்றிலிருந்தகிருஷ்ணசர்ப்பம் புல்லெனச்சீறிவெளியே புறப்படும் வாறுபோற் கொதித்து கோபாவேசமா யெழுந்திருந்து சொல்வதாயினன்.

மணிபத்திரன்:—அடாமகனே கமலாசனா! அக்கொடியதுன்மார்க்கி செய்தபாபச்செய்கையைப் பார்த்தனையா? அன்னமிட்டவரகத்திற் கன்னமிடும் பாவிகளைப்போல தன்னுடலைக் காத்திரக்ஷித்த கடவுள்போன்ற பிராணநாதனாகிய மணவாளன், கண்ணைக் கலக்கிக் குருடாக்கினள் ஆதலின் நீ இந்த க்ஷணமே காபிரி தேசத்திற்குச்சென்று அந்தப்பாதகியை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து இடுப்பளவு மணலிற் பள்ளந்தோண்டி யதிலிறங்கச்செய்து மண்ணைத்தள்ளிப் புதைத்து விட்டு இந்தக்கத்தியினால் அவளை இருதுண்டாக வெட்டியெறிந்து விட்டுவருவாயென்னனும் அவனுய்பிதாவின்சொற்பிரகாரம் காபிரி



தேசத்தில்வந்து குணசீலனைக்கண்டு நடந்தசமாச்சாரம்யாவும் ஆதியோடந்தமாகக்கேட்டுணர்ந்து சுந்தரவதனியையழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து தகப்பன் சொற்பிரகாரம் தன் தங்கையை இடுப்பளவுதூரம் மணலில் புதைத்துவிட்டு கத்தியையோங்கவே! சுந்தரவதனிபயந்து நடுநடுங்கிவாய்குளறி அண்ணா இதென்ன அநியாயம்? வெட்டாதீர் வெட்டாதீரென்று கதறியழவும், சகோதரனுக்குமனம்பதறி கத்தியைபூமியிலேபோட்டு விட்டுக் கதறியழுது அம்மணி என் மனம் பதறுதே தந்தையுன்னை இரண்டு துண்டாய் வெட்டியெறியும்படி கட்டளையிட்டனரே யென்செய்வேனம்மா?

சுந்தரவதனி:—அண்ணாநமதுதாய்தந்தைக்கு இரண்டுபுத்திரரும் ஒருபுத்திரியுமாய்ப் பிறந்தோமே, இதில் யானிறந்து நீங்களிருவரும் ஜீவித்திருப்பதழகோ? அன்றியும் மறுமுறை யாமிவ்வண்ணமே அன்னைவயிற்றிற்பிறந்துப்போமோ? இவையாவுமுணர்ந்திவ்வேழையாகிய எனதாருயிர்ப்பிச்சைதரல்வேண்டும் அண்ணா, என்று கோவெனக்கதறியழ கமலாசனனென்பவன் சகோதரவாஞ்சையால் தானுடாவிடினும் யாழுமென்னும் பழமொழிக்கிணங்கக் கதறி பதறி நிலைதளர்ந்து கோவென் றழுது பூமியில்விழுந்து மூர்ச்சித்தெழுந்து மனந்தேறி, தங்கையின் முகத்தைப்பார்த்து,

கமலாசனன்:—அம்மணி யானென்செய்குவேன், நமது தந்தை யுன்னைக்கொன்றுவிட்டு வருவாயென் றாக்ஞாபிக்க யான் அதைதவறி நடக்கலாமா? அவ்வாறாக வுன்னை கொல்லாவிடினும் தந்தைசொல் தட்டிய பிதாத்துரோகியெனவும், சகோதரவாஞ்சையைக் கடந்து பழிக்கஞ்சா பாதகனாக உன்னைக் கொன்றுவிட்டால் ஸ்திரீஹத்தியிற்சிக்கிய மஹாபாபியெனவும்சகோதரத்துரோகியெனவும், பலருமிகழப் புவியில் அபகீர்த்தியடையலாகுமே! ஐயகோ! அம்மணி! யானிச்சென்மமெடுத்தபலனை நினைக்கநினைக்க ஐயமோங்குதே! அன்றியும், இருவாய்க்கொள்ளியிடைப்பட்டஎறும்பைப்போல மனந்தடுமாறித்தியங்குதே! ஆ விதியே.

சுந்தரவதனி:—அண்ணா! ஐயப்படவேண்டாம், விதியைமதியால்வெல்லக்கவேண்டுமல்லவோ? ஆதலின் நமது வாழ்வோ? நீர்மேற்

குமிழி நிலையிலாக்காயம். ஊனைத்தின்று ஊனைப்பெருக்கிய இவ்வுடலைச் சதமென்றுநம்பி ஒருயிரைக் கொலைசெய்தல் பாபமல்லவா? நீரறியாத மனுதர்ம சாஸ்திரமும் வேறுண்டோ? நம் தந்தை கோபத்தினா லுரைத்த மொழியை நீர் பாபத்திற்கேதுவாகச் செய்யில் விபரீதமாகு மல்லவா! திரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரானவர் லோகமாதாவாகிய சீதையின்மீது சினங்கொண்டு தன்னிளைஞனை யழைத்து, இலக்ஷ்மணா இம்மாதை கானகத்தில் விடுத்து வருக வென்னலும், சகோதரர் மறுத்ததினால் தனதாகரத்திற்றுங்கிய வாளையுருவி இலக்ஷ்மணா இவ்வஞ்சியை வனத்தில் விடுத்திடில் நன்குஇல்லாவிடிலென்வாளாலுனைப் போக்கிக் கொள்வேனென, முனிவுறக் கண்ணுற்ற இளையோன் ஜானகியை ஆரண்யத்தில் விடுத்து நகரத்தில்வருகவும் அத்தருணம் ராமச்சந்திரனுக்குக் கோபம் நீங்கி தம்பிலக்ஷ்மணா, வைதேகியை வனத்தில்விடுத்துவந்தனையா? வென்னலும்? ஆம்! அண்ணாவென் றறையுமுன்னமே ஆவிசோர்ந்து ஆறுந்துயருற்று சீதையைக் காணும்வரையிலும் அவரடைந்த துன்பத்தை யாவராற் சொல்ல முடியும் அண்ணாவே.

கமலாசனன்:—அம்மணி நீகூறிய சரிதையை ஆதியோடந்தமாக எனக்குத் தெரிவிப்பா யம்மா.

சுந்தரவதனி:—அண்ணா! அப்படியேதெரிவிக்கின்றேன் கவனிப்பீர். அமராவதி இதுவோவென அவனியோர் கண்டு அதிசயித்து ஆனந்தங் கொள்ளும், அயோத்தியாபுரிக் கிறைவனாகிய தசரதச் சக்கரவர்த்திக்கு அநேக நாளாய்ப் புத்திரசந்தான மில்லாதிருக்குங் காலவிபரீதத்தைத் தமது குருஸ்வாமியின்பாற் புகன்று துக்கித்தழ ஆசான் கருணையுற்று அஞ்சேலென ஆதரித்து கலைக்கோட்டு மஹாமுனியினால் புத்திர காமேஷ்டியாகம் செய்விக்க அந்த ஓமகுண்டத்தில் இருந்து ஓர் பூதமானது பொற்கிண்ணத்தில் தேவாமிர்தம் போன்ற பாயசங் கொண்டுவந்து அரசன்பா லளிக்க. அன்னோன் தேவியராகிய கோசலைக்கும், கைகேசிக்கும், சுமித்திரைக்கும் அப் பாயசத்தை யருந்தச் செய்து மீதியாயிருந்த மற்றவையும் சுமித்திரைக்குத் தந்தருந்தச்செய்தபிறகு கோசலைக்கு ஸ்ரீராமனும் கைகேசிக்கு பரதனும் சுமித்திரைக்கு லக்ஷ்மணனும் சத்துருக்கனும் பிறந்ததைக் கண்டு



தசரதசக்ரவர்த்திக்கு ஆனந்த மேலிட்டு அந்நால்வருக்கும்வில் வித்தையாவும் தமது குருஸ்வாமியாகிய வசிஷ்டரால் கற்பித்துவரும்போது ஓர் நாள் இந்நான்கு பிள்ளைகளும் வேடிக்கை பார்த்தமாக கானகமேகி விலங்கினங்களை வதைத்து வேட்டையாடி யலுப்புற்றோர் மரத்தின் நிழலி லிளைப்பாறுஞ்சமயம் கைகேசிக்குச் சீதனமாகவந்த மந்தரை யென்னுங் கூனியென்பவள் மக்கள் பசியா லெவண் களைத்தனரோவென் றுவனுடன் ஓர் கிண்ணத்தில் பலகாரங்களை யெடுத்துக்கொண்டுவந்து விருக்ஷத்தின் நிழலில் விளையாடும் பாலருக்குக் கொடுத்து புசிக்கச் செய்தபிறகு யான்போகிறேன் நீங்கள் துரிதத்தில் வருவீர்களென்றியம்பித் திரும்புகையில், ஸ்ரீராமபிரான் அவள்மீது கருணைபுரிந்து தன்னிளைஞனை நோக்கி தம்பி! இக்கூனியாகிய மந்தரை நம்மீது மிகவும் விஸ்வாசமுடையவள் அனுதினமும் நமது பசிவேளைக்கு பலகாரங்களெடுத்துக்கொண்டுவந்துகொடுக்கின்றனளாதலால் இவளுக்கு யாம் பிரதியுபகாரம் செய்தல்வேண்டுமென்றுரைக்க, பரதன் மனமகிழ்ந்து அண்ணலே! நாம் இவளுக்கென்ன உபகாரம் செய்யவேண்டு மெனில், இவள் கூனை நிமிர்த்தி விடுவதுதான் தகுந்த உபகார மெனக. அப்போதே ஸ்ரீராமன் உண்டிவில்லால் மந்தரையின் முதுகிலடிக்க, சுருண்டிருந்த நரம்பின்மேல் பட்டமாத்திரத்தில் சுருண்டிருந்த நரம்பெல்லாம் மளமளவென்று நெட்டைவிட்டு நிமிர்ந்து திரும்பிப் பார்த்து சிறுவர்மீது சினந்து, அடா! துஷ்டப்பிள்ளைகாள் உங்களுக்குச் சகாயஞ்செய்ய எனக்கபாயஞ் செய்தீரல்லவா? நானொருகாலத்தில் இந்த ராமன் மகுடந் தாங்கும்போது யான் கலைத்துக் காட்டுக்குத் துரத்தாவிடி லென்பேர் மந்தரையா? நல்லதாகட்டு மென்று கொடிய சபதஞ் செய்தனள். இதைக் கேட்ட ஸ்ரீராமர் வியப்புற்று, ஆ! இதென்ன விந்தை? உனக்கு நன்மை செய்தேனேயல்லது தீங்கு செய்திலனே. நீ இவ்வண்ணம் முனிவுடன் புகல்வதேனென. அதற்கு மந்தரை அடா ராமா யான் தோழியானதால் வீட்டுவேலை அதிகமாகச் செய்யவேண்டும்; ஆதலின் கூனியாயிருந்தால் யாவரும் என்மீது பரிதாபப்பட்டு யாதொரு வேலையும் செய்யவொட்டார்கள். இப்போதுன்னால் என்கூன் நிமிர்ந்ததினால் எனக்கு வெகு கஷ்டமாய் விட்டதேயென் றறைந்து போய்விட்டாள்.

பிறகு சிலநாட் சென்று விஸ்வாமித்திரர் இராமலக்ஷ்மணரை யழைத்துச் சென்று தாடகையைச் சம்மாரஞ் செய்வித்து தன் யாகத்தைப் பூர்த்திசெய்துகொண்டு மிதிலாபுரிக் கழைத்துச் செல்லும்போது கல்லாயிருந்த அகலிகையை ஸ்ரீராமன் எழுப்பி விட்டுப் போகும்போது ஜனகராஜன் புத்திரியாகிய ஜானகிக்காக வில்லை வளைத்துப் பந்தயஞ் செலுத்தி, அந்தக் கன்னிகையைத் தான் மணந்து மற்றமூன்று கன்னிகைகளையுந் தமது தம்பிமார்களுக்கு மணம் புரிவித்து அயோத்திக் கேகையில், வந்தெதிர்த்த பரசுராமனை ஜெயித்ததைக் கண்டு தசரதன் மகிழ்வுற்று தன்செங்கோலை ஸ்ரீராமன் கரத் தீந்து மாநிலம் புரப்பாயென்றிசைப்ப. அச்சமயம் கூனியின் கலகத்தால் கைகேசியின் கோட்பாட்டால் பரதனை நாடாளவும் ஸ்ரீராமன் லக்ஷ்மணன்சீதை இம்மூவரும் மரவுரி கோலமாய் ஆரண்யமேகி பஞ்சவடியிற் றங்கினார்கள்.

அந்தருணம் ஸ்ரீராமலக்ஷ்மணரைக் கண்டு மோகித்த சூர்ப்பநகையை அவயவபங்கஞ் செய்தனுப்பினதைக்கண்ட இராவணனவன் சினந்து! அம்மா! நின்னையார் இவ்வண்ணஞ் செய்தனரென்று வினவ, அவள் நடந்தவற்றை மறைத்து, தந்திரோபாயக்கருத்துடன் அண்ணே! நமது பஞ்சவடியில் இரண்டு தபசிகள் ஒருவடிவலங்காரமாகிய ஓர் பெண்ணை அழைத்து வந்திருக்கின்றனர். யான் அம்மாதை யுனக்கு மனைவியாக அமையச் செய்யும்பொருட்டு அதிக ஆவலுடன் சென்று தூக்கியெடுத்தேன். அவ்விருவரும் ஓடிவந்து என்னை இக்கதி செய்தனரென் றுரைக்கு முன்னமே தசக்கிரீவன் அப்படியா? நல்லதிருக்கட்டுமென்று மாரீசனைமானாக வேவனுப்பி இராமலக்ஷ்மணரை ஏமாற்றிவிட்டு சீதையை பன்னகசாலையோடு தூக்கிச் செல்வதைக்கண் டெதிர்த்த ஜடாயுவையும் மரணமூர்ச்சையாய் விழச் செய்து இலங்கையில்வந்து அம்மனை சிறைவைத்து தன்னையணைக் கும்படி வெகுவாய் வேண்டியும் ஜானகியிணங்காததால் வனத்தைச் சுற்றிலும் அக்கினிக் காற்று வீசிக்கொண்டிருந்தது. அப்பால், மானைக் கொன்றுவிட்டு மாயராக்ஷதனெனத் தெரிந்து பன்னகசாலையில்வந்து ஜானகியைக் காணாமையால் அயர்ந்து ஜடாயுவினால் தெரிந்து அவரைத் தகனஞ்செய்துவிட்டு அம்மார்க்கமே வரும்போது கிஷ்கிந்தை யரசனாகிய வாலியை வதைத்து, அவன் தம்பி சுக்கிரீவனுக்கு அங்கதனை மகுடாபிஷேகஞ்செய்து, வானரசேனையை துணை



யாகக்கொண்டு சமுத்திரத்தின்மீதி லணைகட்டிக்கொண்டு இலங்கைக்குச்சென்று இராவண கும்பகர்ணாதி முதலிய அதிவீர பராக்கிரம சாலிகளாகிய இராக்ஷதர்களை யெல்லாம் சம்மாரஞ் செய்வித்து அயோத்திக்கு வந்து அரசபுரிவதாயினர்.

ஒருநாள் ரஜகன் வீட்டிற் கலகம் விளைந்ததினால் அவன் மனையாளை யடிக்க அவள் அடுத்தவீட்டி லிராமுழுதும் பயந்திருந்துவிட்டாள். அதையுணர்ந்த அவன் குலத்தினர் அவளையழைத்தும்படியாக வவ்வண்ணானுக்குச்சொல்ல அவன்சினந்து ஹே! ரஜகவம்சத்தினரே! நம்குலத்தினர் அயல்வீடுபோனமாதரையழைக்கத்தகுமோ? சீதையை இராவணன் பத்துமாதம்வரையிலும் இலங்கையில் வைத்திருக்க ஸ்ரீராமர் வானரங்களை துணையாகக்கொண்டுசென்று ராக்ஷதரையும் ராவணனையுங் கொன்றுவிட்டு ஜானகியை அழைத்து வந்தனரே அப்படி நமது ரஜகவம்சத்தாரும் நடக்கலாமா? குலத்திற்பெரியோரே! இந்நல்வார்த்தைசொன்னீர்! யென்று அதட்டிச்சொல்லியதைக்கேட்ட ஒற்றர்சோதனைத் தலையாரிகளிருவரிலுங் காத்திருந்தவைத்துக்கொண்டு ஓடிவந்து ரஜகன்வீட்டில் நடந்தவையாவும் ஸ்ரீராமபிரானுக்குத்தெரிவிக்க அவர் திடுக்கிட்டு இச்சமயமே சீதையைக்கானில்விடுக்கும்படி லக்ஷ்மணருக்காக்ஞைசெய்ய, அன்னோர் கூடாதென மறுக்க, வாளையுருவி கரத்திலேந்தி வாளாணையாய்த்துக்கொள்ளுவேனென, லக்ஷ்மணர் பயந்து உடனே ஜானகியை வனத்தில் விடுக்க, சினமகன்றபின் ஸ்ரீராமபிரான் மனமயங்கி மனையாளைப் பிரிந்து துயரப்படக்கண்ட குருநாதனாகிய வசிஷ்டரவர்களுக்கு அஸ்வமேத யாகம் செய்யும்பொருட்டாக்ஞாபித்தனர்.

அப்பால் வனத்தில் விடுத்த ஜானகி யழுகுரலைக் கேட்ட வால்மீகர் தனதாசிரமத்தி லிருத்தி யுபசரிக்க, நான்குமாதக் கர்ப்பத்துடனே கானில் வந்தமையால் ஆறுமாதம் வரையிலும் பன்னகசாலையிலிருந்து பத்துத் திங்களும் நிறைந்து பாலசூரியப் பிரகாசத்தைப்போல் வடிவலங்கார சிங்காரமாயிலகும் ஓர் புத்திரனை யீன்றனள். அம்மஹாமுனிவர் அக்குழந்தைக்கு குசனென்னு நாமகரணஞ் சூட்டினர். சிலநாட்சென்று தர்ப்பையினால் பிறந்தவனுக்கு லவனென்று பெயரிட்டார்.

பிறகு, அஸ்வமேத யாகஞ்செய்து புரவியுடன் சத்துருக்கனைத் துணையாகவனுப்ப, அப்புரவியானது சகல தேசமுந் திரிந்து வால்மீகர்வனத்தில்வரும்போது, லவன்குதிரையைப்பிடித்துக் கட்டி வந்தெதிர்த்த சேனைகளையெல்லாம் சின்னாபின்னஞ் செய்ததைக்கண்ட சத்துருக்கன் லவனைப் பிடித்துத் தேர்க்காலிற் கட்டியதைக் கண்ணுற்ற சேடியர் சீதைக்குத் தெரிவிக்குதலும் குசனையழைத்து, அநேக அஸ்திர சஸ்திரங்களைத் தந்து மைந்தா! பகைஞரை வென்று தம்பியை அழைத்து வருவாயென்ன, அச்சிறுவன் அப்படியே யாகுகவெனச் சம்மதித்து, அமர்க்களம் வந்து தம்பியை விடுவித்து இருவருங்கூடி பகைஞரைவென்று அன்னையின் சமுகம்வந்து நடந்த சவிஸ்தாரங்களையெல்லாம் ஆதியோடந்தமா யுரைக்கும்போது முட்டையைச் சுமந்துகொண்டுவந்த சாம்புவந்தரும் அநுமாரும், அம்மையுக்கு முன்வந்து நின்றவுடனே, ஆ! ஐயா! இதென்ன விந்தையென்றுரைத்து அவ்விருவராலும் நடந்தவற்றை யுணர்ந்து, ஆ! நாதா! மடிந்தீரா வென்றழக்கண்ட வால்மீகர் இறந்தோரை யெழுப்பித்தருதலும், அனைவரும் அயோத்திக்கு வந்து அஸ்வமேதயாகஞ் செய்தானபிறகு ஸ்ரீராமர் மறுமுறையும் மனையாளை அக்கினியில் ஸ்நானஞ்செய்யச்சொல்ல சீதையும் அவ்வாறே மறுமுறையும் அக்கினியில் மூழ்கி எழுந்து தன் கற்புநிலையைச் சகலருக்குங் காட்டி பூமிதேவியை நமஸ்கரித்து அம்மணி எனக்கு இடந்தரல்வேண்டுமென்ன, பூமிஇருபிளவாய் படீரென வெடிக்க அப்பிலத்துவாரத்திலிருந்தாவந்த நாககன்னியர் அம்மனை முத்துச் சிவிகையிலேற்றிச்சென்றதை யுணர்ந்த ஸ்ரீராமபிரான் கோபாவேசங்கொண்டு வில்லிற் கணைதொடுத்து இப்பூமியை வேருடன் கெல்லுகிறேனென் றுரைத்து நாணியை யிழுக்கும்போது தேவர்கள் பயந்து அவர் மனதைச் சாந்தப்படுத்தினார்கள்.

ஆதலின் அண்ணா! கோபத்திற்கு ஈனமில்லை. கொஞ்சநேர கோபத்திற்கு அநேககாலமும் நிரதபாபமும்பழியும் வருமே! நமது தந்தை! சிந்தாற் கூறியதைநீர் ஸ்திரமாய் சாதிப்பதழகல்லவென்று திகழ் பயத்துடனே நினைந்தும் பரிதாபமாய் மனவிசாரத்துடன் கண்ணீருதிர்த்தனள்.

கமலாசனன்:—அம்மணி! இவ்வளவு நீதிசாஸ்திரமுணர்ந்து, தேவ அம்சமாய் விளங்கிய நின்னைக்கொன்றால் இப்பாவமெத்தனை



ஜென்மங்க ளெடுத்து அனுபவித்தாற் தீரும். ஆதலின்! நீ இக்குழியிற் குனே விற்றிருப்பாயாகில்/ பகவானருள் சுரந்து உன்னைக்காப்பாற்றுவர். அஞ்சேல் என் தங்கையே யானேதச் சிலவு தருகின்றனையா?

சுந்தரவதனி:—அப்படியே! மகாசந்தோஷம் அண்ணாவே.

அப்பால் கமலாசனன் போனபிறகு சுந்தரவதனி தானிருக்கும் நிலையைச்சகிக்க முடியாதவளாய்த் துக்கித்து! ஹே! சர்வேஸ்வரா எண்ணறக்கற்று எழுத்தறவாசித்தும்பெண்புத்திபின்னிங்காய் வினையுமென்பது சரியாய் முடிந்ததே, ஐயகோ! வையகத்திலெவரெவர் எத்தீங்கு செய்யினு மத்தீங்குக்கு கடவுள் தண்டிப்ப துரியவை யென்று சாஸ்திரமுறையிடும் விதம் மனோல்லாசன் என் கற்பழிக்கயுன்னி மூக்கையிழந்தான், அவன் குற்றத்திற்கிணங்க யான் வருத்தப்படுவானேன். சும்மாயிருந்தால் யாதொருகளங்கமும் வாராதன்றோ? ஹே! ஜெகதீசா சரீரம் துடிக்கின்றதே சஞ்சலமாகுதே! ஹே லோகநாயகா! ஆதியில் மடுவின்கண் கசவாயி லகப்பட்டுத் தத்தளித்துத் தடுமாறி தன்னுயிரைக் காக்க வழியேதென்று கலங்கியழுத கஜேந்திரனென்னுங் குஞ்சரத்தின்முன் ஓடிவந்து கராவை சக்கரத்தினாற் பிளந்து யானையை அஞ்சேலென் றாதரித்த ஆதிமூலா வென்றழுது அயர்வடைந்து ஹரியின் திருவடியில் மனதைச் செலுத்தி மௌனநிலை யுற்றிருந்தனள்.

இங்ஙனம் சுந்தரவதனியின்கதி ஆற்றொணா அபத்தாயிருக்க, அம்தாநகரைப் பரிபாலனஞ்செய்யும் கீர்த்திசேனமஹாராஜன் தனது மந்திரி பிரதானியருடன் கொலுவமர்ந்து தேசவிசாரணை செய்தபின்னர், மிருக வேட்டையாடுவோமென்று மந்திரி பிரதானியருடன் வேடர் வில்லியர் புடைசூழ ஆரண்யமணுகி நாற்புறமும் வேடவில்லியராவித்து காட்டைக்கலைத்து பன்றி மான் சிறுத்தை சிங்கம் புலி கரடி முதலாகிய அநேககொடிய மிருகங்களையெல்லாம் வதைத்து சின்னாபின்னப்படுத்தியபின் வேந்தன் களையாறும்பொருட்டு அமைச்சனை யழைத்து கடற்கரைக்குப் போகும்போது ஒப்பளவு தூரத்தில் மணலில் புதைக்கப்பட்டிருக்கின்ற சுந்தரவதனியென்னும் பெண்ணைக் கண்ணுற்று வியப்புற்றவனாய்க்

கண்களைக் கரத்தினால் மூடிக்கொண்டு. ஹே! மந்திரி! நமக்கெதிரில் பார்த்தனையா? மின்னல்தோன்றி நம்கண்ணைக் கூசச்செய்தனவென்க. அமைச்சனும் வியப்புற்று, ஏந்தலே! அவை மின்னலல்ல பொற்பதுமைபோற் றோற்றுது, மின்னலாகில் பிரகாசிப்பதும், மறைவதுமா யிருக்குமன்றோ? இது அசைவற்றிருக்கின்றனவே. ஆதலின் அருகிற்சென்று காண்போம் வருகவென அரசனும் அம்மொழிக்கிணங்கி இருவரும் அருகிற்செல்லுந்தருணம் ஆச்சரியமடைந்து! ஆ! ஹா! இவ்வளவு சிங்கா ரலங்கார ரூபலாவண்ணியமுள்ளமாதையும் பிர்மன் எவ்வாறாகச் சிருஷ்டித்தனனோ? வென்றதிசயித்து, மஹாராஜாவுக்கு மதன்சரத்தால்மார்புருகியதால் மணலிலிருந்தமாதைப்பார்த்து பெண்மணியே உனையாவரிக்கெதி செய்தனரோ? புகல்வாயென சுந்தரவதனிமனமகிழ்ந்து இனிநமக்குநற்காலம் வந்ததென்னும் சந்துஷ்டியாற்புந்நகையுடனரசனைக்கடைக்கண்ணாற் பார்த்தவண்ணமே! ஐயா! மண்டலம் புரக்கும் மகிபா! யானென்றந்தையோடு தேசசஞ்சாரமாய்ச் செல்லுந்தருணம் யான் அவரைப் பிரிந்து வழிதெரியாமல் அலைந்துக்கொண்டிருக்கையில் ஓர் ராக்ஷதன் என்னைத் தூக்கிக்கொண்டுவந்து இம்மணலில் புதைத்து விட்டுச் சென்றனன் அவன் இதுவரையினும் வரக்காணமையா லினி நீவிரெனையழைத்துச் செல்க திருவருள்புரிவீ ரரசேயென் றிசைப்ப, அரசன் நன்றென்னச் சம்மதித்தவனாய் அப்போதே மணலைத் தோண்டி பள்ளத்தி னின்று வெளியே தூக்கிவிடுத்து களையாற்றித் திரேகத்தி லிருந்த மணலைத் துடைத்து தன்னோடு அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் செல்கையில், அரசன் பத்தினி மன்னனை நோக்கி இம்மாது யாரென்று வினவினள்.

கீர்த்திசேனன்:—ஹே! பிரியசகி! யான் வேட்டைமார்க்கமாய்வனத்திற்செல்லுந்தருணம் அங்கோர் கிளைவழிமார்க்கத்தில் இம்மாது இராக்ஷதனால் மணலில் புதைக்கப்பட்டு வருத்தமுற்றுகளையாய் வீழ்ந்திருக்கக்கண்டு என் மனந்தாளாம லிங்கழைத்து வந்தேன். ஆதலின் இவள் பசிநோய் தணிய ஏதேனுங் கொஞ்சம் தின்பண்டந்தந்து புசிக்கச் செய்தனுப்புவாய்.

இராஜபத்தினி:—இவளைப் பார்த்தா லிவ்வளவு வடிவழுங்காரசிங்காரரூபலாவண்ணியமுள்ள தேவரம்பையைப்போலிருக்கின்றனளே! இவளுக்கு யாருந் துணையில்லையோ? நல்லது அருகிற்



சென்று விசாரித்து நமது கணவனுக் கிவளை மணஞ்செய்து வைப்போமாகில் வெகு நலமாயிருக்கும் இவரும் இனியேனும் வேசிமார்க்கத்தில் பிரவேசியாமலிருப்பாரென்று நினைந்து சுந்தரவதனியைப் பார்த்து அம்மா உன்னைப்பார்த்தால் தெய்வலோகஸ்திரீயைப்போ லிருக்கின்றனவே உனக்கு யாருந் துணையில்லையோ? நீயாது காரணமாக ஆரண்யத்தில் ஒண்டியாய் வந்ததை தெரியப்படுத்துவாய்.

சுந்தரவதனி:—அம்மணி! யான் காபல்தேசத்து வர்த்தகனாகிய மணிபத்திரன் புத்திரியாகிய சுந்தரவதனி. என்தாய் இறந்தமையால் என்சகோதரரும் யானுமென்பிதாவுடனே டில்லிதேசத்திற்கேகுவோமென மனதிலுன்னிப் புறப்படுங்கால் ஓர் இராக்ஷதனென்னைத் தூக்கிக் கொண்டுவந்து கடற்கரை மணலிற் புதைத்துவிட்டுச் சென்றான், மறுபடியும் அரக்கன் வாராமையா லிவ்வரசனென்னை அழைத்துக்கொண்டு வந்தனர். ஆதலின் இச்சமயமெனக்கு அன்னை, தந்தை, குரு, தெய்வமும்நீயேயென நம்பினேன். என்னை யுன் சகோதரியைப்போல் பாதுகாத்திரக்ஷிக்கவேண்டுமென் றுனது திருவடியைப் பிரார்த்திக்கின்றேன்.

இராஜபத்தினி:—அம்மா! நீயாதொன்றுக்கும் அஞ்சவே[illegible]ாய். என்து கணவனாகிய இம்மன்னனை நீ மணம்புரி[illegible] இல் யாமிருவரும் உடற்பிறந்த சகோதரிகள்போல [illegible]ழ்ந்து வாழலாமென்று ஆவலுற்றிருக்கின்றேன். ஆதலின் நின்சம்மதமென்னவோ? தெரிவிப்பாய்.

சுந்தரவதனி:—மகாசந்தோஷமம்மணி (தன் மனதிற்குனே யோசித்து) சபாஷ்! இத்தருணம் நமது அதிஷ்டானுகூலம் வெகு நன்றென்றே மதிக்கவேண்டும்.

என களித்திருக்க தன்தேவியாகிய இராஜபத்தினி மன்னனைப் பார்த்து, எனதன்புக் கிசைந்த பிராணநாதா இந்தவடிவலங்கார சிங்காரியை நன்மணஞ் செய்துக்கொண்டு இனிமேலாகிலும் வேசிமார்க்கத்தில் பிரவேசியாம லிருப்பீரென்று நம்புகிறேன்.

கீர்த்திசேனன்:—பிரியசகி! யானுன்வார்த்தையை தவறேன். இந்த அழகியைக் காட்டிலும் வேறொருத்தியை யானெவ்வுலகிலுங் கண்டதில்லையே! ஆதலின் உன்னிஷ்டப்படியே நமது உறவினர் பந்துவர்க்கத்தினர் முன்னிலையில், நன்முகூர்த்தம் ஏற்படுத்தி சுபதினத்தில்யான் இம்மாதை மணம்புரிந்துகொள்ளுகிறேன்.

இராஜபத்தினி:—அப்படியே! மஹாபாக்கியம் பிராணநாதா.

இவ்விதமாய் மூவரும் ஒருமனதாய் விளங்கினமையால், நல்ல சுபமுகூர்த்தத்தில் கீர்த்திசேன மஹாராஜன் விவாகஞ்செய்துகொள்வோமென்று விருப்புற்றிருப்பதைக் கவனித்த சுந்தரவதனி மனவிசாரமெய்தி தன் கற்புக்கு பங்கம் வருமென் றஞ்சினவளாய் இவர்களை எவ்விதமாயினும் ஏமாற்றிவிட்டு நமது தந்தை முன்சென்று நிகழ்ந்தவைகளைத்தும் புகன்று தன் மணாளனுடன் வாழ்ந்திருப்போமென மதித்து, மன்னனை நோக்கி அரசே! என் தந்தையுந் தமையன்மாரும் டில்லியிலிருக்கின்றனர். அவரைக்காணும் பொருட்டு யான்செல்வதற் கிசைந்தமையா லெனக்குத் துணையாக உமதுகுமாரனையும் மந்திரியையும் அனுப்புவீரென்க. வேந்தன் அம்மொழிக்கிணங்கி அவர்களிருவரையுந் துணையாக அனுப்பினன்.

பேதை; இம்மூவரும் நகரினைக்கடந்து ஆரணியமார்க்கமாய்ப் போது சுந்தரவதனியைப்பார்த்து தன்னோடு அந்நிய தேசத்... ...ால் மனோல்லாசமாய்வாழ்ந்திருப்போமென, மந்திரியானவன் ...கவித தந்திரவார்த்தைபுகன்றவையனைத்துங் கவனித்தனைக்கேட்ட மாது சினமுற்று, அறிவில்லா அமைச்சனால் அரசனுக்குக் கெடுதிவருமெனும் பழமொழிபோ லுன் நாடகத்தை யென்னிடத்திற்காட்ட வந்தனையா? துஷ்டா உலகிலுதித்த மாந்தருள் அரசன்பத்தினி, குருபத்தினி இவர்களெல்லாம் ஈன்ற அன்னைக்குச் சமானமன்றோ? பேயா! சீச்சீ! என்னருகில்வராதே! என்னைத் தொடாமல் தூரத்திலிருந்துன துகர்வத்தினால் மமதையுற்ற மனதை யான்புகலும் புத்தியினாற் பரிசுத்தஞ்செய்துகொண்டேகுவாயடா மூடா.

மந்திரி:—ஆ! மாதே அதென்ன புத்தி புகட்டுகின்றனையோ? தெரிவிப்பாய்! ஆசைக்கிசைந்த அமிர்தரசமே.



சுந்தரவதனி:—துவாபரயுகத்தில்குந்திபுத்திராகியபஞ்சவர்கள் பகைஞரெனும் துரியோதனனாதிகளிடம் நகரினைத்தோற்று, காடேகியபாயலைந்துதிரியும்போது கர்வத்தினாற்றனக்கு எவரும் நிகரில்லையென் றுண்மையுடனெவரையும் வணங்காத துரியோதனன் பஞ்சபாண்டவர் தேவியாகிய பாஞ்சாலியின்மீதா ஆசையுற்று எவ்வண்ணமேனு மம்மாதை என்னிடம் அழைத்துவருபவர்க்கநேகவிதமாகிய வெகுமதி தருவேனென்றியம்ப, அருகிலிருந்த மைத்துனனாகிய சயிந்தவன் திடீரென எழுந்து பொன்னுலகுக்குச் சமதையான நன்னகரமாகிய இந்நகர் புரக்கும் மின்னலொளிபோன்ற வடிவழகிலகும் மன்னாதிமன்னா! உன் ஆசையைத் தணியச்செய்து களிக்கச்செய்யும் காதலியாகிய திரௌபதையின்மீது நீ ஆவலுற்று வருத்தமுறவேண்டாம். இதோ யானேசென்றம்மாதைத் தந்திரமாக அழைத்து வருவேனென்ன அரவக்கொடியோன் ஆனந்தங்கொண்டு ஆ! என் அன்புக்கிசைந்த மைத்துனனே! நீயிருக்கும்வரையி லெனக்கொரு குறையும் வந்தணுகாதன்றோ?

விருத்தம்.

மைத்துனன் றுணையிருந்தால் மனதினில் வருத்தமின்றி
எத்திசை தனிலுங்கீர்த்தி எய்தவே வெற்றிபூண்டு
தித்திக்க மொழிகளோதுந் தெரிவையர் கூடனெந்நாளும்
நித்தியானந்தமாக நீடூழி வாழலாமே.

என்றுலகோர் புகலும் லௌகீகசாஸ்திரமுறை பிசகாதன்றோ? ஹே! மைத்துனா இக்கணமேசென்று ஆரண்யத்திற் சார்ந்துறையும் பஞ்சவரை ஏமாற்றி பாஞ்சாலியைக்கவர்ந்து வருகவென்று தாம்பூலஞ் சமர்ப்பித்து விடையளித்தனன்.

இங்ஙனமிருக்க, சயிந்தவன் நன்கெனச்சம்மதித்து நால்வகைச் சேனையுடனே பிரயாணப்படுகையில் தேவியாகிய துற்சடைக்கிம்மொழியைப் புகன்று அவள் மனமகிழ்ந்துகளிக்கும் விடைபெற்றுக் குசேசுரமெனவருகையில் துற்சடை துர்க்குணவிரண்டு ஒன்றுந்தோற்றாமல் பாங்கிகாளென்று உரத்துக் கூச்சலிட்டு இன்றைய பகற்போதிலெனக்கென்னமோ ஓர்வித நித்திரையுண்டாகி வினவு

கண்டெழுந்து என் மனம் துடிக்கின்றதே சகிகாள்! என்செய்வே னென்று துயரப்படுகையில், சயிந்தவ னெதிரில்வந்து ஹே! மாதே! யான் உன் தமையன் நிமித்தமாக சுபகாரியத்திற் கேகும்போது நீ யேன் அவலக்ஷணமா யழுகிறாயென் றதட்டினான்.

அப்பொழுது துற்சடை மணாளனைப்பார்த்து ஆ! நாதாவென் றுக் கதறியழுது, இன்றைய பகற்போதி லெனக்கோர் வித பயங்கரதோன்றி நித்திரையுண்டாகி துர்க்கனவு கண்டேன். அஃதென்னவெனில் நீர் நால்வகைச் சேனையுடன் கானகமேகித் திரௌபதையுடன் தந்திரமாய்ப்பேசி அம்மாதைத்தேரின் மேலேற்றிக் கொண்டு வரவும் வீமசேனன் ஓடிவந்து உம்மைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டுசென்று தலையைச் சிரைத்துக் கழுதைமேலேற்றி அஸ்திநாபுரமனுப்பவும், எல்லோரும் பரிகாசத்துடன் ஓட்டிக் கொண்டோடவும் யான், ஐயையோவென் றலறிக்கொண்டு வாய்கு ளறி நாவுதடுமாறி எழுந்திருக்க, அருகிற் பாங்கியரிருக்க அவர்க ளுடன் புகன்று அதன்பயனைத் தெரிந்துகொள்வோமென்றிருக்க, நீரும் வந்துவிட்டீரென்று கோவெனக் கதறியழுகக்கண்ட கணவன் சீறியெழுந்து சீ! பேதாய்! பெண்வார்த்தைக் கேட்டுப் பாரில் வசிப் போர் பதறெனப்படுவார், ஆகையால் உன்வார்த்தையை என் செவி யில்வைப்பதென்ன, அவணிருந்து நீங்கி "விருசகாலேஸ்வரி தபத்தியென் றியம்பும் வாறுபோற்" புறப்பட்டு வனமேகி, பஞ்சவரில்லா" சமயம் பர்ணகசாலையிற்"பிரவேசிக்கக்கண்ட பாஞ்சாலி தமையன் வந்தன ரென் றுபசரித்து காய்கனியால் பசியாற்றிகளைதெளிவித்து அண்ணா யாது காரணமாக வந்தீரென்று வினவ, சயிந்தவன் யோசித்து இம்மா தைத் தந்திரமாகக் கவர்ந்தேக வேண்டுமென்று மனதிலுன்னி, தங் கையே! பஞ்சவர்கள் தானனுபவிக்கவேண்டிய தலைவிதிப்படி ஆரண்ய வாசிகளாயலைந்து திரிய, நீயும் இவர்களுடன் மழையால்நனைந்து வெய் யலாலுலர்ந்து குளிரால்நடுங்கி காய்கனிசருகுகளைப் புசித்துக் கஷ்ட மனுபவிக்கவும், நாம் அறுசுவையுடன் அமுதருந்துவ தழகோ? இக்கணமே சென்று எனது நாத்தியை அழைத்து வருவீ ரென்று உனது மதனியாகிய துற்சடைப் புகன்றனள்.

ஆகையால் ஐவரும் ஆரண்யத்திற்சஞ்சரித்து நாட்டிற்குவரு மளவும் நீ உனது மதனியுடன் மனமகிழ்ந் திருப்பதற்கு,



யென்றாருந்தடையுஞ் சொல்லாம லென்னுடன் வருவாயம்மாவென்று அதிவினயத்துடன் தந்திரமாய்ப் புகன்றதைக்கேட்ட பாஞ்சாலி இ வன்கருத்தை உணராதவளாகையால் உண்மையுள்ளவனென மதித்து அண்ணா! கற்புள்ளமாதர் கணவருடன் வாழ்வதே நலமாகையால் ம ணவாளர் துன்பமனுபவித்தால் நானும் துன்பமனுபவித்து அவர் சுகத்தையனுபவித்தால் நானுமவருடன் சுகானுபவத்தையனுபவிப் பதே பதிவிரதைகளுக் கழகாகையா லென்பிராணநாதருடன் யானும் வனத்தில் சஞ்சரித்து பகைஞரா லேற்படுத்திய பதின்மூன்று வரு டமுங் கழிந்த பின்னர் மணவாளருடன் மனமகிழ நாட்டிற்கு வந்து எனது மதனியின் முகத்தைப் பார்ப்பே னென்று தைரியம்புகன்று, என் விஷயமாக வருத்தப்பட வேண்டாமென்றும் சொல்லிமீரென்க. சயிந்தவன் இனியென்ன தந்திரஞ்செய்வோமென்று யோசித்து மோ சக் கருத்துடன் தனது சந்திராயுதத்தைக் கீழே வைத்துவிட்டு மறந்தவனைப்போலாக, அப்படியாகு அக்னிஷ்டம் யாகம் போய் வரு கிறேனம்மாவென்று ரதத்திலேறிசாரதியை எச்சரித்துமெள்ளமாய் தேரைச் செலுத்திக்கொண்டுபோக, பாஞ்சாலி யானவள் இதென்ன நமது தமையன் சந்திராயுதத்தை மறந்து வைத்துவிட்டுச் சென்றனா ரேயென்று எடுத்துக்கொண்டு அண்ணா! அண்ணாவென்றோடிவந்ததை யறிந்த சயிந்தவன் தேரை நிறுத்தி இரண்டு படியேறிக் கருவாயம் மா வென்னியம்ப, நன்கெனச் சம்மதித்து, படிமேலேறி வாளைக்கருக உடனே ரதத்தினை வேகமாய் நடத்த பாஞ்சாலி ஆ! மோசம்வந்ததே முகுந்தா! பரந்தாமா! வென்றலறிய அழுகுரலோசையை ஆரண்ய வாசிகள் கேட்டு ஐவருக் கியம்புதலும், வீமசேனன் மிகவும் மனங் கசந்து வெகுவேகமாய் ஓடி தேர்ச்சுவடுகளைக் கண்ணுற்று ஆக்ர மித்துப்பற்கடித்து கோபாவேசத்துடனோடி தேரைச்சுக்கற்கக்கலா யொடித்து சயிந்தவனைக் குமிற்குற்றி கொடுக்கு முன்னவிற்கட்டி யிழுத்துக்கொண்டுவந்து தனது சகோதரர் முன்விடுக்க, தருமருக்கு மனந்தாளாமல் தம்பி! வீமசேனா! நமது மைத்துனனை இப்படி வருத்தப்படுத்த உன் மனதெவ்வண்ணந் துணிந்ததோ? தெரியேன். எனப்புகன்று கனிவர்க்கங் கொணரச்செய்து; அவனுக்கு நல்விருந் தூட்டி மகிழ்வித்து மைத்துனனு நடந்த சங்கதியாவும் விபரமாயுரைப் பாயென்க. யான் காலையில்வந்து என்தங்கையைக்கண்டு மனந்திரு மலீ நீங்கள் நாட்டிற்கு வருகிறவரையிலும் எனது வீட்டில் உமது தங்கையுடன் சுகமாயிருக்க வேண்டுமென்றழைத்துக்கொண்டு செல்கிறேனென்றான். அதற்கு திரௌபதைமறுக்க, இவன் மோச

பெண்ணத்தோடு வந்தவனென்றுசகலமும் ஆதியோடந்தமா யெடுத்துரைக்கக் கேள்வியுற்ற நால்வரும் மிகவுஞ் சினமுற்றனர். அவர்கள் மனக்குறிப்புணர்ந்த சாந்தமூர்த்தி தம்பிமாரைச் சமாதானப்படுத்தி வீமசேனனை சயிந்தவனுக்கு வழித்துணையாக அனுப்பினர்.

அப்பால் இருவரும் கொஞ்சதூரஞ் செல்கையில் மற்றநால்வரும் தருமமூர்த்தியிடம் விடைபெற்று வீமனுடனே செல்லும் சயிந்தவனைப் போகவொட்டாமற் றடுத்து அவன் தலையைச் சிரைத்து ஐந்துகுடுமியிட்டு முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி வைத்து கழுதையின் மேலேற்றிப் பிணைத்துக்கட்டி, அடா சயிந்தவா! உனக்கு இன்று பிராணபிக்ஷை தருகிறோம். ஆதலின் இன்றுமுதற் கொண்டு உன்பெயர் பாண்டவதாஸனென்று சகலரும் அழைக்கப்படவேண்டுமென்ன, அதற்கவனும் சம்மதித்து! அப்படியே! என்னுயிருக்குப் பங்கம் வராமல் விடுப்பீராகில் என் பிள்ளைகளுக்கும் பாண்டவ தாஸனென்று நாமகரணஞ்சூட்டுகிறேனென்க.. சரி! அப்படியானால் போய்விட்டா என்று, கழுதையை அஸ்தினாபுரத்திற்கு ஓட்டிவிட்டார்கள். அப்போது துரியோதனனும் அவன் தம்பிமாரும் ஓடிவந்து கழுதையைப்பிடிக்க அனைவரும் பாஞ்சலியின் சாபத்தால் ஓட்டிக்கொண்டோடவும், கர்ணன்வந்து பிடித்து அனைவரையும் விடுவித்து, அவரவர் ஸ்தானத்திற்குச் சென்றார்கள்.

ஆகையால், அடா! துஷ்டா! பரஸ்திரீகமனம் பரலோகநாசனமென்றறியா மூடனே! இனியேனும் அறிவுவிளங்கி சன்மார்க்கத்திற் பிரவேசிப்பாய். பேயனேயென்று பலவாறு நிந்தித்திகழ, மந்திரி பலவந்தமாய் சுந்தரவதனியின்கையைப்பற்றி இழுக்க. அருகிலிருந்த இராஜகுமாரன் மிகவும் சினந்து அடா துன்மார்க்கா என் சிற்றன்னையைத் தொடவேண்டாமென்று அவன்கன்னத்திலோங்கி குத்தினான்.

அப்போது மந்திரியோசித்து இச்சிறுவனைக் கொன்று விட்டாலிவள் நமக்கு வசமாவாளென மதித்து அவனைக் கீழே தள்ளி கழுத்தை மிதித்துக்கொல்ல, இராஜகுமாரன் அம்மா வென்றலறி பூமியில்விழுந்து ஆவியை விடுத்தான். அதைக்கண்ட சுந்தரவதனி ஆ! மகனே யென்று பூமியில் விழுந்து மூர்ச்சையானாள்.



பிறகு மந்திரி இந்த சவத்தைப் புதைத்துவிட்டுவந்து இவளைப் பார்த்து இவளும் இறந்தனளென்று பயந்து நகரத்திற்கு வந்து அவ்விருவரையும் புலியடித்துக் கொன்றுவிட்டதென்று, அரசனுக்குச் சொல்ல இராஜனும். இராணியும் ஆறாத்துயரமடைந்தார்கள்.

இங்ஙனம் இவ்வித விபரீத வேடிக்கையாயிருக்க, முன்னம் குணசீலனால் மூக்கறுந்த மனோல்லாசனானவன், வனத்திற் றனேஒருசந்நியாசியுடன் கூடிக்கொண்டு ஆங்காங்குயாசகம்செய்து ஜீவித்துக்கொண்டு அடுத்தநகருக்குவரும்போது வழியில்மூர்ச்சையாயிருக்கும் சுந்தரவதனியைக்கண்டு சுவாமி! இதென்ன விபரீதமென்று துயரப்பட சந்நியாசியானவர் ஜலத்தை மந்திரித்து அப்பெண்ணின் முகத்திற்றெளிக்க உயிர் பெற்றெழுந்ததைக் கண்ட மனோல்லாசன் மிகவும் ஆனந்தத்தில்மூழ்கினவனாய், சுந்தரவதனியை தூக்கிக்கொண்டோடும்போது சந்நியாசி அதிசயித்து இவனுடைய துர்நடத்தையைக் கண்டு இனி இவனை அருகிற்சேர்க்கலாகாதென்று போய்விட்டார்.

அப்பால்; இருவரும் ஓடும்போது அவ்வழியே வீரப்ரதாபனென்னும் ஓர், போர்வீரன். தனது கத்தியையுருவித்தோளின்மீதுவைத்துக்கொண்டுசெல்லும்போது இவ்விருவரையும் அதட்டியென்ஓடுகிறீர்களென்ன, அதற்குசுந்தரவதனி அவனைப்பார்த்து, ஐயா யானென் தகப்பனுடன் டில்லிக்குப் போகும்போது அவர் எந்தவழியாகவோ போய்விட்டார். பிறகு யான் தனியாய் வரக்கண்ட இவனென்னைத் தூக்கிக்கொண்டு வருகிறானென்னைக்காப்பாற்றி இத்துஷ்டனைத்துரத்திவிடுவீரென்றுசொல்ல அம்மொழியைக்கேட்டபோர்வீரன்மனோல்லாசனைப்பார்த்து, அடாபயலே அருகில்வருவாயாகில் உன்னை இவ்வாளினால் இருதுண்டஞ் செய்வேனென அவன்பயந்து அப்பப்பா. இனி சுந்தரவதனியினாசையைக் கனவிலும் நினைக்கலாகாது. இப்பெண்ணினால் முன்பு மூக்கிழந்தேன். இப்போது ஆவியுமிழக்க நேரிடுமென்று பயந்து ஓடிவிட்டான்.

போர்வீரன்:—ஆ! என் ஆசைக்கினிய அன்னநடையே மின்னலொளியே உன்மீது யான் ஆவலுற்றேன் உன் சித்தமென்ன தெரியப்படுத்துவாய் மாதே.

சுந்தரவதனி:—ஐயா! மஹாநுபாவரே! [illegible]ப்பேர் [illegible]
வந்தேனோ அப்போதே புனக்[illegible] செந்தமாணிக்க[illegible]
பலருமறிய விவாகஞ்செய்துகொண்டு வாழ்ந்திருப்பதே நலம்
ஆதலின் இன்னம் மூன்றுதினம் வரையிலும். எனக்கு தனிவிடு
தியொன்றமைத்துத் தரல்வேண்டும்.

போர்வீரன்:—ஹோ! மாதே! அப்படியே உன்னிஷ்டப்பிரகாரம்
இத்தனிவிடுதியில் வீற்றிருப்பாய்.

இவ்விதமாக் சுந்தரவதனி தனக்குரிய விடுதியிலிருந்தவண்
ணமே அன்றிரவில் தனக்குள்தானே யோசித்து, தன்னால்
மகேந்திரலாசன் மூக்கையரிந்ததும், குணசீலன் தன்னை இழந்ததும்
இராஜகுமாரனுயிரிழந்ததும், என்னாலல்லவோ. ஆ! ஜகரக்ஷகா! பா
வினென்தாய்வயிற்றிலுதித்த பலனிதுதானோ? ஐயையோ! இனியான்
உயிர் சுமந்திருப்பேனாகி லின்னம் யாரார்க்கென்ன ஆபத்துநேரிடு
மோ? வென்றுமனங்கசந்து அவ்விடுதியிலிருந்த ஒரு கற்பாறையை
இருகையினுந் தூக்கித் தன் தலையில்மோதிக்கொண்டு உயிர்விடுவோ
மென்று கல்லையெடுக்கும்போது அகஸ்மாத்தாய் கருணாநிதியின் கிரு
பையால் இரண்டு சந்நியாசிகள் திடீரென்றுவந்து சுந்தரவதனியின்
கையைப் பிடித்துக்கொண்டார்.

சுந்தரவதனி:—ஆ! இதென்ன ஆச்சரியம்?

சந்நியாசி:—அம்மா! அஞ்சவேண்டாம் ஏன் விருதாவாய்த் தற்கொ
லைசெய்துக் கொள்ளுகிறாய்.

சுந்தரவதனி:—ஐயா! யான்பெண்ணாய்ப் பிறந்ததினால் யானனுபவித்த
கஷ்டநிஷ்டூரங்களையார்க்கிப்பாரகம்? ஆகையாலிச்சென்மமிருந்
தால் அநேகருக்காபத்தும் இந்த ஊரும் சேர்ந்து யான் நிராப்
பழிக்காளாகுவேனென்று பயந்து என் உயிரை மாய்த்துக்
கொள்ளுகிறேன் என்னைகைவிடுவீர்கள்.

சந்நியாசி:—அம்மணி! உனக்கென்னபயித்தியமோ முன்ஜென்மத்தில்
செய்த பாபகிருத்தியங்களுக்கிணங்க இச்ஜென்மத்தில் ஊழ்
வினையால் வருபவையெல்லா மனுபவித்துத்தானே தீரவேண்டும்.
இதற்குப்பயந்து தற்கொலைசெய்துக் கொண்டாலும் பேயாய்த்
திரிந்து சகலருக்குப்பழிக்க நேரிடுமன்றோ?



சுந்தரவதனி:—சுவாமின் நீவிர்புகன்ற துண்மையே! ஆயினும், முன்
ஜென்மத்திற்செய்த பாபகிருத்தியங்களாலிச்சென்மத்தில் ஊழ்
வினைப்படியே யநேகதுன்ப மனுபவித்திடினும் தன்னாலநேக
ருக்கு தீங்குநேரிடுமாகில் அந்தயாக்கையைச்சுமந்து திரிவதாற்
பயனென்ன?

சந்நியாசி:—அம்மா! அவனியிலுதித்த அநேகநீதிநூலுணர்ந்தும் ஆ
லோசியாமலோதுகின்றனையே இதனை கவனிக்கி லெங்களுக்கு
ஆச்சரியமாயிருக்கின்றது.

வெண்பா.

இன்னாருக் கின்னவித மீசன் விதித்திருக்க
தன்னா லநேகருக்குச் சஞ்சலமும்—வன்மையாய்
வந்துற்ற தென்று வருந்தலுற லாகுமோ
சுந்தர குணவதியே சொல்.

சுந்தரவதனி:—ஐயா! நீவிர்சொன்ன துண்மையே. ஆயினும், என்
போலும் இடருற்றோர்க ளிவ்வவனியிலுளரோ?

சந்நியாசி:—ஆ! இதென்ன ஆச்சரியம் நின்போன்ற பெண்களிற்சில
ரநேக அபமுற்றுத்தியங்கி மயங்கிக்கலங்கிக் கண்ணீருதிர்த்
துக் கர்த்தனைத் துதித்து அவர் கிருபாநோக்கத்தால் துயர்
தவிர்த்து அவனியோர்புகழ உலகின்கண் வாழ்ந்திருக்குஞ்
சரிதையொன்றேனுங் கேள்வியுறவில்லையா?

சுந்தரவதனி:—சுவாமின்! அத்தகைய கஷ்டநிஷ்டூரமெய்தித் துய
ருற்று சுகமாய் ஜீவித்திருந்த மாதர்களின் சரிதையை என்
முன் திருவாய் மலர்ந்தருள்வீர்.

சந்நியாசி:—அம்மா! யான் புகல்வதை நன்றாய் கவனிப்பாயாக. முற்
காலத்தில் சத்தியமாநகரத்தைப் பரிபாலனஞ்செய்யும் சாரங்க
தரனென்னும் மஹாராஜனுக்கு அநேக நாளாய்ப் புத்திரசந்
தானமில்லாதிருக்குங் காரணத்தால் மனவியாகுலமடைந்து,
மந்திரி கரத்திற் செங்கோலீந்து மண்டலம் புரப்பாயென, ஆக்
ஞைசெய்துமனையாளுடன்வனமனுகி யோர்நந்தவனத்தின்கண்

தவமியற்றுங்கால் பரமன் கிருபாநோக்க மெய்தி யோர் அருந்தபசிபோற் றோன்றி, ஹே! அரசே! நின்குலம் விளங்க ஓர் புத்திர சந்தானமுண்டாகும்படி யருள்புரிந்தோம், நின் நகருக்கேகெனவும், வேந்தன் மகிழ்வுற்று இல்லத்திற்குச் சென்றபின்னர் மனையாள் கர்ப்பவதியாகி பத்துதிங்களும் நிறைந்து, பாலசூர்ய ப்ரகாசமாயிலகும் ஓர் ஆண்மகவை யீன்றனள்.

அரசன் மகிழ்வுற்று ஆனந்தமேலிட்டு அனைவருக்கும் சர்க்கரை வழங்கி அமைச்சனையேவி ஜோதிடரை யழைத்து ஜாதகங் கணித்து, ஸ்வேதச்சந்திரனென நாமகரணஞ்சூட்டி, வளர்த்து ஐந்து வயதானபிறகு கல்விமுதலாகிய தனுர்வித்தையாவுங்கற்பித்து பதினாறு வயதானபிறகு மைந்தனுக்கு விவாகம் நடத்தவேண்டுமென்று மந்திரியை நோக்கி ஐம்பத்தாறுதேசத்து இராஜகுமாரிகளின் திருவுருவப்படங்களைத் தருவித்து, தன் சுதனுக்குக் காண்பித்து அவனெந்தப் பெண்களின்மேல் ஆசைப்படுகின்றானோ, அப்பூவையரை அவனுக்குமணஞ்செய்து, இந்நகரினைமகுடம்புனைந்து செங்கோலையவன் கரத்தீந்து யான் வனமணுகி தபம்புரிந்து மோக்ஷவீட்டையடைவேனென, அம்மொழிக் கமைச்சனும் நன்கென்ச் சம்மதித்து, அவ்வாறே யாகுகவென ஐம்பத்தாறு தேசத்தின் இராஜபுத்திரிகளின் திருவுருவப் படந்தைக் கொணர்ந்து, ஸ்வேதச்சந்திரனுக்குக் காண்பித்து உனக்கு எந்தப்பெண்மீது இச்சையுள்ளதோ? தெரிவிப்பாயென் றதிவிநயத்துடன் கேட்க, அச்சகுமாரன் வெறுத்து அற்பமாகிய சிற்றின்பத்தி லிச்சைவைத்து அறிவழிந்து கிலேசுகுலைந்து நிஜானந்தவாழ்வாகிய மோக்ஷவீட்டை யெய்தாமலுழல்வது நன்கல்லவென்றுரைத்த மொழியையுணர்ந்த அமைச்சன் திடுக்குற்று அரசனுக் குரைத்தலும் வேந்தன் சினந்து இவ்விழலனை வனத்திற் றுரத்துவீரென் றுக்ஞாபித்தனன்.

அப்பால்; அந்நகரில் ஓர்வைசியன் புத்திரியாகிய சவுந்தரவல்லியென்னும் அழகிய கன்னிகையானவள் தனது தோழியர்களுடனே நந்தவனமணுகி அங்கு வேடிக்கையார்த்தமாக விளையாடிக்கொண் டிருக்கையி லருகிலிருந்து பார்த்த அரசகுமாரனாகிய ஸ்வேதச்சந்திரன் ஆசைமீறி இவ்வழகிய மாதைமணந்தாலன்றோ? யாக்கையைச் சுமந்திருப்பதற்கழகு, இல்லாவிடி லிப்புவியிற் பிறந்து



யாது பலனென்று தனக்குள்தானே சிந்தித்து ஆனந்தசாகரத்தில் மனதை மூழ்கச்செய்து மதிமயங்கி அரண்மனையில்வந்து அன்னமருந்தாமலும் ஆருடனும் பேசாமலும் ஆ! மதன்சரமே மங்கையர்க்கரசே! முத்தந்தருவாய்திருவுருவேயென் றுவெறியனைப்போல வாய்குளறி பிதற்றிக்கொண்டிருப்பதைக்கண்ட அமைச்சன் முதலானோர், அரசனுக்கியம்புதலும் அகமகிழ்ந்து புத்திரனை யருகழைத்து அப்பனே உன்சிந்தை யாதென்று வினவுதலும், மாறுத்திரம் சொல்லாதிருக்கமந்திரியையேவுதலும், அவன்யாதென் றுவினவ, இராஜகுமாரன் சொல்லுகிறான் இந்நகர் புரத்திலிருக்கும் நந்தவனத்திற்போய்யான் உட்கார்ந்திருக்க அங்கனம் ஓர் அழகியசுந்தரவடிவழகி தனதுசேடியருடன் உல்லாசமாய்வந்துவிளையாடிக்கொண்டிருந்தாள். அவள்மீது ஆசையுற்றிவ்வண்ண மதிகுலைந்து வாடுகின்றேனென்னலும், மந்திரி அக்ஷணமே மஹாராஜாவை நோக்கி! அரசே தமது புத்திரன் இந்நகரிலிருக்கும் ஓர் அழகிய கன்னியைக் கண்டு ஆசையுற்று மதிமயங்கியிருக்கின்றனராமென்று சொல்லவும், அரசன் மனமகிழ்ந்து அப்படியானால் இந்நகரத்திலுள்ள பெண்களின் வடிவலங்காரத்தைப் படத்தி லெழுதிக்கொண்டு வந்து காண்பித்து, அவன் இச்சித்த கன்னிகையைத்திருமணஞ்செய்து வைப்போமென்றிசைப்ப, இதனையுணர்ந்த மந்திரி அவ்வாறே யாகுகவென்று, அந்நகரில் வசிக்கும் பெண்களின் ரூபத்தைப் படத்தி லெழுதிக்கொண்டு வந்து காண்பித்த பின்னர் இராஜகுமாரன் சவுந்தரவல்லியைக்காண்பிக்க அரசன்மனமகிழ்ந்து அப்பெண்ணின் தகப்பனாரை வரவழைத்து ஐயா! நின்புத்திரியை என்மைந்தனுக்குத்தருவாயெனலும் அவ்வைசியன் நின்று இராச்சியத்தை எனக்குந் தத்தஞ் செய்வையேல் நின்புத்திரனுக் கென்மகளைத் தருவேனென்னலும், வேந்தன் சம்மதித்து அவ்வாறே தன் தேசத்தை யவனுக்குத் தாரை வார்த்துச் செங்கோலையவன் கரத்தி லீந்து, தன் சுதனாகிய ஸ்வேதசந்திரனுக்கு சவுந்தரவல்லியை மணஞ்செய்து மங்களாலங்காரமாக மன்னன் மகிழ்ந்திருக்கையில் வைசியன் மஹாராஜனை நோக்கி, ஹே! சாரங்கஹஸ்தா! இனி இந்நகருக்கு யானே வேந்தனாகிமகுடம்புனைந்திருப்பதால் இனிமேல் நீங்களனைவரும் இத்தேசத்தில் அரை நாழிகையேனுந் தங்கியிருப்பது கூடாது. ஆதலின் இச்சமயமே நீங்க ளெங்கேனும் போய்விடுவீரென்று சாரங்கஹஸ்தனையும், இராணியையும், ஸ்வேதசந்திரனையும், சவுந்தரவல்லியையும் காட்டிற்குத் துரத்தினான். அச்சமயம் அந்நால்வருமெங்கேனுஞ் சென்று ஜீவிப்போமென்று புறப்பட்டு ஓர் சந்நிதத்தில் வந்தமர்ந்தார்கள்.

அப்பால்; ஸ்வேதச்சந்திரன் தன் தாய்தந்தையரை சத்திரத்திலிருக்கச் செய்து, தான் பொருள் சம்பாதிப்பதற்குப் புறப்படும்போது. சவுந்தரவல்லியும் தனது மணாளனுடன் போய்வருகிறேனென்று மாமி மாமனாரிடம் சிலவு பெற்றுக்கொண்டு தன் கணவனுடன் புறப்பட, இருவரும் கானகமார்க்கமாய் வெகுதூரஞ் செல்லுந்தருணம் ஸ்வேதச்சந்திரன் பசியாற்களைத்துப் பூமியிற்சோர்ந்துவிழ சவுந்தரவல்லி அவன் களையையாற்றி மயபுரியிலழைத்துச் சென்று தன்னிடமிருந்த ஒரு வராகனைத் தந்து பட்டுநூல் வாங்கிவரச்செய்து மிகவும் நேர்த்தியாய் ஓர் சித்திரச் சவுக்கம் செய்து தன் கணவனிடங்கொடுத்து இதை இந்நகரத்தின்வேந்தனிடம் விற்கிரயஞ் செய்துக்கொண்டு வருவீரென்னனும். அவ்வாறே ஸ்வேதச்சந்திரன் நன்கெனச்சம்மதித்து இராஜவீதியில் விலைகூறும்போது அந்நகரத்தரசன் அவனை வரவழைத்து சித்திரச் சவுக்கத்தைக் கண்ணுற்று இது யாவர் நெய்தன ரெனலும் தனது நாயகியாகிய சவுந்தரவல்லி நெய்தனளென்று சொல்லக்கேட்டு ஆசைமீறி அவர்களிருப்பிடத்தைத் தந்திரமா யறிந்து ஸ்வேதச்சந்திரனை சிறையிலடைக்கச் செய்து சத்திரத்திலிருக்கும் சவுந்தரவல்லியை அழைத்து வரும்படியாய் புகன்றமொழிக் கிணங்கிய மந்திரி வஞ்சக நெஞ்சுள்ள தந்திரசாலியாகிய ஒரு ஸ்திரீயை யனுப்பி சத்திரத்திலிருக்கும் சவுந்தரவல்லியை அழைத்து வருவா யென்னலும், அதற்கவளுஞ் சம்மதித்து, அமைச்சன் குறிப்பித்த இடத்தில் வந்து இந்தக் கன்னிகைதானெனத் தெரிந்து, காண்போர் நம்புந்தன்மையாய் பரிதாபத்துடன் ஐயோ! யாரோ ஒருவன் பட்டுநூற்சித்திரச் சவுக்கத்தை விலைகூறிக் கொண்டு இராஜவீதியிற் செல்லும்போது ஆனையின் காலிலிட்டுண்டு தேக முழுமையும் காயமாயிருக்கின்றனே அவன் பிழைப்பானோ என்னமோவென்று பரிதாபத்துடனே புகல்வதைக் கேட்ட சவுந்தரவல்லி திடுக்கிட்டு தனது நாயகன் தானோவென்று ஐயுற்று. அம்மா! அவர் எவ்விடமிருக்கின்றாரென்று வினவி, அவளுடன் சென்று தன் கணவனைக் காண்போமென்றவளுடன் புறப்பட அந்த வஞ்சகி இந்தப் பெண்ணை யுபாயமாக அழைத்துக் கொண்டு கள்ளவழியாய்ச் சென்று அரசனுடைய மாளிகையில் விடுக்க சவுந்தரவல்லி திடுக்கிட்டு இதென்ன விபரீதமென்றுயோசித்திருக்கையில் மயபுரி மன்னன் தன்னுடன் வாழ்ந்திருக்கும்படி வேண்ட அம்மொழியைக் கேட்ட மாது சொல்லத் தொடங்கினள்.



அரசே! யானெப்போதுன்சமுகத்தில் வந்தேனோ அப்போதே! யானுனக்குச் சொந்தம் ஆயினும் எனக்கோர் விரதமுண்டு அவ்விரதத்தை ஆறுமாதவரையிலும் சரியாய் நடத்திய பிறகு உமது இஷ்டத்திற்கு இணங்குவேனென்னலும் அரசன் சம்மதித்து ஸ்வேதச் சந்திரனை விடுதலை செய்ய அவன் தனக்கு நற்காலம் பிறந்ததென சந்தோஷித்து, சத்திரத்தில் ஓடிவந்து பார்க்கையில் சவுந்திர வல்லியைக் காணாமையால் திடுக்கிட்டு மனம்பதறி வாய்குளறி மெய்சோர்ந்து பூமியில் விழுந்து ஆ! மாதே! யென்று மூர்ச்சை யானான்.

பிறகு; தன்னைத் தேற்றுவாரில்லாமல் தானே எழுந்து ஆறாத் துயரத்தால் மூன்று மாதமாய்த்தேடிக்கொண்டு இராஜவீதியில் வரும்போது, ஓர் நாளிரவில் சவுந்தரவல்லியின் மாளிகையி னருகிற் போயுட்கார்ந்து தானடைந்த துன்ப மெல்லாந் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு துயரப்படுகையில் கேள்வியுற்ற சவுந்தரவல்லி தனது மணாளனென் றுணர்ந்து ஓலையில் தான் இங்கு வந்திருக்கும் சங்கதி யாவும் விபரமாயெழுதி இன்றையதினத்தில் ஒரு குதிரையும் இராஜபூஷணாதிகளும் சீக்கிரமாய் வாங்கிக் கொண்டு வருவீராகில் உன்னுடனே வந்துவிடுகிறேனென்று அந்த சீட்டையும் ஒரு வராகனையும் உப்பரிகை மீதிருந்த வண்ணமே கீழே போடவும், அதனை ஸ்வேதச்சந்திரன் எடுத்துச் சீட்டிலுள்ளபடியே ஒரு அஸ்வமும் இராஜபூஷணாதிகளும் வாங்கிக்கொண்டு வந்து உப்பரிகையின்கீழே சயனித்திருக்குஞ் சமயத்திலோர் திருடன் வந்துஸ்வேதச்சந்திரன் தலையின்கீழிருந்தஆடையாபரணமூட்டையை அபகரித்துக்கொண்டு, அப்பால் சென்று அஸ்வத்தையும் அவிழ்த்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் இரவு முழுதும் நித்திரையின்றி விழித்திருந்த சவுந்தரவல்லி தனது நாயகனிதோ வந்துவிட்டாரென்று, எட்டிப் பார்த்து உடனே தயாராக வைத்திருந்த தாம்புக் கயிற்றை உப்பரிகையின் ஓர் புறத்திலிருக்கும் இரும்பு முளையில் கட்டிவிட்டு அக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு சரேலென்று இறங்கி வந்ததைக் கண்ட திருடன் மனமகிழ்ந்து சந்தடி செய்யாமல் அந்த ஸ்திரீயை, அஸ்வத்தின் மீதேற்றி தானும் உட்கார்ந்து கொண்டு கொஞ்ச தூரம்வந்து, ஆ என் கண்ணாட்டி. நீயே எனது மனையாள் என்றுரைத்த மொழியைக்கேட்ட சவுந்திரவல்லி திடுக்கிட்டு இவன்

முகத்தை யுற்றுப் பார்த்து, அடடா! மோசம்போனேனே யென்றுத் துயரப்பட்டு தன் மனதைத் தானே தேற்றிக்கொண்டு சீச்சீ! இவன் கெட்டான் முட்டாள் பயலென்று, ஐயா! எனக்கு தாகவிடா யதிகமா யிருப்பதால் ஜலங்கொண்டு வருவீரென்க. அதற் கவனுஞ் சம்மதித்து, பெண்ணே யுன்பேரென்ன வென்று கேட்டுத் தெரிந் துக்கொண்டு மாதே சவுந்தரவல்லி யான் வருகிற வரையிலு மிந்த ஆலமரத்தின்கீழே உட்கார்ந்துகொண் டிருப்பா யென்று சொல்லி விட்டு தன்னிருப்பிடஞ் சென்று ஒரு பானையில் ஜலங்கொண்டுவரப் போய்விட்டான்.

அப்பால்; சவுந்தரவல்லி மூட்டையை யவிழ்த்து இராஜ உடு பாவனைகளை யணிந்துக்கொண்டு தன்னை யெவர்களும் ஆண் பிள்ளையென மதிக்கும்படி ஓர் கிளைவழி மார்க்கமாய்ப் போகையில் வேட்டையாடவந்த இராஜகுமாரன் மந்திரிகுமாரனைப்பார்த்து. ஆ! ஹா! அதோபோகின்றானே அவன்வடிவலங்காரத்தைப்பார்த்தனையா! இவனென்ன மனிதனோ? தேவனோவென்று சந்தேகித் துரைத்த மொழியைக் கேட்ட மந்திரிகுமாரன் சிரித்து. சபாஷ்! நல்ல வார்த் தைப் புகன்றீர். எப்போதும் அரசர்களுக்கு அறிவு குறைவென் பது உண்மையென் றிசைத்து. அந்த ஸ்திரீயானவள் ஆண்வேடம் புனைந்திருப்பதைக் கண்டு மனிதனென்றும் தேவனென்றும் புகல்வ தழகல்லவென் றியம்பி, இருவரும் அவளிடத்திற் சென்று நீ! ஆணோ? பெண்ணோ வென்று கேட்டு உண்மையை யறிந்த உட னே இராஜகுமாரன் மாதே என்னைத்திருமணஞ்செய்துக் கொள்வா யென் றியம்புதலும், மந்திரி குமாரன் சினந்து யான் பெண்ணென் றுரைக்காவிடி லிம்மாதை நீர் கவனிப்பீரோ? ஆதலின், யானே இவளைக் கலியாணஞ் செய்துக் கொள்பவ னென்ன, சவுந்தரவல்லி தன் தலைவிதியை நினைந்து மிகவும் மனந்தளர்ந்து இவ்விரண்டு பயல் களுமென்னைக்குறித்தென்று வழக்காடுகிறார்களே! ஐயோ! தெய்வமே இதென்ன? ஆச்சரியமென்று தனக்குள் தானே யோசித்து இவர்களைத் தந்திரமாய் ஏமாற்றுவதே நன்றென மதித்து, ஓ! வாலிபர்களே. இந்த ஸ்திரீயைக் குறித்து நீங்கள் இருவரும் வழக்காடுகின்றீரே. யான் யாருக்கு மனைவியா யிருப்பேன்? ஆதலின்; உங்களிருவருக்குள் ஒருபந்தயம் நியமிக்கிறேனென்று இராஜகுமாரன் தனுசைக்கையில்வாங்கி அதில் அஸ்திரத்தைத்தொ



டுத்து வேகமாய்விடுத்து, இக்கணையை யாரொருவர் முன்னதாகஎ டுத்துக்கொண்டு வருவீர்களோ, அவர்களையே யான் மணம்புரிந்துக் கொள்வேனென்றுரைக்க அவ்விருவரும் ஆசையுடனே ஓடும்போது சவுந்தரவல்லி இன்னோர் கிளைவழியாகச்சென்று சுந்தரபுரியின் சத் திரத்திற்றங்கி இளைப்பாறுகையில் அந்நகரத்தில் தினந்தினம் ஒவ் வொரு அரசன் முதல்தினம் மகுடம்புனைந்து மறுதினம் மரிப்பதும், மறுதினம்பாம்பால் இறந்து மயானத்திற் சேர்வதுமாயிருப்பதால் அந் நகரிலுள்ளவர் வழக்கம்போல்வந்து சவுந்தரவல்லியை அழைத்துச் சென்று மந்திரிமுன்விடுக்க அமைச்சன் அப்போதேமகுடம்புனைந்து செங்கோலைக் கரத்திற்றந்தனன். அப்பால்; சவுந்தரவல்லி பகற் காலமுழுமையும் இராஜகாரியங்களை நடாத்தி அஸ்தமனமாகிய பிறகு கொலுக்கலைந்து அவரவர் விடுதிக் கவரவரேகிய பிறகு சவுந் தரவல்லி [illegible] யாயுஞ் செய்துக்கொண்டு அறு சுவை பதார்த்தத் துடனே அமுதருந்தி தனக்காகச் சிங்காரித்திருக் கும் பஞ்சணைக்குச்சென்று கட்டிலின்மீது தனிமையா யுட்கார்ந்துக் கொண்டு தன்விதியை நினைந்து நித்திரையின்றி விசனத்துடன்விழித் திருக்கும்போது இருபதுநாழிகையில் ஓர் சர்ப்பம் சாளரவழியா யி றங்கி வருவதைக்கண்டு மனந்திகைத்து, ஆச்சரியத்துடன் தன்கரத் திலிருந்த சந்திராயுதத்தால் துண்டுதுண்டாக வெட்டியெறிந்து குப் பலாகக்குவித்து வைத்திருந்தனள்.

பிறகு; மந்திரியர்களனைவரும் அப்போதைப் பிரேதத்திற்குரியவையாவும் சேகரித்து வெட்டியான்விரட்டி முதலானவை சித்தஞ்செய்ய மற்றுமெல்லோரும் பல்லக்குச் சிங்காரித்துக்கொண்டிருக்கையில் சவுந்தரவல்லி வெளியேயெழுந்து வந்து மந்திரிமுதலானோருக்கு சர்ப் பத்துண்டுகளைக்காண்பித்து இவ்விதமாய் அநேகரை இவ்விஷஜந் துக் கொல்லுகின்றதைச் சற்றேனு முணராதிருந்தீர்களோவென்று அனை வரையு மிகழ்ந்து பாம்பைப் பல்லக்கில் வைத்துக்கொண்டுபோய் மயானத்திலிட்டுக் கொளுத்தி நீருக்னிசெய்துவிட்டு எல்லோரும் ஸ்நா னஞ்செய்தனர். பிறகு சவுந்தரவல்லி சுந்தரபுரியைப் பரிபாலனஞ்செய் யும்போது மந்திரியை யழைத்துத் தன்னைப்போல் திருவுருவப்பட மொன்றெழுதி ராஜமார்க்கவாயலிற் கட்டிவைத்து. அச்சித்திரப்படத் தைக் கண்டு விசனப்படுவோரையும் துக்கிப்போரையு மென்முன் அழைத்துவாவென் றாக்ஞாபித்தனள்.

இங்ஙனமிவ்வாறிருக்க, திருடன் ஜலத்தையெடுத்துக்கொண்டு வந்து சவுந்தரவல்லியைக் காணாமையால்மதிமயங்கி ஆ! என்கண்ணாட்டி எங்கேயோடிப்போனாயென்று கானகமார்க்கமாய்த் தேடிக்கொண்டுபுறப்படவும், நித்திரைதெளிந்தெழுந்த ஸ்வேதச்சந்திரன் மூட்டையையும் அஸ்வத்தையும் காணாமையால் திடுக்கிட்டு நாற்புரமும் சுற்றிசுற்றிப்பார்த்து, யாவரோ நம்மைஏமாற்றிவிட்டுஆடையாபரணங்களையும்; புரவியையும், சவுந்தரவல்லியையும் அபகரித்துச்சென்றார்களென்று தேடிக்கொண்டுவரவும், மயபுரிக்கிறைவன் மாளிகையிலிருந்த மாதைக்காணாமையால் எவ்விடத்திலோடிப்போனாயோ ஆ! சவுந்தரவல்லியென்று தேடிக்கொண்டு புறப்படவும், இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் அஸ்திரத்தை கையில் எடுத்துக்கொண்டு பந்தயம் தோர்ப்பு கெலிப்பின்றி இருவரும் சச்சரவுசெய்துக்கொண்டு மறுமுறை கணையேவச்செய்து பந்தயத்தின் கெலிப்பு தோர்ப்பை யறிவோமென்றோடிவந்து சவுந்தரவல்லியைக் காணாமையால் ஆ! மோசஞ்செய்து போய்விட்டாளே,யென்று தேடிக்கொண்டு வருகையில், தமது விதிவசத்தால் ஸ்வேதச்சந்திரனும் திருடனும், மயபுரிமன்னனும், இராஜகுமாரனும், மந்திரிகுமாரனும் மனந்திகைத்தவர்களாய்க் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதுக்கொண்டு ஆ! சவுந்தரவல்லியே எங்ஙனஞ் சென்றனையோ? வென, மனமெலிந்தவர்களாய் ஒவ்வொருவரும் தமது மனதிற்கிசைந்த, வனம், வனாந்திரங்களிலும் மலைகளிலும் குகைகளிலுந் தேடிக்கொண்டு வருகையில் அகஸ்மாத்தாய் ஓர் நாள் இவர்கள் ஐவரும் ஓர் நந்தவனத்திற் சந்தித்து தமது வழக்கம்போற் பிதற்றிக்கொண் டிருக்கையில் இவர்களனைவரும் சந்தேகக் கலவரத்துடன் ஒருவரை யொருவர்பார்த்து ஐயா! நம்மை அந்த சவுந்தரவல்லி மோசமாய் ஏமாற்றிவிட்டு எங்ஙனம் ஓடிவிட்டனளோ?வென்று ஆறாத்துயருற்று, எங்கு கண்டு தேடுவோமென, மதிமயங்கினவராய் ஒன்றுந் தோற்றாமல் மறுபடியும் ஐவரும் தனித்தனியே ஆரண்யமார்க்கமாய்த் தேடிக்கொண்டு சுந்தரபுரிக்குச் செல்வதாயினர்.

இங்ஙனம், இவர்களின் நிலை இத்தகைய அற்புத ஆனந்த ஆச்சரிய விபரீத வேடிக்கையாயிருக்கையால், பதிவிரதாசிரோன்மணியாகிய சவுந்தரவல்லியின் ஆக்ஞையினால் அந்த தேசத்தின் மூதன் மந்திரியானவன் அந்த மாதரசியின் திருவுருவத்தைப் பட்டத்தி



லெழுதி தர்மசத்திரத்திற் கட்டிவைத்துத் தலையாரிகளைக் காவலாக வைத்திருக்கையில், ஓர்நாள் ஸ்வேதச்சந்திரனும், திருடனும், மயபுரி மன்னனும், இராஜகுமாரனும், மந்திரிகுமாரனும் தமது வழக்கம்போல சவுந்தரவல்லியைத் தேடிக்கொண்டு இவர்களனைவரும் சுந்தரபுரியின் தர்மசத்திரத்தில் வந்து அங்ஙனமிருக்கும் சவுந்தரவல்லியின் திருவுருவப் படத்தைப்பார்த்துச் சந்தேகித்தவராய் ஆலோசிப்பதாயினர்.

அஃதெவ்விதமெனின், சித்திரப்படத்தைக் கண்ணுற்ற ஸ்வேதச்சந்திரன் திடுக்கிட்டு ஆ! எனது ஆசை நேச விஸ்வாச மிகுந்த பிராணநாயகி! யானுன்னைத் திருமணம்புரிந்து நகரினையிழந்து அன்னை தந்தையைப்பிரிந்து, ஆற்றொணா விசனமெய்தி துயரெய்தி ஆரண்யவாசியாயலைந்து, சஞ்சலமெய்துந் தருணம் மனையாளாகிய உன்னையும் பிரிந்து, இத்தகைய கஷ்ட நிஷ்டூர ஆபத்தெய்தலாயினவே, யென, மனவிசாரமாய்ப் புகல்வதைக் கவனித்தத் தலையாரிகளிவனைப்பிடித்துக்கொண்டுபோய் சவுந்தரவல்லியின்உத்தரவின்படியே ஸ்நானபானஞ் செய்வித்து அறுசுவைப் பதார்த்தத்துடன் அன்னம் புசிக்கச்செய்து ஆடையாபரணந்தந்து அணிந்துக் கொள்விரென்க, இஃதென்னவிபரீதமென ஸ்வேதச்சந்திரன் ஆற்றொணா ஆச்சரியத்துடன் கலவரமாயிருந்தனன்.

இங்ஙனம், ஸ்வேதச்சந்திரன், "நிலை சுகானந்தமாயிருக்கையில், " விபசாரத்துவம் விபரீத கலகமென்பதை கவனித்துணராமல் அரசுரிமையை விடுத்து, ஆரண்யவாசியாயலைந்து, அன்னாகாரம் புசியாமல் காய்கனிகளைப்புசித்துக்கொண்டு சவுந்தரவல்லியை எங்ஙனம் தேடுவேனென, பிதற்றிக்கொண்டு வருகின்ற மயபுரி மன்னன் சுந்தரபுரியின் தர்ம சத்திரத்தில் கட்டியிருக்கும் சித்திரப் படத்தைப் பார்த்து ஆ! சவுந்தரிவல்லி, யானுன்னைத் தேடிக்கொண்டு ஆரண்யமெங்குந் திரிந்து அலைச்சற்படுகின்றேனே, நீ இவ்விதமாய் எத்தனை மனிதரை மோசமாய் ஏமாற்றினாயோ? ஆகையால், உன்னை இவ்விதமாய்க் காண்போரிகழ படத்திலெழுதி தர்மசத்திரத்திற் கட்டிவைத்தனர்போற்காணப்படுகின்றன. அநியாயமாய் ஆசைவார்த்தைசொல்லி மோசஞ்செய்த பாபியென, பற்பலவாய் தூஷித்ததால் அங்ஙனம் காவலிருந்த தலையாரிகள் இவனை அடித்து உதைத்து சவுந்தரவல்லியின் உத்திரவின்படி சிறைச்சாலையிலிட்டனர்.

இங்ஙனம், மயபுரி மன்னன் கதி மதலித்தூதர் கையிற் சிக்கிய ஆற்றேனு ஆபத்தா யிருக்கையில், திருடனும் வந்து சத்திரத்திலிருக்கும் சித்திரப்படத்தைக் கண்டு ஆ! சவுந்தரவல்லி மோசஞ்செய்து ஓடிப்போய் விட்டாயே, யென்று, நிற்பதைக் கண்ணுற்ற தலையாரிகள் அவனையும், அடித்து உதைத்து இழுத்துக்கொண்டு போய்ச்சிறைச்சாலையில் அடைத்துவைத்தனர். அப்பால், இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் சவுந்தர வல்லியைத்தேடிக்கொண்டுசுந்தரபுரியில்வந்துதர்மசத்திரத்தில்வைத்திருக்கும்திருவுருவப்படத்தைப் பார்த்து ஆ! எமது ஆசை நேச விஸ்வாச மிகுந்த மாதரசே! நீ எங்களை இவ்வண்ணமாய் ஏமாற்றிவிட்டு ஓடிப்போவது நலமோ? கனிரசமொழி புகலும் கந்தர்வ ஸ்திரீகளினும் சிறந்ததேஜஸ்ஸமைந்த முகவசீகர ரூபசுந்தரி உன்னைக் காணமல் மனவிசாரத்துடன் திகைத்திருக்கும் எமது மனசஞ்சலந் தீர்ந்து மனோல்லாசமா யிருப்பதற்கு யாவரோ? நின்போற் சித்திரப்பட மெழுதி இங்ஙனம் கட்டிவைத்தனரே அவர்கட்கு வந்தனம் புரிகின்றோமென, பற்பலவாய்ப் புகழ்ந்து மனோல்லாசமாய்ப் பாவித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றத் தலையாரிக ளதிசயித்து இஃதென்ன இவர்க ளனைவரும் இவ்விதமாய்ப் பிதற்றலாயினரே யென, சந்தேக கலவரத்துடன் அவ்விருவரையும் அழைத்துக் கொண்டுபோய் சுகபோஜனம் புசிக்கச்செய்து ஸ்வேதச்சந்திர னிருக்கும் மாளிகையில் விற்றிருக்கச் செய்தனர்.

இங்ஙனம், இந்த ஐவர்களின் நிலை இவ்வித ஆர்ப்பாட்ட வேடிக்கையா யிருக்கையில் ஓர் நாள் சவுந்தரவல்லி தனது மந்திரியை அருகிலழைத்து தர்மசத்திரத்தி லிருக்கும் திருவுருவப் படத்தைக் கண்ணுற்றவர்களில்யாவரேனும்ஆச்சர்யமாய் யாதேனும் விசேஷமாய் பாஷித்தனரோ? வென்க, மந்திரியானவன் சவுந்தர வல்லியைப் பார்த்து அரசே! அந்த சித்திரப் படத்தைக் கண்ணுற்றோ ரனைவரும் வேடிக்கைப் பார்த்துவிட்டுப் போயினரே யன்றி, மற்றொரு விசேஷமும் புகலவில்லை. ஆனல், அவர்களில் ஐவர்மாத்திரம் சவுந்தரவல்லி எம்மை ஏமாற்றிவிட்டு எங்கெனும் போய்விட்டாயென பாஷித்தும், சிலர், பூசித்தனரென்றும் அவர்களை பிடித்து வைத்திருக்கின்றோமென, சவுந்தரவல்லி மனமகிழ்ந்து தனக்கு நற்காலம் வாய்ந்ததென, மனோல்லாசமெய்தி மந்திரி! இத்தருணமே



அவர்களை வரவழைப்பீரென்க அமைச்சனும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து அந்த ஐவர்களையும், சாக்ஷிகளாகிய தலையாரிகளையும் அரண்மனையில் வரவழைத்தனன்.

இங்ஙனம் நிற்க, சவுந்தரவல்லியானவள் பகவானை மனதில் தியானித்து ஆண்பிள்ளை வேஷத்தைமாற்றி பழையபடியே பெண்பிள்ளை வேஷமாய் சிம்மாசனத்தி லிருந்து யாவரும் கண்ணுற் றதிசயிக்கும்படியாய்த் தனது சவிஸ்தார மனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகலக் கேட்ட அரண்மனையி லுள்ளோ ரனைவரும் ஆச்சர்யமெய்தவும், தனது மணாளனாகிய ஸ்வேதச்சந்திரன் மனம்பதறி ஆ! மாதே! நீ இவ்வளவு துயர மெய்த லாயினையோ? வென, ஆற்றொணு மனவருந்த மெய்தி கண்ணீர்த் ததும்பக் கதறி யழுதனன், சவுந்தரவல்லி தனது மணாளன் மனதைத் திடப்படுத்தி, நாயகா! ஆவதும், அழிவதும், ஆண்டவன் செயலன்றி மனச்செயலென மதிப்பது அடாத வழுவன்றோ? பிராணநாதா! உலகிலுதித்த மாந்தர்கள் அவரவர்க் கியன்ற ஊழ்வினையா லெய்தும் சுகதுக்க மனைத்தும் அனுபவிப்பதன்றி அழுதாற் றீருமோ? வென, பற்பல நீதி சாஸ்திரங்களால் மனதைத் திடப்படுத்தி, மயபுரி மன்னனைப் பார்த்து ஐயா! நீர் சகல சாஸ்திரபுராண மனைத்தும் கற்றுணர்ந்து மனுநீதி முறைவழுவுறாது மாநிலம் புரக்கும் மன்னனா யிருந்தும் மதியீனத்தால் "விபராதம் விபரீத கலக மென்பதையும் கவனித் துணராமல்" பட்டவர்த்தனம் விற்கவந்த என் மணாளனை குற்றவாளியென அரண்மனையிற் சிறைச்சாலையிலிட்டு என்னைத் தந்திரமாய் அரண்மனையி லழைத்து உன்னுடன் வாழ்ந் திருக்கும்படியாய்ப் புகன்றனையே! ஈது உனக்கு நீதியோ? பாதகா! நீன் அற்ப குணத்தினலன்றோ? நினது அரசாட்சி வனவாசியா யலைந்தனை. ஆதலால், இனிமேல் அற்பகுணம் விடுத்து வனவாசியா யலைந்தனை. ஆதலால், இனிமேல் பரிசுத்தத்தையும் அடைந்து ஆப்த்தேயத்தி ஆளியிழப்பா யென்க, பற்பல விதமாய் மதியுரைத்து, அவன் தேசத்திற்கு அனுப்பிவிட்டுத் திருடனுக்குத் தகுந்த தண்டனை விதித்து, இராஜபுத்திரனுக்கும் மந்திரி குமாரனுக்கும் இரண்டு கன்னியர்களை விவாகஞ் செய்துவைத்து, அவர்களின் தேசத்திற்கு அனுப்பிவிட்டுத் தனது மணாளனைச்சுந்தரபுரியைப் பரிபாலனஞ்செய்யும்படியாகச் சிம்மாசனத்திலமர்த்திச் செங்கோலைக் கரத்திற் றந்து நவரத்தினகசிதமாய் விளங்கும் மணிமகுடஞ் சிரசிற் சூடி மாநிலம் புரப்பீரென

மனோல்லாசமாய் மகுடாபிஷேகஞ் செய்வித்துத் தனது மாமியையும், மாமனாரையும் வருவித்து, அவர்களைக் காப்பாற்றிய குடியானவனுக்கு வேண்டியமட்டும் பொருளுதவிசெய்து அனுப்பி விட்டுத் தனது மணாளனுடன் மனோல்லாசமாய் வாழ்ந்திருந்தனள்.

ஆகையால், அம்மா! சுந்தரவதனி! நீயொன்றுக்கும் அஞ்ச வேண்டாம். அந்தசவுந்தரவல்லி ஆற்றொணா ஆபத்தெய்தி அலைச்சலுற்று துயரடைந்தும் பகவான் கிருபையால் சுகானந்தமாய் வாழ்ந்திருந்ததைப்போல நீயும், இன்னுஞ் சிறிது நாளில் நின் மணாளனைக் கண்ணுற்றுமனத்துயரகற்றி மாநிலத்தோர் புகழ்ந்துரைப்பச் சிறப்பெய்தி மங்களானந்தமாய்மணாளனுடன் வாழ்ந்திருப்பாயம்மணியென, சந்நியாசிகள் ஆசீர்வதித்து, விபூதியைத்தந்து அம்மணி இன்று முதல்நீ ஆண்பிள்ளை ரூபமாய் விளங்கும்படியாக வரந்தந்தோம். ஆகையால், நீ வைத்தியனெனப் பேர்வகித்து இந்நகரை விடுத்து மறுநகரிற்பிரவேசித்து வியாதியஸ்தர்கள் முகத்தில் இந்தவிபூதியைத் தூவினால் அவர்கள் சுகமெய்தி உனக்குக் கொடுக்கும்தக்ஷணையாகிய பொன்பொருளை வைத்துக்கொண்டு வயிற்றைவளர்த்துக்கொண்டிருப்பாய். உனக்கு நற்காலமெய்துந்தருணம் எம்மைதியானித்து ஸ்திரீரூபம் விளங்கும்படியாய் நினைந்தாயாகில் உன் மனம்போல விளங்குமெனப் புகன்று மறைந்துவிட்டனர்.

அப்பால், சுந்தரவதனி! திடுக்கிட்டு இங்ஙனம் வந்தவர்கள் தேவர்கள் தாமெனமதித்து, மனோல்லாசத்துடன் மாளிகையைவிடுத்து ஆரண்யமார்க்கமாய்ச் சென்று அநேக தேசங்களிலும் பிரவேசித்து ஆங்காங்குள்ள வியாதியஸ்தர்களனைவரையும் விபூதியினாற் சவுக்கியப்படுத்திவிட்டு அவர்களாற்கொடுக்கும் தக்ஷணையைப் பெற்று தான தர்ம பரோபகாரஞ்செய்து தானும் மனோல்லாசமாய் ஜீவித்திருந்தனள்.

இங்ஙனம் நிற்க, காஸ்மீகர் தேசத்திலிருக்கும் ஜெயப்ரதாப மஹாராஜன் அருந்தவப் புத்திரியாகிய ரூபவதியானவள் அநேக நாளாய்க் கர்மானுசாரவியாதியினால் தேகம்மெலிந்து அன்னாகாரம் புசியாமலும் அநேகவைத்தியர்களாற் கொடுக்கும்மருந்துக



ளாலும் சவுக்கியமாகாமல், ஆற்றொணா ஆபத்தெய்தி ஆவிபிழைப்பது இன்றைக்கோ? நாளைக்கோ? இன்னுஞ்சற்றுநேரமோ? வென, சந்தேகமாயிருக்கையில் இராஜபத்தினியும்ரூபவதியின்தோழிகளும் மனவிசாரத்துடன் அரண்மனையில் வந்து ஜெயப்ரதாபனைக் கண்ணுற்று, அரசே! ரூபவதி இன்னுஞ் சற்றுநேரத்திற்குள் மரணமெய்துந் தன்மையாய் கண்விழி சுழல, திப்ரமையுடன் பேசுதற்கும் நாவெழாமல் மரணமூர்ச்சையாயிருக்கின்றன ளென்றனர். இவர்கள் மொழிந்தவையனைத்துங் கவனித்த ஜெயப்பிரதாபன் திகிலடைந்து மனம்பதறி, அருகிலிருந்த மந்திரியைப்பார்த்துச் சொல்லுவதாயினன்.

ஜெயப்பிரதாபன்:—மந்திரி! இஃதென்ன விபரீதமோ? யான்அநேக நாளாய்ப் புத்திரசந்தானமின்றி மனவிசாரத்துட னிருக்கையில், தெய்வாதீனமாய் ஓர்பெண்மகவையீன்றுபிரியமாய் வளர்த்தும் யாதொரு பலனுமின்றி அநியாயமாய் அந்தகன்பதிக்கு அனுப்பலாயினனே, ஆகையால் இவ்விபரீதத்திற்கு யாது செய்வேன்.

மந்திரி:—அரசே! நீவிர் இதைக்குறித்து மனவிசாரமெய்துவதா லாய பயனென், உலகிற்பிறந்த மாந்தர்கட்குப் பகைஞராய் விளங்கும் வாதம், பித்தம், சிலேஷ்மமென்னும் முப்பிணிகளும் ஒருவரை யொருவர் மிஞ்சிக்கொள்ளுந்தன்மையாய் சச்சரவு செய்வதினால் இந்த முப்பிணிகளுக்குந் துணைவராகிய வியாதி நாதர்களும் சமையத்திற்குத் தகுந்தாற்போல தமதாசயத் திற்கேற்றவிதமாய் ஆபாட்ட வேடிக்கையான கலகஞ்செய்து சரீரத்தைத் துன்பப்படுத்துவதால் ஜீவதயாபரனாகிய ஜெகரக்ஷகன் பரிதாபமெய்தி இந்தக் குரூரவியாதிகளின் கர்வத்தை யடக்குவதற்காகவே ஆரண்யமெங்கணும் அநேக விதவிதமாய மூலிகை, பச்சிலைகளனைத்தும் சிருஷ்டித்து அவைகளை யெல்லாம் கண்டுணர்ந்து கொண்டுவந்து கல்வத்திலிட்டு அரைத்துமருந்தென்று பெயர்வகிப்பதற்காக ரிஷி முனி சித்தர்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அன்றியும் மனிதர்கட்கு முப்பிணியின் துன்பம்வாட்காதிருக்கும்நிமித்தம்வைத்தியர்களும் உலகிற்பிறந்து விசேஷஆர்பாட்டத்துடன் வீரம், பூரம், செந்தூரம், தைலம், லேகியம், மாத்திரைகளெனும் மருந்துகளை யெல்லாம் தயார்செய்து வைத்துக்கொண்டு மனிதர் வசித்து

லாவும் பிறநாடுகள் தோறுஞ்சென்று வியாதியஸ்தரை சவுக்கியப் படுத்துகின்றனரே. அவ்விதமிருக்கஉலகாதிபராகிய நின்சுபுத் திரிக்கு வந்துற்ற வியாதியைத் தீர்ப்பதற்குத் தகுந்த வைத்தி யர் பிறந்திலரோ? அரசே! நீவிர் யாதொன்றுக்கும் சந்தேக மெய்தாதீர். இன்றையதினம் நமது நகரிலுள்ள வைத்திய ரனைவரையும் வரவழைத்து இராஜபுத்திரியின் தேகத்தைச் சவுக்கியப்படுத்துவோம் அஞ்சாதீர். அரசர்க்கதிபதியே.

என, மொழிந்தவை யனைத்துங் கவனித்துணர்ந்த வேந்தன்கிஞ் சிற்று மனமகிழ்ந்து தலையாரிகளையனுப்பி காஸ்மீர் தேசத் திலிருக்கும் வைத்தியர்களனைவரையும் வரவழைத்து இராஜபுத்திரியின் சரீரத்தைச்சவுக்கியப்படுத்துவீரென்க. வைத்தியர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்துத் தம்மிடமிருக்கும் விதவிதமான மருந்து களனைத்தும் இராஜபுத்திரிக்குக் கொடுத்துந் தேகசவுக்கிய மாகாம லிருந்தமையால் வைத்தியர்களும் மனம்வெறுத்து, அரசே! நின் புத்திரிக்குக் கண்டவியாதியாகையால் இது மருந்தினாற்றீராதெனப் புகன்று, அவரவரிருப்பிடஞ்சென்று விட்டனர். அப்பால், அரசன் மந்திரி பிரதானிய ரனைவரும் மனவிசாரத்துடனிருந்தனர்.

இங்ஙனம், இவ்வித விபரீத வேடிக்கையா யிருக்கையில் சந் நியாசிகளின் விருப்பால் ஆண்பிள்ளை வேஷமா யிருக்கும் சுந்தரவதனி தனது வழக்கப்போற் சகல தேசத்திலுஞ் சென்று வியாதியஸ்தர்களைச் சவுக்கியப் படுத்திக்கொண்டு, காஸ்மீர் தேசத் திற்கு வருகையில் அந்நகரத்தோரால் இராஜ சமஸ்தானத்தில் நிகழ்ந்தவை யனைத்தும், கேள்வியுற்று அரண்மனையிற் சென்று ஜெ யப்பிரதாபனைக் கண்ணுற்று வந்தனம் புரிந்து சொல்வ தாயினன்.

சுந்தரவதனி:—அரசே! யான் வைத்தியர்களிற் சிரேஷ்ட மானவன். எனது பெருமை எல்லாத் தேசங்களிலும் சூரியனைப்போற் பிரகாசிக்கின்றது. எவ்வித குரூரவியாதிகளும் என்னைக்காணில் பயந்து என்னிடமிருக்கும் மருந்தினாற் காற்றாய்ப் பறந்து போகும். அன்றியும், எனது சாமர்த்தியத்தைக் கவனிக்க வேண்டு மாயின் உமது புத்திரியின் சரீரத்தை இன்றையதினமே சவுக் கியப் படுத்துகிறேன் காண்பீர். அரசர்க் கதிபதியே.



என, மொழிந்தவை யனைத்துங் கவனித்த, ஜெயப்பிரதாபனாகிய காஸ்மீர்தேசத்தரசன் மனமகிழ்வெய்தி, சுந்தரவதனியை மாளிகையி லழைத்துக் கொண்டுவந்து, என் புத்திரியிருக்கும் நிலை யைக் காண்பீர் வைத்தியரே யென, சுந்தரவதனி அத்தருணமே சந்நியாசிகளை மனதில் நினைந்து தன்னிடமிருந்த விபூதியை இராஜ புத்திரியாகிய ரூபவதி முகத்திற் றூவினள். உடனே ரூபவதியின் தேகத்திலிருந்த வியாதியனைத்தும் தினகரனைக் கண்ணுற்ற பனி போற் பறந்து, முன்னினும் அதிக தேஜஸமைந்த முகவசீகரமாய்த் துலங்கும் அழகமைந்த சிங்காரமா யிருப்பதைக் கண்ணுற்றோ ரனை வரும் ஆச்சரியத்துடன் மகிழ்வெல்லாமெய்தினர். ரூபவதியின் தாய் தந்தையர் ஆற்றொணா மனக்களிப்புடன் ஆண்பிள்ளை வேஷத்து டன் வந்திருக்கும் சுந்தரவதனியைப் பார்த்து ஐயா! வையகத்தோர் பிராணனுக்கு ஆபத்துறாமல் ஆதரித் திரக்ஷிக்கும் வைத்தியரே! உமது பெருமையை எங்களால் வர்ணிக்கத் தரமோ? தயாநிதி! நீர் எமது அருந்தவப் புத்திரியாகிய இந்த ரூபவதியைத் திருமணம் புரிந்து இந்நகரத்தையும் பரிபாலனஞ் செய்துகொண் டிருப்பீ ரெனப்பிரார்த்தித்தலும், சுந்தரவதனி தன் மனதிற்றானே யோசித் துத் தந்திரமாய் ஜெயப்பிரதாபனுக்குச் சொல்வதாயினள்.

சுந்தரவதனி:—அரசே! நீவிர் புகன்றவை என் மனதிற்குச் சம்மத மில்லை. அஃதெனெனில் யானொரு சந்நியாசி. எனக்கு இல்லற மார்க்கத் தியல்பு உதவாது. அன்றியும், பாசபந்தங்களை யொ ழித்துப் பற்றற்ற ஞானியாய் விளங்கும் தபசிகளானவர் சஞ்ச லத்தாற் சாரும் வரையிலும் துன்பத்தை விளைவிக்கும் சம்சா ரத்தில் மனதைச் செலுத்துவரோ? இதனைத்தும் கவனித் துண ராமல் என்னைத் திருமணஞ் செய்துகொண்டு தரணியைப்பரி பாலனஞ் செய்வீரென புகல்வது ஆச்சரியமன்றோ?

ஜெயப்ரதாபன்:—ஐயா! வைத்தியரே நீவிர் மொழிவதை யோசிக் கில், என் மனம் மிகவும் விசனமெய்தலாயின. அஃதே னெனில் நின்வாலிபதிசை வீணாய்ப்போவது பரிதாபமன்றோ? உலகிற் ஜனித்த மாந்தர்கட்குப் புத்திரசந்தான மில்லையேல் பொன்னுலகைக் கிட்டாரென்பதைக் கவனித்துணர்கிலீரோ? ஆகை யால், பற்றற்ற ஞானிகளாய்ப் பரமனருளெய்தும் மஹான்க ளனைவரும் தமது வாலிபதிசையிற்றானே யாதாமொரு கன்னி

யைத் திருமணம் புரிந்து பெருமையுடன் வாழ்ந்து தமது சந்ததி பெருக மைந்தரைப் பெற்று, முறைமையில் பரமனரு ளெய்தி சொர்க்கபதவி யடைகுவர். ஆகையால், நீர் எம்மீது கருணைவாய்ந்து ரூபவதியைத் திருமணம் புரிந்து, இந்த நகரி னைப் பரிபாலனஞ் செய்துக்கொண் டிருப்பீர்.

என, புகன்றவை யனைத்துங் கவனித் துணர்ந்த சுந்தரவதனி சற்று யோசித்து, ஆ! இஃதென்ன தர்மசங்கடமா யிருக் கின்றனவே, நாம் இந்த அரசன் வார்த்தையை மறுக்கிலோ நம்மைச் சும்மா விடமாட்டான். இனி இவ்விபரீதத்திற்கு யாது செய்குது மென மனவிசார மெய்திடினும், தனது புத்தி சாதுர்யத்தினால் தப் பித்துக் கொள்வதே இலக்கியமென, தந்திரமாய்ப் புகல்வதாயினள்.

சுந்தரவதனி:—அரசே! நீவிர் நவின்றமை யனைத்தும் நீதியே. ஆயி னும், யான் இன்னுஞ் சிலநாள் வரையினும் லோகோபகார மாய் வியாதியஸ்தர்களைச் சவுக்கியப் படுத்தியிட்டு, அப்பால், நின்மனம்போற் சம்மதிப்பேன். ஆகையால், சகல தேசத்தி லிருக்கும் வியாதியஸ்தர்க ளனைவரையும் வரவழைப்பீர்.

ஜெயப்ரதாபன்:—அப்படியே மஹா சந்தோஷம். மந்திரி! இத்தருண மே நமது நகரிலிருக்கும் வியாதியஸ்தர்க ளனைவரையும் வரவ ழைத்து அவரவர் சரீரத்தைச் சவுக்கியப் படுத்திக்கொண்டு போகும்படியாகத் தெரிவிப்பாய்.

என, மொழிந்தவை யனைத்துங் கவனித்த மந்திரியும் அவ்வி தமே நன்றெனச் சம்மதித்து வெட்டியானால் நகரமெங்கணும் பறையறைவிக்க அவ்விசேஷத்தை யுணர்ந்த கூன், குருடர், செ விடர், ஊமை, நொண்டி, சப்பாணி, முதலாகிய கர்மவியாதியஸ்தரும் வாத பித்த சிலேஷ்ம மென்னும் முப்பிணியின் குரூரத்தினால் பற் பல வியாதிகளிற் சிக்கி பாதவிக்கும் பிணியாளர்களும் தினந்தோ றும் கூட்டம் கூட்டமாய்வந்து சுந்தரவதனியினால் நிரோக சவுக்கிய மடைந்து மனோல்லாசமாய் அவரவ ரிருப்பிடஞ் செல்வதாயினர்.

இங்ஙனம் நிற்க, பதிவிரதா சிரோன்மணியாகிய சுந்தரவத னிக்கு நற்காலம் வந்தெய்துங் காரணமாக அகஸ்மாத்தாய்



ஓர் நாள் "காசியநந்த மாமனோல்லாசனும், கண்ணிழந்த குணசீல னும், மணிபத்திரனும், பைத்தியம் பிடித்த கீர்த்திசேனனும், போர் வீரனும்" காஸ்மீர் தேசத்தில் யாவரோ? தெய்வத்தன்மை பொ ருந்திய ஓர் மஹான் வந்திருப்பதாகக் கேள்வியுற்று, அங்ஙனம் சென்று நமது மனக்குறையைப் புகன்று, நமது சரீரத்தைச் சவுக் கியப்படுத்திக்கொண்டு வருகுவோமென, ஆவலுற்று அவரவரிருப் பிடமிருந்து தனித்தனியே பிரயாணமாகி யாவரும் ஒரே தினத்தில் ஒருவர்பின் ஒருவராக காஸ்மீர் தேசத்தின் அரண்மனையில் வருக லாயினர்.

## மனோல்லாசன் வருவது.

மனோல்லாசன்:—நமஸ்காரம் மஹாப்ரபு!

சுந்தரவதனி:—நீர் யாவர்? உமக்கு யாது வியாதியோ? தெரிவிப்பீர்.

மனோல்லாசன்:—அரசே! யானென்து எஜமான் பத்தினியாகிய சுந் தரவதனியை இச்சித்தேனென்று கோபாவேசத்துடன் எனது நாசியை அறுத்துத் துரத்திவிட்டனர். ஆகையால் இங்ஙனம் தெய்வத்தன்மை பொருந்திய வைத்தியர் வந்திருப்பதாகக் கேள்வியுற்று சவுக்கியப்படுத்திக் கொள்வதற்கே வந்தேன்.

சுந்தரவதனி:—ஐயா! உலகிலுதித்த மாந்தர்கட்கு அநுதினமும் அன் னங்கொடுத்து ஆதரித்திரக்ஷிக்கும் எஜமான்பத்தினி, சன்மார்க் கத்திற்ப்ரவேசித்து சதாகாலமும்தர்மசிந்தையாய்விளங்குவதற் காக அநேகநீதிசாஸ்திரமுதலிய வித்யாப்யாசஞ்செய்த குரு பத்தினி, அன்னையினுடன்பிறந்த அம்மான்பத்தினி, தந்தையைப் போன்றதமையன்பத்தினியாகியஇவர்களெல்லாம் பெற்றதாய்க் குச்சமானமன்றோ? கல்வியுணராகசடனே! நீ! இஞ்சிற்றேனும் ஆலோசித்துணராமல் நின் எஜமான்தேவியை இச்சித்ததாலன் றோ? நின் நாசி யறுபட்டு பரதவித்திடலானாய். மதியீனனே! இனி இத்தகைய அற்பசுகத்திற் கிச்சித்து, அவலிபோர் பழித் தற்சேற்ப, ஆயுள் வரையினும் அங்கவீன அவலக்ஷணமாய்த் துயரப்படாதே.

மனோல்லாசன்:—ஐயா! எனது அறியாத்தன்மையால் இவ்விதம் வாய்ந்தமையால், இனி எக்காலத்திலும் விபசாரத்தில்

மனதைச் செலுத்தேன், நீர் என்மீது கருணைவாய்ந்து எனது நாசியை சவுக்கியப்படுத்துவீர்.

சுந்தரவதனி:—சரி! அங்ஙனம் நிற்பாய்.

## குணசீலன் வருவது.

குணசீலன்:—வந்தனம் மஹாப்ரபு.

சுந்தரவதனி:—நீர் யாதுகாரணமாக வந்தீர்? உமக்கென்ன வியாதியோ? விபரமாய்த் தெரிவிப்பீர்.

குணசீலன்:—ஐயா! அநியாயமாய் எனது நேத்திரப்பார்வை மழுங்கிற்று, இதனைச் சவுக்கியப்படுத்துவீராகில் பகவானுமக்குச் சதாகாலமும் துணைபுரிகுவர்.

சுந்தரவதனி:—ஆ! இஃதென்ன ஆச்சர்யம்? பகவானால் சிருஷ்டித்த நேத்திரப்பார்வை மழுங்குவதற்குக் காரணம் யாதோ? தெரியப்படுத்துவீர்.

குணசீலன்:—ஐயா! இந்த அநியாயத்தைச் சொல்வதென்றால் மிகவுப் பரிதாபமாயிருக்கும். அஃதேனெனில் எனது அடிமைப் பயலாகிய இந்த மனோல்லாசன் எனது பத்தினியாகிய சுந்தரவதனியைக்கண்டு இச்சித்தமையால் யான் கோபாவேசத்துடன் அவன் நாசியை அறுத்துத் துரத்திவிட்டேன். அதற்காக அந்தப்பெண் எனது முகத்தில் அடித்துக் கண்ணைக்கலக்கிக் குருடனாகச்செய்தனள்.

சுந்தரவதனி:—ஆ! இஃதென்ன ஆச்சர்யம்? அறிவீனத்தால் தம்மைப்போன்ற மனிதர்களிடம் அடிமைத் தொழில்புரிந்து ஜீவித்துக்கொண்டிருப்பவர்கட்கு எவ்வளவு மதியிருக்கும், அன்றியும், உன்னிடம் ஊழியனாகிய இவனை யொருபொருட்டாயெண்ணி நின்பத்தினியை இச்சித்தானென்று இவன்நாசியை அறுத்துத் துரத்தலாமா? அன்றியும், அத்தகைய மதியீனன் யாதாமொரு குற்றம்புரிவானாகில் அவனுக்குத்தகுந்த மதியுரைத்தன்றோ? சீர்திருத்தஞ் செய்யவேண்டும். அஃதன்றி இவ்விதக் குரூரகொலைதொழிற் கிசைந்தவிதமாய் அவன் நாசியையறுத்ததால்



தெய்வாதீனமாய் நின் நேத்திர மிழந்தனை. ஆகையால் இனிமேலித்தகைய பாபகிர்த்தியம் புரியாமல் நன்மனதுடன் வாழ்ந்திருப்பீர்.

குணசீலன்:—ஐயா! வைத்தியரே! இத்தருணம் எனது நேத்திரத்தைச் சவுக்கியப்படுத்துவீராகில், இனிமேலித்தகைய பாபச்செய்கைக் குடன்படேன் மஹாப்ரபு.

சுந்தரவதனி:—சரி! அந்த மனோல்லாசன் பக்கத்தில் நிற்பாய்.

## மணிபத்திரன் வருவது.

மணிபத்திரன்:—வையகத்தோர் புகலரும் கீர்த்திவாய்ந்த வைத்தியரே. எனது நேத்திரத்தைச் சவுக்கியப்படுத்துவீரென்று உம்மை நம்பினேன் மஹாப்ரபு.

சுந்தரவதனி:—ஐயா யாதுகாரணத்தாலுமது நேத்திரபார்வை மழுங்கிற்றோ? தெரிவிப்பீர்.

மணிபத்திரன்:—யான் எனது அருந்தவப் புத்திரியாகிய சுந்தரவதனியை இந்த குணசீலனென்பவருக்குத் திருமணஞ்செய்து வைத்து யான் எனது மைந்தர்களுடனே டில்லிநகருக்குச் சென்று வர்த்தகஞ் செய்துக்கொண்டிருக்கையிலிவர்களுக்கு யாதோ? கலகம் விளைந்ததினால் இவர் சுந்தரவதனி முகத்தில் அடித்துக் கண்ணைக்கலக்கி விட்டாளென, இவர் எனக்கு நிருபமெழுதி யனுப்பினர். அதை யான் வாசித்துப்பார்த்து என் மைந்தனாகிய கமலாசனனையனுப்பி சுந்தரவதனியைக் கொன்றுவிடச்சொன்னேன்; அவனும் அவ்வாறே கொலைசெய்துவிட்டு வந்தமையால், யான் மனமகிழ்ந்து ஆ! நல்லவேலை செய்தாயென எனது மீசையைமுறுக்க கையையெடுத்ததினால் அகஸ்மாத்தாய் கண்ணிற்பட்டு அந்தகனானேன்.

சுந்தரவதனி:—சபாஷ்! ஐயா! பெரியவரே வயதில் முதிர்ந்தவராயினும், மதியில்லான் பேய்க்குச்சமானமன்றோ? நீர் மனிதனாய்ப் பிறந்தும், கிஞ்சிற்றேனும் பொறுமையின்றி அத்தகைய அநி

யாயஞ்செய்ததால் அவனியோர் பழித்தற்கேற்ப, அக்கணமாய் அஸ்தேவின்னின் நின் புத்திரி தனது கணவனை அந்தகனுகச் செய்தகாரணத்தை நேரிற்கண்டு விசாரியாமல் கொலைத்தொழிற்குக் காரணமாகிய அநியாயஞ்செய்ததால் அகஸ்மாத்தாய்த் திடீரென நேத்திரமிழந்தாய். ஆகையால், இனி எந்தக் காரியமும் ஆராய்ந்துணராமல் பாபத்திற்சிக்கி பழிதேடிக்கொள்ளாதீர்.

மணிபத்திரன்:—ஐயா! இத்தருண மெனது நேத்திரத்தைச் சவுக்கியப்படுத்துவீர்களில் இனிமேல் இத்தகைய அநியாயங்கட்கு உடன்படேன்.

சுந்தரவதனி:—சரி! அவர்களுடன் நிற்பீர். இன்னுஞ் சற்றுநேரத்தில் சவுக்கியப்படுத்துகிறேன்.

## கீர்த்திசேனனும், மந்திரியும் வருவது.

மந்திரி:—வந்தனம் மஹாப்ரபு.

சுந்தரவதனி:—நீங்கள்யாவர்? யாதுகாரணமாக வந்தீர்? உமக்கென்ன வியாதியோ? தெரியப்படுத்துவீர்.

மந்திரி:—ஐயா! அம்தாநகரைப் பரிபாலனஞ்செய்யும் கீர்த்திசேன மஹாராஜனிவர்தான். ஓர்நாள் யாங்கள் மிருகவேட்டையாடுவதற்கு ஆரண்யமார்க்கமாய்ச் செல்லுந்தருணம், சுந்தரவதனி யென்னும் ஓர் பெண்ணைக் கண்டு, இவர் தமது தேசத்தில் அழைத்துக்கொண்டு வந்தமையால் அந்தப்பெண் எங்ஙனமோ ஓடிவிட்டனள். ஆகையால், இவருக்கு அன்றுமுதல் மதிமயங்கி பயித்தியம் பிடித்து மனதிற்கிசைந்த விதமாய்ப் பிதற்றிக்கொண்டிருக்கின்றார். இவர் பயித்தியத்தைத் தீர்த்து இரக்ஷிப்பீராகில் பகவான் உமக்குத் துணைபுரிவார் மஹாப்ரபு.

சுந்தரவதனி:—ஆ! இஃதென்ன ஆச்சரியம்? உண்மைதானோ?

மந்திரி:—ஆம் உண்மையே.



சுந்தரவதனி:—சரி! இன்னுஞ் சற்றுநேரத்தில் உண்மையை வெளிப்படுத்துகிறேன் இவர்களுடனே, நிற்பாய்.

இங்ஙனம், நிற்க, போர்வீரன் தனது மாளிகையிலிருந்த சுந்தரவதனியைக் காணாமல் மனவிசாரத்துடன் தேடிக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் அநேக தேசத்திலுஞ் சென்று தேடியும் காணாமையால் மதிமயங்கி, துஷ்டமிருகங்கள்கொன்று தின்றுவிட்டதோ? அன்றியும், யாவரேனும் அழைத்துக் கொண்டு சென்றனரோ? வென, கவலையுடன் காஷ்மீர் தேசத்தை நாடி வருகையில் அங்ஙனம் தெய்வத் தன்மை பொருந்திய ஓர் மஹான் வந்திருக்கின்றன ரென்று நகரத்தோரால் கேள்வியுற்று, அரண்மனையிற் செல்வதாயினன்.

## போர்வீரன் வருவது.

போர்வீரன்:—அரசர்களாற் புகலருங் கீர்த்திவாய்ந்த மஹாப்ரபு! வந்தனம் புரிகின்றேன்.

சுந்தரவதனி:—நீர் யாவர்? யாதுகாரணமாக இங்குற்றீரோ? யான் கவனித்துணர்க விபரமாய்ப்புகல்வீர்.

போர்வீரன்:—மஹாப்ரபு! யான் ஓர் நாள் கானகமார்க்கமாய்ச் சென்றுந்தருணம் கந்தர்வஸ்திரீயைப்போன்ற சுந்தரவதனி யென்னும் ஓர் கன்னிகையைக்கண்டு, மனோல்லாசத்துடன் எனது மாளிகையிலழைத்துக்கொண்டுவந்து விவாகஞ்செய்துகொள்வதற்கு ஆசையாயிருந்தேன். அப்பால் அந்தப்பெண் எங்ஙனமோ? ஓடிப்போய்விட்டனள், ஆகையால், யான் மனவிசாரத்துடன் சகலதேசங்களிலுந் தேடியலைந்துங்காணாமையால் விசனமெய்தலாயினேன். மஹாப்ரபு! அந்த சுந்தரவதனி எந்தத்தேசத்திலிருக்கின்றனளோ? தெரிவிப்பீர்.

இராஜன்:—இஃதென்ன ஆச்சரியம்? இந்த ஐவரும் சுந்தரவதனியை ஜெயித்தமைய விபரீத ஆபத்துற்றவர்போல பாஷிக்கின்றனரே.

சுந்தரவதனி:—அரசே! அந்த சுந்தரவதனியின் காலவித்தியாசத்தினாலுற்ற அநியாய ஆபத்தை கேள்வியுற்றோர் இத்தகைய பரிதாபமெய்துவரெனின் அந்த உத்தமிக்கு எவ்வளவு கஷ்டநிஷ்டூரம்வாய்ந்திருக்கும் நின்மனதிற்றானே கவனிப்பீர்.

இராஜன்:—ஆம் அதற்கென்ன சந்தேகமா?

இங்ஙனம் இவ்வித விபரீத ஆச்சர்ய காதயாயிருக்கையில் சுந்தரவதனி தனக்கு நற்காலம் வந்தெய்தியதென்று மனோல்லாசத்துடன் சந்நியாசிகளை நினைந்து, அவர்களாற்கொடுத்த விபூதியைத் தன்னால் துயருற்ற மனோல்லாசன், குணசீலன், மணிபத்திரன், கீர்த்திசேனன் போர்வீரன் முதலானவர்களின் முகத்திற்றூவினவுடனே, யாவரும் தமது மனக்கவலையகன்று தேகசவுக்கியமாயினர். அப்பால், தான் முன்போல ஸ்திரீரூபமாய் விளங்கவேண்டுமென்று மனதில் நினைந்ததால், சந்நியாசிகளின் கிருபையால் ஆண்பிள்ளைவேஷம் நீங்கி முன்போலவே ஸ்திரீரூபமாய் விளங்குவதைக் கண்ட யாவரும் திடுக்கிட்டு இஃதென்ன ஆச்சர்யமென்று கலவரத்துடனிருக்கையில் காஸ்மீர்தேசத்தரசனாகிய ஜெயப்ரதாபன் மனமகிழ்ந்து, அம்மணி நீ இத்தனைநாளாய் ஆண்பிள்ளைவேஷமாயிருந்து, இத்தருணம் திடீரென ஸ்திரீரூபமானதற்குக் காரணம் யாதோ? யான் களித்துணர விபரமாய்ப் புகல்வாயென்கப் பதிவிரதாசிரோன்மணியாகிய சுந்தரவதனி தனக்குற்ற ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய் மொழிவதாயினள்.

சுந்தரவதனி:—இராஜாராஜர்க்கள் பூஜிதம்பெறும் மஹாராஜ ராஜேஸ்வரா! நின்மனதிற் கிசைந்ததிதுவே என்று காலவித்தியாசத்தாலுற்ற கஷ்டநிஷ்டூரங்களனைத்தும் விபரமாய்ப் புகலுதும் கவனமாய்க்கேண்மின். அரசே! சுந்தரபுரியில் வாசஞ்செய்யும் மணிபத்திரனாகிய இவர்தானெனது தந்தை. இந்தகமலாசனனும் வித்திரேசனும் எனது தமையன். எமது காலவித்தியாசத்தினால் தாய் இறந்துவிட்டமையால் தந்தையுடனே யாங்களும் அந்நிய தேசஞ்சென்றுவர்த்தகஞ்செய்வதற்காக ஆழிசஞ்சாரியாய்க்கப்பலேறிச்செல்லுந்தருணம் காற்றுமழையினால் ஓர் பேரிடி திடீரென விழுந்து கப்பலைச் சுக்கற் சுக்கலாயுடைத்துவிட்டமையால் நாங்கள் நாலுவரும் கடலில் நீந்தி ஆவிக் கபாயமின்றிக்



கரையில் வந்திருக்கையில், இந்த மனோல்லாசன் எங்களை அழைத்துக் கொண்டுவந்து என்னை இந்த குணசீலனுக்கு விவாகஞ்செய்துவைத்து, சிலநாள் சென்றபிறகு தன்னுடன் அந்நிய தேசத்திற்கு வருவாயென்றழைத்தமையால் இவர் அவன் நாசியை யறுத்துத் துரத்தினார். யான் மனந்தாளாமல் இவ்விதஞ் செய்வது நீதியோவென கையைவீச, விரல்நகம் இவர் கண்ணிற்பட்டு அந்தகனாகியதால் என் தந்தையாகிய இந்த மணிபத்திரன் என்னைக் கொன்றுவிடும்படியாக என் தமையனை அனுப்பினர். இவர் மனமிரங்கி என்னை உயிருடன் விடுத்துப் போய்விட்டனர். வேட்டையாடவந்த இந்த கீர்த்திசேனமஹாராஜன் என்னைத் தனது நகரத்தில் அழைத்துச்சென்று விவாகஞ் செய்துக் கொள்வதற்கு ஆலோசித்திருக்கையில் யான் எனது கற்புநிலை தவறாமல் தப்பித்துக் கொண்டு கானகமார்க்கமாய்வருகையில் இந்தமந்திரி என்னைத்தன்னுடன் அந்நிய தேசத்திற்கு வருவாயென்க யான் சம்மதியாமலிருக்குந்தருணம் இராஜபுத்திரன்வந்து மந்திரியுடன் சண்டைசெய்யும்போது இவனால் மரணமடைந்ததைக்கண்டு யான் மனமிரண்டு மாணமூர்ச்சையானதால் இவன் பயந்து ஓடிவிட்டனன். அப்பால், இந்த மனோல்லாசன் ஓர் அருந்தபமுனிவனால் என்னை உயிர்பெற்றெழுந்திருக்கச் செய்தனன். யான் மனமிரண்டு ஓடினேன். இந்தப் போர்வீரன் அவனைத் துரத்திவிட்டு என்னைத் தனது மாளிகையிலழைத்துக் கொண்டு சென்றனன். அத்தருணம் யான் எனதுபிராணனை போக்கிக்கொள்வதற்காக கற்பாறையை கையிலெடுத்த உடனே அகஸ்மாத்தாய் திடீரென இரண்டு சந்நியாசிகள் வந்து என்கையைப் பிடித்துக்கொண்டு அம்மணி நீ அநியாயமாய்த் தற்கொலைசெய்துக்கொண்டால் அயனிவிதித்த ஆயுள்வரையினும் பேயாய்த்திரிந்து வெருவிதுன்பமனுபவிப்பாய். ஆகையால், இன்றுமுதல் நீ ஆண்பிள்ளை ரூபமாயிருந்து வியாதியஸ்தர்மீது இந்த விபூதியைத் தூவினால் அவர்கள் சவுக்கியமடைந்து உனக்குக்கொடுக்கும் தக்ஷணையாகிய பொன்பொருளை வைத்துக்கொண்டு ஜீவித்திருப்பாயெனப் புகன்று மறைந்தனர். அப்பால், யான் அநேக க்ஷேத்ரங்களினும் சென்று வியாதியஸ்தர்களைச் சவுக்கியப்படுத்திவிட்டு இந்நகரில் வந்து உனது அருந்தவப்புத்திரியாகிய ரூபவதியின் தேகத்தையும் சவுக்கியப்படுத்தினேன். அன்றியும், இன்றைய தினம் இந்த

ஐவரையுங் கண்டு என்மனதிலுற்ற சந்தேகமனைத்தும் யாவருங் கவனித்துணர விபரமாய்ப் புகன்றேன். இனி உமது குமாரத்தியை இந்த மனோல்லாசனுக்குத் திருமணம்புரிந்து, கீர்த்திசேனமஹாராஜன் மைந்தனைக் கொன்ற இந்த மந்திரியைச் சிரச்சேதம் செய்வதே நீதியாகும் வேந்தே.

என, சுந்தரவதனி நவின்றவை யனைத்துங் கவனித்துணர்ந்த அரண்மனையிலுள்ளோ ரனைவரும் ஆற்றொணா ஆச்சரியமெய்தினர். காஸ்மீர்தேசத்தரசனாகிய ஜெயப்பிரதாபன் சுந்தரவதனியின் உத்தரவின் பிரகாரம் அம்மா நகரத்தின் மந்திரியை கொலைஞர்களிடம் ஒப்பித்து சிரச்சேதம் செய்விரென, ஆக்ஞாபித்து நற்சுபமுகூர்த்தத்தில் மனோல்லாசனுக்கு ரூபவதியைத் திருமணஞ்செய்து யாவரும் மனக்களிப்புடன் சிலநாள் அங்கனமிருந்து ஜெயப்ரதாபனிடம் விடைபெற்று அவரவ ரிருப்பிடஞ் சென்றனர். சுந்தரவதனியும் தன்மணாளனாகிய குணசீலனுடனே அந்தகாஸ்மீர் தேசத்தின் அரசனாகிய ஜெயப்ரதாபன் உத்தரவின்படியே அந்நகரத்திற்றானே யாதொரு மனக்கவலையுமின்றி மனோல்லாசமாய் வாழ்ந்திருந்தனள்.

ஆகையால், மதிவதனா! யாரொருவரும் அவரவர் செய்யும் கர்மானுசாரத்திற்கியன்ற விதமே சுகதுக்க மனுபவிப்பதன்றி பகவான்மீது பழிசுமத்துத லடாத வழுவன்றோ? அன்றியும், கருணாநிதியாகிய சர்வேஸ்வரன் வஞ்சகம் புரிவரென்பதை மனதில் வசிப்பது மதியீனமன்றோ? வென, ஆசிரியன் நவின்றவை யனைத்துங் கவனித்துணர்ந்த இராஜபுத்திரனாகிய மதிவதனன் சிறிது நிதானமாய் யோசித்து ஒன்றுந்தோற்றாமற் கலவரத்துடன் சந்தேகமெய்தியவனாய் ஆசிரியன் திருவடியைப்பணிந்து வினவுத லாயினன்.

மதிவதனன்:—குருஸ்வாமி! நீவிர் நவின்றவை யனைத்துங் கவனித்துணர்ந்தவென்மனதில் ஆற்றொணாசந்தேக மெய்தலாயது. அஃதேனெனின் நீவிர்புகன்ற உதாரணங்களில் தர்மதாமே செய்த வினைதாமே யனுபவிப்ப ரென்பதை ஒருவாறாக என்மனதிற் கிசைந்த விதம் புலப்படுத்தினீராயினும், ஆவதும் அழிவதும் ஆண்டவன் செயலன்றி மனச்செயலன்றென்க, மாநிலத்தோ



ராற் புகலரும் சாஸ்திர புராணங்களிலும் முறையிடுகின்றனவே, அஃதன்றி, நீவிர் புகன்ற விதம் கவனிக்கில் பகவான் இல்லையெனத் தோற்றுகின்றனவே. அன்றியும், அவரவர் புரியும் கர்மானுசாரத்தினால் சுகதுக்கம் வாய்க்குமெனின்; அவனியிற் ஜனித்த மாந்தரனைவரும் நன்மார்க்கத்திற் பிரவேசித்து, தர்ம சொரூபியாய்த் தமது சக்திக்கியன்ற விதமாயினும், தான தர்ம பரோபகாரம் புரிந்து காம, க்ரோத, லோப, மோக, மத மாச்சர்ய மென்னும் துர்க்குணங்களையும், அவற்றிற் கனுகூலமாய் விளங்கிய பொய், கொலை, களவு, கட், காம மென்னும் பஞ்சமா பாதகங்களையும் நிக்ரகஞ்செய்து, நீணிலத்திற் சிறப்பெய்திய கீர்த்திவந்தரா யிருப்பரன்றோ? அஃதன்றி "மாலைக்கண்ணன் கேணியில்வீழ்ந் தலைச்சற்பட்டுத் துயரெய்திப் பிராண னிழப்பதுபோல" அறிவின்மையால், பாபகிர்த்தியங்களிற் சிக்கித் துயருற்று மறுஜனனங்களிலும் பாரோரிகழ ரோத்துயருற்றுப் பரதவிப்பதேன்?

என, தனது மனதிலுற்ற சந்தேகத்தின் காரண இரகஸ்யமனைத்தும் ஆசிரியனால் விளங்கித் தெளிவோமென, மதிவதனன் புகன்றவையனைத்தும் கவனித்துணர்ந்த ஆசிரியன் மனக்களிப்பெய்தியவனாய்த் தனது மாணாக்கனின் புத்திநுட்பானுசாரத்தின் கூர்மையைமெச்சி இத்தகைய சிஷ்யனுக்கன்றோ? உண்மைநிலையின் இரகஸ்ய மர்மமனைத்தும் நன்குணரக் கற்பித்தல் ஆசிரியன்கடனென நீதிசாஸ்திரபுராணமனைத்தும் முறையிடுகின்றனவே. என, மனதினுள்ளின்னவனா யுளமகிழ்ந்து மதிவதனன் வினவிய கேள்வியின் இரகஸ்யமர்மத்திற் குகந்தவிதமாய்ப் புகலுவதாயினன்.

ஆசிரியன்:—இராஜபுத்ர! நீ வினவியகேள்வியின் இரகஸ்யத்தின் காரண மர்மம் யாதெனின் உலகிற்ஜனித்த மாந்தர்கள் மனோல்லாசவேடிக்கையாய்ச் சற்றேனும் யோசித்துணராமல் "மனக்குரங்கு மதிப்பதெல்லாம் தனக்குற்ற மனோல்லாச மென்னுந் தன்மையாய் அற்பசந்தோஷத்திலீடுபட்டு தன்னை அடக்கி ஆளும் அறிவானந்தனையும் கவனியாமல் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், இடும்பை, வேட்கையென்னும் அஷ்டவிததுர்க்குணத்திற்கும் கட்டினராகிய பொய், கொலை, களவு, கட், காமமென்னும் பஞ்சமாபாதகங்களும்

தமக்குற்றசொந்தபந்தத்தைப்போற் பாபகிர்த்தியங்கட்கு பாத்தியப்பட்டு அஞ்ஞானமார்க்கத்திற் பிரவேசிக்கையில், ஏதடாமோசம்நேர்ந்ததென அறிவானந்தனென்னும் அரசன்நினைத்திட்டு இனிநாம் தாமதித்தால் துஷ்கிருத்தியங்களனைத்தும் மனதைப்பற்பலவிதமாய்ப் பேதித்து வாதித்து அநியாயமாய் பாபமென்னும் பாழ்ங்கிணற்றிற்றள்ளி பாதிக்கச்செய்யுமென விராவேசத்துடனே, அத்தருணமே அவைகட்கிடங்கொடாமல் மனமென்னும்புரவியின்மீது சித்தமென்னும்கடிவாளமிட்டு மெய், வாய், கண், செவி, நாசியெனும் ஞானேந்திரியங்களாற் சேணந்தொகுத்து ஞானமார்க்கமாய் நடத்துந் தருணம் பாதையென்னும் அஞ்ஞானஇருள்கிஞ்சிற்றுசூழுமாகில் அறிவானந்தனும்மயக்கமெய்தி நற்கரத்திற்றங்கியசேணத்தை கைசோரவிடுத்திடுவன். அத்தருணம் சித்தமென்னும் கடிவாளம் விலவிலத்துத் தாறுமாறாய்க் கழுவிப்போகுமாகில் அலகையை நிகர்த்த மனப்பேய்த் தனதிஷ்டப்போற் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்னுந் தன்மையாய் குரூரகுணங்களிற்சிக்கி ஆத்மநாதனும் அதிசயித்து வியப்புறுந் தன்மையாய்ச் சரீரத்தைப் பற்பல கஷ்டநிஷ்டூரமெய்தித் துன்புறச் செய்து ஜீவகாருண்யமின்றி அஞ்ஞானத்திலுழன்று ஆவியை விடுத்து அவனியோர் பிணமென மதித்திட சரீரம்மயானத்தைநாடச்செய்து மறுஜனனத்திலும் ஊழ்வினை யதிகரித்துக் குலாலன் திகிரியைப்போற் பாதிக்கச்செய்து கர்மானுசாரத்திற் கியன்ற வறுமை நோயாற் பீடித்துத் துன்புறச் செய்யும். அக்காலில் நமக்கித்தகைய வருத்தமெய்தலாயினவேயென சித்தம் மெலிந்து தனவந்தரைப் பார்த்து பொறாமையுற்று தமது ஏழ்மையைக் குறித்து மனஞ்சகியாதவராய் ஆ! விதிவசமே! நம்மைப்போன்ற மானிடர் சுகானந்தமாயிருக்க நாமித்தகையதுயரனுபவிப்பதேன்? ஐயகோ! தெய்வமே! என்தலையில் இவ்விதமாய் எழுதலாமோ? வென்று பகவானை நிந்திப்பதாலாயபயனென். அன்றியும், யாதாமொருவரும் குற்றம் புரிந்தால் தண்டிக்கப்படுவரென்பதை கவனித்தும் குரூர குணத்தினால் கொலை களவு புரிகுவராயின் இராஜதண்டனைப்படியே கொலைஞர்களாற் சிறைச்சாலைக் கழைத்தேகும் தருணத்தில் மனவிசாரமுற்று யானிவ்வித சஞ்சலமெய்துதற்கு இவ்வேந்தனேயுற்றனென்று அவனைத் தூஷித்தாலும், பூசித்தாலும் அவன் குற்றம் மறைந்து ஆபத்தகலுமோ? ஒருக்கா



லும் முடியாதன்றோ? இராஜபுத்திர! அத்தகைய துர்க்குணம் வாய்ந்த அற்பர்கள்தான் மறுஜனனத்தில் வறுமையாளராய் ஆற்றொணா ஆபத்திற் சிக்கித் துயரெய்துகின்றனர்.

மதிவதனன்:—குருநாதா! நீவிர் புகன்றவையனைத்தும் கவனித்துணர்ந்த என்மனதில் ஆற்றொணா சந்தேகமெய்தலாயது. அஃதேதெனின் வெகு ஜாக்கிரதையாய் மெய், வாய், கண், செவி, நாசியென்னும் ஞானேந்திரியங்களாற் சேணந்தொகுத்து சித்தமென்னும் கடிவாளமிட்டு அறிவானந்தனென்னும் அரசன் ஆரோகணித்து நடத்தும் மனமென்னும்புரவியை [illegible]யென்னும் இருள்சூழ்ந்திடினும், [illegible] சம்பந்தமாயிருக்கும் மனமானது தனக்குத் துன்பந்தேடிக் கொள்ளுமோ? அன்றியும், மனதினால் துயரெய்தி சரீரத்திற்கே கஷ்டநிஷ்டூர மெய்திடினும் மனதிற்கன்றோ? [illegible]ராத்துயரும் ஆறுசஞ்சலமும்வாய்ந்து அலைச்சற்படுத்தும். ஆகையால் மனிதர்கள் அத்தகைய துர்க்குணத்தில் மனதைச்செலுத்தாமல் நன்மார்க்கத்திற் பிரவேசிக்கச் செய்வதற்கியலாதோ?

ஆசிரியன்:—இராஜபுத்திர! மனிதர்கள் தனக்குத்துயரெய்துவதைக் கவனித்திடினும் மனப்பேய் கிஞ்சிற்றும் ஓர்வழியில்லாமல் பற்பலவிதமாய் ஓடித்திரியும். அதற்குப் பாபகிர்த்தியத்தின்மீதிருக்கும் இஷ்டம் புண்ணியத்தின்மீது செலுத்துதல்கஷ்டம், அஃதெவ்விதமெனின் துன்மார்க்கத்திற்குஆதாரமாகிய பொய், கொலை, களவு, கள், காமமென்னும். விகாரதோஷ மனைத்தும் மனோல்லாசத்திற் குகந்த திருவிளையாடலென மதித்து [illegible] மேலும் பாபத்தை விர்த்தி செய்துகொண் டிருப்பதற்கு இசையுமன்றி, ஆத்மலாபத்தைக் கருதி ஞானானந்த தத்துவ விசாரணைப்பிரசங்கஞ்செய்யும் இடத்தில் மனது நிலைப்பதரிது. ஆயினும், ஞானவைராக்கிய சீலர்களாய் விளங்கும் ஐம்பது அறுபதுபேர் அங்ஙனம் வீற்றிருப்பினும் அகஸ்மாத்தாய் நித்திராதேவிவந்து அலைச்சற்படுத்தி சயனக்கிரகத்திற்குத் துரத்திவிடுவள். ஆயினும், நாசிகடனம், பாட்டுக்கச்சேரி, நாடகசபை, கொலைத்தொழிற்குக் காரணமாகிய சண்டை சச்சரவு முதலாகிய பற்பல குரூர துன்மார்க்க விஷயத்தில் மாத்திரம் மனப்பூர்த்தியாய் ஐயாயிரம், பதினாயிரம் மனிதரேனும் வந்து கும்பு

சேர்ந்து கூட்டங் கூட்டமாய் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு பசி, தாகம், நித்திரையற்று மனோல்லாசமாய் சபாஷ் சபாஷென கையைத்தட்டிக் கலகலவென சிரித்துக்கொண்டு ஆனந்த மெய்துவர்; அன்றியும் இவற்றிற்குக் காரணம் மமதையேயாகும். அம்மமதையினால் கர்வத்தா லழிந்தோர் அநேகருளர். ஆகையால், இதற்குத் திருஷ்டாந்தமாய்ச் சிற்சில கதாரசங்களைப் புகலுவதும் கவனமாய்க் கேண்மின்.

என, கதியின்றமை யனைத்துங் கவனித் தமர்ந்த மதிவதனன் மனோல்லாசமெய்தியவனாய் புளகமிழ்வெய்தி பக்திவிஸ்வாச முறைவழுவுறாது சித்தசுத்தி வைராக்யத்துடன் ஆசிரியன் திருவடியைப் பணிந்து சுவாமின்! ஞானமூர்த்தி தேவரீர் கிருபாநோக்கத்தால் அடியேன் மனதிலுள்ள ஐயமறத் தீதிதாற் றனைத்தும் யான் நன்குணர்ந்து சந்தேகமற்று சாயுஜ்யமெய்த அனுக்கிரகஞ்செய்குவீரெனலும் ஆசிரியன் மாணாக்கன்மீது அருள்புரிந்து போதிப்பதாயினன்.

## மனோற்சாகன் சரித்திரம்.

இராஜபுத்திரா!

திரைகடல்சூழ்ந்து சிறப்புற்றிலகும் இரத்தினபுரியைப் பரிபாலனஞ்செய்திருந்த மனோற்சாகமஹாராஜன் சந்ததமும் தனது அற்பமதியினால் தன்னைப்போன்ற சக்ரவர்த்திகளிவ்வுலகத்திலுங் காண்பதரிதென்க மனதிலெண்ணியவனாய் மதித்து, தனது சரீரமேன்மையும், முகவசீகரமும், பொக்கிஷத்திலுள்ள நவரத்தினங்களும் காண்போர் வியப்புறுந் தன்மையாய் மேன்மையுற்றிருப்பதைப் பார்த்து மனம்பூரித்து, ஆ! ஹா! இவ்வுலகமெங்கணுமுள்ள மாந்தரனைவரும் நமது வழிபாடன்றோ? வென, மதித்து சிற்சிலநேரம் தன் மனதிற்றோன்றும் உற்சாகத்தினாற்சந்தேகமெய்தி நாம்மனிதனல்ல நாம்தேவனாகத்தான் இருக்கவேண்டும். அன்றியும், தேவனென்றால் கணந்திலன்றோ? வசிக்கவேண்டும்? அஃதன்றி, இங்ஙனம் யாதுகாரணமாய் வந்தோம். என, சந்தேக கலவரத்துடன்



வெறியனைப்போற் சந்ததமும் தன்னைத்தானே புகழ்ந்து, மமதையுற்றவனாய்க் கர்வித்து, இரணியனைப்போற் பெருமைபாராட்டி மதோன்மத்தனாய் மனமகிழ்வெய்தி சிம்மாசனத்திலமர்ந்து தனக்கு மிஞ்சிய பெரியோர்களிலையென்க நியாய துட்பங்களெவ்விதமாயிருக்குமென்பதையும் கவனித் துணராமல் அநியாய அரசுரிமை புரிகுவதாயினன்.

இங்ஙனம், மனோற்சாகன் நிலைகளவிற் றோன்றும் வேடிக்கையைப்போற் சந்தேக மெய்தும் அற்பசந்தோஷமா யிருக்குந் தருணம், இவனுடைய மனோகர்வமெல்லாம் திரண்டுருண்டு மனிதரூபமாய் வந்ததைப்போற்சந்ததமும் நயவஞ்சக மோசமனைத்தும் ஆதாரமாய்க்கொண்ட காலசித்த னென்பவன் ஓர்நாள் அரண்மனையில் வந்து மனோற்சாகமஹாராஜனைக் கண்ணுற்று தந்திரமாய் முகஸ்துதி செய்வதாயினன்.

காலசித்தன்:—இராஜ ராஜாக்கள் பூஜிதம் பெறும் மஹாராஜப்ரபு. சர்வேஸ்வரனால் அவனியில் வந்தவதரித்த தேவாம்சமெனும் திவ்யசொருப சிங்காரமுகவசீகர தேஜஸமைந்தஇராஜேஸ்வரா! நின்மகிமையை யாவருணர்வர். அரசே! என் போன்ற உத்தமர்களே நினது மகத்வத்தைக் கண்டுணர்ந்து, உண்மையான தேவனாகிய நின் திருவடியைப் பூஜிப்பரன்றி, அஞ்ஞானமார்க்கத்தினராய் அவனியிற் ஜனித்த அவிவேகிய அற்பமனிதர்கள் நின்மகிமையை யுணர்வரோ? அன்றியும், மெய், வாய், கண், செவி, நாசியென்னும் பஞ்சேந்திரிய உணர்வற்ற கற்சிலைகளை வணங்குவர். அஃதுமன்றி, வள்ளலே! சகலமுமதானாய் விளங்கும் நின் பெருமையைக் கவனித்துணராத மாந்தர்கட்கு நின்மகிமையைப் புகன்றிடினும், அவர்களென்மீது சினமுற்று, உம்மையொரு துரும்பென மதித்துப் பரிகாசிக்கின்றனர். அஃதேனெனின் இராஜேஸ்வரனாகிய நீவிர் இதனைக் கவனிப்பதில்லை? இதற்கு யானென் செய்குதும்.

என, நயவஞ்சகமாய் புகன்றவை யனைத்தும் உண்மைதானென்று மதித்திருந்த மனோற்சாகமஹாராஜன் தன்னைத்தானே புகழ்ந்து ஆற்றொணா மனோல்லாசமெய்தி அற்பர் நட்பினால் ஆபத்

தெய்வமென்பதைக் கவனித்திடாமல் இருவிழியையும் உருட்டித் தனது சரீரத்தை உற்றுற்றுப் பார்த்துத் தன் மனத்தில் மதமென்னும் தீக்குண சாகரத்தில் அமிழ்ந்தியவனாய் ஒன்றுந் தோற்றாமல் பெருமூச்சுவிட்டு புகலலாயினன்.

மனோற்சாகன்:— காலசித்தா! நீ புகன்றவையனைத்தும் உண்மையே. யான்தேவாமென்பதற்குக் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. ஆயினும், இத்தனை நாளாய் எனது பெருமையை இந்நகரவாசிகள் கவனித்திலர். யாவரும் என்னைமனிதனென்றோ? தேவனென்றோ? வென, சந்தேகக் கலவரமாயிருந்தனரேயன்றி, உண்மையை கவனித்தவனல்ல. இனி உன்னால் என் நிலையைப் புணர்ந்தேன். ஆகையால், இன்றுமுதல் நீ எனது முதன் மந்திரியாயிருந்து யாவரும் என்னை அவ்வவர் குல தெய்வம்போற் பாவித்து பக்தி விஸ்வாசத்துடன் பூசித்துக்கொண்டிருக்கும்படியாய் ஆக்ஞாபிப்பாய்.

ஏன, அறிவிலிய அரசனாகிய மனோற்சாகன் நவின்றமையுணர்ந்த நயவஞ்சகனாகிய காலசித்தன் தன் மனதிற்றானே சிரித்து, இத்தகைய அற்புதமான மடமிக்க அறிவிலிய அரசனும் அவனியிற் ஜனித்தனனன்றோ? வென ஆச்சரியமெய்தி தந்திரமாய் அரசனிடம் விடைபெற்றுத்தனது ஸ்வஸ்தானத்திற்குச்சென்றனன்.

இங்ஙனம் இவ்வித விபரீத வேடிக்கையாயிருக்குந் தருணம்; அரண்மனையிலுள்ள மந்திரி பிரதானியரனைவரும் திடுக்கிட்டு காலசித்தனால் நமது இராச்சியத்திற்குக் கெடுதிசம்பவிக்குமென்பதற்குச் சந்தேகமில்லையென்று கலவரத்துடனிருக்கையில், மனோற்சாகன் தனது வழக்கப்படியே அநியாய அரசுபுரிந்து மதோன்மத்தனாயிருக்கையில், காலசித்தன் தன்னைப்போன்ற சில வஞ்சகரிடம் அரசன் நிலையைப் புகன்று, நண்பர்காள்! நீங்கள் இத்தருணமே பூஜாதிரவியங்களைக் கொணர்ந்து என்னுடனேவந்து மனோற்சாகராஜனைப் பூசிப்பீராகில் உமக்குவேண்டிய வர்த்தனமும் (?) பொன்பொருளும் கொடுக்கும்படியாக அரசனுக்குப் புகன்றுவாங்கித் தருகிறேனென்றியம்பப், அவர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து பூஜாதிரவியங்களாகிய புஷ்பம், சந்தனம், பன்னீர், கர்ப்பூரம், சாம்பிராணி, கனிவர்க்கங்கள் முதலானவையும் வாங்கிக்கொண்டு



காலசித்தனுடனே அரண்மனைக்குச் சென்று சிம்மாசனத்தின் மீதிலமர்ந்திருக்கும் மனோற்சாகன் முன்னிலையில் பணியல்போட்டு மனதில் பரிகாசமும் உதட்டில் ஸ்துதியுமாக பூசித்து இராஜேஸ்வரா! எங்களை உலகில்ஜீவித்திருக்கும்படியாக சிருஷ்டித்ததேவாதிதேவா! எங்கள் வறுமைநோயகல பொன்பொருள் தருகுவீரென கர்ப்பூர தீபாராதனை செய்தனர்.

இங்ஙனம், இவ்வித அநியாய வேடிக்கையைப்பார்த்து மனந்தாளாத மந்திரி பிரதானியரனைவரும் ஆற்றொணா ஆச்சரியமெய்தியவராய்க் காலசித்தன் முதலான வஞ்சகரை அதட்டி அடடா துஷ்டர்காள்! நம்மைப்போன்ற மனிதனுக்குப் பூஜாநிவேதியம் செய்வது நீதியல்லவென்றிசைத்து, மனோற்சாகனைப்பார்த்து அரசே நீவிர் இந்த வஞ்சகர் வார்த்தையைக்கேட்டு பாபத்திற்சிக்கிப் பாதிப்பது (?) நீதியல்ல. அன்றியும் கடவுள் சிருஷ்டியிலொருவராகிய நீவிர் மனிதனாகப்பிறந்து தேவர்களைப்போற் பூஜாநிவேதியம் ஏற்றுக்கொள்வது யோக்கியமன்று, நாமனைவரும் தேவனைப்பூசிப்பவரன்றி நம்மைப்போன்ற மனிதர்களிடம் பூஜையேற்றுக்கொள்வது நன்றன்றெனக், பற்பல நீதிசாஸ்திரங்களாலும் அரசனுக்கு நன்மதி புகட்டினர்.

காலசித்தன்:— அரசே! இவர்களனைவருக்கும் நீர் சம்பளம்கொடுத்துக் காப்பாற்றுகின்றீரோ? பஞ்சேந்திரியங்களின் உணர்வற்றிருக்கும் கற்சிலைகள் சம்பளம்கொடுத்துக் காப்பாற்றுகின்றதோ? விசாரிப்பீர்.

மனோற்சாகன்:— அடடா! என்னாற்பிழைக்கும் மந்திரிபிரதானியரெனும் சக்கைக்கூட்டங்களே நீங்களனைவரும் மந்தைமந்தையாய் அரண்மனை சோற்றுகளைச் சாப்பிட்டு உமது சரீரத்தை வளர்த்ததுமன்றி, எனது மகிமையைக் கவனித்திலீர். இந்தக் காலசித்தனே? மிகவும் ஞானி, விஸ்வாசன், இவன் என்னைத் தேவனைப்போற் பூசித்தால் நீங்களனைவரும் பொறாமையுற்று பிதற்றுகின்றீரே பேயர்காள்! நீங்களித்தருணமே அரண்மனையை விடுத்து அப்பாற்செல்வீர். எனது அன்பிற்கிசைந்த காலசித்தா! நீ! இத்தருணமே சென்று பஞ்சேந்திரிய உணர்வற்றகற்சிலைகளிருக்கும் கோவில்களையும் இடித்துவிட்டு வரு

வாய். இனி யானே! குருதெய்வமென சகல மனிதரும்பூஜித்து வணங்கும்படியாக நகரெங்கணும் பறைசாற்றும்படியாய்ச் சொல்வாய்.

என, புகன்றவை யனைத்துங் கவனித் துணர்ந்த மனோற்சாக மஹாராஜனுடைய குருவானவர் மிகவும் சினந்து கோபாவேசத்துடன் புகல்வதாயினர்.

ஆசிரியன்:—அரசே! உமது அநர்த்தத்தைக் கண்டபோ நிகழ்ந்து பரிகாசஞ்செய்து பாபியென் றிகழுந் தன்மையான அற்பனேச மாயிருக்கின்றனவே. அன்றியும் இந்த வினைஞர்களுன்னை இத்தகைய நயவஞ்சக மோசமாய் ஏமாற்றுவதை, நீ! மெய்யென் றுணர்ந்து நின்குருவாகிய என்னையும் மதியாமல், கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென் னுந் தன்மையாய், மனம்போன போக்குக்கோர் வழியொன்றில்லை யென்னுந் தன்மையாய்ப் பகவானைப்போற் பூஜையேற்றுக் கொள்வதும், ஆலயங்களை இடிக்கச் சொல்வதும் மந்திரி பிரதானியரைத் துரத்தினதும் உனக்கு நீதியோ? கேடுவரும் முன்னே மதிகெட்டு வருமென் பதுபோற் பாபகிர்த்தியமாய்க் கொடுங்கோலரசுபுரிவாயாகில் நீ அநியாயமாய் அழிந்துபோவாய்.

என ஆசிரியன் புகன்றவை யுணர்ந்த காலஜித்தன் மனோற்சாகனைப் பார்த்து அரசே! நின் மகத்வ மின்னதென்றுங் கவனித் துணராத இந்தக் கிழவனை உம்மை எவ்வளவு உதாசினமாய்ச் சொன்னான் கவனித்தீரோ? வென்று காலத்திற் கேற்றாப்போல தந்திரமாய்ப் புகன்றனன்.

மனோற்சாகன்:—சபாஷ்! காலஜித்தா! இந்தனை நாளாய் இந்தக் கிழவனை குருவென்று மதித்திருந்ததினால் இவன் இன்றைக்கும் அஞ்சுதலின்றி இத்தகைய வீண்வார்த்தை யாடுகிறான். இதைக் குறித்து நீயாதொன்றும் மனவருத்தப் படவேண்டாம். அடா! கொலைஞர்களே! இந்த இராஜ அபராதியை இத்தருணமே கொலைக் களத்திற் கொண்டுபோய் சிரச்சேதனை செய்து விடுவீர்.



என, புகன்றவை யுணர்ந்த கொலைஞர் ஆசிரியனை கயிற்றாற் பிணைத்திழுத்துக்கொண்டு போகுந் தருணம், நகரவாசிகள் கண்டு மனந்தாளாமல் குய்யோ முறையோ வென்று கூச்சலிடவும், முன்னம் அரசனால் துரத்தப்பட்ட மந்திரி பிரதானியர் அதிவேகமாகச்சென்று குருநாதனின் கட்டவிழ்த்து கொலைஞரைத் துரத்திவிட்டுத் தம்முடனே அழைத்துக்கொண்டு கேகய தேசஞ்சென்று அந்நகரத்தைப் பரிபாலனஞ் செய்யும் நித்தியானந்த மஹாராஜனிடம் நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய்ப் புகல்வதாயினர்.

இங்ஙனம், நிற்க, நித்தியானந்தன் குருஸ்வாமியைப்பணிந்து, சுவாமி! தேவரீர் அந்தத் துன்மார்க்கன் நகரிற்சென்று ஆவிக்கபாய மெய்தலாயிற்றோ? வென, விசனமெய்தி மனவிசாரப் படுவதாயினன்.

ஆசிரியன்:—அரசே! நின்மைத்துனனாகிய மனோற்சாகன் அறிவீனராகிய சில அற்பருடன்கூடி,தன்னைத்தேவனெனமதித்து, மனோகர்வத்தினால் தேவாலயங்களையும் இடித்து, பெரியோரையெல்லாந் தூஷித்துத் தன்னையே உலகத்தினர் தேவனென மதித்துப் பூசிக்கும்படியாய்ஆக்ஞாபித்து மமதையுற்றிருக்கையில் இந்த மந்திரிபிரதானியர் தடுத்து அரசே! இவ்வித அநியாயஞ்செய்வது நன்கல்லவென் மதியுரைத்தமையால் இவர்களையும் தனது நகரைவிடுத்துத்துரத்தினன். அந்தருணம் யானவன் மனதைச் சீர்திருத்தஞ் செய்வதற்கேற்ப, பற்பல நியாயவசனம் புகன்றமையால், அவன் கடுகடுத்து "கர்த்தபத்தின் செவியிலெத்தகைய புத்திபுகட்டினும் சித்தத்தி லுணராதென் பதுபோல" என்னைப் பற்பலவாய் இகழ்ந்து தூஷித்து, தனது அற்பநேயர்களின் சொற்பிரகாரம் என்னைச்சிரச்சேதஞ்செய்து விடுதற்கிசைந்து கொலைஞரிடம் அனுப்பினன். அந்தகொலையாளி களென்னை இரணக்களத்தில் அழைத்துக்கொண்டுவந்து கொல்லுந்தருணத்தில் திடீரென இவர்கள்வந்து அவர்களை அடித்துத் துரத்திவிட்டு என்னை விடுதலைசெய்து இங்ஙனம் அழைத்து வருகலாயினர்.

நித்தியானந்தன்:—சுவாமின்! யானித்தருணமேசென்று மனோற்சாகன் மமதையை யடக்கி அவனுக்குத் துணையாயிருக்கும் நயவஞ்ச

களையும் நாசஞ்செய்து அவன் தேசத்தையும் பஸ்மீகரமாய்க் கொளுத்திவிட்டு வருகாவிடில் யான் நித்தியானந்தனல்லவென் றுணர்வீர். சேனாவீரர்காள்! நீங்கள் இத்தருணமே இரத கஜ துரக பதாதிகளெனும் நால்வகைச் சேனைகளையும் யுத்தகோலத்துடன் வருகவென சித்தப்படுத்துவீர்.

எனா, நவின்றமையைத் தான் கவனித்த சேனாவீரர்களும் அவ்வாறே நன்றெனச் சம்மதித்துத் தமது இராணுவங்களை விசாரித்து இரத கஜ துரக பதாதிகளெனும்நால்வகைச் சேனைகளையும் யுத்தகோலத்துடன் சித்தப்படுத்தி அரசனுக்குத் தெரிவிக்குதலும், நித்தியானந்தனும் தனுசைக்கரத்திலேந்தி அம்புறாத் தூணியை முதுகிலணிந்து மந்திரி பிரதானியருடனே சேனைகளை யழைத்துக் கொண்டு இரத்தினபுரியில் வந்து கூடாரமியற்றி சேனைகளனைவரையும் அவரவர்க் கிசைந்த விடுதியில் வீற்றிருக்கச் செய்து, ரணபேரிகை முழக்கஞ் செய்வதற்கு மனதில் நினைக்குதலும், இந்த மனோற்சாகன் தனது பத்தினியின் சகோதரனாகிய மைத்துனனுக்கே இவன்மீது மனந்தணிந்து அமர் பொருதுவ தெவ்விதமென, பரிதாபத்துடன் சற்றுயோசித்து, நாம் யாதொன்றையும் முன்பின் யோசியாமல் மூர்க்கமாய் இங்ஙனம் யுத்தத்திற்கு வந்து மைத்துன வாஞ்சையால் சித்தப்பிரமையுடன் திகைத்துக் கலவரப்படுதலாச்சுதேயென, மனமெலிந்து, நாம் இவ்வளவு தூரம் யுத்த கோலத்துடன் சேனைகளையழைத்துக் கொண்டுவந்தும் வீணாய்ப்போவோமாகில் நம்மைப்போன்ற அரசர்கள் நம்மை மதியார். அன்றியும், நமதுஆசிரியனுக்கும் இவனால் யாதேனும்,ஆபத்தெய்தும்,ஆகையால்நமது முதன்மந்திரியை மனோற்சாகனிடம்அனுப்பி அவனை இங்ஙனம் வரவழைத்து, நன்மதியுணர்த்தி இனியேனும், துஷ்டசகவாசத்தையொழித்து குருவிஸ்வாசியாய் ஆசிரியனைப் பூசித்திருக்கும் விதமாய்ப் போதித்துவிட்டு,யாவரும் சமாதானமாய் விருந்தமுதருந்தி நமது சேனைகளை யழைத்துக்கொண்டு நகரத்திற் சேருவோமென, மனதில் நினைந்துத் தனது முதன்மந்திரியை அருகழைத்து புகலுவதாயினன்.

நித்தியானந்தன்:—மந்திரி ! நீ அரண்மனையிற் சென்று மனோற்சாகனைக்கண்டு அவனுக்கு நன்மதி யுரைத்து இங்ஙனம் அழைத்துக்கொண்டு வருவாய்.



மந்திரி:—அப்படியே மஹாபாக்கியம் வேந்தே.

ஆசிரியன்:—அரசே! அந்த மனோற்சாகனென்பவன் மனோகர்வத்தினால் மமதையுற்று "இரணியனைப்போற் றனக் கெவரும் நிகரில்லை யென்க" கர்வித் திருக்கின்றனனே, அவனிடம் இந்த மந்திரியைத் தனியா யனுப்புவது மதயானைமுன் மனிதன் சென்றால் ஆபத்தெய்தி ஆவி இழப்பதுபோல் அன்றோ?, பயங்கரமாகிய விபரீதம் நேரிடும்.

அரசன்:—சரி! அவ்விதமாகில், மந்திரி! நமது ஆசான் சொல்வதை கவனிக்கில் என் மனதும் சந்தேகமெய்தலாயது, ஆகையால், உனக்குத் துணையாய்ச் சேனாதிபதிகளிற் சிலரை அழைத்துக்கொண்டு செல்வாய்.

இங்ஙனமிருக்க, நயவஞ்சகனாகிய காலசித்தன் மனோற்சாகனை யேமாற்றி அனுதினமும் அரண்மனை திரவியங்கட்குச் சிறகுமுளைத்து பறக்குந்தன்மையாய் கைகொண்டவளவிலும் வாரி வாரி தன்மனம்போற் செலவுசெய்து அரண்மனையை ஓர் தேவாலயம்போற் சிங்காரித்து மதியிழந்த மன்னனாகிய மனோற்சாகனை விக்கிரகம்போற் காண்போர் வியப்புறுந்தன்மையாய் மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், அல்லி, அசோகு, கொன்றை, குரவை, தவனம், மகிழம், மனோரஞ்சிதம், ரோஜா முதலாகிய நறுமணம்வீசும் மணமலர்களை மாலையாகத்தொடுத்து,மனோற்சாகன்கழுத்திலணிந்து சாம்பிராணி தூபதீபாராதனை செய்து ஆடியொட்டி பொங்கலிட்டு ஆ! எமது ஆண்டவனாகிய இராஜேந்திரனே, ஊர்பாட்டத்துடன் வாழை இலையில் அன்னபதார்த்தமும் லாகிரிவஸ்துக்களும் சாராய புட்டிகளும்வைத்து பைத்தியக்காரனை பரிகாசிப்பதுபோல, காலசித்தன் தன்னைப்போன்ற நயவஞ்சகராகிய நேயர்களுடன் மனோற்சாகனைப்பார்த்து சுவாமி நின்மகிமையை யாவர் கவனிக்குணரவல்லவரென்று, கர்ப்பூரதீபாராதனை செய்தபிறகு மனோற்சாகனுடனே லாகிரிவஸ்துக்களையும் மாம்சபக்ஷணாதிகளையும் புசித்து சாராயங்களைக்குடித்து வெறியதிகரித்துவெகுஊர் பாட்டத்துடன் நடனப்பெண்கள் நாட்டியஞ்செய்து சங்கீதசாஹித்ய திவ்யபதங்களைப் பாடிக் கொண்டிருக்கவும் காலசித்தன் முதலான அற்பநேயர்களும் வெறியரைப்போல, வாயில்வந்தவிதமாய்ப் பிதற்றிக்கொண்டு அரண்மனை முழுதும் அதிருப்படியாய்க் கூச்சலிட்டு பாடிக்கொண்டிருப்பதைப்

பார்த்த மனோற்சாகன் மனக்களிப்பெய்தி ஆ! ஹா! நம்முடையபுரம்போல இவ்வுலகத்தி லெவருமில்லை. எல்லா தேசத்திலும் இந்த இரத்தினபுரியே சிறப்பெய்திய மாநகரம். அன்றியும், நமது சேனைகட்குச் சமானமாகிய வீரதீரர் எந்நகரத்திலுங் கிடையாதென, மனோகர்வத்தைத் துணையாய் வகித்து மமதையுற் றிருந்தனன்.

இங்ஙனம், இவர்களிங்ஙனம் இவ்விதம் அற்ப சந்தோஷ ஆர்ப்பாட்ட அற்புத ஆனந்த ஆச்சரிய வேடிக்கையா யிருக்குந்தருணம், எமதூதர் உயிரைப் பிடித்துக்கொண்டேகுவதற்கு வந்திருப்பதைப்போல நித்யானந்தன் அனுப்பிய மந்திரியும் சேனாவீரரும் மனோற்சாகன் அரண்மனையில்வந்து, அங்குற்ற விபரீத வேடிக்கை யனைத்தும் பார்த்து இஃதென்ன விபரீதம்? இவ்விதமும் மனிதர்களிருப்பரோவென வியப்புற்று, கையைத் தட்டிக் கலகலவென சிரித்து, அடடா அறிவீனர்களே! இஃதென்ன ஆச்சர்யம்? நம்மைப்போன்ற மனிதனை விக்கிரகம்போலமதித்து, நாஸ்துதி செய்வதாயினிரே. அற்பர்காளென, பரிகாசித்து, மனோற்சாகனைப் பார்த்து அரசே! உமது சகோதரியின் மணாளனாகிய நித்தியானந்தமஹாராஜன் உம்மைக் காணும்பொருட்டு, தமது இரத கஜ துரக பதாதிகளுடன் இந்நகர் புறத்திலிருக்கும் நந்தவனத்தில் வந்திருக்கின்றனர், ஆகையால், நீர் உமது மந்திரி பிரதானியருடன்வந்து, அவரைக் காணும்படியாக அழைத்து வருவீரென்றாக்கியாபித்தனர். என, மொழிந்தவையுணர்ந்த காலசித்தன் கடகடத்து ஆரடா அடா அற்பமனிதர்களே! கிஞ்சிற்றேனும் அஞ்சுதலின்றி தேவனைப்போன்ற அரசனை உம்முடன் வருகுவாயென்று அழைப்பதாயினிரே. மதியீனர்காள்! உமது அரசனை இங்ஙனம் வந்து இவரைக் கண்ணுற்று ஸ்தோத்திரம் செய்துக்கொண்டு போகச்சொல்வாயென்றனன். இவ்வார்த்தையைக்கேள்வியுற்ற நித்யானந்தன் மந்திரியும் சேனாவீரரும் ஆற்றொணா ஆச்சர்யமெய்தி அடடா! அறிவீனனே! நீ சொல்வதைகவனிக்கில் "துரியோதனனைக் கெடுத்த ஜகுனியின்" நயவஞ்சகத்தைப்போற் றோற்றுகின்றனவே நம்மைப்போன்றமனிதனை நாம் பூசிப்பது எவ்வளவுமூடத்தனம். நீங்களிவ்விதம் மமதையுற்று, மனோகர்வமாய்த் தம்மைத்தாமே புகழ்ந்து, கனவிற்கண்ட காக்ஷியைப்போல மனக்களிப்பெய்தி, மதியற்ற மன்னனாகிய மனோற்சாகமஹாராஜனைத் தேவனைப்போற் பூசித்துக் கொண்டிருக்கும் வேடிக்கையனைத்தும் இன்னும் அரைநாழிகையில் அமர்க்களத்திற் றெறியவரும், ஆயினும், எமது அரசனாகிய நித்தி



யானந்தமஹாராஜன் மைத்துனவாஞ்சையால் உமது அரசன்மீது கருணைவாய்ந்து, அருகிலழைத்து நன்மதிபோதிப்போமென, மனதிலெண்ணி எங்களால் வரவழைப்பதாயினர், ஆகையால், யாங்கள் இங்ஙனம்வந்து உம்மால் நிகழும் வேடிக்கையைப்பார்த்து ஆற்றொணா ஆச்சர்யத்துடன் நகைப்பதாயினோம். மதியின்றிய மன்னனைச் சதிமோசமாய்க் கெடுக்கத்துணிந்த வஞ்சகரே.

என, நவின்றமையுணர்ந்த சபையோரனைவரும் சாராயங்களைக் குடித்த வெறியினால் அச்சம், பயம், நாணமென்பவை யனைத்தும் விடுத்து நித்யானந்தனனுப்பிய மந்திரியையும் சேனாவீரரையும் பிடித்துக்கொண்டு ஐயோ! பாபிகாள்! இவ்வையகத்திற் பிறந்தும் மெய்யானதேவனாகிய இவரை ப்ரத்யக்ஷமாய்க் கண்ணுற்று தரிசித்துப் பூசித்து, சுகானந்த மெய்தாமல் அஞ்ஞானிகளைப்போன்ற அறிவீனத்தால் பொய்யுடலைச் சுமந்திருப்பது மதியீனமன்றோ? வென, பற்பலவிதமாய்ப் பாஷித்து, கர்த்தபம்போற் குரலொலி சப்திக்க விபரீத கலககூச்சலிட்டனர். காலசித்தனோவெனின் தனது தந்திரமாயஜாலசமர்த்திற்கிணங்க மனோற்சாகனைப்பார்த்து, அரசே! இந்த துன்மார்க்கரை இத்தருணமே சித்திரவதை செய்தல் நமது சமர்த்திற் கியல்பென்க. மமதையினால் மதியிழந்த மனோற்சாகன் தனக்கு இனிவருங் கெடுதியை மனதிலுன்னாமல் மேதான மத்தனாய் சிம்மாசனத்தை விடுத்து திடீரென் றிறங்கிவந்து தனது கரத்திற்றாங்கிய சந்திராயுதத்தினால் நித்தியானந்தனனுப்பிய தூதுவர்களாகிய மந்திரியையும் சேனாவீரரையும் கொல்வதற்கு முயன்று சிலரைக் கொன்றும் சிலரைக் காயப்படுத்த, அவர்களில் தப்பிப்பிழைத்தவர்கள் அரண்மனை முழுதும் அதிரும்படியாய்க் கல்லகக் கூச்சலிட்டுக்கொண்டு ஓடிப்போய்த் தமதுஅரசனாகியநித்தியானந்தனிடம் மனோற்சாகன் அரண்மனையில் நிகழ்ந்தவை யனைத்தும் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்றனர்.

இங்ஙனம் நிற்க, நித்தியானந்தனானவன் மனோற்சாகனால் விளைந்த குரூரபயங்கர கொடுமை யனைத்துங் கேள்வியுற்று, ஆற்றொணா ஆச்சர்யத்துடன் வெஞ்சினமுற்று, பற்களை நறநறவெனக் கடித்து மீசை துடிதுடிக்கக் கண்கள் சிவக்க கர்ச்சித்து பெருமூச்சு விடுத்து சேனாவீரர்களை ரணபேரிகை முழக்கி யுத்த

சன் ஆத்தராய் விளங்கும்படியாக ஆக்ஞாபித்தனன். அரசன் வார்த்தையைக் கேள்வியுற்ற சேனைவீரரும் அவ்வாறே நன்றெனச் சம்மதித்து அந்தருணமே ரத கஜ துரக பதாதிகளெனும் தமது சேனாசயின்யங்களை அணியணியாக யூகம்வகுத்து, சண்டைக்கு ஆரம்பமாகிய ரணபேரிகை முழக்கினர்.

இங்ஙனம் இவ்வித அருஞ்சமர் செய்யும் ஆர்ப்பாட்ட வேடிக்கையாயிருக்க, அரண்மனையில் மகோன்னதமான சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மஹோற்சாகன் திடுக்கிட்டு இஃதென்ன ஆச்சரியம்? நமது நகர்புரத்தில் ரணபேரிகையின் ஆரவாரம் விசேஷமாய் முழங்குகின்றனவேயென, சந்தேகமெய்தித் தனது அருகிலிருக்கும் காலசித்தனைப் பார்த்து எனது அன்புக்கிசைந்த மந்திரி! அஃதென்ன பேரிகைமுழக்கமென்று வினவுதலும், காலசித்தன் சற்று யோசித்து, இதுவும் நமக்கு ஓர் நற்காலத்திற்கேயன்றி அநுகூலந்தான். அஃதென்னவெனின் இந்த மஹோற்சாகன் நம்மீது மிகவும் விஸ்வாசமாயிருக்கிறான். நாம் இத்தருணம் மித்திரபேதமாய் இவனைத் தன் மைத்துனனாகிய நித்தியானந்தனிடம் பகைமூட்டிவிடுவோமாகில் விபரீத கதைகளினால் இருதிறத்தினர்க்கும் அருஞ்சமர் விளைந்து, நித்தியானந்தன் சேனாசயின்யங்களனைத்துந் தோற்று இளைத்தோடினால், நித்தியானந்தனைக் கொன்றுவிட்டு அவன் இராஜ்ஜிகம்புரியும் கேகயதேசத்தை நமக்கு மகுடாபிஷேகம்செய்வான். அன்றியும், மஹோற்சாகன் இரண்டாவது சகோதரியாகிய மதிவதனியையும் நாமே திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்போமெனும் பேராசையினால் மனமகிழ்ந்து மதியீனனாகிய மஹோற்சாகனுக்கு தந்திரமாய்ப் புகல்வதாயினன்.

காலசித்தன்:—அரசே! உமது மைத்துனனாகிய நித்தியானந்தன் உமது பெருமையைக் கண்ணுற்று மனந்தாளாமற் பொறாமைவகித்து, சில துஷ்டர்களுடன் ஆலோசித்து உம்மைக்கொன்று, இந்த இராஜ்ஜியத்தையும் அபகரித்துக் கொள்வதற்காக நமது நகர்புரத்திலிருக்கும் நந்தவனத்தில் வந்து கூடாரமியற்றி தனது சேனாவீரர்களை இங்ஙனம் அனுப்பி உம்மைத்தந்திரமாய் அழைத்துச்சென்று, கொலைசெய்வதற்கு முனைந்திருந்தனன். அத்தருணம், யான் அவர்களின் மனக்குறிப்பையுணர்ந்து, உமக்குத் தெரிவித்தமையால் விராதி வீர ஜெயப்பிரதாப



ராகிய நீர் என் சொற்பிரகாரம் அவர்களிற் சிலரைக்கொன்றும், சிலரைக் காயப்படுத்தினீர். தப்பித்துக்கொண்டோடிய சிலர் நமது சமர்த்தினை நித்தியானந்தனுக்குத் தெரிவித்தமையால் அவன் கொஞ்சிற்று மமதையுற்று உம்மைப் பயப்படுத்துதற்கு, இத்தகைய துர்ப்புத்தியைத் துணையாய்வகித்து, அருஞ்சமர்க்கு ஆதாரமாகிய ரணபேரிகை முழக்குவதாயினன். ஆகையால் நீர் யாதொன்றும் அஞ்சாமல் இத்தருணமே நமது ரத கஜ துரக பதாதிகளெனும் சேனாசயின்யங்களுடன் சென்று அவன்சேனைகளையெல்லாம் அடித்துத் துரத்திவிட்டு நித்தியானந்தனையும் கொன்றுவிடுவோமாகில் அவன்பரிபாலனஞ்செய்திருந்த கேகய தேசத்திற்கு யானே அரசனாகி உமது இரண்டாவது சகோதரியாகிய மதிவதனியையும் யான் விவாகஞ்செய்துகொண்டு கேகய தேசத்தைப் பரிபாலனஞ் செய்வேனாகில், சகல மாந்தரையும் உம்மைப் பூசிக்கும்படியாகச் செய்து உமது பெருமையை எங்கும் பிரகாசிக்கச் செய்வேன்.

என, புகன்றவை யனைத்துங் கவனித் துணர்ந்த மதியின்றிய மஹோற்சாகன் தனக்குக் கெடுதிவருவதையுங் கவனித் துணராமல் மமதையை மேலும் மேலும் விர்த்திசெய்துகொண்டு தன் மனதிற்கிசைந்த அன்மந்திரியாகிய நயவஞ்சக காலசித்தனைப் பார்த்துச் சொல்வதாயினன்.

மஹோற்சாகன்:—ஆ! எனது அன்பிற் கிசைந்த மந்திரியாய் விளங்கிய காலசித்தா! நீ மொழிந்தவை யனைத்தும் என் மனதிற்கு உற்சாகத்தை விளைத்து ஆனந்த மெய்தலாயது. அஃதெனெனின் பொய்யுறவினர் பற்பலருடன் சேர்ந்து பிழைப்பதிலும், நின்போன்ற மெய்யுறவினன் ஒருவனிருந்தாற் போதுமல்லவோ? ஆகையால், யான் எனது முதற் சகோதரியை அற்பகுணத்தினனாகிய நித்தியானந்தனுக்குத் திருமணஞ் செய்து வைத்தது "எனக்கே பொல்லாங்காய் முடிந்ததுபோல" அந்தத் துஷ்டன் என்னைக் கொல்வதற்குத் தன்னுடைய இரத கஜ துரக பதாதிகளுடன் நம் தேசத்திற்குவந்து இரணபேரிகை முழக்கி அஞ்சுதலின்றி அமர்பொருத அழைப்பதாயினன். ஆயினும், நமக்கு ஜெயமிருக்கும் வரையிலும் பயமில்லை. ஆகையால், இனி தாமதஞ்செய்யாமல் நமது நால்வகைச் சேனைகளையும்

யுத்தசன்னத்தராய்ப் போர்க்கோலத்துடன் வருகவென் றாக்ஞாபிப்பாய். நாம் இத்தருணமேசென்று நித்தியானந்தனைக் கொன்றுவிட்டு அவன் இராஜரீகஞ் செய்திருந்த கேகயதேசத்தை உனக்கே மகுடாபிஷேகஞ் செய்துவைத்து எனதுஇரண்டாவது சகோதரியையும் உனக்குத்திருமணஞ் செய்கின்றேன். இது உண்மையென்றறிவாய்.

என, தனது மனம்போன போக்குக்கு வழியொன் றில்லையென்னுந் தன்மையாய் மமதையினால் மதியின்றிய மனோற்சாகன் மொழிந்தவை யனைத்துங் கவனித் துணர்ந்த காலசித்தன் தனக்குரிய நற்காலம்வந்து சந்தோஷப் படுத்துவதைக் கவனித்து, மனோல்லாசமெய்தி அத்தருணமே அரண்மனையி லிருக்கும் சேனாவீரர்களிற் சிலரை யனுப்பி தனது தேசத்தில் விளங்கும் குடிபடைகளும் தமது சக்திக்கியன்ற ஆயுதபாணிகளாக யுத்த சன்னத்தராய் வருகவும், மற்றைய இராணுவங்களாகிய இரத கஜ துரக பதாதிகளும் போர்க் கோலத்துடன் வருகவென ஆக்ஞாபிப்பா யென்று சொன்னவுடனே, சேனாவீரர்களும் அவ்வாறே நன்றெனச்சம்மதித்துத் தமது நகரத்தில் வசித்துலாவும் குடிபடைகளையும் ஆயுதபாணிகளாக வருப்படி திட்டஞ்செய்து, இராணுவ வீரர்களையும் தமது இரதகஜ துரக பதாதிகளுடன் யுத்தசன்னத்தராய்வருகவென்று பறையறைவித்தலும் நகரத்திலுள்ள துஷ்டர்களும் குரூரகுணத்தைத் துணையாய்வசித்திருந்த துன்மார்க்கர்களும் மனோல்லாசமெய்தி ஆ! ஹா! நமது வேந்தன் இன்றையதினம் நம்மையெல்லாம் படைத்துணையாகவரும்படி கேட்டுக்கொண்டனரே, யென்று இறுமாப்புடன் "விளக்கொளியில் வீழ்ந்து மரணமெய்தும்விட்டிற்பூச்சிபோல" வரும்விதியைக் கருதாமல் அவரவர் கரத்திற்றாங்கிய கத்தி, கட்டாரி, ஈட்டி, பாலா, பரிசை, வளைதடி, தோமரம், பிண்டி பிச்சுவா, சூலம், வேல், வாளாயுதமென்னும் பற்பல ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, மனக்களிப்புடன் குதித்துக் குதித்துக்கொண்டு ஆ! ஹா! வென, பேரிரைச்சலிட்டு வெகு ஆர்ப்பாட்டத்துடன் அரண்மனையை நாடிவருகலாயினர்.

இங்ஙனம் இவர்களின்நிலை இவ்விதவிபரீத ஆர்ப்பாட்டவேடிக்கையாயிருக்கையில் மதியின்றிய மனோற்சாகன் தனது



நகரவாசிகளின் கூட்டத்தைக்கண்ணுற்று மனமகிழ்ந்தவனாயிருந்தும், அவர்களின் வீரப்பிரதாபபேரிரைச்சலைக்கேட்டு ஆனந்தமெய்தி இனி நாம் பகைஞரை எளிதில்வென்று கேகயதேசத்தை நமது மனதிற்கிசைந்த காலசித்தனுக்கு நாளையதினமே முடிசூட்டுவோமென, மமதையுற்றவனாய் மகிழ்ந்திருக்கையில் இராணுவவீரர்களும் தமக்குரிய இரத கஜ துரக பதாதிகளுடன் ஆயுதபாணிகளாக அரண்மனையைநாடி வருகலாயினர்.

இங்ஙனம், இவர்கள் நிலை இவ்விதஆர்ப்பாட்ட வேடிக்கையாயிருக்கையில் அரண்மனையில் நிகழ்ந்தவை யனைத்துங்கவனித்துணர்ந்த மதிவதனி தனது தமையனாகிய மனோற்சாகனைநரிக்குச்சமதையான நயவஞ்சக துர்க்குணமமைந்த காலசித்தன் துர்ப்போதனையால் விருதாவாய்க்கலகம் விளைத்துக் காலன் பதியணுகுவதற்காயிற்றேயென மனவிசாரமெய்துதலும், அருகிலிருந்த இராஜபத்தினி திடுக்கிட்டு அம்மணி நீ யாதுகாரணமாக இத்தகைய துயரப்படுவதாயினையென்க. மதிவதனி தனது சகோதரனாகிய மனோற்சாகனுடைய துர்நடத்தையனைத்தும் புகன்று, இனி தாமதித்தால் வெகுவித கலகம்விளைந்து ஆற்றொணா ஆபத்தெய்துமென, தனது மதனியாகிய இராஜபத்தினிக்குச் சொல்வதாயினள்.

மதிவதனி:—அம்மணி காலத்திற் குதகந்த கோலமாய் துர்க்குணமெல்லாம் ஒருருவாயமைந்து மனிதரூபமாய்வந்த காலசித்தனென்பவன் இந்த நகரத்தின் அரசனாகிய எனது தமயனைத் தன் கைவசப்படுத்திக்கொண்டு அவனைத்தேவனென்று பூசித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அரண்மனையிலுள்ள மந்திரி பிரதானியர் மனந்தாளாமல் மன்னனுக்கு மதியுரைத்தனர். இவர்கள் வார்த்தையைக் கேள்வியுற்ற வேந்தன் வெஞ்சினமுற்று மதிபுகன்ற மந்திரி பிரதானியரையும் நகரில் வசிக்கலாகாதென் துரத்திவிட்டனன். அத்தருணம் நமது குலகுருவானவர் அரசனுக்கு அநேகவித நன்மதிபுகன்று, இனிமேலித்தகைய அற்பருடன் நட்பெய்திடில் ஆற்றொணா துயரெய்தி ஆவிக்கபாயமெய்துவையென்று பற்பல நீதிசாஸ்திரங்களாலும் நன்மதிபுகன்றும் மனோற்சாகன் கவனித்திடாமல் "கர்த்தபத்தின் செவியிலெத்தகைய புத்திபுகட்டினும் சித்தத்தி லுணரா

தென்பதுபோல" மித்திரபேத வஞ்சகனாகிய காலசித்தன் சொற்பிரகாரம் குரூரதனை சிரச்சேதம் செய்யும்படியாகக் கொலைஞர்கட்கு ஆக்ஞாபித்தனன், அவர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, குற்றமற்ற குரூரதனைக் கயிற்றாற் பிணைத்துக் கொலைக்களத்திற் கழைத்துச்செல்கையில் முன்னம் அரசனால் துரத்தப்பட்ட மந்திரி பிரதானியர் இவ்விபரீத அநியாயத்தைக் கேள்வியுற்றுமனந்தாளாமல், திடீரென கொலைக்களத்திற் சென்று கொலைஞரை அடித்துத் துரத்திவிட்டு குரூரதனை அழைத்துக்கொண்டு எனது சகோதரியாகிய ஞானவல்லி மணாளனாகிய நித்தியானந்தமஹாராஜன் அரசுபுரியுங் கேகய தேசத்திற்சென்று இத்தேசத்தில்விளங்கும்விபரீத அநியாய அரசுரிமையின் குரூரமனைத்தும் புகன்றதால் நித்தியானந்தமஹாராஜன் சித்தம்மெலிந்து தன்மைத்துனனுக்குப்புத்திபுகட்டுவோமென்க, தனது மந்திரி பிரதானியர் சேனாவீரர்களுடன் நமது நகர் புரத்திலிருக்கும் நந்தவனத்தில்வந்து யாவரும் கூடாரத்திற்றங்கினர். அப்பால், நித்தியானந்தன் தனது மந்திரியையும் சேனாவீரரையும்அனுப்பிதனதுமைத்துனனாகியமனோற்சாகனை அழைத்துக்கொண்டு வருகுவீரென் றாக்ஞாபித்ததும், அவர்களும் அவ்வாறே நன்கெனச்சம்மதித்து, அரண்மனையில்வந்து, தமது வேந்தன் புகன்றவையனைத்தும் மொழிந்தனர். பாதகனாகிய காலசித்தன் யாதோ மித்திரபேதஞ்செய்து அரசன்மனதைக்கலைத்து; விபரீத கலகமூட்டியதைக் கண்ணுற்ற மனோற்சாகன் இருமாப்புடன் திடீரென சிம்மாசனத்தினின் றிறங்கிவந்து, தூதாகவந்தவர்களைத் தன் கையிற்றாங்கிய வாளாயுதத்தினால்வெட்டியும், குத்தியும், சிலரைக்கொன்றும், சிலரைக் காயப்படுத்தியதால்அவர்களனைவரும் தப்பியோமுன்றோமென, கூச்சலிட்டுக் கொண்டுபோய்த் தமது அரசனுக்குத் தெரிவித்ததும், அவர் கோபாக்கினிருத்திரன்போற் சினந்து இரணபேரிகை முழக்குவதாயினர். ஆகையால், இனிஎவ்விதமாய் முடியுமோ?

என, மதிவதனி மொழிந்தவையனைத்துங் கவனித்த இராஜபத்தினி மதிவதனியைப்பார்த்து அம்மணி! இவ்விபரீதத்திற்கு யாதுசெய்குதுமென மனமெலிந்து, ஆற்றொணாவிசனத்துடன் கண்ணீர்ததும்பக்கதறியழுதுக்கொண்டிருந்தனள்.



இங்ஙனம், இவ்விருவரிங்கிலே கலவரத்துட னிருக்கையில், மனோற்சாக மஹாராஜன் தனது நகரவாசிகளும் இரத, கஜ, துரக பதாதிகளும் இராணுவவீரருடன் யுத்தசன்னத்தராய்ப் பிரயாணப்படுந்தருணம், தனக்கு ஆற்றொணா மனக்களிப்பெய்தி ஆயுதசாலையிற்சென்று போர்க்கோலம்புனைந்து அம்புறாத்தூணியை முதுகிலணிந்து, தனுசைக்கரத்திலேந்தி மதோன்மத்தனாய் இறுமாப்புடன் பெருமூச்சுவிட்டு நித்தியானந்தனுக்கு வாழ்நாள்குறுகியதென தீர்மானித்து, தான் யுத்தத்திற்குச்செல்லுங் காரணத்தை இராஜபத்தினியிடம் புகன்று உத்தரவுபெற்றுக்கொண்டு செல்வோமெனமதித்து, தனது மனதிற்கிசைந்த காலசித்தனையும் அழைத்துக்கொண்டு மாளிகைக்குச் சென்றனன்.

இங்ஙனம், மனோற்சாகன்னினைவு கனவிற்காணும் காட்சியைப் போலிருக்குந்தருணம், மாளிகையில் இராஜபத்தினியும் மதிவதனியும் ஆற்றொணா விசனசாகரத்துடன் ஒருவர்முகத்தை யொருவர்பார்த்துக்கொண்டு கதறியழுதுக்கொண்டிருப்பதைப்பார்த்தவுடனே மனோற்சாகன் ஆச்சரியமடைந்து தன்பத்தினியைநோக்கி பெண்ணே! யான் பகைஞரை வெல்லும்பொருட்டு சுபகாரியமாய்ச் செல்வதற்காக மனக்களிப்புடன் நின்பாற் சொல்லுதற்காக வருகையில் நீ ஏன் இத்தகைய அவலக்ஷணமாயழுதுக்கொண்டிருக்கிறாயென வினவுதலும், இராஜபத்தினி மணாளனைப்பார்த்து பிராணநாதா! நீர் அற்பருடன் நட்பெய்தி அநியாயமாய் அரசுரிமை இழப்பதாயிற்றேயென, மனவிசாரத்துடன் துயரப்படுவதாயினேனென்று மொழிதலும், மனோற்சாகன் கோபாவேசத்துடன் சொல்வதாயினன்.

மனோற்சாகன்:— பெண்ணே! நீ என்னுடைய சமர்த்தினைக் கவனித்திலாய்போலும் இத்தகைய அற்பவார்த்தை பாஷித்தனை, அன்றியும், அந்த அற்பனாகிய நித்தியானந்தனுக்கு வாழ்நாள் குறுகியதால் என்மீது சண்டைக்கு வருகலாயினன். ஆகையால், யான் இன்றையதினமே அமர்க்களமணுகி பகைஞனைக் கொன்றுவிட்டு அவன் இராஜரீகஞ்செய்திருந்த கேகயதேசத்தை "எனது அன்பிற்கிசைந்த இந்த காலசித்தனை" அரசுரிமைபுரியும்படியாக மகுடாபிஷேகஞ்செய்து எனது சகோதரியாகிய இந்த மதிவதனியையும் இவருக்குத் திருமணம் செய்துவைத்து மனமகிழ்ந்திருப்பேன். இதுதான் என் மனதிற்கிசைந்தவையென்க.

அருகிலிருந்த மதிவதனிகேட்டு திடுக்கிட்டு ஆச்சரியத்துடன்
சொல்வதாயினள்.

மதிவதனி:—அண்ணா! நீர் புகல்வதைக் கவனிப்போர் கலகப்பத்
தடையுளரோ? அஃதேதென்னின் மாநிலத்திற்பிறந்த மனிதர்
கட்கு மதியே பிரதானமாகையால், மதியில்லான் கதி அதிக
ஆபத்தாய் விளையுமென்பதை கவனித்துணர்கிலரோ? அன்றி
யும், துவாபரயுகத்திற் ஜகுனியின்கட்டளை வகித்த துரியோதன
னுக் கெத்தகைய தின்பமும் அபரமும் வாய்ந்து ஆற்றொணா
சஞ்சலத்துடன் அவனியோரிகழ பெரும்பழியேற்றுபந்துஜன
மித்திரருடன் அமர்க்களத்திற் பகைஞரிடஞ்சிக்கி ஆவியிழந்து
அரசுரிமையை இழந்தனனன்றோ? அவ்விதமே இந்தவஞ்சகமனத்
தினனாகிய காலசித்தனால் உமக்கு அநேக விதவிதமாகிய
ஆபத்தெய்தும்.

மனோற்சாகன்:—([illegible]) அம்மணி! நீ புகன்றவை கவனிப்போர்
ஆச்சரியமெய்துந் தன்மையன்றோ? அஃதேதென்னில் ஜகுனியின்
கட்டினால் துரியோதனன் தனது பந்துஜனமித்திரருடன் பகை
ஞரால் மரணமெய்தியதற்குக் காரணம் யாதோ? யான் கவனித்
துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

மதிவதனி:—அண்ணா! நீர் வினவியசரிதையை விபரமாய்ச் சொல்
கின்றேன் கவனமாய்க் கேண்மின்! துவாபரயுகத்தில்அஸ்தினாபுரி
யில் அரசுரிமைபுரிந்து அவனியோர் புகலருங் கீர்த்திவாய்ந்த
சந்திரவம்ஸத்தினராகிய திருதராஷ்டிரன், பாண்டுராஜன், விதுர
னென்னும் மூவரில் திருதராஷ்டிரனுக்கு நூறுபிள்ளைகளும்
பாண்டுராஜனுக்கு ஐந்துபுத்திரர்களும் பிறந்துவளர்ந்து வரு
கையில் பாண்டுராஜன் தனது வாழ்நாள்குறுகி மரணமெய்தி
னன். அப்பால், பாண்டுபுத்திரராகிய தருமன், வீமன், அர்ஜு
னன், நகுலன், சகாதேவனென்னும் ஐவரும் தமது பெரியதந்
தையின் மைந்தராகிய நூற்றுவருடன் நூற்றைவர்களாய் மன
மகிழ்ந்து இராஜவம்ஸத்திற்குரிய ஆனையேற்றம் குதிரையேற்
றம் அஸ்திரப்பயிற்சி முதலாகிய பற்பல சிலம்பவித்தைகளும்
கற்றுணர்ந்து வருகையில் இவர்களின் கால்வித்தியாசத்திற்
கிணங்கவஞ்சகமெல்லாம்ஒருருவாய்த் திரண்டுருண்டமேனிதரூப
மாய்ப் பிறந்து மாயஜால தந்திரத்திற்கிசைந்த துர்க்குணத்தின



னாகிய ஜகுனியானவன் மெல்லனவந்து திருதராஷ்டிரன் மைந்
தர்களாகிய நூற்றுவருடன் நட்பெய்தி பாண்டுபுத்திரராகிய
அதிவீரபராக்கிரமசற்குண தர்மசிந்தைவாய்ந்த தருமர் வீமார்ஜு
ஜுன நகுல சகாதேவனென்னும்பஞ்சவருக்கும், காமம், குரோ
தம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், இடும்பை, வேட்
கையென்னும் அஷ்டவித துர்க்குணமும் இஷ்டபந்தவம்
போற்பாவித்து சந்ததமும் மமதையுற்ற மதோன்மத்தராய்த்
தொல்லுலகோர் பழித்தற்கேற்ப, குரூரகுணம்வாய்ந்த, துரி
யோதனனு நிகட்டும் மித்திரபேதமாய்க்கலகம் விளைத்து பகை
மூட்டி இராஜாங்கத்தைக் கலைத்து தன்னைப்போன்ற துர்க்கு
ணத்தினராகிய கர்னன், துச்சாதனன், முதலானவர்களுடன்
துரியோதனனைத் தனிமையாய் அழைத்துச்சென்று எமதுஅன்
பிற்கிசைந்த இராஜபுத்திரா! நீர் இராஜாதிபதியினுடைய மைந்
தனாயிருக்கும் திக்கற்றவர்களாகிய பஞ்சவரை உமக்குச் சமா
னமாய்மதித்திருப்பது நன்கல்ல. அன்றியும், அவர்களை இத்
தருணமே கொன்றுவிடுவது உத்தமமென்றிசைப்ப துரியோத
னன் ஜகுனியின் வார்த்தையைகுருவாக்யமென மதித்து பஞ்ச
வரில் புஜபலபராக்கிரமனாகிய வீமனைக்கொன்றுவிடின் மற்ற
நால்வரையும் எசகப்போற்கொன்றுவிடலாமென மதித்து, தடா
கத்தில் வசிகாட்டியும் விஷத்தைக் குடிப்பித்தும் சர்ப்பங்களாற்
கடிப்பித்தும்பற்பலகுரூரகொடுமைகளைத்தும்புரிந்தும், வீம
னுக்கு மரணமெய்தா திருந்ததையால், வஞ்சகர் துராலோச
னையால் ஐவரையும் அரக்குமாளிகையில் வீற்றிருக்கச்செய்து
நெருப்பிட்டுக் கொளுத்துதலும், பகவான் கிருபையால் பஞ்ச
வர்கள், ஆவிக்கபாயமின்றி பூமியின் சுரங்கத்தினின்றிரங்கி
வெளியில் புறப்பட்டு பழையபடி நகரமணுகவும், வீஷ்மர் திரு
தராஷ்டிரன், விதுரன், கிருபர், துரோணர், முதலாகிய பெரி
யோர்கள் இச்சிறுவர்களுடையமனக்குறிப்பையுணர்ந்து, இனி
இவர்கள் ஒற்றுமையாயிருந்தால் காலன்பதி யணுகுவதற்கு
ஆக்ஷேபணையுளதோ? யென, மதித்துக் கலவரமாயிருக்கையில்,
ஒருநாள் திருதராஷ்டிரன் உத்தரவின்படியே, பாண்டுபுத்தி
ரராகிய தருமர் வீமார்ஜுன நகுலசகாதேவனென்னும், பஞ்ச
வரையும் இந்திரபிரஸ்தத்தில் இராஜரீகஞ்செய்துகொண்டிரு
க்கும்படியாய் ஆக்ஞாபித்தனுப்புதலும், மித்திரபேதாயவஞ்
சகனாகிய ஜகுனியின் துராலோசனையால் துரியோதனன் ஓர்

சபாமண்டபங்கட்டுவித்துப் பஞ்சவரை விருந்துண்கவருகவென, தந்திரமாய் வரவழைத்தனர். அத்தருணம், வஞ்சகனாகிய சகுனியானவன் யோசித்து, துரியோதனா! யான் இந்தத் தருமனுடன் சூதாடி அவர்கள் நாட்டைக் கெலித்துக்கொண்டு பாண்டு புத்திரர்களாகிய பஞ்சவரையும் அஞ்சித் தாருமுப்படியாக காட்டுக்குத் துரத்திவிடுவேனென்க, துரியோதனனும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, தனது பிரியத்துக்குரியனாகிய விதுரனையனுப்பித் தந்திரமாய் அவரையும் அரண்மனையில் வரவழைத்து, அருந்துண்க செல்லுதற்குமுன் தருமனும் சகுனியும், மனோல்லாசமாய்ச் சொக்கட்டான்விளையாடினால் நாம் அனைவரும் நன்றாய் மனமகிழ்வோமென, மொழிதலும், தருமர் மனமிசையின் பலிதசொற்களைப் புகன்றாங்கேளாமற் பாதகனாகிய சகுனி இதற்காக மனந்திகிலுறுதிர். மனக்களிப்புடன் ஓர் ஆட்டம் ஆடுவோமென, "காலவித்தியாசத்திற்கிணங்க கிரகசாரபலனும் சரியாய் வந்தொத்துக்கொண்டதுபோல" இருதிறத்தினரும் சம்மதித்தனர், அப்பால், இருவரும் சூதாடுகையில் வஞ்சகனாகிய சகுனியானவன் தனது மாயையால் சமர்த்தினால் தருமனைத் தோற்கச்செய்து பஞ்சவர்கள் தேசத்தைக் கெலித்துக்கொண்டு பதின்மூன்று வருடம் வனசஞ்சாரியாயிருந்து வருவீராகில் உமது தேசத்தைத் தருகிறோமென்றிசைப்ப, ஐவரும் மனம் பதைத்து, விருந்துண்க வந்து விபரீத கலகத்தினால் அரசுரிமையை இழந்து ஆரணியமனுகளாக்குதேயென, விசனமெய்தி வனத்திற்சென்று பதின்மூன்றாண்டிருந்து நகரில்வந்து தமது அரசுரிமையைக் கேட்டனர். சகுனியின் கலகத்தால் துரியோதனன் சம்மதியாமலிருக்க, இருதிறத்தினருக்கும் அருஞ்சமர்விளைந்து தருமர் வீமார்ச்சுன நகுலசகாதேவர் அஸ்திரத்தால் துரியோதனாதிகளுடன் சகுனியும் மரணமெய்தி அந்தகன்பதியணுகினர், அப்பால், தருமராஜன் "வேதவேதிய ராசீர்வதித்து வாழ்த்தவும்" மணிமகுடஞ் சிரசிற்சூடி செங்கோலைக் கரத்திலேந்தி அஸ்தினபுரியில் அரசுரிமை புரிவதாயினன்.

ஆகையால், அண்ணா! அற்பர்வேசத்தால் ஆலிங்கப்பாயமெய்துமென கற்றுணர்ந்த கவிஞர்களாற் புகலும் நீதிசாஸ்திரங்களினும் முறையிடுகின்றனவே. அன்றியும், புவியிற் பிறந்தவர்கள் பெரியோரைத் துணைக்கொள்ளல்வேண்டும். அஃதன்றி, உமது



சமஸ்தானத்தின் மந்திரி பிரதானியரையும், குலகுருவையும் துரத்திவிட்டு விஸ்வாசமற்ற குரூரகுணமமைந்த ருத்திராசுகூபூரனைப் போன்ற வஞ்சகனாகிய காலசித்தனைத் துணைப்பற்றித் தீராத் துயரனுபவிப்பது நன்கல்ல, வென, அநேகவித நீதிசாஸ்திரங்களைப்புகன்றும் "அற்பமதிவாய்ந்த கர்த்தபத்தின்செவியிலே தத்தைய மதிபுகட்டினும் சித்தத்திலுண்டாதென்னுந் தன்மையாய், மமதையினால் யாதொன்றுந்தோன்றாமல் மதோன்மத்தனாய் விளங்கும் மனோற்சாக மஹாராஜன் தனது சகோதரியாகிய மதிவதனியைப்பார்த்துச் சொல்லதாயினன்.

மனோற்சாகன்:—அம்மணி! நீ புகன்றவையனைத்தும் கவனிக்கில் சகுனியின்மீது யாதொரு பழுதுமில்லையன்றோ? அஃதேனெனின் அவன் தனது அன்பன் கீர்த்திப்பிரகாசமாய் விளங்கவேண்டுமென, அவனுற்றவனாய் பற்பலவித தந்திரத்தினால் பகைஞரை தனது அன்பன் வசத்தில் அடக்கிவிட்டால் தனக்குப் பெருமையென, மதித்தனன். ஆனால் இருதிறத்தினர்க்கும் கலகம் விளைந்து அருஞ்சமர் செய்துந்தருணம் துரியோதனனுக்கு சக்தியின்றி பகைஞரிடஞ்சிக்கித் தனது சேனையினீங்கலாயும் பலிகொடுத்து தானும் மரணமடைந்தால், சகாயத்திற்குப் பாடுபட்டுத் தன்னுயிரையும் சமர்முனையிற்றந்த சகுனியின்மீது பழிசுமத்துதல் நீதியோ? அன்றியும் உலகிற்ஜனித்த யாந்தர்களிற்கீர்த்திப்பிரகாசமாய் தேவாமிஸமாகியவெனக்குச்சமானமெவ்வுலகத்திலுமில்லையென, கவனித்துணர்கிலாய் போலும் பாஷித்தனன்.

என, மமதையினால் மதியின்றிய மனோற்சாகன் மொழிந்தவையுணர்ந்த இராஜபத்தினி கேட்டு பிராணநாதா நீர்! புகல்வது எவ்வாறெனில் சாகப்போகிறவனுக்கு சமுத்திரமும் கீரல்ல வென்றிசைப்பதுபோற் காணப்படுகின்றனவே. எத்தகைய வீராதிவீரரும் வெஞ்சமர்க்கஞ்சா விஜயபராக்ரம புஜபலசௌரியமுடையவராயிருப்பினும் அபாயமெய்திடில் ஆற்றொணாசஞ்சலத்தாற் றீராத்துயருற்று பரதவிப்பாரன்றி, நம்மைப்போற் சமர்த்தரில்லையெனப் புகல்வது தேவாசுர மிருகாதிகளாலும் சாகாவரம்பெற்ற இரணியன் தனது பகைஞனிடம் சிக்கி ஒருநாழிகையில் மரணமடைந்த சரிதையைப்போலாகுமன்றோ? வென, மொழிதலும், மனோசாற்

கன் வியப்புற்று யாதே நீ புகல்வதைக் கவனிப்போர் ஆச்சர்யமெய்துந்தன்மையன்றோ? அஃதெவ்வெனின் யாவராலும் இறவாதிருக்க வரம்பெற்றுக் கீர்த்திவாய்ந்த இரணியன் ஒருநாழிகையிலெவ்விதமாய் பகைஞனிடஞ்சிக்கி மரணமெய்தினவன். இந்த யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாயென வினவுதலும் இராஜபத்தினி சொல்வதாயினள்.

இராஜபத்தினி:—பிராணநாதா! முற்காலத்தில் இரணியனென்னும் ஓர் இராக்ஷதன் கானிற்சென்று கர்த்தனைத்தொழுது அநேக நாள்வரையிலும் அன்னந்தண்ணீரருந்தாமல் அருந்தபம்புரியுந் தருணம் பிரம்மனருள்சுரந்து இரணியன்முன் ப்ரப்தமாகி அன்பா! நின்தவத்திற்கு மெச்சினோம். ஆகையால் நின்மனதிற்கிசைந்த வரத்தைக் கேட்பாயாகில் தருகிறோமென்க. அசுரன் மனம்பூரித்துக் கர்த்தவ்யமேயான் தேவ அசுர நரர்களாலுமிறவாவரந்தரவேண்டுமென்க நான்முகன் அவ்வாறேயாகுகவென வரப்ரசாதமளித்து மறைந்தனர். அப்பால், இரணியன்றான் இறவாவரம்பெற்றபெருமையினால் மமதையுற்றுமதோன்மத்தனாய் கர்வித்து எண்டிசையும் நடுங்கும்படியாய் மிகவும் குரூரபயங்கர கொடுமைகளைத்தும்புரிந்து தன்னைப்போற் சமர்த்தராகிய இராக்ஷதர்களைத் தனக்குப் படைத்துணையாய் வகித்து தேவலோக மெங்கணுஞ் சென்று அருஞ்சமர்விளைத்து யாவரையும் ஜெயித்துத் தனக்கெவரும் நிகரில்லையென்க கீர்த்திப்ரகாசமாய் ஜெயம்பெற்றிருக்கையில் தன்மனதிற்றானே களிப்புற்று நமக்கு தேவாதிதேவரும் இணையில்லையென்க மமதையுற்று யாவரும் தன்னையே கர்த்தவ்யமாய்ப் பூசித்திருக்கும்படியாக ஆக்ஞாபித்தனன். அன்றியும், உலகிற்ஜனித்த மாந்தர்களுய்யும்பொருட்டு கருணாநந்தமாய் விளங்கும் கர்த்தவ்யத்தின் திருநாமாக்ஷரமாகிய ஹரிநமோத்துசிங்கமென்னும் வாக்கியத்தை எவர்கள்வாயிலும் உச்சரியாவிதம் ஆக்ஞாபித்து தனது நாமாக்ஷரமாகிய இரணியநமோவெனப் புகல்விரென்க திட்டஞ்செய்தனன்.

அன்றியும் யாகாதிகளும் தனக்குரியவையென்னும் அவிர்ப்பாகங்களையும் தானேயேற்றுக்கொண்டு மதோன்மத்தனாய்த் திரிந்து தன்னைத்தானேபுகழ்ந்துக்கொண்டிருக்கையில் முப்பத்துமுக்



கோடிதேவர்களும் ப்ரம்மரிஷிகளும் கருடகாந்தர்வ சித்த வித்தியாதரர்களும் மனமெலிந்து தமதுவர்சஸ்தானத்தையும் இழந்து அபாரகவிக்கலாயினரேயன்றி, விசனமுற்று இனிதாமதித்தாலபாயமெய்துமென மதித்து யாவரும் க்ஷீராப்தியணுகி பன்னகசயனனைப் பணிந்து இரணியனால் நிகழும் விபரீதமாகிய குரூரபயங்கரமனைத்தும் புகன்று, சுவாமின்! இக்கதி எம்மைக்காப்பாற்றாவிடில் ஜீவனிலைப்பதரிதென, பற்பலவிதமாய் பிரார்த்திக்கலும், நாரணன் கிருபாநோக்கமெய்தி அன்பர்களனைவரையும் அஞ்சேலென அபயாஸ்தந்தந்து சக்கரத்தாழ்வாரை இரணியனுக்கு மைந்தனாயவதரிப்பாயென்றாக்ஞாபித்தலும் அம்மஹான் அவ்வாறேயாகுகவெனச் சம்மதித்து அசுரன்பத்தினியின் வயற்றிற் பிறந்தனன். அத்தருணம் தாதிகள் அரண்மனையில் வந்து இரணியனுக்குச் சொன்னவுடனே குரூரகுணத்தினால் மர்மமுணராத இரணியன் மைந்தனுக்குப் பிரகலாதனென்ன நாமகரணம் புனைந்து மிகவும் மேன்மையாக வளர்த்து ஐந்துவயதில் வித்தியாசாலையில் விடுத்து, ஆசிரியனால் இரணியநமோவென, உச்சரிப்பையென்னலும் பிரகலாதாழ்வான் நகைத்து, இஃதென்னவிபரீதம்? ஆதிமத்யாந்த ரகிதமாய் எங்கும் தாணுகவிளங்கும் எம்பெருமான் நாமாக்ஷரமாகிய ஹரிநமோத்து சிந்தமென மொழிவதைவிடுத்து, அஞ்ஞானமுற்ற அசுரஸ்துதிசெய்வதற்கு உபதேசிக்கின்றனரேயென பரிகாசித்தனன், ஆசிரியன் வியப்புற்று இரணியன்பாற்புகல, அசுரன்சினந்து பற்பலவிதமாய் புத்திரனைபேதித்து வாதித்து இம்சித்தும் பயன்படாமையால் ஹரியெங்கனமிருக்கின்றான் தெரிவிப்பாயென்க, எங்கும் நிறைந்து இத்தூணிலுமிருப்பரென்க, தன்கரத்திற் றாங்கிய கட்கத்தினால் கற்றூணை வெட்டினன். அத்தருணமே நாராயணன் மனிதரூபமும் சிங்கவதனமும் வாய்ந்து நரசிங்கவதாரமாய்வந்து இரணியனை இருதுண்டாய்க் கிழித்து உதிரபானஞ்செய்து அன்பரை ஆதரித்தனர்.

ஆகையால், பிராணநாதா! தன்னை யாவனொருவன் புகழ்ந்து மகிமைப்படுகின்றனனோ? அவன் எவ்விதமும் துயருறுவன. அன்றியும், அற்பர்களின் இச்சகவார்த்தையால் அநேகர் ஆற்றொணா ஆபத்தெய்தினர். ஈதனைத்தும் நன்குணர்ந்து மாநிலத்தில் வசிப்பவரே மனிதர்களிற் சிறந்தவரென்றுணர்விரென, இராஜபத்தினி பற்பலவிதமாய் நன்மதிபுகன்றும் மனோற்சாகன் மனதிற்குக் கிஞ்சித்தேனும் சரிப்படாமையால் தனது அருகிலிருந்த காலசித்

தனுடனே அரண்மனையிற் சென்று அங்ஙனம் தனக்குப் படைத்துணையாய் வந்திருக்கும் நகரவாசிகளையும், இரத, கஜ, துரக, பதாதிகளையும் இராணுவவீரர்களையும்அழைத்துக்கொண்டு யுத்தசன்னத்தராய் யாவரும் அமர்க்களத்தில் வந்தனர்.

இங்ஙனம் நிற்க, வஞ்சகனாகிய காலசித்தன் பகைஞர்படையைக் கண்ணுற்று, அடா! இஃதென்னவிபரீதம், நாம் இந்த அருஞ்சமரில் அகப்பட்டுக்கொண்டால் ஆபத்துற்று, ஆவியிழந்து, அந்தகனுலகையனுகில் நமது ஆசைக்கிசைந்த மதிவதனியை எவ்விதம் விவாகஞ் செய்துக்கொள்வதென மனவியாகூலமடைந்து, சற்றுநேரம்யோசித்து இனி நாம் இங்ஙனந் தாமதியாமல், மறுநகர்ப் பிரயாணியாய் ஓடிப்போவோமாகில் இவ்விருதிறத்தினர்க்கும் சண்டைவிளைந்து, மனோற்சாகனால் நித்தியானந்தன் மரணமெய்தவனாகில் அவன் சேனைசயினியங்களுடனே கேகயதேசமும் இவன்கைவசமாகும். அத்தருணம் நாம்வந்து, எவ்விதமாயினும் தந்திரவார்த்தையால், மனோற்சாகனை ஏமாற்றி மதிவதனியையும் மணம்புரிந்துக்கொண்டு கேகயதேசத்தையும் பரிபாலனஞ்செய்துக்கொண்டிருப்போமெனமதித்து, ஓடுவதற்காகயோசித்திருக்கையில், இவன்மனக்குறிப்பை யுணர்ந்த சேனாதிபதியாகிய பிரதாபனென்பவன் ஆலோசித்து, ஐயா! காலசித்தனென்னும் மந்திரி! அமர்க்களத்தில் வந்து சேனைகளை அணியணியாய் யூகம்வகுத்து சண்டைக்கு ஆரம்பஞ்செய்யாமல், மதிமயக்கமுற்றவர்போல மனக்திகைத்திருப்பதேனென வினவுதலும், வஞ்சகனாகிய காலசித்தன் பிரதாபனைப்பார்த்து தந்திரமாய்ச் சொல்வதாயினன்.

காலசித்தன்:—பிரதாபா! நீ சேனாதிபதியாயிருப்பதால் உன்தொழிற்கிசைந்தவிதமாய் இரத கஜ துரக பதாதிகளென்னும் நால்வகைச்சேனைகளையும் நின்மனதிற்கிசைந்தவிதம் பத்மயூகம், கருடயூகமாய், அணியணியாய்யூகம்வகுத்து, இரணபேரிகைமுழக்கச்செய்வாய், யான் நமதுசேனைகளைச் சிதறியோடாமற்காவற்காத்துக்கொண்டிருக்கிறேன்.

என, புகன்றதையுணர்ந்த சேனாதிபதியாகிய பிரதாபனும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, இரத கஜ துரக பதாதிகளையும், படைத்துணையாக வந்த நகரவாசிகளையும் அணியணியாய் யூகம்



வகுத்து, சண்டைக்கொடிநாட்டித் தானும் யுத்தசன்னத்தனாய் நிற்கையில் மனோற்சாகன் தனது இராணுவத்தைக்கண்டு மனமகிழ்ந்து, நமது பெருமையைக் கவனித்துணராத கேகயதேசாதிராசனாகிய நித்தியானந்தனுக்கு வாழ்நாள் குறுகியதால் நம்மிடம் அருஞ்சமர்புரிவதற்கு ஆசையாய்வந்து ஆவி இழப்பதாயினனென் மதித்து, தனது சேனைகளை யுத்தஆரம்பத்திற் கிசைந்த இரணபேரிகை முழக்கஞ்செய்விரென்க, அவர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, பேரிகை முழக்கஞ் செய்தனர்.

இங்ஙனம், நிற்க, நித்தியானந்தனும் தனது சேனாவீரர்களையெச்சரித்து, யாவரும் போர்க்கோலத்துடன் இரதாரூடராய்த் தனுசைக் கரத்திற்றாங்கி மனோல்லாசன் சேனைகளின்மீது அதிதீக்ஷண்யமான அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்கையில், இருதிறத்தினர் சேனைகளும் கோபாவேசத்துடன் தமது கரத்திற்றாங்கிய வில்லிற்கணைதொடுத்து ஒருவரையொருவர் வெல்வதற்கு ஆவலுற்றவராய் அருஞ்சமர்புரிகையில் மனோற்சாகனும் வீரியத்தை விடாமல் பகைஞர் சேனைகளின்மீது அஸ்திரங்களைவிடுத்து அதாஹதஞ்செய்தனன். அத்தருணம் நித்தியானந்தன் கடுகடுத்து அநேக விதவிதமாகிய அஸ்திரங்களை மனோற்சாகன் மீதும், அவன் சேனைகளின் மீதும் விடுத்து, சிலரைக்கொன்றும் சிலரைக் காயப்படுத்தியதையுங் கண்ணுற்ற காலசித்தன் மனமிரண்டு, இனி நாம் தாமதித்தால் அபாயமெய்துமென, கலவரத்துடன் பயந்து, மனஏக்கத்துடன் அமர்க்களத்தை விடுத்து ஆரண்யமார்க்கமாய் ஓடுவதாயினன்.

இங்ஙனம், கலகத்திற்குக் காரணமாகிய காலசித்தன் தன்னுயிரிருந்தாற் போதுமென தப்பித்துக்கொண் டோடுவதைக் கண்ணுற்ற சேனைசயினியங்களும் மனமிரண்டு, நமது அரசனுக்கிசைந்த அன்பானமந்திரியானவர் அருஞ்சமரில் நிலைக்கமுடியாமல் ஓடுகின்றார். இனி நாமென்னத்திற்கு வீணாய் உயிரைப்பறிகொடுப்பதென பயந்து நாற்புறமுஞ் சிதறியோடுகையில், சேனாதிபதியாகிய பிரதாபன் கண்ணுற்று தமது சேனைகளை ஓடவொட்டாமற் றடுத்து தைரியமாய் யுத்தம்புரிவீரெனப் புகன்று, காலசித்தனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டுவந்து அமர்க்களத்தில் நிறுத்தி மிகிபுகல்வதாயினன்.

பிரதாபன்:—ஐயா! இராஜவிஸ்வாசியே! நீர் சமயத்திற்குத் தகுந்த விதமாய் மனோற்சாகன் மனதைக் கலைத்து, அநியாயமாய் அரண்மனையிற் கலகஞ்செய்து மந்திரி பிரதானியரையுந் துரத்தியது மன்றி இராஜாங்க கலகமுஞ்செய்து, அருஞ்சமர் விளைத்து அரசனுக்கு ஆற்றொணா ஆபத்தெய்தும் தருணம் துணையாயிருந்து பகைஞருடன் யுத்தஞ்செய்து நின்சமர்த்தைக் காண்பித்து, அரசனைக் காப்பாற்றுவதன்றோ? ஆண்பிள்ளைத்தன்மை. அஃதன்றி, மனமிரண்டு சரீரம் நடுக்குற்று எங்களை எல்லாம் அமர்க்களத்தில் விடுத்து, உமது ஆவிக்கபாய மெய்தாமல் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவது நீதியோ? அன்றியும், உலகத்தில் யாதாமொருவனும் பிறந்தான், இருந்தான் இறந்தானென்பதல்லாமல், எக்காலினும் இருந்தானென்பதற் குரியவரோ? ஈதனைத்துங் கவனித் துணராமல், விருதாவாய்க் கலகம் விளைத்து, அருஞ்சமரில் அரசனைவிடுத்து புறமுதுகிட்டோடுவது இராஜதுரோகமன்றோ? இனியாகிலும் நின்சமர்த்திற் கியன்றவிதமாய்த் தனுசைக் கரத்திலேந்தி அஸ்திரப்பிரயோகஞ் செய்து பகைஞரைஜெயித்து, வெற்றிபெறுவதற்கு முயலுவாய், அன்று, அமர்பொருத சமர்த்திலேயேல், சேனைகளைச்சிதறவிடாமற் காவலாயிருப்பாயாகில் யாங்கள்முனைந்து, பகைஞருடன் அமர்பொருதி நமது இராஜாங்கத்திற்குப்பழுதுருவண்ணம் ஜெயம்பெறுகிறோம்.

என, பிரதாபனாகிய சேனாதிபதி தன்னாலியன்ற வரையினும் சமாதானவார்த்தையால் காலசித்தன் மனதிற் கியன்ற விதமாய்ப் புகன்றும் பிரயோசனமின்றி, "மிரண்டவன் கண்ணுக்குஇருண்டதெல்லாம் பூதம்போற்" கலவரத்துடன் மனந்திகைத்து, திரேக நடுக்கமெய்தியவனாய்ச் சொல்வதாயினன்.

காலசித்தன்:—ஐயா! சேனாதிபதி! நீவிர் நவில்வது அநியாயத்தன்மையன்றோ? அஃதேனெனின் யாதாமொருவரும் உயிரிருந்தாற் சுகானுபவங்களை யனுபவிப்பரன்றி, "மதியீனத்தால் மரணமெய்துவோம் மனமே தைரியமாயிரு வென்பதுபோல்" பேசுகின்றீரே. இருதிறத்தாரில் யாவர் ஜெயம்பெற்றாலும் நமக்கென்ன? நாமேன் விருதாவாய் நல்லுயிரிழப்பது. அருஞ்சமரிற் செல்வோர் ஆபத்தெய்துவரென அறிஞர்களாற் புகல்வதை



யேனுங் கவனித் துணராமல் "அக்கினியாற்பற்றியெரியும் மூங்கிலானது தனது அருகிலிருக்கும் விருக்ஷங்களையுங் கொளுத்தி பஸ்மீகாரஞ் செய்வதற்குத் துணிவதுபோல" நன்மதியின்றிய உன்னுடன் என்னையும் இரணக்களத்தில் வந்து மரணமெய்த வருவாயென் றழைப்பது நன்கல்ல, யான் எக்காலத்திலேனும் ஓடிப்போய்ப் பிழைத்துக்கொள்ளுகிறேன், என்னை விட்டுவிடுவாய், மதியின்றிய பேய்மனத்தினனே.

என, தனது கையைத்திமிறிக்கொண்டு ஆரணியமார்க்கமாய் ஓடும்போது பிரதாபனுக்குக் கோபம் அதிகரித்து அடடா! இராஜதுரோகி! உன்னை யான் இலேசாக விடுவதில்லை எவ்விதமாயினும் உன்னைப் பிடித்துக்கொண்டுவந்து யுத்தகளத்திற் காவுகொடுக்கிறேன் பாரடாவென்று துரத்திக்கொண்டு ஓடுவதாயினன்.

இங்ஙனம், காலசித்தனும், பிரதாபனும் பந்தயம் வைத்து ஓடுபவர்போல அமர்க்களத்தை விடுத்து ஆரணியமார்க்கமாய் ஓடுந்தருணம் சேனைகளும் நிர்வகிக்கமுடியாமல் நாற்புறமுஞ்சிதறியோடினர். இவையனைத்துங் கண்ணுற்ற மனோற்சாகன் மனமிரண்டு, "இராமபாணத்தால்இராவணன் சேனாபதிகளிறந்து மனவிசாரமெய்தியதுபோல" கலவரத்துடன் தனது வீரமெல்லாம் ஒழிந்து, உயிரிருந்தாற் போதுமென, கால்நடையாக கானகமார்க்கமாய் ஓடுவதாயினன். அத்தருணம், நித்தியானந்தனுடைய சேனைகளெல்லாம் மனோல்லாசனும் அவனுடையசேனைகளும்அமர்பொருத சக்தியின்றி ஆரணியமார்க்கமாய் ஓடிவிட்டதைக் கண்ணுற்று ஜெயபேரிகை முழக்கிக்கொண்டு இரத்தினபுரியின் வீதிகள்தோறும் சென்று பொன்பொருளனைத்தும் அபகரிப்பதாற் கிஞ்சித்தலையுணர்ந்த நகரவாசிகளனைவரும் கோபாவேசத்துடன் தம்தம் சக்திக் கியன்றவிதம் பாலா, பரிசை, பிச்சுவா, வளைதடி, தோமரம், கத்தி, கட்டாரி, ஈட்டி, எறியம்பு, உலக்கைகளாலும் நித்தியானந்தன் சேனைகளையெல்லாம் அடித்துத் துவம்சம்செய்துவிட்டு யாவரும் தமது மனைவி மைந்தருடன் மறுதேசத்திற்கு ஓடிப்போயினர்.

அப்பால், நித்தியானந்தன் சேனைகளில் அநேகர் காயமுற்றும், அநேகர் மடிந்தும், உடலிழந்தும், காலிழந்தும், நானாவித அங்க

ரீதமாய்த் துடிதுடித்து, மண்மீதில்விழுந்து பரதவிப்பதைக் கண்ட
நித்தியானந்தன் மனந்தாளாமல் தனது சேனைகளால்இரத்தினபுரியை
நெருப்பிட்டுக்கொளுத்தும்படியாக ஆக்ஞாபித்தனன். சேனாவீரர்க
ளும் அவ்வாறே நன்றெனச் சம்மதித்து வீடுகள்தோறும் நெருப்
பிட்டுக் கொளுத்திஅரசனோடனைவரும் கேகயதேசம்சென்றனர்.
இவ்வித அநியாய ஆபத்தைக் கேள்வியுற்ற இராஜபத்தினியும், மதி
வதனியும் மனமிரண்டு இனிநாம் இங்கிருந்தால் ஜீவிக்கபாயமெய்து
மென,மனவிசாரமெய்தி "யாசகரைப்போல" அழுக்கு வஸ்திரத்தைத்
தேகத்திற்போர்த்துக்கொண்டு கானகமார்க்கமாய்ச்செல்வதாயினர்.

இங்ஙனம்,இவ்வித விபரீத பயங்கரமாகிய ஆச்சரிய காக்ஷியா
யிருக்க, பகைஞர் கரத்தில் நகரை இழந்து, உயிரிருந்தாற்
போதுமென அருஞ்சமரில் புறமுதுகிட்டோடின மனோற்சாக
மஹாராஜன் தனது காலவித்தியாசத்தாலுற்ற அநியாய ஆபத்தை
நினைந்து மனமெலிந்து, மனவிசாரத்துடன் பகைஞர் கண்ணுறாவித
மாய் காவிவஸ்திரமணிந்துசந்நியாசிவேஷத்துடன் தனது தேசத்திற்
சென்று தன் பத்தினியையும் சகோதரியையும் அழைத்துக்கொண்டு
மறுநகரிலேனுஞ்சென்று ஜீவிப்போமென மனதிலுன்னி அரண்ம
னையை நாடிவருகையில்இராஜவீதிமுழுதும்தீப்பற்றி"இலங்காதகன
மாகியதுபோல" அக்கினிபற்றியெரிவதைக்கண்ணுற்று மனமெலிந்து
திகிலுற்று, ஆ! விதிவசமே நமக்கு இத்தகைய ஆபத்தும் வாய்ந்து
அநியாயப்படுத்துமோ?

என், ஆற்றொணா விசனத்துடன் கண்ணீர் ததும்பக் கதறி
யழுதுகொண்டு இரத்தினபுரிமுழுமையும்சுற்றிப்பார்த்துக்
கொண்டுவருகையில் நகரமெங்கணுமுள்ள மாடமாளிகை கூடகோபு
ரங்களும்,திகுதிகுவென்றெரிந்து பஸ்மீகரமாவதையும்பார்த்து மனந்
தாளாமல் தனது பத்தினியும் சகோதரியும் அக்கினியிற்சிக்கி மாண்
மடைந்தனரோ? வென, சந்தேகித்தவனாய்ச்சற்றுநேரம் யோசித்து
அடடா! நாம் அநியாயத் தன்மையால் அற்பர்கள்வார்த்தைக்கிணங்கி
தேவாலயங்களை இடித்துப் பாழாகச்செய்ய ஆக்ஞாபித்தமையாலன்
றோ? நமது வாசஸ்தானமும் அக்கினிப்பற்றி எரிந்து மனைவியையும்
சகோதரியையும்உயிருடனிழந்துவிசனமெய்தலாயினோம்.ஆ!விதிவச
மேயென்று தயருற்று,மனோகர்வமெல்லாம் பருதியைக்கண்ட பனி
போற் பறந்து கலவரத்துடன் இனி நாம் இங்ஙனமிருப்போமாகில்



பகைஞர் நம்மைக் கண்ணுற்றால் இலேசாக விடுவரோ? அன்றியும்,
நமதுகுலகுருவையும் மனக்கிடுக்கிடச்செய்தது வீணாய்ப்போகுமோ?
மாநிலத்திற் ஜனித்த மனிதர்கள் மாதா,பிதா,குரு,தெய்வமென்னும்
இந்நால்வரையும், பக்தியாய் பூசித்திடுவராகில் இகத்திற் கீர்த்தியும்
பரத்தில் முக்தியுமெய்துவரென, வேதாகம சாஸ்திர புராணங்களி
லும் முறையிடுகின்றனவே.அதனைத்தும் கவனித் துணராத மனோகர்
வத்தாலன்றோ? மமதையில் மனதைச்செலுத்தி துஷ்டசகவாசம்
பிராணசங்கடமென்பதையுங் கவனித் துணராமல் அநியாய அரசாண்
மைபுரிந்துபகைவரால் அவனிமுழுதும் பற்றியெரிந்து ஜீவிக்கபாய
மெய்தலாயிற்று, அன்றியும், நாம் இங்ஙனமே உலாவித் திரிவோமா
கில் நமது பகைஞர் நம்மைத் தேடிப்பிடித்துச்சிரச்சேதஞ்செய்குவர்.
ஆகையால், நாம் யாவர் கண்ணுக்கும் புலப்படாமல் ஆரண்யமார்க்க
மாய்ச் சென்று காய் கனிகளைப் புசித்துக்கொண்டு காலங்கழிப்போ
மாகில் தெய்வாதீனமாய் நமக்கு நற்காலம் வருமாகில் எந்நகரிலே
னுஞ் சென்று ஜீவித்திருப்போமென மனதிலுன்னி கானகமார்க்க
மாய்ச் செல்வதாயினன்.

இங்ஙனம் மனோற்சாகனிலை மாற்றொணா சஞ்சலத்திலிருக்
கையில் முன்னம் அமர்க்களத்தில் நிலைநிற்கமுடியாமல்
ஆரண்யமார்க்கமாய்ச்சென்ற காலசித்தனெனுமவன் ஓர் நந்தவனத்தில்
வந்து மனவிசாரத்துடன் தன்னைத்தானே நிந்தித்து, நம்மாலன்றோ?
மனோற்சாகனுக்கு ஆற்றொணா ஆபத்தும் சஞ்சலமுமெய்தலா
யின. அன்றியும்,நாம் நகரிற்சென்றாலும், நம்மைக் காண்போர் இராஜ
த்ரோகியென, நிந்திப்பதுமன்றி கலகத்திற்குக் காரணமான காதக
னென்றும் தூஷித்திடுவாரன்றோ? அன்றியும், சேனாதிபதியாகிய
பிரதாபனும் நம்மைப் பிடித்துக்கொண்டுபோய் அமர்க்களத்திற் காவு
கொடுக்கிறேனென்று சபதஞ் செய்திருக்கின்றனன். ஒருவேளை
அவன் நம்மை தேடிப்பிடிப்பதற்குக் கானகமார்க்கமாய் வந்தாலும்
வருவான், ஆகையால், நாம் இவ்விதமாய் இருக்கலாகாதென, சந்நி
யாசிவேஷம் பூண்டு கானகத்தைவிடுத்து, இரத்தினபுரியை நாடி
வருகையில்அந்நகர் முழுதும்அக்கினிப்பற்றி எரிவதைக்கண்ணுற்று
மனமிரண்டு திகைத்திருப்பதாயினன்.

இங்ஙனம், இவர்களிலை இவ்வித விபரீத ஆச்சரிய பயங்கர
வேடிக்கையாயிருக்கையில், கேகயதேசத்தரசனாகிய நித்தி

யானந்தன் இரத்தினபுரியைப் பழயநகரமாய் விளங்கச்செய்யவேண்டுமென மனதிலுன்னி சிற்பசாஸ்திரிகளை யழைத்து அவர்கட்கு வேண்டிய பொன் பொருள் நவரத்தினங்களுந்தந்து இந்நகரத்தை சித்ரவிசித்திரமாய்த் துலங்கும்படியாய் நிரூபிப்பீரென்க. அவர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, தமது இனத்தினருடனே இரத்தினபுரியிற்சென்று இந்திரபுரி இதுவோவென அந்நரத் தமரும் சந்தேகமெய்துந் தன்மையாய் மாடமாளிகை கூடகோபுரலங்கார சிங்காரமாய் விளங்கும் அழகிய வீடுகளும் நவரத்தின கசிதமாய்த் துலங்கும் அரண்மனைகளும், ஆஸ்தானமண்டபமும் தேவாலயமும் நிரூபித்து அரசனுக்குக் காண்பித்து தமக்குரிய வெகுமதி பெற்றுக்கொண்டு தம்திருப்பிடஞ் சென்றனர். அப்பால், நித்தியானந்தமஹாராஜன் ஓர் சுபதினத்தில் தனது இராஜசமஸ்தானத்திலிருக்கும் சேனாதிபதிகளில் மிகவும் வீரப்ரதாப விஜயகேசரியென பெருமைவாய்ந்திருக்கும்வீரசேனனென்பவனுக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து, வேதவேதிய ராசீர்வதிக்க, நவரத்தின கசிதமாய்த்துலங்கும் மணிமகுடஞ் சிரசிற்சூடி செங்கோலைக் கரத்திற்றந்து மநுநீதி வழுவின்றி குடிகளின்மீது கருணைவாய்ந்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனனென் றவனியோர் புகழ்ந்துரைப்ப இராஜரீகம்புரிகுவாயென் றுக்ஞாபித்தனன்.

அப்பால், சிலநாட்சென்றபிறகு ஞானவல்லி தனது மணாளனாகிய நித்தியானந்தனைப் பார்த்து நாதா! என் சகோதரியும் தமையனும் மதனியும் எங்ஙனஞ்சென்று, மனந்திகைத்து எவ்விதமாய்த்துயரப்படுகின்றனரோ? வென, என் மனம் மிகவும் விசனமெய்துகின்றன. ஆகையால், அவர்களை எவ்விதமாயினும் இங்ஙனம் வரவழைப்பீரென பிரார்த்தித்தனள். நித்தியானந்தனும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, அரண்மனைத் தலையாரிகளை வரவழைத்து மனோநீசாகமஹாராஜன் யுத்தஞ்செய்வதற்கு மனமிரண்டு அமர்க்களத்தைவிடுத்து தனதுசகோதரியுடனே பத்தினியையும் அழைத்துக்கொண்டு எங்ஙனமோ ஓடிப்போய்விட்டனன். ஆகையால், நீங்கள் இத்தருணமே சென்று அவர்கள் எங்ஙனமிருந்தபோதிலும் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வருகுவீரென் றனுப்பினன். தலையாரிகளும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து அரண்மனையை விடுத்து மனோநீசாகனைத் தேடிக்கொண்டு கானகமார்க்கமாய்ச் செல்வதாயினர்.



இங்ஙனமிருக்க, காலசித்தனைத் தேடிக்கொண்டு சென்ற பிரதாபனென்பவன் மனவிசாரத்துடன் நமது அரசனுடைய மதியீனத்தாலன்றோ? இத்தகைய ஆபத்தெய்தலாயின. வென, கல்வரத்துடன் பரிதாபமெய்தியவனாய் வருகையில், வழியிலெதிருற்ற காலசித்தனைக்கண்டு கோபாக்கினி ருத்திரன்போற் சினந்து, அடாபாபி! உன்னாலன்றோ? இராஜாங்கத்துக்குக் கெடுதி சம்பவித்தது, குரூரகுணமமைந்த இராஜதுரோகியென, பற்பலவிதமாய்நிந்தித்திகழ்ந்து தூஷித்தனன். காலசித்தனோவெனின் தனது தப்பிதத்தை எவ்விதமாய் மறைத்துத் தப்பித்துக்கொள்வதென யோசித்துத் தந்திரமாய்ச் சொல்வதாயினன்.

காலசித்தன்:—ஐயா! சேனாதிபதியே நீர் புகல்வது எவ்விதமுளதெனின், "அணைகடந்த வெள்ளத்தைக் கண்ணுற்று, அவனியிற் பலரிருந்தும் ஆற்றுக்குந் துணையாய் வாய்ந்திலரோவென்று" மனவிசாரமெய்துதல் ஆச்சர்யகரமா யிருக்கின்றனவே. அன்றியும், உலகத்தினியல்பு எத்தகையதெனின் நீர்மேற் குமிழியைப்போன்ற நிலையின்றிய வாழ்வினரா யிருக்கின்றனர். ஆகையால், எத்தருணமும் சமயோசிதமாய் இராஜாங்கத்திற்குக் கலகம் வாய்ப்பது உலகோர் அறிந்த விஷயமன்றோ? இஃதினைத் துங் கவனித்துணராமல் என்றாற் கலகம் விளைந்ததென, பாஷிப்பதாயினீர். அன்றியும், ஆற்றொணாக் கலகத்தினால் அருஞ்சமரெய்துந் தருணம் உயிரிருந்தாற்போதுமென ஓடிப்பிழைக்காமல் மதியீனத்தால் மரணமெய்த வருவாயென, "தயைதாக்ஷண்யமின்றிய எமனுதனைப்போல" என்னை அநியாயமாய் அழைக்கின்றனையே. இது நீதியோ? அன்றி, எனது தூர்க்காலமோ? ஆயுள்முடிவோ? யாதுந் தெரிகிலேனே.

என, மனவிசாரமெய்தியவன்போற் பாசாங்கு வேஷத்துடன் கண்ணீர் ததும்பக் கதறியழுதனன். இந்த வஞ்சகன் முகத்தைப்பார்த்த சேனாதிபதியாகிய பிரதாபன் ஆலோசித்து, அடா துரோகி! நீ இன்னும் உயிருடனிருந்தால் பற்பல தேசங்களிலும் சென்று இராஜாங்க கலகம்விளைத்து, அநேக மனிதரை உயிரிழக்கச் செய்வாயென "கோபாக்கினிருத்திரன்போற் சினந்து" பற்பலவாய்த் தூஷித்து இத்தகைய வஞ்சகனைக் கொல்வது ஜீவகாருண்யத்திற்கிசைந்த தர்மமாகுமென மதித்து, அத்தருணமே காலசித்தன்சிரசை

வெட்டுதற்குத் தன் கையிற் றாங்கிய கத்தியை வீசுதலும், வஞ்சகன் திடீரென திரும்புகையில் கத்திவெட்டின் குறி தவறி காலசித்தன் வலது புஜத்தின்மீதுபட்டு இரத்தம் பெருகவும், இவனைக் கண்ணுற்றோர் அருஞ்சமரில் யுத்தம் புரிந்த அதிவீர சூரனோ? வென, சந்தேகக் கலவரமெய்துந் தன்மையாய்க் கானக மார்க்கமாய் ஓடுவதாயினன். பிரதாபனும் மறுநகரிற்சென்று ஜீவிப்போமென ஆரண்யத்தை விடுத்துப் போயினன்.

இங்ஙனம் இவர்களின்னிலை இவ்வித குரூர பயங்கர ஆச்சர்ய காக்ஷியா யிருக்கையில்; இராஜபத்தினியும், மதிவதனியும் தமது நகரம் பகைஞராற் பாழாகி அக்கினிபற்றி பஸ்மீகரமாய் எரிந்துவிட்டதே, இனிநாம் எங்ஙனஞ்சென்று ஜீவிப்போமென, மனவிசாரத்துடன் ஆரண்யமார்க்கமாய்வருகையில் வழியிலெதிருற்ற நந்தவனத்திற் சென்று தாமரைப் பொய்கையிலிறங்கி ஸ்நான பானஞ்செய்து அங்ஙனம் அடர்ந்து செழித்திருக்கும் மா, பலா, வாழை, அன்னாசி, கிச்சிலி முதலாகிய விருக்ஷங்களிற் பழுத்துள்ள இனிமைசேர் கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்து நன்னீருண்டிக்களை தெளிந்து தென்றற் காற்று வீசுதற் கினிமை பொருந்திய வசந்த மண்டபத்தில் வந்தமர்ந்து மனவிசாரத்துடனிருக்கையில் இராஜபத்தினி மதிவதனியைப் பார்த்து மிகவும் பரிதாப நிலையுடன் புகலவாயினள்.

இராஜபத்தினி:—அம்மணி! நமக்கு இத்தகைய துர்க்காலம் வாய்ந்து துயரப்படச் செய்கின்றனவே. இவ்விபரீதத்திற்கு யாதுசெய்வோம். அன்றியும், நாமிருவரும், ஸ்திரீகளாய் இருப்பதால் வெகுவித ஆபத்துநேரிடுவதற்கு யாதேனும் ஆக்ஷேபணையுளதோ? அஃதேனெனின் பெண்கள் தமதுகற்புநிலையை காப்பாற்றுவதுதான் மிகவும் சிரேஷ்டம். ஆயினும், நாம் இராஜஸ்திரீகளா யிருந்தும் இந்தக் கானகத்தில்வந்து திக்கற்றவர்களாய்த் தனிமையா யிருப்பது; பயங்கரமான நிலைமையன்றோ? ஏனெனில், இந்த ஆரண்யத்தில் யாவரேனும் துர்க்குணம் வாய்ந்த ஆண்பிள்ளைகள் வந்தாராகில் நம்மிருவருக்கும் என்ன ஆபத்து நேரிடுமோ? வென, என்மனம் சந்தேகக் கலவரமடைந்திருக்கின்றனவே. ஆகையால், ஸ்திரீகளனைவரும் தமது உயிரிழந்தாலும் கற்புநிலையைக் காப்பாற்றுவதே மிகவும் சிரேஷ்டமாகையால்



நாம் இருவரும் இனி பிராணனைப் போக்கிக்கொள்வதே தகுதியாகுமென யோசிக்கின்றேன். ஆகையால், நின்மனதிலுற்ற உண்மையான கருத்தென்னவோ? யான் கவனித்துணர விபரமாய் புகல்வாய்.

மதிவதனி:—மாநிலத்திற் பிறந்த மஹாபதிவிரதைகளாற் பூஜிதம் பெறும் நற்குணம் பொருந்திய மதனி! நீ சொல்வதைக் கேள்வியுற்றால் ஆற்றொணா ஆச்சர்ய காக்ஷியா யிருக்கின்றனவே. இந்நிலத்தில் நரர்களாய் ஜனிக்கும்போதே இன்னாருக் கின்னவிதமென பிர்ம்மதேவன் விதித்திருக்கும் வாழ்நாளிற் கியன்ற விதம் சுகதுக்க மனைத்தும் காலத்திற்கியன்ற விதமாய் அனுபவிப்பதன்றி, அகோரமாய்த் தற்கொலை செய்துகொண்டால் ஆயுள்வரையிலும் பேயாய்த்திரிந்து பற்பலராலும் தூஷித்திகழ வசைமொழியேற்று, பாபிகளாய்த் திரிந்து கர்மானுசாரத்தை மேலும் மேலும் விர்த்தி செய்துகொண்டு மறுஜனனத்திலும் ஊழ்வினையின் குரூரத்தினால் அஞ்ஞானத்திற் கியன்ற அவலக்ஷண சரீரம் வாய்ந்து, நிராதுயருற்றுத் திகைத்திடலாகுமன்றோ? அம்மணி! உலகிற்ஜனித்த எண்பத்திநான்குலக்ஷ ஜீவராசிகளில் நரஜனனம் வாய்ப்பது மிகவும் சிரேஷ்டமாகையால், இத்தகைய பெருமை பொருந்திய ஜனனத்திற்றோனேப் பக்திநிலையிற் பிரவேசித்து பகவத்யானமாய் முக்தியடைவது சிரேஷ்டமன்றி அநியாயமாய்த் தற்கொலை செய்துகொள்வது நீதியோ?

இராஜபத்தினி:—அம்மணி! நீ சொல்வதும் உண்மையே. ஆயினும், யாதொரு ஆதாரமுமின்றி அவனியை விடுத்து, ஆரண்யவாசிகளாய் ஆற்றொணா ஆபத்திற்சிக்கி துயரப்படும் நம்மைப்போன்ற நரஜனனம் வாய்ந்தவர்கள் நான்முகன் விதித்த வாழ்நாள்வரையிலும் சரீரத்தை எவ்விதமாய்ச் சுமந்திருப்பது.

மதிவதனி:—அம்மா! நமக்கு நேர்ந்த ஆபத்தைக் குறித்து இத்தகைய மனவிசாரப்படுகின்றனையே இந்நம்மனையுடைய நகர்வலமாய் வந்துகொண்டிருந்த ரூபசுந்தரியானவள் அகஸ்மாத்தாய் தனக்குற்ற அரிய ஆபத்தினால் இராக்ஷசனிடத்திலும் இராஜாக்களிடத்திலும் கானக வேடுவனிடத்திலும் மிருகேந்திரனாகிய சிங்கத்தினிடத்திலும் புலியினிடத்திலும் அகப்பட்டு மனக்

நினைத்து ஆற்றொணுத் துயரெய்திடினும் தற்கொலை செய்துக் கொண்டால் பழியும் பாபமும் வந்தணுகுமென மனமெலிந்து, தைரியத்தை விடாமல் பகவத்யானஞ்செய்து கருணாகரன் கிருபையால் யாதொரு ஆபத்துமின்றி, ஆவிக்கபாய மெய்தாமல் ஜீவித்திருந்து, சகலதேசத் தரசராலும் மஹாபதிவிரதை யென புகழ்ந் துரைப்பச் சிறப்பெய்திய சரிதையைக் கவனித் துணர்கிலையோ?

இராஜபத்தினி:—அம்மணி, நீ புகன்றவை யுணர்ந்த என்மனம் ஆற்றொணு ஆச்சர்யமெய்த லாயின. அஃதெனெனின் "பேதமை குணம் வாய்ந்த" ஸ்திரீகட்கு பயங்கரமே உயிர்த்துணை யாகையால், நம்மைப்போன்ற ஸ்திரீயாகிய ரூபசுந்தரி ஏகாந்தமாய் இராக்ஷதனிடத்திலும் இராஜாக்களிடத்திலும் வேடனிடத்திலும் சிங்கத்தி னிடத்திலும் புலியினிடத்திலும் அகப்பட்டு ஆவிக்கபாயமின்றி தனது கற்புநிலைக்கு பழுதுறாமல் காப்பாற்றிக்கொண்டு உலகிற் பிழைத் திருந்தனளோ? அன்றியும், இதனைக் கேள்வியுற்ற வெகுசமர்க் கஞ்சாத வீராதிவீர ஜெயப்ரதாபரும் ஆச்சர்ய மெய்துவரெனின் என்மனம் எவ்விதமிருக்கும். ஆகையால், இந்த ரூபசுந்தரியின் சரித்திரத்தை யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

என, கன்னிறமை யுணர்ந்த மதிவதனி மனமகிழ்ந்து, அம்மா! நீ வினவிய ரூபசுந்தரியின் சரித்திரத்தை விபரமாய் மொழிகுதும் கவனமாய்க் கேண்மின். முற்காலத்தில் சத்தியபுரியைப் பரிபாலனஞ்செய்திருந்த சித்திரசேனமஹாராஜ னென்பவன் தனக்கு மைந்தனின்றிய மனக்குறையால் விசனமெய்தி தனது அரசுரிமையை மந்திரிவசத்தி லொப்பித்து, தனது பத்தினி சகிதம் ஆரண்யத்திற்சென்று பரமேஸ்வரனை தியானித்துப் பற்பலவிதமாய் ஸ்துதித்து, பக்தியானந்தமாய் அருந்தபம் புரிகையில் கருணாகரன் கிருபாநோக்கமெய்தி ஓர் தபசியைப்போல சித்திரசேனமஹாராஜன் முன்புவந்து அரசே! நீ யாதுகாரணமாக இங்ஙனம் வந்து அருந்தபம் புரியலாயினையென்க. அரசன் மனமகிழ்ந்து, தயாநிதி! யான் மாநிலம் புரக்கும் மகிபனாயிருந்தும் மகப்பேறின்றிய மனவருத்தத்தால் அரசுரிமையை விடுத்து, ஆரண்யத்தில்வந்து பசுமனை நோக்கி அருந்தபம் புரியலாயினே னென்க, துறவியைப்போல வந்த



கருணாகரன் கிருபாநோக்க மெய்தி, தன்சுயரூபத்துடனே தரிசன மளித்து, ஓர் மாங்கனியைத்தந்து அரசே இந்தக் கனியை நின் பத்தினி புசித்தவுடனே ஓர் ஆண்மகவுபிறக்கும், அவனால் நின்குலம் செழிப்புற் றிலகுமென வரப்ரசாத மளித்து, மறைந்தனர்.

அப்பால், சித்திரசேனமஹாராஜன் வனத்தைவிடுத்துத்தனது பத்தினியுடனே அரண்மனையிற்சென்று சபையோ ரனைவரும் மனங்களிப் பெய்தவும், தனக்கு புத்ரபாக்ய வரப்ரசாதங் கிடைத்த மகத்வ மனைத்தும் புகன்றனன். கருணாகரனால் கிடைத்த மாங்கனியைஇராஜபத்தினிபுசித்துகர்ப்பவதியாகிதசமதியுங்நிறைந்து ஓர்சுபதினத்தில் பூரணச்சந்திரன் பூதலம்வந்தெய்தியதுபோல அழகமைந்த சிங்கார தேஜஸமைந்த ஓர்ஆண்மகவை யீன்றனள். அத்தருணம் தாதிகள் அரண்மனையில்வந்து சித்திரசேனமஹாராஜனைப் பார்த்து அரசே! இராஜபத்தினி இன்றையதினம் பாலசந்திரோதயம் போற் பிரகாசதேஜஸமைந்ததோர் ஆண்குழந்தையைப்பெற்றனளென்க, அரசன்மனோல்லாசமெய்தி, மந்திரி! நீ இத்தருணமேசென்று நமது நகரில் வசித்துலாவும் குடிபடைகளனைவருக்கும் சர்க்கரை வழங்கி ஜோதிட கணிதவல்லோனை வரவழைப்பாயென்க, மந்திரியும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து அரண்மனையிலுள்ள சேவகரால் நகரவாசிகளனைவருக்கும் சர்க்கரை வழங்கி ஜோதிட சாஸ்திர கணிதவல்லோனை வரவழைக்குதலும், மன்னவன் மனமகிழ்ந்து ஜோதிடனுக்கு ஆசனமளித்து, ஐயா இன்றையதினம் பகல் பதினைந்து நாழிகையில் ஜனித்த என்மைந்தனுடைய ஜாதகபலாபலன்கள் விபரமாய்த் தெரிவிப்பீரென்க. ஜோதிட கணிதவல்லோன் இராசிலக்கின ஆரூடமுறைவழுவுறாது குழந்தையின் ஜாதகங்கணித்து, அரசே! உமது புத்திரனுக்கு கீர்த்திசேனனென்றுநாமகரண மிடவேண்டும். அன்றியும், இந்த இலக்கினத்திற்பிறந்தவன் வெகு கீர்த்திப்ரகாசமாய் விளங்குவன், ஆனால், பதினாறு வயதானபிறகு ஒருகன்னிகையின் மீதுற்ற ஆசையால் சிலகாலம் வெகுவித கஷ்டநிஷ்டூர மெய்தி பகவத் கிருபாநோக்கத்தால் யாதொரு அபாயமுமின்றி அந்தக் கன்னிகையைத் திருமணம் புரிந்து தாரணியோர் புகழ்ந் துரைப்பச் சிறப்பெய்தியவனாய்த் தன் சந்ததிபெருக மைந்தரைப் பெற்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பா னென்றனன். சித்திரசேனமஹாராஜன் மனமகிழ்ந்து ஜோதிடனுக்கு நவரத்தினங்களுடன் தக்ஷிணைதாம்பூலந்தந்து அனுப்பிவிட்டு மாளிகையிற்சென்று மைந்தனைக் கரத்திலேந்தி முத்த

யிட்டு கீர்த்திசேனனென் றழைத்து, தனது பத்தினியைப் பார்த்து பெண்ணே! நமது புத்திரனால் நமக்கு வெகு கீர்த்தி யுண்டாகு மெனப் புகன்றனன்.

இங்ஙனம் நிற்க, இராஜபத்தினி தன் புத்திரனுக்குப் பாலூட்டி சீராட்டி வெகுமேன்மையாய்வளர்த்துவருகையில் கீர்த்திசேனனுக்கு ஐந்து வயதானபிறகு வித்தியாசாலையில் விடுத்து எழுத்து, அசை, சீர், தளை முதலாகிய இலக்கண இலக்கியமும் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்ஞானமும் நன்குணரக் கற்பித்து வருகையில் கீர்த்திசேனனுக்கு பனிரெண்டு வயதானபிறகு ஆனையேற்றம், குதிரையேற்றமும் அஸ்திரப் பயிற்சியும் தனுசிற்கணைதொடுக்கும்மார்க்கமும் வேழமீதமர்ந்து வெஞ்சமர் புரிவதும், அஸ்வமீதமர்ந்து அருஞ்சமர்புரிவதும் சேனாசைனியங்களை அணியணியாய்வியூகம் வகுத்து பகைஞர்களைப் புறமுதுகிட் டோடத் துரத்தி சமர்த்துடன் அமர்புரியும் யுத்தப்பயிற்சியும் நன்குணரக் கற்று மாநிலத்தோரால் பெருமை வாய்ந்திருக்கையில், சித்ரசேன மஹாராஜன் புத்திரன் சமர்த்தை மெச்சி அவனுக்கு இத்தருணமே திருமணம் புரியவேண்டுமென்க, சித்தத்தி லெண்ணி பிரதானமந்திரியை அருகிலழைத்து, தன்மைந்தனுக்குத் திருமணஞ் செய்தற் கிசைந்த கருத்தைப் புகன்றனன். அமைச்சனும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து சித்ரிகரை வரவழைத்து கீர்த்திசேனனைப்போல திருவுருவப் படங்களெழுதி தூதுவர் கையிற் கொடுத்து சகல தேசத் தரசர்களுக்குங் காண்பித்து, அந்தந்த தேசத்தின் அரசர்களின் கருத்தையுங் கவனித்து அந்தந்த தேசத்தின் இராஜபுத்திரிகளின் திருவுருவத்தையும் படத்திலெழுதிக் கொடுக்கும்படியாய்ப்புகன்று வாங்கிக்கொண்டு வருகுவீரென் றனுப்பினன். அவர்களும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்துப் பிரயாணமாயினர்.

இங்ஙனம் நிற்க; சத்தியபுரியின் தூதுவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே சகல தேசங்களிலுஞ் சென்று அந்தந்த தேசத்தரசர்கட்கும் தமது இராஜ புத்திரனாகிய கீர்த்திசேனன் திருவுருவப் படத்தையுங் காண்பித்து சித்ரசேனமஹாராஜன் கருத்தையும், மொழிதலும் திருவுருவப் படத்தைக் கண்ணுற்ற அரசர்களனைவரும் மகிழ்வெல்லாச மெய்தி தமது அருந்தவப் புத்திரிகட்குக்



காண்பித்து திருமண சுபசெய்தியும் புகன்றனர். இராஜபுத்திரிகளும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து, தமது திருவுருவத்தையும் படத்திலெழுதித் தந்தனர். அம்மன்னர்களனைவரும் தூதுவர்கள் சமுகம் திருவுருவப் படத்தைத் தந்து திருமண சுபகாரியத்திற்கு யாம் மன மிசைந்தோமென்று, உமது அரசனுக்குப் புகல்வீரென்றனுப்பினர். அப்பால் தூதுவரனைவரும் அந்தந்த தேசத் தரசர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தமது தேசத்தையணுகி அரண்மனையில் வந்து அந்தந்ததேசத்தின் இராஜபுத்திரிகளின் திருவுருவமெழுதியபடங்களைத்துந் தந்து அந்தந்த அரசர்கள் புகன்றவையனைத்தும் விபரமாய்ப் புகன்றனர். அத்தருணம், அரசன் உத்தரவின்படியே மந்திரியானவன் கீர்த்திசேனனுக்குத் திருவுருவப் படங்களைக் காண்பித்து, இராஜபுத்திரா! உமக்கு எந்த கன்னியின்மீது விருப்பமோ? எமக்குத் தெரிவிப்பீரென்க, கீர்த்திசேனன், ரூபசுந்தரியின் திருவுருவ மெழுதியிருக்கும் படத்தைக் கண்ணுற்று மனமகிழ்ந்தவனாய்ச் சற்று நேரம் யோசித்து, மந்திரி! இந்தக் கன்னிகையே என்மனதிற் கிசைந்த மனையாளெனப் புகன்றனன், மந்திரியானவன் இராஜகுமாரன் மனக்குறிப்பை யுணர்ந்து அரசன்பாற் றெரிவிக்குதலும் வேந்தன் மனக்களிப்பெய்தி மந்திரி இந்தக் கன்னிகை எந்த தேசத்தரசன் புத்திரி யென்னலும், மந்திரி திருவுருவப் படத்தைக் கொண்டு வந்த தூதுவர்களால் விசாரித்துணர்ந்து அரசே! இந்தக் கன்னிகை சுந்தரபுரியின் வேந்தனாகிய சுந்தரானந்தமஹாராஜன் அருந்தவப் புத்திரி. அன்றியும், அந்த மன்னன் மிகவும் உத்தமகுண மமைந்தவன் தெய்வபக்தியிற் சிறந்தவன் குடிகளின்மீது கிருபைவாய்ந்து செங்கோன்முறை வழுவுறாது இராஜரீகம் புரிபவனென்று உலகோரறிந்த விஷயமென்னினும், யாமும் கேள்வியுற்றிருக்கின்றோமல்லவோ? ஆகையால், அத்தகைய உத்தம வேந்தன் புத்திரியை உமது புத்திரனுக்குத் திருமணஞ் செய்தல் மிகவும் நன்றென்னலும் சித்திராங்கதமஹாராஜன் மனமகிழ்ந்து தனது அரசுரிமையை முதன் மந்திரிவசம் ஒப்பித்து தான் வருகிற வரையினும் குடிகளின்மீது கருணைவாய்ந்து செங்கோன்முறை வழுவுறாது இராஜரீகம் புரிவாயென்று ஆக்ஞாபித்துத் தனது உற்றார் உறவின் முறையார் மந்திரி பிரதானியருடனே மனைவி மைந்தனையும் அழைத்துக்கொண்டு சுந்தரபுரியின் சமீபத்தி லிருக்கும் நகர்புறத்தில் கூடாரமியற்றி அங்ஙனமே வீற்றிருந்து, சில தூதுவர்களை யனுப்பி தாங்கள் வந்திருக்கும் நற்செய்தியை சுந்தரானந்தமஹாராஜனுக்குத் தெரிவிப்பீரென அனுப்பினன்.

இங்ஙனம், நிற்க சுந்தரானந்தமஹாராஜன் மந்திரி பிரதானியருடனே கொலுவமர்ந்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனனென்றவனியோர் புகழ்ந்துரைப்ப, தேசவிசாரணை புரிந்துவருகையில், சித்திரசேனமஹாராஜனால் அனுப்பிய தூதுவர்கள்வந்து அரண்மனைச் சேவகரைக் கண்ணுற்று யாங்கள் உமது வேந்தனைக் காணவேண்டுமென் றிசைப்ப, காவலாளிகள் தமது மன்னன்பாற் புகன்று, அரசன் உத்திரவின்படியே தூதுவர்களை இராஜசமுகம் அழைத்துச்செல்ல சுந்தரானந்தன் அடா நீங்கள்யாவர்? யாதுகாரணமாக இங்ஙனம் வருகலாயினீரென வினவினன். அத்தருணம், தூதுவர்கள் சுந்தரானந்தனை நோக்கி வேந்தே! சத்தியபுரிக் கிறைவனாகிய சித்திரசேனமஹாராஜன் தமது சேனைசயின்யங்களுடன் இந்நகர்புரத்தில் வந்திருக்கின்றனர். ஆதலின், உம்மைவந்து காணும்படியாக எமக்கு ஆக்ஞாபித் தனுப்பினரென்றனர். தூதுவர் வார்த்தையைக் கேள்வியுற்ற சுந்தரானந்தமஹாராஜன் சற்றுயோசித்து, அவர் யாது காரணமாக இங்ஙனம் வந்தனரோ? இஃதுண்மை யனைத்துங் கவனித் துணரவேண்டுமென, மனதிலுன்னி தனது மந்திரி பிரதானியருடனே நகர்புரத்தி லிருக்கும் சித்திரசேனமகாராஜனை எதிர்கொண்டழைத்துவந்து அரண்மனையில் வீற்றிருக்கச்செய்து அரசே யாது காரணமாக இந்நகரத்திற் பிரவேசிக்கலாயினீரென வினவினன். சித்திரசேனமஹாராஜன் மனமகிழ்ந்து, அரசே! நின் அருந்தவப் புத்திரியை என் மைந்தனாகிய கீர்த்தி சேனனுக்குத் திருமணஞ் செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி நின் சமுகம் வந்தேனென்னலும், சுந்தரானந்தமஹாராஜனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, வேதவேதியரை வரவழைத்து, கீர்த்திசேனனுக்கும், ரூபசுந்தரிக்கும் நாமநக்ஷத்திர இராசி பொருத்த லக்கினத்திற்கிசைந்த சுபதினத்தை ஏற்படுத்தி, திருமண முகூர்த்த நிருபத்தைச்சகல தேசந்தரசர்கட்கும் தூதுவர் மூலமா யனுப்பினன்.

இங்ஙனம் நிற்க, சுந்தரானந்தனால் அனுப்பிய தூதுவர்களனைவரும் சகல தேசத்திலும் பிரவேசித்து ஆங்காங்கு அரசுரிமைபுரியும் இராஜாக்களுக்குத் தமது வேந்தனாற் கொடுக்கப்பட்ட திருமணப்பத்திரிகையைத் தந்தனர். நிருபத்தைக் கண்ணுற்ற அம்மன்னர்களனைவரும் மனமகிழ்ந்தவராய்த் தமதுமந்திரிகள்வசம் அரசுரிமையை யொப்பித்து, இரத, கஜ, துரக, பதாதிகளுடன் சுந்தரபுரியை நாடிவருகலாயினர். அத்தருணம், சுந்தரானந்தமஹாராஜன்



திருமண முகூர்த்தத்திற்குவந்த அரசர்களனைவரையும் உபசரித்து, அவரவர்கட் கிசைந்த ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து, அம்மன்னர்களின் சேனைகளையும் தகுதியான கூடாரங்களில் வீற்றிருக்கச்செய்து, யாவருக்கும் அறுசுவை பதார்த்தத்துடன் விருந்தளித்து, யாவரும் அமுதருந்தி களைதெளிந்த பின்னர், மனோல்லாசமாய்த் தம்மது மனதிற் கிசைந்த மங்களானந்தமாய்ப் பாஷித்துக் கொண்டிருந்தனர்.

அப்பால் சுந்தரானந்தமஹாராஜன் உத்திரவின்படியே சிற்பசாஸ்திரிகள் நவரத்தின கசிதமாய்த் துலங்கும் திருமணமண்டபஞ் ஜோடித்து, அழகமைந்த சிங்காரமாய்ப் பிரகாசிக்கும் பொற்பதுமைகளை மண்டபத்தைச் சுற்றிலும் அமைத்து, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி செண்பக, முதலாகிய மணமலர்களை மாலையாகத் தொடுத்து மணவரைக்கு அலங்காரமாய்ச் சிங்காரித்து, நானாவித சங்கீத சாஹித்ய மேளவாத்தியங்களும் முழங்க, வெகு வேடிக்கையா யிருக்கையில், இராஜஸ்திரீகளனைவரும் ஒன்றுசேர்ந்து மங்களானந்தமாய் கீர்த்திசேனனுக்கும் ரூபசுந்தரிக்கும் நலங்கிட்டு மங்களஸ்நானஞ் செய்வித்து நவரத்தின கசிதமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்து மங்கிலிய ஸ்திரீகளால் இருவரையும் மணவரையி லழைத்துக்கொண்டுவந்து வீற்றிருக்கச்செய்து பதினெட்டுவித மேளவாத்தியங்களும் முழங்க, அந்தணரனைவரும் வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அக்ஷதைத் தூவி ஆசீர்வதித்து வாழ்த்தவும், கீர்த்திசேனன் திருமங்கிலியத்தைக் கரத்திலேந்தி ஹரிஹரபிரம்மாதிதேவர்களை ஸ்துதித்து, ரூபசுந்தரியின் திருக்கழுத்திலணிந்தனன். அத்தருணம் பந்தத்வ உற்றார், உறவினரும், அரசர்களும் சாஸ்திர விதிப்படியே அவ்விருவர் சிரசின்மீதும் அக்ஷதைத் தூவி சந்ததி பெருக வைந்தரையின்று சதாகாலம் மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பீர்களென ஆசீர்வதித்தனர்.

இங்ஙனம் நிற்க, சுயம்பாகிகளனைவரும் அன்னபதார்த்த பலகார பக்ஷணங்களனைத்தும் சமைத்து யாவரையும் அமுதுண்க வருவீரென்றிசைத்ததையுணர்ந்த வந்திருந்தினரனைவரும் மனோல்லாசமாய் தனித்தனியே தமக்கென்றமைந்த ஆசனத்திலமர்ந்து, சுயம்பாகிகளால் வாழையிலையில் வட்டித்திருக்கும் மதுரமாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களும் நாவுக்கினிமை பொருந்திய

ருசிகரமமைந்தவையாகிய கார்த்தல், இனித்தல், புளித்தல், கைத்தல், துவர்த்தல் உவர்த்தலென்னும் அறுசுவைப் பதார்த்தத்துடனும் திவ்யான்னம் புசித்து, பாயசத்துடன் பலகார பக்ஷணங்களருந்தி யாவருங் களைதெளிந்து வசந்த மண்டபத்தில் வந்தமர்ந்து வாசனாதிகளுடனமைந்திருக்கும் தாம்பூலம் புசித்து அத்தர், பந்நீர், புனுகு, ஜவ்வாது கஸ்தூரி சந்தன முதலினவை திருமேனியிலணிந்து மனோல்லாசமாயிருக்கையில், கந்தர்வ ஸ்திரீகளைப்போன்ற சுந்தரமுகவஜீகர தேஜஸமைந்த நாட்டியப்பெண்கள் சங்கீதசாஹித்ய கீதாமிர்தசார பனுவல்களைப் பாடிக்கொண்டு கானகத்திலுலாவும் மயிலினம்போல நிர்த்தனஞ்செய்துக் கொண்டிருந்து அரசர்களிடம் நவரத்தினங்களும், சுவர்ணங்களும் வெகுமதி பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்திருந்தனர்.

இங்ஙனம், இவ்விதமாய் மங்களானந்த மாக்ஷிமை பொருந்திய காக்ஷியாயிருக்கையில் நகரவாசிகளனைவரும் அரசனாக்ஞையின்படியே வீதிகளெங்கனும் விநோதமயமாய்ச் சிங்காரித்தனர். அத்தருணம், பதினெட்டுவித மேளவாத்தியமும் முழங்க நவரத்தின கசிதமாய்த்துலங்கும்முத்துப்பல்லக்கில் கீர்த்திசேனனும் ரூபசுந்தரியும் நகர்வலம்வருகையில் ஓர் மாயராக்ஷதன் திடீரென ஓடிவந்து ரூபசுந்தரியின் அழகானந்த தேஜஸமைந்த முகவஜீகரத்தைக் கண்ணுற்று ஆச்சர்யமடைந்து ஆ! ஹா! இத்தகைய சிங்கார சுந்தரமமைந்த பெண்ணையும் பிரம்மதேவன் சிருஷ்டித்தனனோ? வென, தன் மனதிற்றானே யோசித்து, "கேடுவரும்போது மதிகெட்டு வருமென்பதுபோல" தான் அநேக வருடங்களாய்த் தபம்புரிந்து, தன்னை எதிர்த்துப் பொருதும் பகைஞராலிறவா வரம்பெற்ற மனோகர்வத்தினால் திரிமூர்த்திகளும் திடுக்கிடும்படியாய் வீரப்ரதாபம் பொருந்திய வாழ்நாள் குறுகி ஜீவனிழப்பதற்கேற்ப கிரகசார பலனும் சரியாய் வந்தொத்துக் கொண்டமையால், நகர்வலம் வருகின்ற பதிவிரதா சிரோன்மணியாகிய ரூபசுந்தரியை தனது கரத்தினாலெடுத்து உள்ளங்கையிலேந்திக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் ஓடிப்போயினன்.

இங்ஙனம் இவ்வித அநியாய ஆச்சர்ய காக்ஷியைக் கண்ணுற்ற சகல தேசத்தரசர்களும் மனமிரண்டு, திகிலடைந்து, ஒன்றுந் தோற்றாமல் பயங்கர கலவரத்துடனிருக்கையில், கீர்த்திசே



னன் ஆற்றொணா வெஞ்சினமுற்று, பல்லை நறநறவெனக் கடித்து, மீசை துடிதுடிக்க கண்கள் சிவந்து, செவிகளில் அக்கினிச் சுவாலை வீச, பெருமூச்சு விடுத்து, திரிபுரதகனன்போற் சிரித்து, அருகிலிருந்த சித்திரசேனமஹாராஜனைப் பார்த்து, தந்தையே! இத்தருணமென்கரத்தில் தனுசும், அஸ்திரங்களுமிருக்குமாகில் என் பத்தினியை எடுத்துச்சென்ற அசுரனைத் தடுத்து ஓடவிடாமல் சரக்கூடம் கட்டி அவனைச் சித்ரவதைசெய்து அவன் சரீரத்தை நாய் நரி கழுகுகட்கு விருந்திட்டு மனமகிழ்வேன். ஆயினும், யான் அஜாக்ரதையாயிருந்ததால் இவ்வித ஆபத்து நேர்ந்தது. இவ்விபரீதத்திற்கு யாது செய்குதுமென மனவிசாரப்படுவதாயினன். சித்திரசேனன் மனமெலிந்து, மைந்தா! இனியாம் வீணாக விசனப்படுவதாலாய பயனென்? யாவும் தெய்வச் செயலன்றி மனச்செயலன்றென மொழிந்தனன். மற்ற இராஜாக்களும் அவ்விதமே கீர்த்திசேனன் மனதைத் தேற்றி அரண்மனையில் அழைத்துக்கொண்டு வந்தனர். ஆனால், ரூபசுந்தரியின் தாய் தந்தையரிருவரும் ஆற்றொணாவிசனமடைந்தவராய்த் தமது அருந்தவத்தாற் பிறந்த புத்திரியை உயிருடன் இழந்தோமேயென்கிற விசனமேலிட்டு அன்னந் தண்ணீரருந்தாமலும், யாருடனும் பேசாமலும் திப்ரமையடைந்தவராய்ச் சித்தம் மெலிந்து மனவிசாரத்துடனிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள்கிலே இவ்வாறு பரிதாபமாயிருக்கையில், திருமண வைபவத்திற்குவந்து விபரீத குரூர பயங்கர காக்ஷியைக் கண்ணுற்ற அரசர்களனைவரும் சுந்தரானந்தமகாராஜனிடம் சிலவு பெற்றுக்கொண்டு தமது தேசத்திற்குப் போய்விட்டனர். கீர்த்திசேனன்ரூபசுந்தரியின் தாய்தந்தையர்களின் துயரத்தைக் கண்ணுற்று மனஞ்சகியாதவனாய் நாம் வெஞ்சமர்க்கஞ்சாத விஜய பராக்ரமனென கீர்த்திவாய்ந்திருந்தும் அசுரனைக் கொன்று நமது பத்தினியை அழைத்துவாராமலிருப்பது ஆண்மையல்லவென்று, வீராவேசத்துடன் தனுசைக் கரத்திலேந்தி அம்புறாத்தூணியை முதுகிலணிந்து யுத்தசன்னத்தனாய்ப் போர்க்கோலத்துடன் சுந்தரானந்தன் முன்புவந்து, அரசே! நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யான் கானகத்திற் சென்று அசுரனைக்கொன்று என் பத்தினியை அழைத்துவாராமற் போவேனாகில் யான் க்ஷத்திரியனுமல்ல, என் கையிற்றாங்கியது தனுசுமல்லவென, கண்டோர் திடுக்கிடும்படியாய் பயங்கரமான சபதமிட்டு அதிதீவிரமாய் அசுரனைத்

தேடிக்கொண்டு ஆரண்யமார்க்கமாய்ச் செல்வதாயினன். இவன் இவ்விதமாய் வீராவேசத்துடன் சென்றதைக் கண்ணுற்ற சுந்தரானந்தன் கிஞ்சிற்று மனதைரியத்துட னிருந்தனன். ஆனால், சித்திரசேனனோவெனின், புத்திர வாஞ்சையால் சித்தம்மெலிந்துகார்த்தவ்யமே யான் அருந்தவஞ்செய்து பெற்ற புத்திரனைப் பிரிந்தேனே யென்று மனவிசார மெய்திடினும், தனதுமைந்தன் எவ்விதமாயினும் அசுரனை வென்று தன் பத்தினியை அழைத்துக்கொண்டு வருகுவானென வொருவிதத்தில் மனதைரிய மெய்தியவனாய் சுந்தரானந்தமஹாராஜனிடம் விடை பெற்றுக்கொண்டு சுந்தரபுரியை விடுத்து, தனது சேனாசயின்யங்களுடன் சத்தியபுரியில்வந்து அரண்மனையில் இருப்பவர்களைக் கண்ணுற்று ஆற்றொணாமனவிசாரத்துடன் சுந்தரபுரியில் நிகழ்ந்தவையனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்று, எனது அருந்தவப் புத்திரனையும் பிரிந்தேனென்று சொல்லி கண்ணீர்த் ததும்பக் கதறியழுது, திடீரென பூமியில் விழுந்து மூர்ச்சையாயினன்.

இங்ஙனம் இவ்வித ஆச்சர்ய வார்த்தையைக் கேள்வியுற்ற சபையோரனைவரும் பரிதாப மெய்தியவராய் மனமெலிந்து, சித்திரசேனனைத் தேற்றி அரசே! நீர் யாதும் விசனப்படாதீர். உமது மைந்தன் சமர்த்தை அந்தரத் தமரராலும் சொல்வதற் கரிதெனின் நம்மால் வர்ணிக்கத்தரமோ? அன்றியும், கரத்தில் தனுசேந்தி அமர்க்களத்தில் நிற்பானாகில் ஆயிரம் அசுரர்கள் வந்தெதிர்த்தாலும் ஒரு நாழிகையில் எமபுரிக்கனுப்பும் வல்லமை யுடையவன் ஒரு அசுரனை ஜெயிப்பதற் கரிதோ? ஆகையால், நீர் யாதொரு மனக்கவலையுமின்றி தைரியமா யிருப்பீரென்றனர். சித்திரசேனனும் ஒருவிதத்தில் தனது மைந்தன் அசுரனை வென்று தனது பத்தினியை அழைத்துக் கொண்டு வருவானென மதித்திடினும், புத்திரவாஞ்சையால் திகைத்து சித்தமெலிந்து எத்தருணம் மைந்தனைக் காண்போமென, மனவிசாரத்துட னிருந்தனன்.

இங்ஙனம், இவர்கள் நிலை இவ்விதமா யிருக்கையில், மாய ராக்ஷசனானவன் ரூபசுந்தரியை எடுத்துக் கொண்டுபோய்த் தனது வாசஸ்தானமாகிய நாவலந்தீவி லிருக்கும் குகையில் வைத்துக்கொண்டு தினந்தோறும் கானகத்தி லிருக்கும் காய்கனி கிழங்குகளைக் கொண்டுவந்து கொடுத்துப் புசிக்கச்செய்து ஜீவனுக் கபாயமின்றி ஆதரித்திரக்ஷித் திருந்தனன். ரூபசுந்தரியோ வெனின் இந்த



அசுரன் நமக்கு யாதொரு அபாயமுமின்றி காய் கனிகளைத் தந்து பெற்ற தாயைப்போல காப்பாற்றிடினும், ஒருசமயம் இவன் புசிப்புக்கேற்ற உணவாதிகளாகிய சிங்கம் புலி கரடி யென்னும் மிருகங்கள் அகப்படாவிடில் நம்மைக்கொன்று தின்றுவிடுவானோ? வென, சந்தேகக் கலவர பயங்கரத்துட னிருந்தனள். அசுரனோ வெனின், தினந்தோறுங்கானகத்திற்சென்று மிருகங்களைப் புசித்து, கடல்நீரை யருந்தி கனிகாய்களைக் கொண்டுவந்து ரூபசுந்தரிக்குத் தந்து புசிக்கச்செய்து அந்தப் பெண்ணின் முகவசீகர தேஜஸமைந்த சிங்காரத்தைக் கண்ணுற்று "பொற்பதுமையைக் கண்டு சித்தமகிழும் மனிதனைப்போல" மனோல்லாசமா யிருந்தனன்.

இங்ஙனம் நிற்க, தனது பத்தினியைத் தேடிக்கொண்டு ஆரண்ய மார்க்கமாய் வருகின்ற கீர்த்திசேனனானவன் வழியிலேயிருந்த ஓர் நந்தவனத்தைக் கண்ணுற்று, அங்ஙனம் சென்று தாமரைப் பொய்கையிலிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டை யாவும் முடித்துக்கொண்டு, விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்துள்ள இனிமைசேர் கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்து, நன்னீருந்திக் களைதெளிந்து, தென்றற் காற்று வீசுதற் கினிமை பொருந்திய ஓர் ஆலவிருக்ஷத்தின்கீழ் சயனித்திருந்தனன். அத்தருணம் விருக்ஷத்தின் கிளைமீதில் வாசஞ்செய்யும் பறவையினங்கள் இவன் தனிமையாக நரர்கள்வாசமின்றிய பயங்கரமாகிய கானகத்தில் வந்து சயனித்திருப்பதைக்கண்டு இவன்யாதோ ஓர் மனக்கவலையால் வனவாசியாய் வந்தவன்போல தோற்றுதென, ஆலோசித்துக் கொண்டிருக்கையில், மனித பாஷை முற்றுங் கவனித்து, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலமென்னும் மூன்று காலங்களின் நேர்மையும் திரிலோகத்திலும் விளங்கும் சங்கதியனைத்தும் கவனித்துச் சொல்லும், வல்லமையுமுடைய ஓர் பஞ்சவர்ணக் கிளி பக்ஷிகளைப் பார்த்து, பறவை யினங்களே! யான் சென்று விருக்ஷத்தின் கீழிருக்கும் மனிதனுடைய சமாசாரம் யாவும் தெரிந்துக்கொண்டு வருகிறேனென்று கிளையை விட்டுக் கீழே இறங்கிவந்து கீர்த்திசேனனைப் பார்த்து, இராஜபுத்திரா நீ யாது காரணமாக இந்த வனத்தில் தனிமையாய் வருகலாயினையோ? யான் கவனித்துணர விபரமாய்ப் புகல்வாயென வினவுதலும், கீர்த்திசேனன் மனமிரண்டு இஃதென்ன ஆச்சர்யம்? அசுரர் மாய்கையோ? அன்றி, அமரர்களின் திருவுளமோ? பறவை ரூபமாய் வந்து நம்மிடம் பாஷிப்பதாயின. வென, சந்தேகக் கலவரத்துடன்

யாதொன்றும் பேசுதற்கு நாவெழாமல் திப்ரமை யுற்றுத் திகைப்ப தாயினன்.

இங்ஙனம் கீர்த்திசேனன் நினைவு கலவரமாயிருப்பதைக் கவனித்த பஞ்சவர்ணக்கிளி கிருபாளுக்கமெய்தி, இராஜபுத்திரா! நீ யாதொன்றுக்கும் அஞ்சேல்'யான் தெய்வலோகத்துப் பறவையாகையால், உலகமெங்ஙனுமுள்ள இரகஸ்யமனைத்தும் எனக்கு நன்றாய்த்தெரியும். அன்றியும், என்னால் அநேகர் சுகமுற்றிருக்கின்றனர். ஆயினும், நீ! இவ்வித மனவருத்தமெய்தி இங்ஙனம் வந்திருப்பதைக் கண்ணுற்ற யான் உனக்கு யாதேனும் பேருதவிபுரிந்து நின் மனக்கவலையைத் தீர்ப்பேனென மொழிதலும், கீர்த்திசேனன் சற்று யோசித்து இதுவும் ஓர் தெய்வானுகூலந்தானென மதித்து, தனக்குற்ற ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்று, கிள்ளைநாயகமே! என் மனைவியை எடுத்துக்கொண்டுசென்ற அசுரனைக் காண்பேனாகில் அவனைச் சித்திரவதை செய்து என் பத்தினியை அழைத்துக்கொண்டு செல்வேனென்றனன். பஞ்சவர்ணக்கிளி ஞானதிருஷ்டியால் கவனித் துணர்ந்து, இராஜபுத்திரா! நின்பத்தினியை எடுத்துச்சென்ற மாயராக்ஷதன் வாசஸ்தானம் நாவலந்தீவிலிருக்கும் குகை. ஆனால், நின்பத்தினியின் ஜீவனுக்கு யாதொரு அபாயமுமின்றி காய் கனிகளைத்தந்து புசிக்கச்செய்து காப்பாற்றுகிறான். ஆயினும் அவனை ஜெயிப்பதற்கு யாவராலும் முடியாது. ஹரிஹரப்ரம்மாதி தேவர்களனைவரும் ஏககாலத்தில்வந்து அருஞ்சமர்புரிந்தாலும் அவனைக் கொல்லுவதரிதாகுமென, கீர்த்திசேனன் சற்றுயோசித்து, கிள்ளை நாயகமே! ஜெயாபஜெயம் ஒருவர்பங்கல்ல. ஒருவேளை என்னால் அவன் இறந்தாலும்சரி, அவனால் யான் இறந்தாலும் சரியே. எவ்விதமாயினும் யான் அவனைக் காணவேண்டுமென்க, பஞ்சவர்ணக்கிளியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, ஆலவிருக்ஷத்தின் கிளைமீதிற்சென்று அங்ஙன மிருக்கும் பக்ஷிகளிடம் கீர்த்திசேனன் மனக்குறிப்பனைத்தும் மொழிந்து, நாவலந்தீவிற்கு இவனை எவ்விதமாய் அழைத்துச் செல்வதென, யோசித்துக் கொண்டிருக்கையில், அங்ஙனம் பறவைகட்கு அரசனாயிருக்கும் கழுகுபக்ஷியானது மனமகிழ்ந்து, கிள்ளைநாயகமே! யான் அவனை எனது கழுத்தின்மீது ஏற்றிக்கொண்டு வருகிறேன். நீ! அசுரனிருக்கும் வாசஸ்தானத்திற்கு வழிகாண்பிப்பாயென்க. பஞ்சவர்ணக்கிளியும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்தன.



அப்பால், பக்ஷிகளிரண்டும் கீழே இறங்கிவந்தது. அத்தருணம், கழுகுபக்ஷியானது கீர்த்திசேனனைத் தனதுதோளின் மீதேற்றிக்கொண்டு பறந்துபோகவும், பஞ்சவர்ணக்கிளி நாவலந்தீவிற்கு வழிகாட்டிக்கொண்டுபோவதுமாய் அநேகநாள்வரையினும் பறந்து சென்று பசிவேளைக்கு வழியிலெதிருற்ற விருக்ஷங்களிற் பழுத்திருக்கும் கனிவர்க்கங்களைப் புசித்துக்கொண்டும், வழியில் யாதொரு அபாயமுமின்றி மாயராக்ஷதனிருக்கும் நாவலந்தீவிற்சென்று அங்ஙனம் அடர்ந்து செழிப்புற்றோங்கி விசாலமாய் வளர்ந்திருக்கும் ஆலவிருக்ஷத்தின் கிளையில் பக்ஷிகளிரண்டும் போய் உட்கார்ந்து கீர்த்திசேனனை இலைமறைவில் மறைந்திருக்கும்படியாகச்செய்து பக்ஷிகளிரண்டும் வெகு ஜாக்கிரதையுடனே அசுரனில்லாத சமயத்தில் குகையருகிற்சென்று ரூபசுந்தரியைக் கண்டு, அம்மணி! நின்மணாளன் வந்திருக்கின்றன ரென்க. அந்த வார்த்தையைக் கேட்ட ரூபசுந்தரி திடுக்கிட்டு இது, இராக்ஷச மாய்கையோ? வென, கலவரத்துடன் நீங்கள் யாவர்? யாதுகாரணமாக இங்ஙனம் வந்தீர்களென வினவுதலும், பஞ்சவர்ணக்கிளி கருணைவாய்ந்து அம்மணி! யாங்கள் இராக்ஷசர்களல்ல. உண்மையான பறவை யினங்களென்றுணர்வீர். உனது மணாளனாகிய கீர்த்திசேனன் உன்னைத் தேடிக்கொண்டு ஆரண்யமார்க்கமாய் வருகையில் மனவிசாரத்துடன் ஓர் விருக்ஷத்தின்கீழ் சயனித் திருப்பதைக் கண்டு மனந்தாளாமல் இங்ஙனம் அழைத்துக்கொண்டு வந்தோம். அவனும் அசுரன்மீது யுத்தம்புரிய ஆயுதபாணியா யிருக்கின்றானென, நிகழ்ந்தவை யனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்றன. இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ரூபசுந்தரி மனமகிழ்ந்து, பறவைகாள்! நீங்கள் எவ்விதமாயினும் எனக்கு மங்கிலியப் பிக்ஷை ஈந்தருளல் வேண்டுமென்று பூமியில் விழுந்துப் பக்ஷிகளின் பாதத்தைப் பணிதலும், பஞ்சவர்ணக்கிளி சற்றுயோசித்து, இஃதென்ன தர்மசங்கடமா யிருக்கின்றதே இந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டாலும் மாயராக்ஷதன் எவ்விதமாயினும் கண்டுணர்ந்து பின்பற்றிவந்து இவர்களுடன் நம்மையும் கொன்று தின்றுவிடுவானே. அன்றி, அசுரனைக் கொல்லுவதெனினும் ஹரிஹரப்ரம்மாதிகளாலும் முடியாதே யென்று ஆலோசித்து, அம்மணி! நின்மணாளன் அசுரனைக் கொல்வதற்குமுடியாதெனினும், அவனுயிர் நிலையிருக்கும் ஸ்தானத்தைக் கேட்டு எமக்குச் சொல்வாயாகில் அந்த இராக்ஷதனை எவ்விதமாகிலும் கொன்று உன்மணாளனுடன் உன்னையும் அழைத்துக்கொண்டு செல்வோம்.

இதுதான் தகுந்த யோசனையென்று சொல்லிவிட்டு, ஆலவிருக்ஷத்தின்கிளைமீதில்வந்து, ரூபசுந்தரியால் கேள்வியுற்ற சங்கதியனைத்தும் ஆதியோடந்தமாய் கீர்த்திசேனனுக்குப் புகன்றன.

இங்ஙனமிருக்க, மாயராக்ஷதனானவன் தனது வழக்கப்படியே ஆரண்யத்தில் வாசஞ்செய்யும் சிங்கம், யானை, புலி, கரடி, சிறுத்தை முதலாகிய மிருகங்களையெல்லாம் புசித்துக் கடல்நீரை யருந்தி பசிதணிந்து ரூபசுந்தரிக்காக விருக்ஷங்களிற் காய்த்துப்பழுத்துள்ள மதுரமாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களைப் பறித்துக்கொண்டு தனது வாசஸ்தானத்திற்கு வருகையில் ரூபசுந்தரி தனது மணாளன்வருகையை பஞ்சவர்ணக்கிளியால் சொல்லக்கேட்டது முதல் ஓர்வித மனவிசாரமாய் கலவரத்துடனிருந்தனள். தனது ஆயுள்முடிவின் இரகஸ்யமர்ம மின்னதென்றுங் கவனித்துணராத இராக்ஷசன் ரூபசுந்தரியைப்பார்த்து அம்மணி இன்றையதினம் யாது காரணமாக இத்தகைய மனவிசாரமாய் யாதொன்றும் பேசாமல்மவுனமாயிருக்கின்றாயென வினவினன். ரூபசுந்தரி இதுதான் தருணமென மனமகிழ்ந்து, ஐயா! யான் எனது தாய்தந்தைமுதலாகிய * அநேக ஜனத்திரளில் யாதொரு மனக்கவலையுமில்லாமலிருந்தும், இத்தருணம், மனிதசஞ்சாரமின்றிய இவ்வனத்தில் என் தாய்தந்தையைப் போல காய்கனிகளையாகிலும் பசிவேளைக்குக்கொண்டுவந்து கொடுத்துக் காப்பாற்றி இரக்ஷிக்கும் உம்மை யாவரேனுங் கொன்றுவிட்டால் இந்தக் கானகத்தில் யான் எவ்விதமாய் ஜீவிப்பேனென விசனப்படுகிறேன். என்று சொல்லவும், மரணகாலம் சமீபித்த மர்மத்தை யுணராத இராக்ஷதன் ரூபசுந்தரியின் வார்த்தையை யுண்மையெனமதித்து, அம்மணி! இந்திராப்பிரம்மாதி தேவர்களும், அஷ்டவசுக்களும் என்னுடன் யுத்தம் புரிவதற்கு வந்தெதிர்த்து என்னைத் துண்டு துண்டாக வெட்டி யெறிந்தாலும், அறுபட்ட சரீரமெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து உயிர் பெற்றுவந்து, அவர்களனைவரையுங் கொன்று எமபுரிக் கனுப்புவேன். அஃதெவ்வித மெனின்! யான் அநேகநாள் வரையினும் அருந்தவம் புரிகையில் கருணாகரன் என்முன் பிரசன்னமாகி யாது வரம் வேண்டுமென்க, யான் எனது உயிர்நிலையை யாவருங் கண்டுணரா வண்ணம் குசத்தீவிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் கீழிருக்கும் குகையில் சிங்கரூபமா யிருக்கும்படியாக வரந்தர வேண்டுமென்று கேட்க கருணாகரனும் அவ்விதமே யாகுகவென வரந்தந்தனர். ஆகையால், எனது உயிர் நிலையாகிய சிங்கம்



என்றைக்கும் வனத்திற் செல்லாமல் குகையிற்றானே ஜீவித்திருக்கும்படியாக தினந்தோறும் புலி,சிறுத்தை,யானை முதலாகிய மிருகங்களை யெல்லாம் யானே கொண்டுபோய் கொடுத்து வளர்த்து வருகிறேன். அம்மணி இவ்வளவு பத்திரமா யிருக்கும் சிங்கத்தைக் கொன்றால் யான் இறந்து விடுவேனேயன்றி, என்னை வெட்டி வெட்டி யெறிந்தாலும் இறக்கேன். நீ யாதும் விசனப்பட வேண்டாமென மொழிந்தவை யனைத்துங் கவனித்த ரூபசுந்தரி மனமகிழ்ந்து இனி அசுரனுக்கு வாழ்நாள் குறுகியதென தீர்மானித்து, ஐயா! அசுரேந்திரா இனி எனக்கு யாதொரு பயமுமில்லை யென்று காய்கனிகளைப் புசித்துக் களைதெளிந்தனள்.

இங்ஙனமிருக்க, அசுரன் தனது வழக்கத்தைப்போல மிருக மாம்ஸ பக்ஷணத்திற்காக ஆரண்யத்திற்குச் சென்ற சமயத்தில் பஞ்சவர்ணக்கிளி விருக்ஷத்தை விடுத்துக் குகையருகில் வந்து ரூபசுந்தரியைப்பார்த்து, அம்மணி! அசுரன்உயிர்நிலை யிருக்குமிடத்தைக் கேள்வியுற்றனையோ? வென்க, ரூபசுந்தரி மனோல்லாசத்துடன் புன்னகைபுரிந்து பஞ்சவர்ணக்கிளியே! அந்த மாயராக்ஷதன் உயிர்நிலையானது குசத்தீவிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் கீழிருக்கும்குகையில் சிங்கரூபமாயிருக்கிறதென்றும் அதனைக்கொன்றால் இராக்ஷதன் இறந்துவிடுவானென்றும் மொழிந்தனளென்க. பஞ்சவர்ணக்கிளி மனமகிழ்ந்து, அம்மணி நீ இனி யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று ஆலவிருக்ஷத்தின்கிளைமீதில்வந்து ரூபசுந்தரியால்கேள்வியுற்ற சங்கதியனைத்தும் கீர்த்திசேனனுக்கும், கழுகுபக்ஷிக்கும் ஆதியோடந்தமாய்ப் புகன்று இனிதாமதியாமல் யாம் மூவரும் குசத்தீவிற்கு செல்லவேண்டுமென்க. கழுகுபக்ஷி கீர்த்திசேனனைத் தனது கழுத்தின் மேலேற்றிக்கொண்டு பறந்து செல்லவும், பஞ்சவர்ணக்கிளிமுன்னதாக வழிகாட்டிக்கொண்டு குசத்தீவில்அழைத்துக்கொண்டுவந்து ஆலவிருக்ஷத்தின் கீழிருக்கும் குகையில்வசிக்கும் சிங்கத்தை கீர்த்திசேனனுக்கு காண்பித்து, இராஜபுத்திரா; இந்தசிங்கத்தை ஒரே கணையால் கொன்றுவிடுவீராகில் அசுரன் இறந்துவிடுவான். அன்றி, அஸ்திரகுறி தவறுமாகில் சிங்கம் கானகமார்க்கமாய் ஓடிப்போகும், உடனே மாயராக்ஷதன் ஓடிவந்து நம்மை யெல்லாங் கொன்றுதின்று விடுவானென மொழிந்தன. கிளியின்வார்த்தையைக் கேள்வியுற்ற கீர்த்திசேனனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து தனுசிற் கணைதொடுத்து சிங்கத்தின்மீது விடுத்துக் கொன்றனன்.

அத்தருணமே மாயாராக்ஷதன் தனது உயிர் நிலைக்கு அபாயம் வந்ததென, மனமிரண்டு தனது வாசஸ்தானமாகிய குகையருகில் வந்து திடீரென வீழ்ந்து மரணமடைந்தனன். இவன் இவ்விதமாய் இறந்து விட்டதைக் கண்ணுற்ற ரூபசுந்தரி மனந்தாளாமல் ஆ! ஐயனே தாய்தந்தையைப்போல என்னை ஆதரித்திரட்சித்த மெய்யனே என் பசிவேளையறிந்து காய்கனிகளைக்கொண்டுவந்து கொடுத்து காப்பாற்றும் துய்யனே இவ்வையகத்தி லுனக்கும் மரணம்வாய்ந்ததோ? வென சற்றுநேரம் விசனப்பட்டு மனதைரியத்துடன் இனி நமது மணாளன்வந்து நம்மை அழைத்துக்கொண்டு போவாரென மதித்திருந்தனள்.

இங்ஙனம் நிற்க, இராக்ஷதன் உயிர்நிலையாகிய சிங்கத்தைக் கொன்ற கீர்த்திசேனன் கழுகுபட்சியின் கழுத்தின்மீது ஆரோகணித்து இனி நாம் நாவலந் தீவிற்குச் செல்வோமென, பஞ்சவர்ணக்கிளி வழிகாட்டிக்கொண்டு கழுகுபட்சியுடன் பறந்து வருகையில் நாவலந்தீவின் குகையருகில் இமோற் பர்வதம்போல வீழ்ந்திருக்கும் இராக்ஷச பிரேதத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்து, கீர்த்திசேனனால் தகனஞ் செய்வித்து, அந்த கானகத்தில் இரண்டு மூன்று நாளிருந்தபின்பிறகு கழுகுபட்சி கீர்த்திசேனனையும், ரூபசுந்தரியையும் தனது கழுத்தின்மீ தேற்றிக்கொண்டு பஞ்சவர்ணக்கிளியுடனே தமது வாசஸ்தானமாகிய கானகத்தி லிருக்கும் ஆலவிருக்ஷத் தருகில் கொண்டுவந்து விடுத்து இனி நீங்கள் உமது தேசத்திற்குப் போய்விடுவீரெனப் புகன்று பறவை யினங்களுடன் கழுகுபட்சியும் பஞ்சவர்ணக் கிளியும் மகோல்லாசமா யிருந்தன.

அப்பால், கீர்த்திசேனனும் ரூபசுந்தரியும் பக்ஷிகளின் பேருதவியால் பிழைத்தோமென, மனமகிழ்ந்து பட்சிகளிடம் சிலவு பெற்றுக்கொண்டு தமது தேசத்தை நாடி கானகமார்க்கமாய் வருகையில் வழியிலேயிருந்த நந்தவனத்தைக் கண்டு அங்ஙனம் சென்று தாமரைப் பொய்கையி லிறங்கி ஸ்நானபான நேமநிஷ்டையாவு முடித்துக்கொண்டு அங்ஙனம் அடர்ந்து செழித் திருக்கும் விருக்ஷங்களில் பழுத்துள்ள கனி வர்க்கங்களைப் பறித்துப் புசித்து நந்நீருந்திக் களைதெளிந்து, குளிர்ந்த காற்று வாடை வீசுதற் கினிமை பொருந்திய வசந்த மண்டபத்தில்வந்து கீர்த்திசேனன் சற்றுநேரம் சயனித்து நித்திரை செய்வதாயினன், ரூபசுந்தரியோ வெனின்



தனக்குற்ற கால வித்தியாசத்தை நினைந்து நினைந்து மனவிசாரத்துடனிருந்தனள். அத்தருணம், ஓர் சிங்கமானது இவ்விருவரையும் கொன்றுதின்பதற்கு ஆவலாய் வருவதைக்கண்ணுற்ற ரூபசுந்தரி மனமிரண்டு, ஆ! பிராணநாதா! நம்மைக் கொல்வதற்கு சிங்கம் வருகின்றதென கூச்சலிடுகையில், நித்திரைபுரியும் கீர்த்திசேனன் விழித்தெழுந்து தனது அருகிலிருந்த தனுசிற்கணை தொடுத்து சிங்கத்தைக் கொன்றுவிட்டுத் தன்பத்தினியுடனே வனசஞ்சாரியாய் வருகையில் கீர்த்திசேனனுக்கு அநேகநாள்வரையினும் அறுசுவையதார்த்த சுகபோஜனமின்றி காய்கனிகளைப் புசித்துக்கொண்டு வந்த இளைப்பினால் நாவரண்டு திரேகம்மெலிவுற்று தாகவிடாய் அதிகரித்தமையால் பூமியிற் சோர்ந்து வீழ்ந்தனன். ரூபசுந்தரி திடுக்கிட்டு பிராணநாதா! இஃதென்ன விபரீதமென்று, மனவிசாரத்துடன் ஜலங்கொணரும்பொருட்டு ஆற்றுக்குச்செல்லுந்தருணம்வழியில் ஓர்புலியானதுகொன்றுதின்பதற்குத் துரத்திக்கொண்டு வருகையில் ரூபசுந்தரி மனமிரண்டு ஓடுந்தருணம் ஓர்வேடன் கரத்திற் றனுசேந்திஅம்மார்க்கத்தில்வந்து புலியைக்கொன்றுவிட்டுபெண்ணே! நீயார்? இங்ஙனம் தனியாய் வருவதற்குக் காரணம்யாதென வினவுதலும், ரூபசுந்தரி வேடனைப்பார்த்து அண்ணா! யானென் மணாளனுடன் வருகையில் அவர் தாகவிடாயாற் சோர்ந்து பூமியில் வீழ்ந்தனராகையால் யான் ஜலங்கொணரும்பொருட்டு ஆற்றுக்குவந்தேன். அத்தருணம், இந்தப்புலி என்னைக் கொல்வதற்குத் துரத்திக்கொண்டு வந்தது, என்றனள். வேடன் சற்றுயோசித்து இந்தப் பெண்ணை எவ்விதமாயினும் தந்திரமாய் அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று நினைந்து, பெண்ணே! நீ இந்தக் கானகத்திலிருந்தால் மிருகங்கள் கொன்று தின்றுவிடும். என்னுடன் வருவாயாகில் யானுன்னை என்மனையாளினும் சிரேஷ்டமாய் மதித்து, உனக்கு யாதொரு குறைவும் வராமல் காப்பாற்றுவேனென புகன்றதை யுணர்ந்த ரூபசுந்தரிசினந்து அடா! பாபி! நீ இவ்விதமாய் பாஷிக்கவேண்டாமென்று பற்பலவிதமாய்த் தடுத்தும் வேடன் கிஞ்சிற்றேனும் மனதில் வசிக்காமல் தன்னுடன் வரும்படியாக அதட்டியும் மிரட்டியும் பயங்கர வார்த்தைகளால் பாஷித்துக்கொண்டிருக்கையில் காஸ்மீகர் தேசத்தரசனாகிய சூரசேன னென்பவன் தனது சேனைகள்சூழ வேட வில்லியருடனே கானகத்தில் வந்து வேட்டையாடிக்கொண்டிருந்து, களைதெளியும்பொருட்டு நந்நீருந்த ஆற்றுக்கு வருகையில் வேடனானவன் மனமிரண்டு, ஆ! ஹா மோசமாயினவே இந்தப் பெண்ணின் மணாளன் இதோ வந்துவிட்டனனே;

இனி நாம் இங்ஙனமிருந்தால் ஆபிக்கபாயமெய்தூமென மனமிரண்டு ஓடிவிட்டனன்.

இங்ஙனம் நிற்க, சூரசேனன் ரூபசுந்தரியைப் பார்த்து, பெண்ணே! நீ இந்த கானகத்தில் தனிமையாய்வந்த காரணமென்னவென்று, வினவுதலும் ரூபசுந்தரி மனவிசாரத்துடன் இன்னுமென்னென்ன ஆபத்து நேரிடுமோ? வென, மதித்து, ஐயா! எனது மணாளனுடன் யான் எமதுதேசத்திற்குச்செல்கையில் அவர் தாகவிடாயால் சோர்ந்து வீழ்ந்தமையால், யான் ஜலங்கொணரும் பொருட்டு ஆற்றுக்கு வந்தேனெனப் புகன்றனள். சூரசேனன் ஆச்சர்ய மடைந்து பெண்ணே! யானுன்னைக் கண்டவுடனே மிகவும் ஆசை யதிகரித்து உன்னை விட்டுப்பிரிய மனமில்லாதவனா யிருக்கின்றேன். நீ என்னுடன் நகரத்திற்குவந்து என்னைத் திருமணம் புரிந்து பெருமையாய் இருப்பதற்கு யாதுந் தடை சொல்லவேண்டா மென்றனன். இவன் மொழிந்தவை யனைத்துங் கேள்வியுற்ற ரூபசுந்தரி சற்றுயோசித்து நமக்கு வருவதெல்லாம் ஆபத்தா யிருக்கின்றனவே யென மனமெலிந்து, இனிநாம் இவன் மனதிற் கிசைந்த விதமாய்ச் சம்மதித்தாற் போலிருந்து சமயம் பார்த்து தப்பித்துக்கொண்டு வந்து விடுவதே உத்தமமெனமனதில்நினைந்து, அரசே உமதுஇஷ்டமென தந்திரமாய்ப் புகன்றனள். சூரசேனன் மனமகிழ்ந்து தனது மந்திரியுடனே ரூபசுந்தரியையும் அழைத்துக் கொண்டு தனது சேனைகளிருக்கும் கூடாரத்தில் வந்தனன். அத்தருணம் ரூபசுந்தரி இது தான் தருணமென்று அரசே! நாம் இராஜவம்ஸமாகையால், நமக்குத் திருமணமாகும் வரையிலும் யான் தனிமையான கூடாரத்தி லிருக்கவேண்டு மென்றனள். மர்மமுணராத சூரசேனனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, ரூபசுந்தரிக்குத் தனிமையான கூடார மேற்படுத்தி அதில் இருக்கும்படியாக மொழிந்தனன். அத்தருணம் யாவரும் சுயம்பாகிகளாற் சமைத்த அறுசுவைப் பதார்த்தத்துடன் அன்னம்புசித்து, அவரவர்க்கிசைந்த கூடாரத்தில் சயனித்து நித்திரை செய்தனர்.

இங்ஙனம்நிற்க, ரூபசுந்தரி அன்றிரவுமுழுதும் நித்திரையின்றி விழித்திருந்து, ஒருவருக்கும் தெரியாமல் கூடாரத்தை விடுத்து ஆரண்யமார்க்கமாய்ச் சென்றுவிட்டனள். அருணோதயத்தில் யாவரு மெழுந்திருந்து தமது தேசத்திற்குச் செல்வதற்காக



பிரயாணமாகுந்தருணம் கூடாரத்திலிருந்த ரூபசுந்தரியைக்காணாமையால் சூரசேனன் மனவிசாரத்துடன் கானகமெங்ஙனுந்தேடியுங் காணாமையால் மனம்வெறுத்துத் தனது சேனைகளுடன் காஸ்மீர் தேசத்திற்குப்போய் விட்டனன். ரூபசுந்தரியானவள் தனது மணாளனாகிய கீர்த்திசேனனை வனமெங்ஙனுந் தேடிக்கொண்டிருந்தனள். அந்

இங்ஙனம், ரூபசுந்தரியின்நிலைஇவ்வளவுபயங்கரஆபத்தாயிருக்கையில், தாகவிடாயால் நித்திரைசெய்திருந்த கீர்த்திசேனன்விழித்துக்கொண்டு தன்பத்தினியைக்காணாமையால்மனமிரண்டு மிருகங்களேதேனும் கொன்றுதின்று விட்டதோ? அசுரர்கள் யாவரேனும் அழைத்துக்கொண்டு சென்றனரோ? வென, மனவிசாரத்துடன் ஆரண்யமெங்ஙனுந்தேடிக்கொண்டு வருகையில் வழியிலெதிருற்ற வனத்தில் ரூபசுந்தரியைப்பார்த்து, ஆ! மாதே! எங்ஙனஞ் சென்றனையோ? வென்க, ரூபசுந்தரி தான் ஜலங்கொணரும்பொருட்டு ஆற்றுக்குச்சென்றது முதல் ஆதியோடந்தமாய்த் தனக்கு நேர்ந்த ஆபத்தனைத்தும் விபரமாய் மொழிந்தனள். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற கீர்த்திசேனன் ஆச்சர்யமடைந்து வெகுஜாக்கிரதையுடனே ரூபசுந்தரியைஅழைத்துக்கொண்டுதன் தேசத்திற்குச்சென்று தனது தாய் தந்தையரைப் பணிந்து, நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்றனன். மைந்தன் வார்த்தையைக் கவனித்த சித்திரசேனமஹாராஜன்மனமகிழ்ந்திருந்தனன். ரூபசுந்தரியின் தாய்தந்தையரும் இவர்கள் வருகையைத் தெரிந்து சத்தியபுரிக்குவந்து, தமது புத்திரியையும் மருகனையுங்கண்ணுற்று சந்ததமும் மைந்தரைப்பெற்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பீரென, ஆசீர்வதித்து சிலநாட்சென்றபிறகு தமது தேசத்திற்குச் சென்றனர்.

அப்பால் ரூபசுந்தரி தனது மணாளனுடன் யாதொரு மனக்கவலையுமின்றி மனோல்லாசமாய் வாழ்ந்திருந்தனள். ஆகையால், பதிவிரதா சிரோன்மணியாகிய இராஜபத்தினி! நாம் யாதொன்றுக்கும் அஞ்சாமல் பகவத்யானமா யிருப்போமாகில் கருணாகரன் கிருபாநோக்கத்தால் நற்காலம் வரும்போது நமது தேசத்திற் சென்று முன்போற் சுகமாயிருப்போ மென்றனள். பதிவிரதனியின் வார்த்தையைக் கேள்வியுற்ற இராஜபத்தினியும் ஒருவிதமாய் மனதைரியத்துடனிருக்க, இருவரும் ஆரண்யவாசிகளாய்ப் பசிவேளைக்குக்காய்கனிகளைப் புசித்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இவர்களிருவரும் ஆதரவின்றிய ஆபத்தாயிருக்கையில், இராஜாங்க கலகஞ்செய்த நயவஞ்சகனாகிய காலசித்தனானவன் பிரதாபனால் வெட்டுப்பட்ட காயத்துடனே கானகமார்க்கமாய் வருகையில் வழியிலேதிருப்ப நந்தவனத்தில் இராஜபத்தினியும்,மதிவதனியும் திக்கற்ற பரதேசிகளைப்போல மனந்திகைத்து,வசந்தமண்டபத்திலிருப்பதைப் பார்த்து மனமகிழ்ந்தவனாய், இனிநாம் இந்த இராஜபத்தினியுடன் தந்திரமாய்ப் பேசிக்கொண்டிருந்து, நமதுமனதிற்கிசைந்த மதிவதனியை எவ்விதமாயினும் அழைத்துக்கொண்டு செல்வோமெனும் பேராசையால் மனமகிழ்ந்து வசந்த மண்டபத்தில்வந்து இராஜபத்தினியுடன் பாஷிப்பதாயினன்.

காலசித்தன்:—அம்மணி! உமக்கும் இத்தகைய கஷ்ட நிஷ்டூரம் வாய்ந்ததோ? அம்மா! தெய்வச்செயல்அவ்விதமாயின்,நம்மால் தடுக்க வசமோ? அன்றியும், நமது அரசனுக்குற்ற ஐஸ்வரியத்தைக் கண்ணுற்று பொறாமை வகித்து போர்க்கோலத்துடன் வந்தெதிர்த்த துரோகியாகிய நித்தியானந்தன் சேனைகளையெல்லாம் என்னாலானவரையிலும் சின்னபின்னமாய்க் கொன்றும், அமர்க்களத்தில் நிற்கமுடியாமல் மனமிரண்டு ஓடிப்போகின்றவர்களையெல்லாம் கணைகளாற் சித்ரவதைசெய்துதுரத்தியடித்தும், முடியாமற் போச்சுது, அஃதேனெனின்! நமது, அரண்மனை, சேனாதிபதியாகிய பிரதாபனென்பவன் மனதைரியமின்றி ஓடிப்போயினன். அத்தருணம்,நித்தியானந்தன் சேனைகள் முனைந்து அமர்செய்ய நமதுசேனைகள் நிர்வகிக்கமுடியாமல்அமர்க்களத்திற்றானேஉயிரிழந்தனர். ஆயினும்,யான்மாத்திரம் தப்பித்துக்கொண்டு"வெள்ளம்வருமுன்னே அணைபோட்டுக் கொள்வதுபோல" ஆற்றொணா ஆபத்தெய்துந் தருணம் அரசனைக் காப்பாற்றுதல் நலமென்று மனந்துணிந்து அமர்க்களத்தில் மரணமூர்ச்சையாய் விழ்ந்திருந்த மனோற்சாகனைத் தூக்கிக்கொண்டு நகர்புறத்திலிருக்கும் நந்தவனத்தில் வந்து நன்னீர் கொடுத்துக் களைதெளிவித்து மறுநகரிற்சென்று ஜீவிப்போமென அழைத்து வருகையில், அகஸ்மாத்தாய் அவரைப் பிரிந்துவிட்டேன்! ஆயினும் அவர் எந்தவழியாய்ச் சென்றனரோ? காண்கிலேனே யென்று மனவிசாரத்துடன் வருகையில், தெய்வாதீனமாய் இங்ஙனம் உம்மிருவரையுங் கண்ணுற்று மன



மகிழ்ந்தேன். ஆகையால், யான் இந்த மதிவதனியைக் காந்தர்வ விவாகம் செய்துகொண்டு உங்களுடனே யானும் எந்ததேசத்திலாகிலும் வந்து ஜீவித்திருப்பேனாகில். அப்பால், மனோற்சாக மஹாராஜனும் வருவார்.

என, நயவஞ்சகனாகிய காலசித்தன் தந்திரமாய் பாஷித்துக்கொண்டிருப்பதை அருகிலிருந்து கேள்வியுற்ற மதிவதனியானவள் காலாக்கினி ருத்திரன்போற் கோபாவேசத்துடன் சொல்வதாயினள்.

மதிவதனி:—அடா! பாபி! இராஜதுரோகி! உன்னாலன்றோ? இராஜசமஸ்தானத்தில் விபரீத கலகம்விளைந்து அரசரிமைக்கும் ஆபத்து நேர்ந்து இரத்தினபுரியும் அக்கினியா லெரிந்துபோனது.அன்றியும் யாங்களும் ஆதரவின்றிய பரதேசிகளைப்போல ஆரண்ய வாசிகளாய்வந்து மனவிசாரப் படுவதாயினோம். அன்றியும், இத்தருணத்தில் நீவந்து, இத்தகைய தந்திரவார்த்தை பாஷிப்பது வெகுவேடிக்கை யன்றோ? அற்பமதிவாய்ந்த துர்க்குணத்தினனே.

காலசித்தன்:—கண்மணி! நீ, என்னை இவ்விதமாய் நிந்திப்பது நீதியல்ல. யான் உன்மீதிற்கொண்ட ஆசையினால் உன் தமயனுக்குத் துணையாயிருந்து அவனுக்கு நேர்ந்த ஆபத்தை யெல்லாம் தீர்த்து ஆதரித்தும், பகைஞரின் குரூர பயங்கரத்தினாலுற்ற போர்க் களத்தில் சேனாதிபதியாகிய பிரதாபனால் நிகழ்ந்த அருஞ்சமரின் அஜாக்கிரதையினால் சேனைகளும் மனமிரண்டு ஓடினர். பகைஞரால் நமது தேசமும் அக்கினியா லெரிந்துவிட்டது. அரசனுக்கும் பிராணபயமானது. ஆயினும் அத்தருணம் எனது சாமர்த்தியத்தினால் அருஞ்சமரிற்சிக்கி இறப்பதற்குச் சித்தமாயிருந்த உனது தமயனாகிய மனோற்சாகனைக் காப்பாற்றினேன். இஃதுண்மை யனைத்துங் கவனித் துணராமல் என்னை வீணாக நிந்திப்பது நியாயமோ? அன்னநடையே! மின்னற்கொடியே! அமிர்த மொழியே!

என, பற்பல விதமாய்த் தனது மாயஜால சமர்த்தினால் பாஷித்துக்கொண் டிருக்கையில், மனோகர்வத்தினால் வரும் விதி

யைக் கவனியாமல் பெருங் கலகத்தானுற்ற அருஞ்சமரில் நிர்வகிக்க முடியாமல் மனமிரண்டு, ஓடிப்போன மநோற்சாக மஹாராஜன் தனது தேசம் அக்கினிபற்றி யெரிந்து போனதினால் தனது மனைவியும், சகோதரியும் இறந்துவிட்டனரோ? வென, சந்தேகக் கலவரத்துடன் மனவிசாரமுற்று ஆரண்ய மார்க்கமாய் வருகையில், வழியிலெதிருற்ற நந்தவனத்தில் தனது சகோதரியும், பத்தினியும் காலசித்தனுடனே பாஷித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியத்துடன் அருகில் வந்தனன். இவ்வணம் மணாளனைக் கண்ணுற்ற இராஜபத்தினி மனமகிழ்ந்து ஆ! பிராணநாதா! நமது காலவித்தியாசத்தினால் இரத்தினபுரியும் அக்கினிபற்றி யெரிந்து சேனைசயின்யங்களையு மிழந்து, ஒருவரை யொருவர் பிரிந்து ஆதரவற்ற பரதேசிகளைப்போல விசனப்படுவதாயிற்றேயென கண்ணீர்ததும்பக் கதறியழுதனள்.

மநோற்சாகன்:—பெண்ணே! உலகிற் ஜனித்த மாந்தர்களுக்கு சுகதுக்கம் வாய்ப்பது தெய்வாதீனமன்றி மனச்செய லன்றென்க நீதிநூற் சாஸ்திரங்க ளனைத்தும் முறையிடுகின்றனவே யெனினும், அநுபவத்திலுங் காண்கிறோம், அஃதெவ்வித மெனின்! யான் ஆதியில் இராஜாதிபதியாக மந்திரி, பிரதானியர்சூழ அரண்மனையில் சிம்மாசனத்தி லமர்ந்து அரசிமைபுரிந்துவெகு மேன்மையா யிருக்கையில், ஊழ்வினை யனைத்தும் ஒன்றாய்த் திரண்டுருண்டு மனிதரூபமாய் வந்தாற்போற் றோன்றிய இந்தத் துர்க்குணனாகிய காலசித்தன் என்னிடத்தில்வந்து அநேகவித விதமாகிய மித்திரபேதங்கள் செய்து, என் மனதைக் கலைத்து, இராஜாங்ககலகஞ்செய்து, அருஞ்சமரெய்துந்தருணம் புறமுதுகிட்டோடிப் போயினன். இவனைப் பின்றொடர்ந்து பிரதாபனும் ஓடிப்போயினன். சேனைகளும் நிர்வகிக்க முடியாமல் மரணமுற்றனர்கள், சிலர் உயிரிருந்தாற் போதுமென தப்பித்துக் கொண்டு ஓடிப்போயினர். அத்தருணம், என் மனந் திகிலுற்று இனி தாமதித்தால் ஆவிக்கபாய மெய்துமென, மனமிரண்டு உங்களிருவரையும் அழைத்துக்கொண்டு மறுதேசஞ் செல்வதற்கு அரண்மனையில் வந்து பார்த்து உங்களைக் காணாமலும், இரத்தினபுரி அக்கினிபற்றி யெரிவதையும் கண்ணுற்று நீங்களிருவரும் இறந்துவிட்டீர்களென மதித்து, மனவிசாரத்துடன் வனவாசியாய் வருகலாயினேன். ஆயினும் நீங்கள் எவ்விதமாய்த் தப்பித்துக்கொண்டு வந்தீர்கள்.



இராஜபத்தினி:—பிராணநாதா! நமது தேசத்தில் அருஞ்சமராற் கலகமெய்தி பகைஞரால் இரத்தினபுரி அக்கினிபற்றி யெரியுந் தருணம், யாங்களிருவரும் உயிரிருந்தாற் போதுமென, உலகாசையை வெறுத்துவனவாசியாய்வந்து காய்கனிகளைப் புசித்துக்கொண் டிருக்கையில், இந்த வஞ்சகனாகிய காலசித்தன் வந்து, உமது சகோதரியாகிய இந்த மதிவதனியை காந்தர்வ விவாகம் புரிவதற்குத் தந்திர வார்த்தைகளைப் பாஷித்துக் கொண்டிருந்தனன்.

என, காலசித்தன் மொழிந்தவை யனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ச் சொல்லிக்கொண் டிருக்கையில் மநோற்சாகன் ஆற்றொணா ஆச்சரிய மடைந்து, பெண்ணே! இந்தத் துர்க்குணத்தினன் குருகுலத்தினரைக் கெடுத்த ஜகுனியைப் போன்றவனென்று, எனது சகோதரியாகிய மதிவதனி புகன்றவையனைத்தும் உண்மையாய் முடிந்ததென, மனவிசாரமுற்று அடா காலசித்தா! எங்களை இவ்விதமாய் திக்கற்ற பரதேசிகளைப் போல திகைத்துத் தயரப்படும்படியாய் மித்திரபேதஞ்செய்த துர்க்குணத்தினனே! நீ இராஜபத்தினியி னிடத்தில் மொழிந்தவையனைத்தும் உண்மையோவென வினவுதலும், வஞ்சகன் வாய்பேசா மவுனமுற்று யாதுஞ் சொல்வதற்கு நாவெழாமல் நாணத்துடன் மநோற்சாகன் முகத்தைக் காண்பதற்கு அஞ்சுதலுற்றவனாய்த்தலைகுனிந்த வண்ணமே பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தனன்.

இங்ஙனம், இவர்களிலே, இவ்வித பரிதாப விபரீத வேடிக்கையா யிருக்கையில் நித்தியானந்தனால் அனுப்பிய சேவகர் இரத்தினபுரி வேந்தனாகிய மநோற்சாகனைத் தேடிக்கொண்டு சகல தேசங்களிலுந் திரிந்துங் காணாமையால், மனவிசாரத்துடன் ஆரண்ய மார்க்கமாய் வருகையில் வழியிலெதிருற்ற நந்தவனத்தில் இராஜபத்தினி, மநோற்சாகன், காலசித்தன், மதிவதனி இந்நால்வரும் பாஷித்துக் கொண்டிருப்பதைப்பார்த்து மனமகிழ்ந்தவராய் அருகிற்சென்றனர். இவர்களைக் கண்ணுற்ற மநோற்சாகன் மனமிரண்டு ஐயா! நீங்கள் யாவர்? உம்மைப் பார்த்தால் அரண்மனைச் சேவகரைப் போலிருக்கின்றனவே யென, வினவுதலும், அவர்கள் இவனை நோக்கி! அரசே! யாங்கள் கேகயதேசத்தின் அரண்மனைச் சேவகரென்று சொன்னதைக் கேள்வியுற்ற மநோற்சாகன் மனமிரண்டு திரேகம் நடுக்க

மெய்தி சாகும் வரையிற் சஞ்சல மனுகிற் சந்தோஷிப்ப தெந்நாளென்பதுபோல ஆபத்தனைத்தும் அடுக்கடுக்காய்வந்து அலைச்சற்படுத்துகின்றனவேயென மனவிசாரமெய்தி "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாய்த் தோற்றுவதுபோல" திகிலுற்றவனாய் அமர்க்களத்தில் நிர்வகிக்கமுடியாமல் தப்பித்துக்கொண்டு ஓடிவந்த நம்மைப்பிடித்துக்கொண்டு வருவதற்கு நித்தியானந்தன் சேவகரையனுப்பினனென்று திகைத்துமனமிரண்டு பேசுதற்கும் நாவெழாமல் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதனன்.

இங்ஙனம், இரகஸ்யமர்ம மின்னதென்றுங் கவனித்துணராமல் கலவரத்துடன் விசனப்படும் மனோற்சாகனைக் கண்ணுற்ற சேவகர் நகைத்து, அரசே! நீர் யாதும் மனவருத்தமெய்தாதீர். நீங்களிவ்விதமாய் நகரை இழந்து பரதேசிகளைப்போல வனவாசியாய்ச் சென்றதை உமது முதல்சகோதரி கேள்வியுற்று மனந்தாளாமல் உம்மைக் காணவேண்டுமென்று தனது மணாளனாகிய நித்தியானந்தனிடம் புகல, அவ்வேந்தனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து உம்மீது கருணைவாய்ந்து நீங்கள் எங்ஙனமிருந்தாலும் தேடிப்பார்த்து அழைத்துக்கொண்டு வருகவென, எங்களை அனுப்பினர். இனி நீங்கள் யாதொரு மனக்கவலையுமின்றி வருவீராகில் முன்போலவே உமது தேசத்தில் அரசுரிமை புரிந்து மனோல்லாசமாயிருப்பீரென, சாந்தமனதுடனே புகன்றனர். சேவகர் வார்த்தையைக் கேள்வியுற்ற மனோற்சாகன் ஒருவிதமாய் மனதைரியமுற்றுத் தனதுபத்தினியையும், சகோதரியாகிய மதிவதனியையும் அழைத்துக்கொண்டு சேவகருடனே செல்லுந் தருணம், காலசித்தன் யோசித்து அடடா! இஃதென்ன விபரீதம் நித்தியானந்தன் மைத்துனவாஞ்ஞையால், மனோற்சாகனை சேவகரால் வரவழைத்து சமாதானமாயினும், நாமல்லவோ? விரோதியாயினோம். அன்றி, நாம்செய்த மித்திரபேதமனைத்தும் யாவருக்குந் தெரிந்த விஷயமன்றோ? வென, மனந்திகைத்து இனி நாம் தாமதித்தால் ஆபத்தெய்துமென, ஆரண்யமார்க்கமாய்ச் செல்வதாயினன்.

இங்ஙனம், "சூதும்வாதும் வேதனைசெய்யுமென்பதுபோல" நயவஞ்சகத்தினால் வெகுசஞ்சலமாய்ந்துதீராத் துயரத்தால்விசனப்படலாயினமே யென்று திகைத்து மனமிரண்டு மனோற்சாகன்



முகத்தைப் பார்ப்பதற்கும் நாணமுற்றவனாய்த் தலைகுனிந்தவண்ணமே செல்வதைக்கண்ணுற்ற சேவகர் அவனையும் தம்முடன்வருகுவீரென் றழைத்தனர். காலசித்தனோ, வெனின் தனது குற்றத்தை முற்றிலுங் கவனித்தவனாகலின் இனி நாம் தப்பித்துக்கொண்டு செல்வதற்கு நன்முயற்சியுடன் தந்திர வார்த்தையால் இவர்களை ஏமாற்றிவிட்டு போகவேண்டுமென, மதித்துத் தந்திரமாய் பாஷிக்கலாயினன்.

காலசித்தன்:—ஐயா! யான் எனது அன்பிற்குரிய மனோற்சாகன் மீதிலிருந்த விஸ்வாசத்தினால் "இவருக்கு ஆபத்து நேர்ந்து இரத்தினபுரியும் அக்கினிபற்றி யெரிந்து போனபடியால்" இராஜஸ்திரீகள் தனிமையாய் கானகத்தில்வந்திருப்பதை யான் கேள்வியுற்று, இவர்களுக்கு யாதொரு துன்பமும்வராமற் காவலாயிருந்து காப்பாற்றி இரக்ஷித்து மனோற்சாக மஹாராஜன் வந்தவுடனே அவரிடம் வொப்பித்துவிட்டு இனி யானெனது வீட்டுக்குப் போகிறேன். நீங்கள் இம்மூவரையும் வெகுஜாக்கிரதையாய் அழைத்துக்கொண்டு செல்வீர்.

மனோற்சாகன்:—அடா! துன்மார்க்க நயவஞ்சக மித்திரபேத துர்க்குணத்தினனே கிஞ்சிற்றேனும் தயை தாக்ஷண்யமின்றி நீ உபாயமாய் ஜீவிப்பதற்குத் தந்திர வார்த்தையால் என்மனதைக் கலைத்து வெகுவித கலகங்கள்விளைத்து, மந்திரி பிரதானியரையும் துரத்திவிட்டு எனதுகுருநாதன்மீதும் பழிசுமத்தி அவரையும் கொலைபுரியும்படியாய்ப் புகன்றனை. அன்றியும், எனது மைத்துனனாகிய நித்தியானந்தனெனக்குமதிபுகட்டுவதற்கு வந்திருப்பதை எனக்குத்தெரிவிக்கதனதுமந்திரிபிரதானியரையனுப்புதலும், அவர்கள்மீதும் பழிசுமத்தி என்னால் அவர்களைக் கொலைசெய்யப்படியாகத் தந்திரமாய்க் கலகஞ்செய்தனை. அத்தருணம் உனது மோசயெண்ணத்தைக் கவனியாத மதியீனனாகிய யான் உன் மனப்போற் கலகம் விளைத்த குற்றத்தினால் நேர்ந்த அமர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடிப்போனேன். அத்தருணம், யானெனது சேனைகளையும் இழந்து போர்க்களத்தில் நிர்வகிக்க முடியாமல் எனது பத்தினியையும், சகோதரியையும் அழைத்துக்கொண்டு மறுநகரிலேனும் சென்று ஜீவித்திருப்போமென அரண்மனைக்குச் செல்கையில், பகைவரால் இரத்தினபுரி அக்கினிபற்றி எரிவதைக்கண்ணுற்று, என்பத்தினி

யையும், சகோதரியையும் காணாமல், மனமெலிந்து, அக்கினியால் எரிந்து உயிரிழந்தனரோ? வென, விசனமுற்று ஆற்றொணா மனவிசாரத்துடன் ஆரண்யமார்க்கமாய் வருகையில். தெய்வாதீனமாய் இவ்விருவரும் உயிருடன் இங்ஙனம் வந்திருப்பதைக் கண்ணுற்ற வஞ்சகனாகிய நீ இவர்களைத் தந்திரமாய் ஏமாற்றி எனக்குஉண்மையுள்ள உயிர்த்தோழனாயிருந்து அருஞ்சமரில் யான் பகைஞர்விடுத்த அஸ்திரங்களால் மரணமூர்ச்சையாய் போர்க்களத்தில்வீழ்ந்து விட்டதாகவும் என்னைத் தூக்கிக் கொண்டுவந்து காய்கனிகளை யருந்தச்செய்து களையாற்றினதாகவும்புகன்றனையே. இவையனைத்தும் உண்மையோ? அன்றியும்காலவித்தியாசத்தினால்காசினியைவிடுத்துவெகுவித கஷ்ட நிஷ்டூரத்துடன் கானகத்தில் வந்திருக்குந் தருணம் மதிவதனியை காந்தர்வ விவாகம் செய்துக் கொள்வதற்குத் தந்திரமாய் நின்மனதிற் கிசைந்த பொய்மொழி யனைத்தும் புகன்றதும், இந்த சேவகரைக் கண்ணுற்று ஆபத்தெய்துமென, தப்பித்துக்கொண்டு ஓட்டம் பிடிப்பதற்கு இத்தருணம், மொழிந்த மோசவார்த்தையையும்கவனிக்கில் வெகு வேடிக்கையன்றோ?

என, மொழிந்தவை யனைத்துங் கவனித்த சேவகரனைவரும் வியப்புற்று, அட்டா! காலசித்தா உன்னைஇனி யாங்கள் இலேசாக விடுவதில்லையென பற்களை நெறுநெறு வெனக் கடித்து காலசித்தனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கயிற்றாற் பிணைத்துக் கட்டிக்கொண்டு மனோற்சாகன், இராஜபத்தினி மதிவதனி இம்மூவரையும் அழைத்துக்கொண்டு ஆரண்யத்தை விடுத்து கேகய தேசத்தையணுகி அரண்மனையில்வந்து, சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் நித்தியானந்தனைப் பணிந்து, அரசே உமது ஆக்ஞைப்படியே மனோற்சாகமஹாராஜனையும், இவர் பத்தினி, சகோதரி சகிதம் கானகத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்தோம். இவன் யாவனெனில், இவர்கள் குடிக்கு எமனாய்த் தோன்றிய வஞ்சக காலசித்தனென்று, நிகழ்ந்த சங்கதி யனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய் புகன்றனர்.

இங்ஙனம், நித்தியானந்தன் பத்தினியாகிய ஞானவல்லியானவள் தனது சகோதரனும், சகோதரியும், உயிருடனே



வந்தனரென் கேள்வியுற்று, ஆற்றொணா மனக்களிப்பெய்தி தனது மாளிகையில் வரவழைத்து, ஆ! அண்ணா! ஆ! என்சகோதரியாகிய மதிவதனியென, கூச்சலிட்டு ஆனந்தக் கண்ணீர்சொரிந்து எனது அன்பிற்கிசைந்த சகோதரர்களே! ஆ! என் மதனி! நீங்கள் இவ்விதமாய்த் திக்கற்றவர்களைப்போல வனவாசியாய்ச் செல்வதற்கும், பிரமன் விதித்தனனோ வென; மனவிசாரத்துடன் அம்மூவரையும் ஸ்நானபானஞ்செய்வித்து போஜனசாலையில்வரவழைத்து அறுசுவை பதார்த்தத்துடன் திவ்யான்ன சுகபோஜனம் புசிக்கச்செய்து நவரத்தினகசிதமாய்த்துலங்கும் ஆடையாபரணங்களையணிந்துக்கொள்ளச் செய்து மனோல்லாசமாய் குளிர்ந்த காற்று வீசுதற்கினிமை பொருந்திய வசந்த மண்டபத்தில் வந்துட்கார்ந்து க்ஷேமலாபங்களனைத்தும் விசாரித்துக்கொண் டிருக்கையில் மனோற்சாக மஹாராஜன் காலசித்தனால் விளைந்த அநியாய விபரீத கொடுவழக்கினாலுற்ற ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்றனன்.

இங்ஙனம், மனோற்சாகன் புகன்றவை யனைத்தும் கேள்வியுற்றோரனைவரும் ஆச்சரியமெய்தி, அம்மம்மா, இம்மாநிலத்தில் காலசித்தனைப்போன்ற வஞ்சக துர்க்குணமமைந்த பாவிகளும் ஜனித்துளரோ? வென வியப்புற்று, மனோற்சாகனைப் பார்த்து, அரசே! இனி நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் இனி உமக்கு நற்காலம் வந்தமையால் உமது மைத்துனர் உம்மை அழைத்து வரும்படியாய் புகன்றனர். ஆகையால், நாளையதினம் காலசித்தன் குற்றத்தை இராஜ சமஸ்தானத்தில் விசாரித்து அவனுக்குகந்த தண்டனை விதித்து, உம்மை முன்போலவே, இரத்தினபுரியைப் பரிபாலனஞ் செய்யும்படியாக கிருபை செய்குவர் அஞ்சேலென தைரியம் புகன்று, யாவரும் அவரவ ரிருப்பிட மேகினர்.

அப்பால், பகலவன் மறைந்து அந்திப் பொழுதானவுடனே மனோற்சாகன் நித்தியானந்தன் முதலானோ ரனைவரும் சந்தியாவந்தன ஜெபதப முதலானவை யனைத்தும் முடித்துக் கொண்டு போஜனசாலையிற்சென்று சுயம்பாகிகளால் வட்டித்திருக்கும், கார்த்தல், புளித்தல், உவர்த்தல், இனித்தல், கைத்தல், துவர்த்தலென்னும் அறுசுவைப் பதார்த்தத்துடன் திவ்யான்னம் புசித்து

சந்தனம், புனுகு, ஜவ்வாது, பன்னீர், கஸ்தூரி முதலாகியவாசனைத் திரவியங்களைத் திருமேனியி லணிந்து மனோல்லாசமாய் அவரவர்க் கிசைந்த மலரணை மஞ்சத்தில் சயனித்திருந்தனர்.

இங்ஙனம், நிற்க, அன்றிரவில் யாவரும் அவரவர்க் கிசைந்த மலரணை மஞ்சத்திற் சயனித்து, அருணோதயத்தில் நித்திரை தெளிந்தெழுந்து தாமரைப் பொய்கையிற் சென்று ஸ்நான பான நேமநிஷ்டையாவும் முடித்துக்கொண்டு இனிமைசேர் கனி வர்க்கங்களும் நாவுக்கினிய பலகார பக்ஷணங்களும் புசித்துக் களை தெளிந்து இராஜ சமூகத்தில்வந்து அவரவர்க் கிசைந்த ஆசனத்தில் வீற்றிருக்கையில், நித்தியானந்த மஹாராஜனும் தனது மந்திரி பிரதானியருடன் அரண்மனையில்வந்து சிம்மாசனத்தில் அமர்ந்து தேச விசாரணை புரிந்த பின்னர் மனோகர்வத்தினால் வெகுவித ஆபத்திற் சிக்கிய தனது மைத்துனனாகிய மனோற்சாகனிடம் நயவஞ்சக மோச தந்திரமாயிருந்து இராஜாங்க கலகஞ்செய்த துர்க்குணத்தினனாகிய காலசித்தனெனும் குற்றவாளியை அழைத்து வருகுவீரென றுக்ஞாபித்தனன். அரசன் வார்த்தையைக் கேள்வியுற்ற சேவகரும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து, சிறைச்சாலையி லிருக்கும் காலசித்தனை அழைத்துக்கொண்டு அரண்மனையில் வருகலாயினர்.

இங்ஙனம் நிற்க, இராஜ சமஸ்தானத்திலுள்ள மந்திரி பிரதானியரனைவரும் இராஜாங்க கலகஞ்செய்த காலசித்தன் முகத்தைப் பார்த்து, "ஆ! ஹா! இந்தப் பாதகனாலன்றோ மனோற்சாகன் குடி முழுகிப்போனது இனி இந்தப் பாவியைச் சித்ரவதை செய்து கொன்றாலும் தோஷமில்லையென பேசிக்கொண் டிருக்கையில் நித்தியானந்தன் தனது மைத்துனனாகிய மனோற்சாகனைப் பார்த்து சொல்வதாயினன்.

நித்தியானந்தன்:—அரசே! நீவிர் சகல சாஸ்திரபுராண நூன்முறை பலவுங் கற்றுணர்ந்த மன்னனாயிருந்தும் சற்றேனும் மதியின்றி அற்பசிநேகிதம் பிராணசங்கட மென்ப தறியாமல் அறிவின்மையால் தன்னைத்தானே புகழ்ந்து, நீயே தேவனென்றும், ஆலயங்களிலுள்ளவை யனைத்தும் கல்லுகளென்றும் அவைகளைப் பூசித்தல் தீதென்றும், பற்பலவாய் இகழ்ந்து பேசினதுமன்றி,



நமது பெரியோர்களாலியற்றிய தேவாலயங்களையும் இடித்துப் பாழாகச்செய்ததையே இஃதனைத்து முன் அரசுரிமைக்கழகோ? அன்றியும், இவ்வித அநியாயஞ்செய்வது நீதியன்றென்க, மதியுரைத்தசமஸ்தான மந்திரிபிரதானியரையுந் துரத்தினதுமன்றி, சற்குருவையும் கொலைசெய்யத் துணிந்ததையே, ஈதுனக்கு கெடுதிகாலத்திற் கியன்ற துற்புத்தியோ? அன்றியும், ஈதனைத்தும் கேள்வியுற்ற யான் உனக்கு மதிபுகல்வோமென நின் தேசத்தில்வந்து எனது மந்திரி பிரதானியரை யனுப்புதலும், அத்தருணம் நீ தேவனைப்போல சிம்மாசனத் தமர்ந்திருக்கவும் இந்தக் காலசித்தன் முதலான துஷ்டர்க ளனைவரும் உனக்குபூஜைகள் போட்டு தந்திரமாய் மாய்ஜால தோத்திரஞ் செய்யுந்தருணம் தூதாகவந்த மந்திரி பிரதானியரைக் கொலவதற்கு முயன்று நின்கரத்திற்றாங்கிய வாளினால் அநேகரைக் காயப்படுத்தினதும் நீதியோ? அன்றி, நீ தேவனாயிருந்தால் இவ்விதமாய்த் துயரப்படுவானேன் இவை யனைத்தும் எனக்கு விபரமாய்ப் புகல்வாய்.

மனோற்சாகன்:—அரசே! நீவிர் புகன்றவை யனைத்தும் உண்மையே. ஆயினும் எவ்வளவு கல்வி கற்றுத் தொல்லுலகில் வாழ்ந்தாலும் வரும் விதியைத் தடுக்கவசமோ? "கேடுவரும்போது மதி கெட்டுவரு மென்னுந் தன்மையாய்" எனது துர்க்காலத்திற்கியன்ற விதமாய் இந்தப் பாதகனாகிய காலசித்தன் என்னிடம்வந்து என்மனதைக் கலைத்து இவ்வித ஆபத்தினால் யான் துயரமுட்டச் செய்தனன். அன்றியும், "கலைப்பார் கலைத்தாற் கல்லுங் கரையு மென்பதுபோல" இந்த காலசித்தன் துர்ப்போதனையால் யானு மிவ்வளவு கஷ்டநிஷ்டூர மடைந்து துயரப்படலாச்சுது (என்று இவனால் நிகழ்ந்தவை யனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்று) இதைக் குறித்து நீர் என்மீது கோபம்புரிவது சரியல்ல. அஃதேனென்னில் அநேக நாள்வரையிலும் அருந்தவம் புரிந்து பெரும்புகழுடன் மந்தவரப்ரசாதப்பெற்ற இரணியனும் துன்மந்திரிகளால் அழிந்தனன். சகல சாஸ்திர புராண இதிகாசமனைத்தும் மனதில் வசித்து சிவமே துணையென் றினுதினமும் பகவத்யானமாயிருந்த இராவணனும் துன்மந்திரிகளால் தனது பந்தத்வ மித்திர புத்திரர்களுடன் இரணக் களத்தில் மரணமடைந்தனன். இவ்விதமே அநேகர் துர்ப்பர்களின் துர்ப்போதனை

யால் அறிவழிந்து மதிகுலைந்து ஆற்றொணா ஆபத்திற்சிக்கி அரசுரிமையும் இழந்து ஆவியிழந்தனரே. மூடனாகிய யான் இத்தகைய அற்பமதி வாய்ந்து துயரனுபவித்தேனென மனவிசார மெய்துவது, தம்மைப்போன்ற உத்தமர்கட்கு சரியென மதிக்கப்படுமோ? ஆயினும் இராஜ ராஜாக்கள் பூஜிதம்பெறும் மஹாராஜேஸ்வரா! யான் அறியாத்தன்மையாற் செய்த குற்றத்தை பெரிதென்றெண்ணாமல், "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" யென்பதுபோல என் குற்றத்தை மன்னித்து காத்தருளல்வேண்டும்.

என, காலசித்தனால் தனக்கு நேர்ந்த அநியாய ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்றனன். இங்ஙனம், இவ்விதமாய் மனோற்சாகன் புகன்றவை யனைத்தும் கேள்வியுற்ற நித்தியானந்தன் ஆச்சரியமுற்று அருகிலிருக்கும் மித்திரபேத சிநேகிதத் துரோகியாகிய காலசித்தனைக் கண்ணுற்று கோபாக்கினி ருத்திரன்போற் சினந்து பல்லை நறநறவென்க் கடித்து மீசை துடிதுடிக்க கண்விழி சிவந்து பெருமூச்சுவிட்டு சொல்வதாயினன்.

நித்தியானந்தன்:— அடா! பாபி! நீ இவ்வித குரூர துர்க்குணத்தினால் இராஜாங்கக் கலகஞ்செய்து அநேக விதவிதமாகிய பாபகிர்த்தியங்களைப் புரிந்து அநேக மனிதருயிர்கட்கு எமனாய் வந்தனையே அடா காலசித்தா! அவனியிற் ஜனித்த மாந்தர்களின் வாழ்நாள் குறுகிய பின்னர் தனது தூதர்களையேவி மனிதருயிர்களைத் தனது எமபுரிக்கு வரவழைப்பதனால், அவனுக்குக் காலனென்றும் பெயர் வாய்த்தது. ஆனால், நீ மனிதரூபமாயிருந்து மதியின்றிய மனோற்சாகனை ஏமாற்றி இராஜாங்க கலகஞ்செய்து இரத்தினபுரியின் சேனைசைந்யங்களை யெல்லாம் எமபுரிக்கனுப்புதற்குப் பிறந்த பாதகனாகையால் உனக்குக் காலசித்தனென்ன பெயரமைந்தது. ஆகையால், நின் பெயருக்கமைந்த கலகஞ் செய்தனையே, காதகா! பாதகா! இனி உன்னை சித்ரவதைசெய்து கொன்றாலும் தோஷமில்லையன்றோ?

என, பற்பலவாய் இகழ்ந்து நிந்தித்து அருகிலிருந்த மந்திரியினால் கொலைஞரை வரவழைத்து, இந்த துர்க்குணத்தின



னாகிய காலசித்தனைச் சித்ரவதைசெய்துக் கொன்று விடுவீர்களென் றாக்ஞாபித்தனன். அவர்களும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து, இராஜாங்க கலகஞ்செய்த பாதகனாகிய காலசித்தனைக் கொலைக்களத்தில் அழைத்துக்கொண்டுசென்று அரசன் ஆக்ஞையின்படி சித்திரவதைசெய்து அவன் சரீரத்தை நாய் நரி கழுகுகட்கு விருந்திட்டு மனோல்லாசமாய் அரண்மனையில் வந்து நித்தியானந்தனுக்குப் புகன்றனர்.

இங்ஙனம் நிற்க, நித்தியானந்தன் தமது குருநாதனைப் பணிந்து சுவாமின் எனது மைத்துனனாகிய இந்த மனோற்சாகன் உமக்குச் செய்த அபசாரத்தை மன்னித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும் ஆசிரியன் மனமகிழ்ந்து, அரசே! துர்க்குணத்தினர் நட்பை வகித்தவரெவரும் இவ்விதமே ஆபத்தெய்துவராதலின், மனோற்சாகனும் அவ்விதமே வெகு கஷ்டநிஷ்டூரமுற்றனன். ஆகையால், இனி இவனை முன்போலவே இரத்தினபுரியின் அரசனாக நியமிப்பது உத்தமமென்க. ஆசிரியன் வார்த்தையைக் கேள்வியுற்ற நித்தியானந்தனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்தனன். அப்பால் அந்தப்பொழுதானவுடனே இராஜசபை கலைந்து யாவரும் அவரவரிருப்பிடமணுகினர். நித்தியானந்தனும், தனது மைத்துனனாகிய மனோற்சாகனுடன் நந்தவனத்திற்சென்று சந்தியாவந்தன ஜபதப முதலியவை யனைத்தும் முடித்துக்கொண்டு மனோல்லாசமாய் மாளிகையில்வந்து போஜன சாலையிற்சென்று சுயம்பாகிகளால் வாழையிலையில் வட்டித்திருக்கும் அறுசுவைப் பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் புசித்துத் தாம்பூலந்தரித்து தமக்குரிய மலரணை மஞ்சத்தில் சயனித்திருந்தனர்.

அப்பால், பொழுது விடிந்தபின், யாவரும் நித்திரை தெளிந்தெழுந்து நந்தவனத்திற் சென்று காலைக்கடனைக் கழித்து தாமரைப் பொய்கையி லிறங்கிஸ்நானபான நேமநிஷ்டை யாவும் முடித்துக்கொண்டு போஜன சாலையில்வந்து மதுரமாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களும்பலகார பக்ஷணங்களும் புசித்து நன்னீரருந்திக் களிதெளிந்து யாவரும்மனோல்லாசமாய் அரண்மனைக்கு வருகலாயினர். நித்தியானந்தன் தனது மந்திரி பிரதானியருடனே மனோற்சாகனையும் அழைத்துக் கொண்டு அரண்

மனையில்வந்து சிம்மாசனத்தி லமர்ந்து தேசவிசாரணை புரிந்தபின் நித்தியானந்தன் தனது முதன் மந்திரியின் வசத்தில் அரசுரிமையை யொப்பித்து, தான் வருகிறவரையினும் இராஜாங்கத்திற்கு யாதொரு பழுதுமின்றி குடிகளிடத்திற் கருணைவாய்ந்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலன னென்றவனியோர் புகழ்ந்துரைப்ப அரசுரிமை புரிகுவாயென் றாக்ஞாபித்து, தனது குருநாதன்சஹிதமாய் மனோற்சாகனையும், இராஜஸ்திரீகளையும் அழைத்துக்கொண்டு இரதகஜதுரகபதாதிகளுடன் தனது கேகயதேசத்தைவிடுத்து பிரயாணமாகி ஆரண்யமார்க்கமாய்ச்சென்று இரத்தினபுரியின் நகர்ப்புறத்தில்வந்து சேனைகளனைவரையும் அவரவர்க்கிசைந்த கூடாரத்தில் வீற்றிருக்கச் செய்து தான்வந்திருக்கும் செய்தியை அரண்மனையிலிருக்கும்சேனாதிபதிக்குத் தெரிவிப்பாயென்று ஓர் சேவகனை அனுப்பினன்.

இங்ஙனம் நிற்க, நித்தியானந்தன் வார்த்தையைக் கேள்வியுற்ற சேவகன் அரண்மனையில்வந்து அங்ஙனமே மந்திரி பிரதானியருடன் சிம்மாசனத்தி லமர்ந்து அரசுபுரியும் சேனாதிபதியை நோக்கி, ஐயா! கேகய தேசத்தின் அரசனாகிய நித்தியானந்த மஹாராஜன் தமது சேனா சைன்னியங்களுடன் இந்நகர்ப்புறத்தில் வந்திருக்கின்றனரென்று உமக்குத்தெரிவிக்கும்படியாக ஆக்ஞாபித்தனரெனச். சேவகன் மொழிந்தவை யனைத்துங் கேள்வியுற்ற சேனாதிபதி மனமகிழ்ந்து, மந்திரி பிரதானியருடன்வந்து நகர்ப்புறத்திலிருக்கும் தமது இராஜனாகிய நித்தியானந்தனையும்மதியின்றியமனோற்சாகனையும் குருநாதனையும் எதிர்சென்றழைத்துக்கொண்டுவந்து அரண்மனையில் வீற்றிருக்கச்செய்து அவர்களுடன்வந்தசேனாசைன்னியங்களையும் நகரத்தில் அழைத்துக்கொண்டுவந்து அவரவர்க் கிசைந்த விடுதியமைத்து வீற்றிருக்கச்செய்து சுயம்பாகிகளால் அறுசுவைப் பதார்த்த திவ்யான்ன சுகபோஜன நல்விருந்தளித்து யாவரும்புசித்துக் களைதெளிந்தபிறகு நித்தியானந்தனானவன் தமது குருநாதன் மனோற்சாகன் மந்திரி பிரதானியருடனே அரண்மனையில்வந்து அவரவர்க்கிசைந்த ஆசனத்திலமர்ந்து ஒருவரை யொருவர் க்ஷேமலாபம் விசாரித்துக்கொண்டு மனோல்லாசமா யிருக்கையில் நித்தியானந்தன் சேனாதிபதியைப் பார்த்து சொல்வதாயினன்.

நித்தியானந்தன்:—சிருலாவிய வீரசூர பராக்ரம மிகுந்து தாரணியோரால் புகலருங் கீர்த்திவாய்ந்த சேனாதிபதி இந்நகரத்தின்



கன், அறிவின்மையால் அற்பருடன்
மமதைமேலிட்டு மனோகர்வத்தினால்
று மனதில்வகித்து, குரூரபயங்கர அதி
ல் இத்தகைய ஆற்றொணா ஆபத்தெய்தி
து தன்பத்தினிசகோதரியுடனே ஆரண்ய
ற பரதேசியைப்போல சித்தம் மெலிந்து,
வப் பதார்த்த திவ்யான்ன சுகபோஜனமின்றி காய்
ரங்களைப்புசித்து வனவாசியா யலைந்துதிரிந்தனன். ஆபி
அக்சூவன் பரிதாபநிலையைக் கேள்வியுற்ற என் மனந்தாளா
ல் அரண்மனைச் சேவகர்களையனுப்பி இவர்களைத் தேடிப்பார்
த அழைத்துவருகவென ஆக்ஞாபித்தேன். அவர்களும் அவ்
விதமே நன்கென சம்மதித்து கானகவாசிகளாயிருந்த இவர்களைத் தேடிப்பார்த்துங் காணாமையால் மனவிசாரத்துடன்வருகையில் தெய்வாதீனமாய் ஓர் நந்தவனத்தில் காலசித்தனுடன் பாஷித்திருந்த இவர்களைக் கண்ணுற்று, அழைத்துக்கொண்டு வருகலாயினர். அப்பால், யான் இவர்கள் வாக்குமூலத்தைச் சரியாய் விசாரிக்கையில் காலசித்தனே கலகத்திற்குக் காரணமாகிய குற்றவாளியென நிர்மாணித்து, கொலைஞரால் அவனை சித்திரவதைசெய்து கொலைபுரியச் செய்தேன். ஆயினும், இந்த மனோற்சாகன்மீது யாதொரு குற்றமுமில்லையாகையால், இனி, இவனையே இந்நகரத்திற்கு அரசனாக விளங்கச்செய்ய வேண்டுமென மனதிலெண்ணினேன். ஆகையால், நின்கருத்தென்னமோ? எனக்கு விபரமாய்ப் புகல்வாய்.

என, நித்தியானந்தன் புகன்றவை யனைத்துங் கேள்வியுற்ற சேனாதிபதி மனமகிழ்ந்து, அரசே! உமது ஆக்கினைக்குட்பட்ட யான் உமது மனம்போற் சம்மதிப்பேனன்றி மறுத்துரைக்குந் திறமை வாய்ந்தவனல்லவென மிகவும் வணக்கத்துடன் மொழிந்தவைகவனித்துணர்ந்த நித்தியானந்தன் இவனுடையநற்குணத்தைப் பற்றி மனோல்லாசமாய்ப் புகல்வதாயினன்.

நித்தியானந்தன்:—(புன்னகைபுரிந்து,) சேனாதிபதி நீ தரணியோர் புகலரும் கீர்த்தி வாய்ந்த வீரசூரபராக்ரம விஜயகேசரியென, சிறப்புற்றோங்கிய திரணையிருந்தும் உனக்கித்தகைய சாந்தமனதமைந்திருப்பதால் நின்போற் சற்குணர் மனிதராய்ப் பிறப்பது

மிகவும் சிரேஷ்டம். ஆயினும் முன்போற் பரிபாலனஞ்செய்து வதனியைத்திருமணம்புரிந்து இ யிருக்கவேண்டும்.

என, நவின்றமை யனைத்துங் கவனி மகிழ்ந்து அவ்விதமே நன்றெனச் சம்மதித்த நித்தியானந்தன் ஓர் சுபதினத்தில் மனோற்சாகமஹாராஜனை ச லங்காரஞ்செய்வித்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்தும், இ கோலக் காத்திற்றந்து சேனாதிபதியை முதன்மந்திரியாக நி இன்னும் சிலருக்குமமைந்தவர்களை மந்திரிபிரதானியராக நி பதினெட்டுவித மேளவாத்தியமும் முழங்க, பவர்ணன வேத வேதியராசீர்வதித்து அக்ஷதைத்தூவ தனது குருநாதன் கரத்தினால் மனோற்சாகமஹாராஜனுக்கு நவரத்தின கசித மணிமகுட சிற் சூட்டி யாவரும் மனோல்லாசமெய்தினர்.

அப்பால், நித்தியானந்தனெனவன் மனோற்சாகமஹாராஜனுக்கு வேண்டிய மதியுரைத்து, இனிமே லித்தகைய அற்பகுணம் வகிப்பது நன்றல்லவென, ஆக்ஞாபித்து, அரண்மனைஜோதிடர்களால் "சனாதிசேனாதிபதியாயிருந்து மனோற்சாகனுக்கு முதன்மந்திரியா கிய விஜயசேனனுக்குச் மதிவதனிக்கும்" இராசிபொருத்த இலக்கினத்திற்கியன்ற ஓர்சுபதினத்தை ஏற்படுத்தி நகரோர் மனமகிழ திருமணமுகூர்த்தம் நடாத்தி வேதவேதியராசீர்வதித்து அக்ஷதைத் தூவ விஜயசேனன் கரத்தினால் மதிவதனியின் கழுத்தில்மங்கிலியஞ் சூட்டச்செய்து யாவரும் ஆசீர்வதித்தனர். அப்பால், கலியாணத்திற்குவந்த விருந்தினரனைவரும் போஜனசாலையிற்சென்று சுயம்பாகிகளால்வாழையிலையில் வட்டித்திருக்கும் மதுரமாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களுடனே பலகாரபக்ஷண அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனத்துடன் நல்விருந்தருந்தி தாம்பூலம் பெற்றுக்கொண்டு அவரவரிருப்பிடமேகினர். நித்தியானந்தனும் தனது பத்தினியாகிய ஞானவல்லியுடனே சிலநாள்வரையினும் இரத்தினபுரியிலிருந்து அப்பால், மனோற்சாகமஹாராஜனிடம் விடைபெற்றுக்கொண்டு இரத கஜ துரக பதாதிகளுடனே தனது கேகயதேசத்திற்குப்போ இரத்தினபுரியில் நிகழ்ந்த சுபசெய்தி யனைத்தும் அரண்மனை



பவரிடம் புகன்று மனோல்லாசமாய் சிம்மாசனத் தமர்ந்து அரசுரிமை புரிவதாயினன்.

இங்ஙனம், நிற்க, மனோற்சாகமஹாராஜன் தனது மனக்குரங்கின் சேஷ்டையால் "கண்டதேகாக்ஷி கொண்டதேகோலமென்பதுபோல" மனம்போனபோக்கிற்கு வழியொன்றில்லையென்னுந் தன்மையாய் அற்பருடன் நட்பெய்தி அறிவீனத்தால் அநேக விதவிதமாகிய ஆபத்திற்சிக்கி அரசுரிமையையுமிழந்து, ஆற்றொணா மனவிசாரத்துடன் ஆரண்யவாசியாயலைந்த தூர்க்காலத்தையும், தெய்வாதீனமாய் நற்காலம் வாய்ந்து மந்திரி பிரதானியர்சூழ சிம்மாசனத்தமர்ந்து இராஜரீகம் புரிவதையும் நினைந்துநினைந்து மனோல்லாசமெய்தியவனாய், வியப்புற்று, அடடா! நாமிவ்வளவுகஷ்டநிஷ்டூரமெய்தியதற்கு மனக்குரங்கின் சேஷ்டையே காரணமென மதித்து, ஆச்சர்யமுற்றவனாயினும், இனிமேலித்தகைய அற்பகுணம் வகிக்கலாகாதென மனதிலுன்னி, முன்னம் தன்னால் இடித்துப்பாழாக்கச் செய்த ஆலயங்களனைத்தும்முன்னினும்விசேஷ அலங்காரமாய்க்கட்டுவித்து, அனுதினமும் தேவாலய திருவிழாநடாத்தி, பக்தியிற்சிறந்த பரமபாகவதர்கள், கற்றுணர்ந்த பெரியோர்கள் மனமகிழும்படியாய் தானதர்ம பரோபகாரம்புரிந்து, குடிகள்மீது கருணைவாய்ந்து ஆதி மேலோர்கட்டளையேற்று, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்து அவனி யோர்புகழ்ந்துரைப்ப, தனது ஆளுகைக்குட்பட்ட சிற்றரசர் திறை செலுத்த நிரவீரப்ரகாசமாய் இராஜரீகம் புரிவதாயினன். என், ஆசிரியன் இராஜபுத்திரனாகிய மதிவதனனுக்கு நியாயநடப்ப மனைத் தும் போதித்தும் இன்னும் சில ஞானமார்க்கத்தையும் போதிப்பதாயினன்.

ஆசிரியன்:—இராஜபுத்திர! ஆவதும், அழிவதும் ஆண்டவன்செயலென மதித்திடினும் ஊழ்வினையே காரணமாகும். அன்றியும், துன்மார்க்கனாவதும், சன்மார்க்கனாவதும், யோக்கியனாவதும், அயோக்கியனாவதும், லோபியாவதும், பாபியாவதும், தருமசீலனாவதும், உத்தமனாவதும், ஞானியாவதும், அஞ்ஞானியாவதும், தீபியாவதும், யோகீஸ்வரனாவதும் ஊழ்வினையாலன்றி மற்றவையென மதிப்பது மதியீனமன்றோ? சகலசாஸ்திர புராண நான்மறை யனைத்துங் கற்றுணர்ந்தவ வருந் தமது மனம்போன அடக்கும் மார்க்கம் கற்றுணர்ந்து

திகைப்பதாயினேனென அநுதினமும் திடசித்தம் வாய்ந்தவ ராய் மனதை சன்மார்க்கத்திற் செலுத்துவதற்கு முயன்றிடி னும் அவர்கட்குத் தெரியாமலே துர்க்குணங்களில் பிரவேசிக் குமென்றனர்.

இவ்விதமாய் ஆசிரியன் போதித்தவை யனைத்துங் கவனித்து ணர்ந்த இராஜபுத்திரனாகிய மதிவதனன் சற்றுயோசித்து தன்மனதிலுற்ற சந்தேகத்தை எவ்விதம் நிவர்த்திசெய்துக் கொள் வோமெனஆலோசித்துக்கொண்டு மவுனநிலையாயிருந்தனனேயன்றி மற்றொன்றும் பேசுதற்கு நாவெழாமல் தலைகுனிந்தவண்ணமே பூமி யைப்பார்த்துக்கொண்டு அசைவற்றிருந்தனன். இங்ஙனம் சாஸ்திர சந்தேக கலவரத்தினால் மனந்திகைத்திருக்கும் மதிவதனனைப்பார்த் து ஆசிரியன் இராஜபுத்திரா நீ இன்னும் யாது சந்தேகமெய்தலாயி னையோ? யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாயென்க மதிவ தனன் வினவுதலாயினன்.

மதிவதனன்:—சுவாமின்! நீவிர் மொழிந்தவை யனைத்தும் இனிய சாஸ்திரசாராம்ஸங்க ளனைத்தும் கவனித் துணர்ந்த என்மனம் பிர்ம்மானந்த சாகரத்தில் மூழ்கியதெனினும் ஓர் விபரீத சந் தேகமென்னை கலவரப்படுத்துகின்றன. அஃதியாதெனின் காற்றி னும் வேகத்தன்மைவாய்ந்தமனப்பேயை வசப்படுத்துதற்குயா தாமொருவேறுமார்க்கமுமுளதோ? அன்றி,இல்லையோ?வென, சிந்திப்பதாயினேன். அன்றியும் குலாலன் திகிரியைப்போன்ற மனதிற்கு ஓர் நிலையில்லையெனினும் மனிதரூபமாய் ஜனித்த அநேகமஹான்கள் ஆசாபாசத்தையொழித்து அஞ்ஞானத்தை யகற்றி மெய்ஞ்ஞானசிலராய் விளங்கி யோகானந்தமாய் சரீர சம்பந்தமற்று நான், நீ, அவன், இவ்வென பேதமற்றவராய் சகலமும் தானாகவே விளங்குவதற்கும் மனமே காரணமென ம்நிந்திடினும், அம்மனிதரூபமாய் ஜனித்தவர்களிற்றானே சிற் சிலர் மாத்திரம் தேகாபிமானம் வகித்தவராய் என்சரீரம், என் சுற்றம், என்மனைவி, என்மைந்தரென பந்தத்வம்வாய்ந்த சிந் தையாளராய் அஷ்டவித துர்க்குணங்களிலுஞ்சிக்கி அலைச்சற் பட்டு ஊழ்வினையால் வந்தெய்திய வாழ்நாள் குறுகிய பின்னர் அந்தகன் வந்தர்வந்தழைத்திடினும் ஆசாபாசத்தின் விபரீத சேஷ்டையால் சரீரத்தைவிட்டுப் பிரிய மனமின்றி பந்தத்வம்



வாய்ந்தவர்களாய் சுற்றத்தார் முகத்தைப்பார்த்து மனைவிமைந் தரை எவ்விதம்விட்டுப் பிரிவதென விசனமெய்துவாரேன். அன்றியும், யாவற்றிற்கும் மனதே காரணமாயின் மேற் சொன்ன மஹான்களைப்போற் சகலரும் சிறந்திலரேதேன்? உலகம் மாயையால் சூழப்பட்டதெனினும், மனதும் விபரீதசேஷ்டை புரிவதெனின் மாந்தர் ஜீவன்முக்தராய் விளங்குவதெவ்விதம் சுவாமின்!பற்பலவிதவிதமாகிய அலகைக்கூட்டங்களை அடக்கு வதற்கு அநேகமாந்திரீக ரிருப்பினும் மனப்பேயை அடக்கும் மாந்திரீகர் பாதிலத்திற் ஜனித்திலரோவென, சிந்திப்பதா யினேன்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! நீ வினவிய கேள்வின் இரகஸ்யமா மமோ? அறிவினாலுணரத்தக்கதன்றி வேறன்று, அஃதெவ்வித மெனின்! மாயையின் குரூரத்தினால் அஞ்ஞான இருளிற்சிக்கி, கோபாக்கினியாலுற்ற பாபமென்னும் புகையாற் றிகைத்து, அஷ்டவித துர்க்குணசாகரத்தில் வீழ்ந்து, ஞானமார்க்கத்தின் கரைகாணாமலலைந்த வித்தியானந்தனென்பவன், சற்குருவின் ஞானோபதேச பிரகாசத்தினால் அறிவானந்த பார்வையுடன் அஞ்ஞானவிருளைக் கடந்து மெஞ்ஞான கரையிற்சேர்ந்து, ஜோதிசொரூபமாய் விளங்கினாற்போலஆசிரியன்போதனையிர்த ஜோதிசொரூபமாய் விளங்கினாற்போல மனிதர்களெத்தகைய அறிவில்லா அஞ்ஞா னாத்தை வினவிய மனிதர்களெத்தகைய அறிவில்லிய அஞ்ஞா னிகளாயினும் ஞானசொரூபமாய் விளங்குவரென வேதாகம புராணஇதிகாசங்களினும் முறையிடுகின்றன.

என, குருநாதன் புகன்றவை யனைத்துங் கவனித் துணர்ந்த மதிவதனன் சற்று நிதானித்து, சுவாமின்! நீவிர் அநுக்ரகம் புரிந்த போதனையிர்த சாராம்ஸமனைத்தும் மனதிற்கொண்ட யான் புளிதீனாயினேன், ஆயினும், அஞ்ஞானசாகரத்தில்மூழ்கி ஆற்றொணா அலைச்சலுற்ற வித்தியானந்தனென்பவன் எவ்விதமாய் பாசபந்த மற்ற ஜோதிசொரூபமாய் விளங்கினனோ? வென, யான் சந்தேக மெய்தலாயினேன். ஆகையால், என்மனதிற் றோன்றிய ஐயமற உப தேசம் புரிகுவீரென ஆசிரியன் புகல்வதாயினன்,

ஆசிரியன்:—இராஜபுத்திரா! நான்முகன் சிருஷ்டியிற் சிறந்தவை யென்க, காசினியோரால் புகலருங்கீர்த்திவாய்ந்த பாதகனட்த்

திற் பெருமைபொருந்திய கோசலைதேசத்தில் வசித்துவரவும்
ஓர் குடியானவனுக்கு யாதொரு மனக்கவலையுமின்றி தனவந்
தனாயிருக்கையில் தனது சந்ததிபெருக ஜனித்த மைந்தனாகிய
வித்தியானந்தனை மிகவும் பெருமையாய் வளர்த்துக்கொண்டி
ருக்கையில், மிகவும் செல்வச்செருக்குற்ற வித்தியானந்தன்
தன்னைப்போற் சிறந்தவருலகிலில்லையென்க மதோன்மத்தனா
யிருக்கையில், வினையால்வரும் ஊழ்வினைப்பயனைக் கருதாது
சம்சார சாகரத்திலமிழ்ந்தி ஆற்றொணா துயரடைந்து பந்தத்வ
ஆசாபாசமென்னுஞ்சந்தைக்கூட்டத்திற்சிக்கி அலைச்சற்பட்டுத்
திகைத்துக்கொண் டிருக்கையில், அந்நகரத்தில் ஓர்மஹான்
ப்ராப்தமாகி அஞ்ஞானமார்க்கத்தில் அலைச்சற்படும் மானிடர்
கட்கு ஞானோபதேசஞ்செய்து முக்திநிலையை அனுக்ரகஞ்
செய்கின்றனரென, கேள்வியுற்று; அம்மஹான் வீற்றிருக்கும்
சந்நிதானத்திற் சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்துபணிந்து,
சுவாமின்! அடியேனுக்குத் தீராக்கவலைமேலிட்டு ஆறாத்துயரதிக
ரித்து மனதையோர்வழியில் நிற்கவொட்டாமல்பாசபந்தமென்னை
வாதித்து பேதித்து சம்சார சாகரத்தினின்றுங் கரையேறா
மற் பற்பலவிதமாகிய துயருறச்செய்கின்றதென, அஞ்ஞான
மார்க்கத்திற்கியன்ற தன்மனதிற்கிசைந்தவாறுபுகல, துறவி புன்
னகைபுரிந்து அப்பா! நீசொல்வதை கவனிக்கில் வெகுஆச்சரிய
மாயிருக்கின்றதே. அஃதேனெனின் நீயே ஆசாபாசத்தைக்
கைப்பற்றி விடுவதற்குமனமின்றியவனாய்த் துர்க்குணங்களைத்
துணையாய்வகித்து சம்சாரசாகரத்தில் வீழ்ந்து கரையேறுவ
தற்கும் மனமின்றியவனாயிருந்தும், கேட்போர் வியப்புறுந்
தன்மையாய்ப் பாஷிக்கின்றனையேயென, மொழிதலும்; வித்யா
னந்தன் சந்தேகித்து,சுவாமின்!நீவிர்புகன்றவை; என்மனதைக்
கலவரப்படுத்துகின்றனவே. அஃதேனெனின் ஆசாபாசங்க
ளென்னைவிடாமல் சம்சாரசாகரத்தில் வீழ்த்தித் துயருறச்
செய்கின்றதெனின்,யானே அவற்றிற்குக் காரணமாயிருக்கின்
றேனெனப் புகன்றீரே. இஃதென்ன விந்தையென்றிசைப்ப.
தபசி கிருபானோக்கமெய்தி வித்தியானந்தா! நின்மதியைச் சீர்
திருத்தஞ்செய்து கவனிப்பாயாகில் உன் நிலை உனக்குத்தெரியு
மென்க. வித்யானந்தன் சற்றுநிதானித்து ஞானவடிவே நின்
பாததூளியாகிய எளியேன் புனிதனாகும்பொருட்டு உண்மை
நிலையை உணர்த்துதல் வேண்டுமென பிரார்த்தித்தலும்; அம்



மஹான் அவ்விதமே நன்கெனச்சம்மதித்து, வித்தியானந்தன்
மீது கிருபைகூர்ந்து,அப்பா!நின் நிலையைத் தெரிவிக்குதும் வரு
குவாயென, ஆரண்யமார்க்கமாய் அழைத்துச் செல்கையில்
வழியிலெதிருற்ற ஓர் தாமரைப்பொய்கையின் கரைமீதிலுள்ள
ஓர் ஆலவிருக்ஷத்தின் கிளை வளைந்து அத்தடாகத்திற்கு நேராயி
ருப்பதைக்கண்ணுற்ற. அம்மஹான் வித்தியானந்தனைப்பார்த்து
அப்பா!நீ இந்த விருக்ஷத்தின் மீதேறி தடாகமத்தியில் வளைந்
திருக்கும் அந்தக் கிளையை இரண்டு கையினாலும் பற்றித்
தொங்கிக்கொண் டிருப்பாயாகில் நின்மனதிலுற்ற சந்தேகம
னைத்தும் ஐயமற நிவர்த்தியாகுமென்றிசைப்ப, வித்தியானந்த
னும் அவ்விதமே நன்கெனச்சம்மதித்து,விருக்ஷத்தின்மேலேறி
தடாகமத்தியில் வளைந்திருக்குங்கிளையைப் பிடித்துக்கொண்டு
வவ்வால் பக்ஷியைப்போல தொங்கிக்கொண்டிருந்தனன். அத
தருணம் அம்மஹான் வித்தியானந்தனைநோக்கி அப்பா! விரு
க்ஷத்தை நீ பிடித்துக்கொண்டிருக்கின்றனையோ? உன்னை விரு
க்ஷம் பிடித்துக்கொண் டிருக்கின்றனவோவென்று வினவுதலும்,
வித்தியானந்தன் தபசியின்திருவடிகளை மனதிற்றுதித்து, சுவா
மின்! யானே விருக்ஷத்தின்கிளையைப் பிடித்துக்கொண் டிருக்
கின்றேனென்னலும், தபசி கிருபானோக்கமெய்தி கரத்தைவிடு
வாயென்க. வித்தியானந்தன் பற்றிய கிளையை திடீரெனவிடுக்க,
தடாகத்தில்வீழ்ந்து கழுத்தளவுஜலத்திலநின்று இருகரங்கு
வித்து ஞானியைத்தொழுதனன். அவர் ,வித்தியானந்தா! நீ ஜலத்
திலிருக்கின்றனையோ? உன்னை ஜலம் பிடித்திருக்கின்றதோ?
வென, வித்தியானந்தன் மனமகிழ்ந்து,சுவாமின்! யானே ஜலத்
தில் இருக்கின்றேனென்க.ஆனால் வெளியேவருவாயென்றனர்,
அத்தருணம் வித்தியானந்தனும் தாமரைப்பொய்கையினின்று
நீந்திக்கொண்டு கரையில்வந்தனன், அத்தருணம் போதகாசிரி
யன் வித்தியானந்தனைப்பார்த்து அப்பா! பந்தத்வமென்னும்
கிளையை நீபிடித்துக்கொண்டு சகலவஸ்துவுந்தனக்குச்சுதந்தர
மென்று மனதிற்பிடித்துக்கொண்டிருக்கும் வரையில் கவலை
யேயாகும், தான், தனதென்று அபிமானம் மனதில் வைத்துக்
கொண்டிருக்கும் வரையில் துன்பமே பீடிக்கும் வைராக்கிய
திடச்சித்தம் வாய்ந்தவராய் பற்றற் றிருந்தால் ஆசாபாச பந்
தத்வ மனைத்தும் அருகில் நெருங்காமல் தூரநிற்கும், அஃதெவ்
விதமெனின் விருக்ஷத்தின் கிளையை நீ பிடித்துக்கொண் டிருக்

கும்வரையில் ஒட்டிக்கொண் டிருந்த கிளையை விடுத்ததினால் விருக்ஷத்தை விட்டனை. அத்தன்மையாகவே நீ தடாகத்தி லிருக்கும் வரையில் ஜலத்தில் ஒட்டிக்கொண் டிருந்தனை. என் சொற்பிரகாரம் நீந்திக்கொண்டு கரையில் வந்தமையால் ஜலத்தையும் விடுத்து தனிமையாயினை. ஆகையால், வித்யானந்தா! அஷ்டவித துர்க்குணங்களுடன், அவனியி லுலாவித் திரிந்து மூவாசையிற்சிக்கி விகாரகுணமமைந்திருப்பதே விருக்ஷத்தின் கிளையைப் பிடித்துக் கொண்டிருந்த விபரீத சேஷ்டையாகும். பந்தத்வ புத்திர மித்திரர்களுடன் வெகுவித துயராற்றிகைத்து, மனவிசாரத்துட னிருப்பதே ஜலராசிகள் வாழும் தடாகத்தில் விழுந்திருந்த காரணமென்றுணர்வாய், எனது சொற்பிரகாரம் ஜலத்திலிருந்து நீந்திக்கொண்டு கரையில் வந்ததே குருவாக்கிய பரிபாலனார்த்தமாய் அஞ்ஞான சாகரத்திலிருந்து ஞானமார்க்கத்தில் பிரவேசித்துமோக்ஷ நிலையைப்பற்றிய காரணமாகுமென, உண்மை நிலையனைத்தும் போதித்த அம்மஹான் திருவடியை வித்யானந்தன் மனதினுற் றுதித்துப் பூசித்து அஞ்ஞானத்தை யொழித்து மெஞ்ஞான சொரூபியாய் விளங்கி முக்தி நிலை யடைந்தனன்.

ஆகையால் இராஜபுத்திரா! மனிதரூபம் வாய்ந்தவர்கட்கு மதியே பிரதான மாகையால் மதியினால் விதியையும் வென்று நற்கதியை யடைகுவரென ஆசிரியன் போதித்ததும் இராஜகுமாரனாகிய மதிவதனன் சற்றுயோசித்து சொல்வதாயினன்.

மதிவதனன்:—சுவாமின்! நீர் புகன்றவை வினவிய என்மனதில் மிகவும் சந்தோஷ மெய்தியது, அஃதெவ்விதமெனின் அற்பமதிவாய்ந்து அறிவினனென அவனியோர் பழித்தற் கேற்ப அஞ்ஞான மனத்தினராய் அஷ்டவித துர்க்குணங்களினும் சிக்கி அலைச்சற் படுவோர்களாயினும், ஆசிரியர் போதனையிர்த சாராம்சத்தால் ஆசாபாச பந்தத்வங்களையும் அகற்றி ஞான நிலையிற் பிரவேசித்து முக்திநிலை அடைகிறுரெனின், அவனியிலுலாவும் அநேகர் மதியீனத்தால் வெகு விபரீத கஷ்டநிஷ்டூரமெய்தி காலன் பதியணுகும் வரையினும் கவலையுற்று, ஐயோ! இஃதென்ன விபரீதம், மனைவி, மைந்தரின் தொந்திரவு சகிக்க



முடியவில்லையேயென ஆற்றொணு விசனமடைந்து, மனவிசார மெய்துகின்றனரே. ஆயினும், இவர்களனைவரும் யாதாமொரு போதனுசிரியர் கிருபையேற்று ஞானநிலையிற் பிரவேசிக்கலாகாதோ?

என, வினவிய இராஜபுத்திரனாகிய மதிவதனன் வார்த்தையைக் கேள்வியுற்ற ஆசிரியன் மகிழ்வடைந்து இவன் மனதை சீர் திருத்தம் செய்வதற்கு இதுவே நந்நிலையாகுமென மதித்துச்சொல்வதாயினன்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! உலகிற் ஜனித்த மாந்தர்களில் அநேக விதமாகிய குணத்தினராய்ஊழ்வினைக்கிணங்கியவிதம் ஜனிப்பர். அவர்களிற் சிலர் நாய் குணத்தினரும், சிலர் பூனை குணத்தினரும் சிலர் குரங்கின் குணத்தினரும், சிலர் பாம்பின் குணத்தினரும், சிலர் தேளின் குணத்தினரும், சிலர் கிளியின் குணத்தினருமாய் இன்னும் பற்பல மிருகபக்ஷிகளின் குணமமைந்து ஜனித்திருப்பதால் அவரவர்களின் குணத்திற் கியன்ற சுபாவத்தைப்போற் சித்தமமைந்தவராய் மதியமைந்துளர். ஆகையால் யாவரும், ஓரேமனத்தினராய் விளங்கி ஞானசிரியன்போதனையிர்த சாரத்தை யுணர்ந்து நற்கதி யடைவதற்கு மெத்தவும் கஷ்டமென் றுணர்வாய்.

மதிவதனன்:—சுவாமின்! நீவிர்புகன்ற பற்பல மிருகாதிபக்ஷிகளின் குணமமைந்த மனிதரியல்பு எத்தகையதாய்த் தோற்றுமோ? யான் கவனித் துணர்க விபரமாய் போதித் தருள்புரிவீர்.

ஆசிரியன்:—இராஜ புத்திரா! நாய் குணத்தினரியல்பு எத்தகையதெனின், தனக்கு அன்ன வஸ்திரந்தந்து ஆதரிப்பவரிடம் விசுவாசத்துடன் அவர்கட் கியன்ற ஊழியரா யிருந்து பாசபந்தத்திற்சிக்கி ஆசாபாசத்தால் அலைச்சலுற்று அந்தகன் தூதர் வந்தழைத்திடினும் சிந்தைமெலிந்து உலகாசையை விட்டுப் பிரிய மனமின்றிய ராவர். பூனை குணத்தினரியல்பு எத்தகையதெனின், நயவஞ்சக துர்க்குணத்துடன் யாவரையும் மோசஞ்செய்யக் கருதி தனது வாழ்நாள் வரையினும் குரோதத்துடன் பாபியாய்த் திரிந்து மரணமெய்துவர். குரங்கின் குணம் வாய்ந்தவரியல்பு எத்தகையதெனின் சதாகாலமும் தமது மனதை பற்பல விதமாய்ப் பிரவேசிக்கச்செய்து அஞ்ஞானிகளாய்

அலைந்து விகார குணத்தினாற்சிக்கி பற்பல துயருற்று மரண
மெய்துவர். பாம்பின் குணத்தினியல்பு எத்தகையதெனின்,
தனக்கு எவ்வளவு நன்றிபுரிந்து காப்பாற்றிடினும் விசுவாச
மின்றி ஆதரித் திரக்ஷிப்போரை சமயம் பார்த்துக் கெடுப்ப
தற்கு ஆலோசித் திருப்பதே காரணமாயிருந்து மரண மெய்
துவர். தேளின் குணத்தினியல்பு எத்தகையதெனின், தனக்
குபகாரம் செய்பவரை அத்தருணமே கெடுத்து, பற்பல துன்
பத்திலுழன்று ஆற்றொணு ஆபத்திற்சிக்கி மரண மெய்துவர்,
இராஜபுத்திரா! இத்தகைய அற்பகுண மமைந்தவர்க ளெவ்வித
மாய் ஞான நிலையெய்தி முக்திநிலை யடைகுவர். ஒருக்காலும்
முடியாதன்றோ? ஆனால் கிளியின்குண மமைந்தவர்களோ வெ
னின் தான்மனிதருபமாய் ஜனித்திடினும் நன்னிலை யடைவதற்கு
ஆவலுற்றவராய் வேதாகம சாஸ்திர புராண மனைத்தும் கற்று
ணர்ந்த கவிஞர்களாலும் தபோதனர்களாலும் ஞானிகளாலும்
போதிக்கும் ஞானாமிர்த போதன ரகஸ்யங்களைக் கொஞ்சம்
கொஞ்சமாய் கவனித் துணர்ந்து தன்னைத் தானெய்தி அஞ்
ஞானத்தையொழித்து, ஞானசிரியன் அனுக்ரகம் பூரியும்
உண்மையான ஞான நிலையை யுணர்ந்து மோக்ஷத்திற் குரித்
தாகிய முக்திநிலை யடைகுவர்.

மதிவதனன்:—சுவாமின்! யாவரும் பிர்ம்ம சிருஷ்டியிற் ஜனித்தவ
ரென சகல சாஸ்திர புராணங்களினும் முறையிடுகின்றன வெ
னினும் தாமும் திருவாய் மலர்ந்து அனுக்கிரகம் புரிந்திருக்கின்
றீரே. அவ்விதமிருக்க அவரவர்க்கு குணம் வேறுபடுவதேன்.

ஆசிரியன்:—இராஜ புத்திரா! நீ வினவியதும் உண்மையே, ஆயினும்,
மனிதர்களின் ஊழ்வினைக்கேற்ப பேதாபேத குணங்க ளமைந்
திருப்பதினாற்சுகாசுகம், பாப புண்ணியம், நல்வினை தீவினை, நீதி
யநீதி, தர்மாதர்ம மென்பவை யனைத்தும் மனிதர்களிடத்தில்
விளங்குகின்றன. ஆயினும் ஜனனங்கடோறும் புரியும் ஆசார
தர்மத்தினால் உலகிற் ஜனித்த மாந்தரின் ஊழ்வினையின்படி நற்
குணம்வாய்ந்து ஞானசிரியன்போதனாமிர்த சாரத்தையுணர்ந்து
ஆசாபாசத்தை யகற்றிபிர்மானந்தம் முக்திநிலை யடைகுவர்.

மதிவதனன்:—சுவாமின் தேவரீர் அனுக்கிரகம் புரிந்த ஞான ரகஸ்
யங்களை ஒருவிதமாய் மனதில் வகித்திடினும் மேற்சொன்ன
மானிடஜனனத்தோர் நற்கதி பெறுதற்குக் காரணமாகியஆசார



தர்மம் எவ்விதம் புரிதல். அன்றியும், எத்தகைய சமர்த்துடன்
சித்தசுத்தி வைராக்கியமாய்ப் பக்தி செலுத்திடினும், மனக்
குரங்கு ஓர் வழியில் நில்லாமல் பற்பல விதமாய்த் திரியுமென்
பது யாவருக்குந் தெரிந்த விஷய மன்றோ? அஃதன்றி பாசபந்
தங்களைச் சுட்டெரிந்து ஆசார தர்மத்தை அனுசரித்து திடச்
சித்தம் வாய்ந்து பக்தி செலுத்துவதற் கியலுமோ?

ஆசிரியன்:—இராஜ புத்திரா! மனித ஜனனம் வாய்ந்து திடமென
முக்தியடைய வேண்டுமெனின் அதிக பிரயாசையுடன் பக்தி
செலுத்தினும் முடியாததாம், ஆயினும் அவற்றிற்கொரு உபா
யஞ் சொல்கின்றேன் கவனமாய்க் கேண்மின். அஃதெவ்வித
மெனின், முக்தி நிலையை யடைவதற் கிச்சித்தோர் முதலில்
சப்தமின்றிய ஓர் மாளிகையில் மவுனமுற்று நிர்ச்சிந்தையாய்
அலகையைப்போன்ற மனதை சைதன்ய வஸ்துவினிடத்திற்
செலுத்தி சமாதியுற் றிருத்தல் வேண்டும் அவ்வித ஸ்தானத்
திற்கே, ஆலயம் என, வழிபடு நூலாகிய புராணங்களிலும்
முறையிடுகின்றன, ஆயினும், சகலரும் கண்ணுற்றுணர்ந்தித்து
இங்ஙனம் பகவான் பிரசன்ன மாயினரென்று நம்புதற்கே விக்
கிரகங்களை வைத்து அவைகளுக்கு கர்ப்பூர தூபதீபாராதனை
செய்து நறுமணம்வீசும் மணமலர்களாற் சிங்காரித்து பதி
னெட்டுவித மேளவாத்தியங்களு முழங்க சுகர்வலமாய்ச்
சுற்றி ஆலயத்திற் கொணர்ந்து யாவரும் பக்தியானந்தமாய்
பூசித்திருப்பர். ஆயினும் அங்ஙனமிருக்கும் விக்கிரகத்தில் பக
வானிருப்பவரல்ல, நமது மனதிற்றான் ஜோதியானந்தமாய்
விளங்குகின்றனர். ஆயினும் சுத்தசைதன்யமாய் விளங்கும்
சர்வேஸ்வரன் கல்லிலும் செம்பிலும் இருப்பரோ? வென,
நினைந்திடினும் மனத்தோற்றம் வாய்ந்தவிட மெங்ஙனு
மிருப்பர் அஃதெவ்விதமெனின் அசுரேந்திரனாகிய இரணி
யன் ஹரியெங்ஙனமிருக்கிறாரெனவும் பிரகலாதாழ்வான் தன்
தந்தையை நோக்கி! எந்தாய் பரப்பிர்ம்மசொரூபியாகிய நாஹரி
எங்ஙனுஞ் சர்வேந்திரியாமியாய் விளங்குகின்றனரென்க. இர
ணியன் வியப்புற்று என்னெதிரிற்றோன்றும் இக்கற்றூணி
லிருப்பரோ? வென, பக்தசிரோன்மணி மேனோல்லாசத்துடன் தந்
தையே மனத்தோற்றமெய்தும் சகலவிடங்களிலும் பகவா
னிருப்பர். ஆயினும் இத்தருணம், நின்மனத்தோற்றம் வாய்ந்த
இக்கற்றூணிலுமிருப்பர். இதற்கு யாதொரு ஆக்ஷேபனையு

மில்லையென்க. இரணியன் ஆச்சரியத்துடன் தன்கரத்திற்றாங்கிய வாளாயுதத்தினால் கற்றூணைவெட்டுதலும் அங்ஙனமே நரஹரி ப்ராப்தமாயினர். ஆகையால், மனத்தோற்றமெய்தும் சகல விடங்களிலும் விளங்கும் பகவானை மனோவாக்குக் காயத்தினாற் றொழுது பக்திபுரிவராகில் அஷ்டவித துர்க்குணங்களும் அருகில்வராமல் விலகிநிற்கும், அத்தருணமே, மனக்குரங்கு யாதொரு சேஷ்டையுமின்றி சடிலையுடன் விளங்குமாகில் காற்றை நிகர்த்த துர்க்குணங்களாலும் யாதொருபயமின்றி அசைவற்று, தீபப்ரகாசமாய் விளங்கி ஆக்ஞேயத்தைநாடி சதாசிவத்திற் பொருந்துமாகில் ஜீவன்முக்தராய் மறுஜனனமின்றி ஜோதியானந்தமாய் விளங்குவர்.

மதிவதனன் :—ஸ்வாமின் நீவிர் புகன்றவை யனைத்துங் கவனித்துணர்ந்த யான் புனிதனாயினேன். ஆயினும், என்மனதிலோர் ஆச்சர்யமான சந்தேகமெய்தலாகியது, அஃதியாதெனின் இத்தகைய நன்மார்க்கத்திற் சிறந்துய்வது கஷ்டமின்றியதாயிருக்கின்றனவே. சகல மனிதரும் அவ்விதமாய் முயல்வதைவிடுத்து, துர்க்குணங்களில் மனதைச்செலுத்தி அனேகவித கஷ்டநிஷ்டூரமெய்தி ஜனனமரணமென்னும் பவபந்தசாகரத்தினாற் கவலையுற்று பாபிகளாய்த் திரிவானேன். இஃதுண்மையின் இரகஸ்யமனைத்தும் யான் நன்குணரும்பொருட்டு ஐயமற அனுக்கிரகம்புரிவீர்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! நீ வினவியதும் உண்மையே. ஆயினும், அனேகஜனனங்களிலும்மனவைராக்கிய பக்தியிலையாயிருப்பவர்கட்கே முக்திநிலை சித்திக்குமன்றி, திடீரென வாய்ப்பதரிது. அஃதேனெனின் யாதாமொருவரும், தனதுமனதை எவ்விதமாயினும் பக்தியிற் செலுத்துவோமெனினும் மாயையால் சூழப்பட்ட அஞ்ஞானமே பீடித்து தீபப்பிரகாசமென விளங்கும் மனதை ஆக்ஞேயத்திற் செல்லவொட்டாமற் றடுத்து, அஷ்டவித துர்க்குணங்களெனும் காற்றிலகப்பட்ட தீபச்சுடர்போல சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதத்திலும் மாத்திரம் பிரவேசித்து, சிருஷ்டி, திதி, சங்காரங்கட்கு மாத்திரம் உட்பட்டதையாயிருக்கும் ஆதலால், ஜனனந்தோறும் புரிந்த பகவத்ப்ரீதி பக்தியர்வத்தப் கிஞ்சிற்று சூழுமாகில் விசுத்தியைநாடி கல்விகேள்வியிற்றேர்ந்து தத்துவவிசாரணைபுரிந்து ஞானாசிரி



யன் உபதேசம்பெற்று, மறுஜனனத்திலேனும் ஞானபானுவாய்விளங்கி சுத்தசைதன்யமாய் ஆக்ஞேயத்தில் மனதைச் செலுத்தி ஜனனமரண துன்பத்தி லுழலாமல் பரப்ரம்மவஸ்துவாகிய ஜோதியில் ஐக்யமாவர்.

மதிவதனன்:—ஸ்வாமின்! நீவிர் புகன்றவையனைத்தும்வினவிய யான் மிகவும் புனிதனாயினேன், ஆயினும் எத்தகைய முயற்சி புரிந்திடில் தீபப்ரகாசம்போன்ற மனதை துர்க்குணமெனுங்காற்றிற் சிக்கவிடாமல் ஆக்ஞேயத்திலிருத்தி சைதன்ய மயமாய் சரீரசம்பந்தமற்று பிரம்மானந்த மெய்துவரோ? வென கிஞ்சிற்று சந்தேகமெய்தலாயினேன்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! பிரம்மானந்தத்தை விரும்பினவன் முன்னம் சகுணமாகியமும்மூர்த்திகளையாவது நிர்க்குணமாகிய பரப்பிர்மத்தையாவதுமனோவாக்குக் காயமிம்மூன்றினும் பக்தி வைராக்கியத்துடன் உபாசித்துவராகில் அக்கினியில்வீழ்ந்த சருகைப்போலச் சகலபாபங்களும் பஸ்பமாய் "பருதியைக் கண்ட பனிபோற் பறந்து" புண்ணியம்மேலிட்டு, நித்தியமான மோக்ஷமார்க்கத்தைக் காட்டும் சத்குரு தரிசனங்கிடைக்கும். அந்தசத்குருநாதனுக்கு பயபக்திவிஸ்வாசத்துடன் பணிவிடை செய்வதால் பெருங்காற்றிற் சிதறிப்போகும்பஞ்சுபோல்துர்க்குணஞ்சிதறுண்டுபோகும். ஆயினும், ஆசிரியன் உபதேசிக்கும் ஞானோபதேசத்தையேகாந்தஸ்தானத்திலிருந்துதியானித்துணர்வராகில்காற்றில்லாவிடத்திலுள்ள தீபத்தைப்போலச் சகலசஞ்சலங்களும்நீங்கி ஏகாந்த சித்தமெய்தி, சற்குரு முன்னிலையில், தேகத்தையும், நவத்துவாரங்களையும், சுவாசத்தையும், அந்தக்கரணங்களையும்,நான் றான்றிருக்கும் ஜீவனையும், இவற்றிற்காதாரமாகியசுத்தசூன்ய அஞ்ஞானத்தையும், ஜாக்ராவஸ்தையின் க்ருவிகளின் சேஷ்டையையும், சொற்பனத்தில், மனதின் ஆர்ப்பாட்டத்தையும், சுழுப்தியில் சூனியத்தையும் அறிந்துக்கொண்டு, சாக்ஷியாயிருக்கும் பிரம்மம் ஒன்றேயெனத் தோற்றும், மஹாவாக்கியார்த்த சிரவணஞ்செய்யிற், சூரியோதயத்தால் நீங்கும் இருளைப்போல அஞ்ஞானம் நீங்கி, தேகம் அனித்தியம் நாம் நித்தியம், இந்திரியங்கள் துரியமயம், நாம் ஆனந்தமயம் அந்தக்கரணஞ் சலனசுபாவம். நாம் நிர்ச்சலசுபாவம், வாயுதேகத்திற்கு ஆதாரம். நாம் யாவற்றிற்கும்

ஆதாரம். ஜீவன் நானென்பது, நாம் நானற்றது, அஞ்ஞானம்
சத்தசூனியம். நாம் அகண்டபரிபூரணமென்று மண்டூகத்தின்
கண்டத்தைப்போலவும், சிசுக்களின் உச்சியைப்போலவும்,
மானிடர்க ளிர்தயத்தைப்போலவும் சதாமனனஞ்செய்துக்
கொண்டிருந்தால் சந்தேகமற்றதுபோல, சர்வசந்தேகமும்
நிவர்த்தியாகும். ஆனால், தேகாதிகள் நாமல்லாததால் நமக்கு
தருமாதருமம், பந்தமோக்ஷ ஜனன மரணங்கள் முக்காலத்
திலும் அணுகாது, அன்றியும், சகல சாக்ஷிகளின் கூட்டமே
சர்வசாக்ஷியாகிய பிர்ம்ம மென்றும், பிரமமேசாக்ஷி ஸ்வரூப
மாகிய நானென்றும், ஜனனமின்றிய எனக்கு மரணமேதென்
றும், ரூபமின்றிய எனக்கு விகல்பமேதென்றும், மரணமின்றிய
எனக்கு பயமேதென்றும், பரிபூரணமாயிருக்குமெனக்கு தேக
மேதென்றும், முக்காலத்திலும் ஒரியல்பாயிருக்கு மெனக்குக்
காலமேதென்றும், என்றைக்கும் அழியாமலிருக்கு மென்னி
டம் முன்னும் பின்னும் மித்தையான இந்திர ஜாலவித்தையைப்
போன்ற இப்பிரபஞ்சம் முழுமித்தை யென்றும், என்று மழி
யாதிருக்கும் பிர்ம்மமே நானென்பதற்குச் சந்தேகமே யில்லை
யென்றும் திடமாய் நித்தியானந்தத்தாற் றெளிந்து கொள்ள
வேண்டும்.

மதிவதனன்:—சுவாமின்! தேவரீர் அனுக்கிரகம் புரிந்த ஞானோப
தேசத்திற்கு வழிபடு மார்க்கத்திற்குரிய ஸ்தானம் ஆரண்யந்
தானோ? அன்றி, எங்ஙனமேனும் மனோவாக்குக்காய மிம்மூன்
றினும் பக்தி வைராக்யமாய் பிர்ம்மானந்த மெய்துவதற்கு
முயன்றிடினும் இராகாதிகளாற் பற்பலவிதம் மதி சிதறுண்டு
மனக்குரங்கு தனக்கியன்ற வழியெல்லாம் சென்று ஆத்ம
நாதனை அறிவினு லுணரச் சக்தியற்று சஞ்சலத்திற்சிக்கி துய
ருறச் செய்யுமோ? வென, சந்தேகமெய்த லாயினேன்.

ஆசிரியன்:—இராஜ புத்திரா! ஞானப்பார்வை தோற்றும் வரையில்
மாயப்ரபஞ்சத்தில் விளங்குவ தனைத்தும் மயக்கமேயன்றி உண்
மை விளங்காது; அஃதெவ்விதமெனின் உலகம் மெய்யென்
றும், தேகந்தானென்றும், பந்தபாசங்க ளுண்டென்று நினைக்
கச்செய்யும் விபரீத பாவனை யொழிந்து, தேகமிருந்தா
லென்ன? இறந்தாலென்ன? காட்டிலிருந்தா லென்ன நாட்டி



லிருந்தாலென்ன? பிராரப்தமாகிய இந்த ஸ்தூலம் சுகத்தையும்,
துக்கத்தையும் அனுபவித்தே தீர்க்கவேண்டும். அன்றியும் உள்
ளதுபோகாது, இல்லாதது வாராதென்றும் சகல இச்சைகளு
மற்றுபுற்றினுள்ளிருந்து புறப்படும் ஈசலைப்போல உள்ளத்தி
லிருந்து உதிக்கும் சங்கற்பங்களை இந்திரியங்களின் வழியாய்ச்
செல்லாமல் மீனையுண்ணும் கொக்கைப்போலுண்டு இச்சை
யென்னும் மடுவிலிருக்கும் நினைப்பென்னும் மச்சங்களை எல்லாம்
நாசஞ்செய்து இச்சையின்வழியாய் மனதைச் செல்லாமல் நிக்ர
கித்து நிஸ்தரங்க சமுத்திரத்தைப்போல வசைவற்றுக் கூடஸ்த
பிர்ம மாத்திரமாய் இருப்பது சமாதியென்று சொல்லப்படும்.
இதனால் சுழுத்தியிலுண்டாகுஞ்சுகத்தைப்போலக்கண்டு ஆனந்த
முண்டாகும் இத்தகைய எல்லையில்லாச் சுகானந்தக் கடலிற்
படிந்து, தன்னைமறந்து, தலைவனிற்கலந்து, திக்குதேசாதிக
ளிறந்து, நிரியக்ஸ்வரூபத்திற் கரைந்து, எங்ஙனும் நிறைந்து,
முகபாவத்தையடைந்து, தான் இன்னானென்றுந் தெரியாமல்,
சுத்தாசுத்தத்தையுங் குறியாமற் பேசுவதும், உண்பதும், சொற்
பனத்திற் கண்டுங்காணாத காக்ஷிபோ லுணர்ந்தும் உணராமல்
பேயன், பித்தன், உன்மத்தன், சிசுவைப்போலாகி ஊரீஹாராதி
கள் பிரத்தியக்ஷமானாலும், மாயாமயமென் றறிந்து. சிரசரிவ
தும் தெரியாமல் ஆனந்தாவேசம் மேலிட்டு ஜாக்ரசுழுத்தியின்
நிலைமைமேவி. பிர்மமாத்திரமாயிருப்பது, சாக்ஷாத்காரம். இத
னைக் கற்புள்ள கன்னிகைக்குச் சாயுச்சியபதவிகிடைப்பதுபோற்
சாலோக, சாமீப, சாரூப சாயுச்சியமென்னும் நான்குபதவிகட்
கப்பாற் றொன்றும் ஐந்தாம்பதவியாகிய ஆனந்தமாத்திரமான
கைவல்லியங்கிடைக்கும்.

மதிவதனன்:—சுவாமின்! இத்தகைய ஆனந்தமும் குருஉபதேசத்தி
னாலன்றோ? தேவரீர்! அடியேனுக்கருள்புரிந்த இத்தியாதிஞான
ரகஸ்யமனைத்தும் வினவிய மதியீனனாகிய என்னைத் தேளிவு
றச் செய்தீரென மனோல்லாச மெய்தினேன்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! பற்றற்றஞானிகள், மதிப்பதியாதெனின்
பிரமமே இஷ்டதெய்வமென்றும், தெய்வமே சத்குருவென்
றும் குருசேவையே சகலகிரியைகளென்றும், குருஉபதேசமே
வேதமென்றும், வேதமுடிவே வேதாந்தமென்றும் வேதாந்த

சிரவணமே மோக்ஷமார்க்கமென்றும், மோக்ஷ இச்சையே தபோபலமென்றும், தபோபலமே மனனமென்றும், மனனமே நித்தியாசனம் சமாதி நிஷ்டையென்றும், நிஷ்டையே சாக்ஷாத்காரமென்றும் சாக்ஷாத்காரமே பிரமமென்றும், பிரமமே ஆனந்தமென்றும் ஆனந்தமே முக்தியென்று முணர்வர்.

மதிவதனன்:—சுவாமின்! இத்தகைய மஹான்களின் நிலை எவ்விதமிருக்கவேண்டும்.

ஆசிரியன்:—இராஜபுத்திரா! ஞானிகளின்நிலை எத்தகையதாய்த் தோற்றுமெனின் இஷ்டதெய்வத்தின்மீதும், சிரவணார்த்தங்களின்மீதும் சிரத்தை பூரணமாய் இருக்கவேண்டும் பரமாசாரியர் மீதிலிருக்கும் சிரத்தையானது பிரமஞானத்தைக்கொடுக்கும். இஷ்டதேவதை மீதிலிருக்கும் சிரத்தை பாபவிமோசனமாக்கும், சிரவணார்த்த சிரத்தையன்றியவனுக்கு ஞானத்தோற்றமானது மனதிற் றரிக்காது. சிரத்தை பூர்ணமாய் இருப்பவனுக்கு பிரம்மானந்தம் உதயமாகும் எப்போது ஆசிரியருடைய பரிபூரணக் கிருபை பெறுவானோ அத்தருணமே ஞானப்பிரகாசம் உதயமாகும் அஞ்ஞானபாசம் அற்றுப்போகும். ஆத்மவிலாசம் விஸ்தரிக்கும் மதிவதனா! இவ்வளவு பிரமானந்தமும் குரு உபதேசத்தினாற் கிடைக்குமென் றுணர்வாய்.

எனா, ஆசிரியன் புகன்ற ஞானோபதேச மனைத்தும் வினவிய இராஜபுத்திரனாகிய மதிவதனன் பிரமானந்த சாகரத்தில் மூழ்கினவனாய் சரீரசம்பந்தமற்று மனதை ஆக்ஞேயத்திற் செலுத்தி பற்றற்ற ஞானசொரூபியாய் சதாசிவத்தை நாடி மவுனமுற்று நித்தியானந்தமாய் ஆசான் திருவருளைச் சிந்தித்து தான், தனது அவன், நான், நீ, யென்னும் பேதாபேத சந்தேகமற்று தோற்றமெல்லாம் அழிவென மதித்து, பிரமமே தானாய் விளங்கி, யாவும் சிவமயமென யோகானந்தமாய் நிஷ்டையி லிருப்பதாயினன்.

இங்ஙனம் இராஜகுமாரன் நிலை இவ்வித யோகானந்த மவுனத்திலிருக்கையில், இராஜன் தனது மைந்தனுக்கு பதினாறு வயதானதால் அவனுக்கு திருமணஞ் செய்வித்து நேத்திரானந்தமாய்க் காணவேண்டுமென்க. ஆவலுற்றவனாயினும், தனது மைந்தனாகிய மதிவதனன் கடத்தை ஓர்விதமாய்த் தோற்றுவதால் சந்தேகமுற்று அருகிலிருந்த மந்திரியை வினவுதலாயினன்.



அரசன்:—மந்திரி! என்சந்ததி பெருக வந்துதித்த மைந்தனாகிய மதிவதனனுக்குத் தற்சமயம் பதினாறு வயதாகின்றது, ஆயினும், அவனுக்குத் திருமணம் புரிவோமென மதித்திடினும், அவன் நம்மைப்போற் காணப்படவில்லை. சுத்த சைதன்ய ஞானிகளைப் போற் சித்தத்தைச் சிவன்பாற் செலுத்தியசுத்தவைராக்கியனைப் போற் காணப்படுகின்றது. அன்றியும், மனிதர்கட் குரித்தாகிய மனக்களிப்பு, பெருநகை, பந்தத்வ ஆசாபாசம் முதலாகிய உலகியற்கை யாதுமின்றியவனாய்த் தோற்றுகின்றனனே. இஃதென்ன விபரீதமோ? கவனித்துணர்வாய்.

மந்திரி:—அரசே! நீவிர் மொழிந்தவை யனைத்தும் உண்மையே! ஆயினும் எத்தகைய ஞானிகட்காயினும், தபசிகட்காயினும், கிஞ்சிற்று ஸ்திரீ மாய்கை சூழுமாகில், அஞ்ஞானத்தி லழுந்து அஷ்டவித துர்க்குணத்தினராய் தாய் தந்தை பந்தத்வ மித்ரரெனும் ஆசாபாசங்களிற்சிக்கி உலகியற்கைக் கிணங்கியிருப்பர்.

அரசன்:—சரி! அவ்விதமாயின் அவன் மனதைத் திருத்துவதெவ்விதம்?

மந்திரி:—அரசே! மதிவதனனை இங்ஙனம் வரவழைத்துத் தந்திரமாய் அவன்மனதைக் கலைத்து திருமணம் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பரென ஆக்ஞாபித்தல்வேண்டும்.

அரசன்:—மந்திரி! நின் புத்தி சாதுர்யத்திற்கு யான் மிகவும் மனக்களிப்புற்றேன். ஆதலின், நின் மனதின்படியே மதிவதனனை அதிதீவிரமாய் அழைத்துக்கொண்டு வருவாய்.

எனா, அரசன் புகன்றவை யுணர்ந்த மந்திரியும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்து, மதிவதன னிருக்கும் மாளிகையில் வந்து ஐந்துநாள் வரையினும் அவனிருக்கும் யோகநிலையைக் கண்ணுற்று மனமிரண்டு, இஃதென்ன விபரீத ஆச்சர்ய காக்ஷியாயிருக்கின்றனவே, வனத்திற் சென்று அருந்தவம் புரியும், யோகீஸ்வரராயினும் தமது வயற்றுப்பசி தணிய காய் கனிகளை புசிப்பதற்காயினும் யாதாமொரு சமயம் கண் திறப்பர். இந்த மதிவதனனோ

வெனின் ஐந்து நாள் வரையினும் கண்ணைத் திறவாமல் மவுனநிலையி லிருக்கின்றனனேயென வியப்புற்று, அரண்மனையிற்சென்று அரசன்பாற் புகல அவ்வேந்தனும் ஆச்சர்ய முற்றவனுய் மைந்தனிருக்கும் மாளிகையில்வந்து அவன் நிலையைக் கண்ணுற்று மனவிசார மெய்தியவனுய் விசனமுற் றிருக்கையில், தெய்வாதீனமாய் ஓர்நாள் மதிவதனன் கண்ணைத்திறந்து எதிரிலிருப்பவரைப் பார்த்து நீங்கள் யாது காரணமாக இங்ஙனம் வந்தீர்களென்று வினவினன்.

அரசன்:—எனது சந்ததி பெருக வந்துதித்த செல்வக் களஞ்சியமே நீ இவ்விதமாய் உலகாசையை வெறுத்து மவுனநிலையி லிருப்பது நீதியல்ல. இத்தருணமே என் மனக்களிப்பெய்த நின்மனதிற் கிசைந்த கன்னியைத் திருமணம்புரிந்து இந்நகரத்தையும் பரிபாலனஞ் செய்துக்கொண் டிருப்பாய்.

மதிவதனன்:—தந்தையே! யாதுவசனம் பாஷிப்பதாயினீர்? ஜனனங்கள்தோறும் பாப கிர்த்தியம்புரிந்து மரணமுற்ற ஊழ்வினைக் கிசைந்த விதமாய் அஞ்ஞானிகளாய்ப் பிறந்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கை முதலாகிய அஷ்டவித துர்க்குணங்களுடனும், அவைகட்கனுகூலமாய் விளங்கிய பொய், கொலை, களவு, கட், காமமென்னும் பஞ்சமா பாதகங்களையும், சொந்த பந்தத்வம்போற் பாவித்து துர்க்குணத்தினராய்த் திரிந்து தான், தனதென்னும் ஆசா பாசத்திற் சிக்கியு மதியீனருக்கன்றோ? மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்னும் மூவாசை வாய்ந்திருக்கும் என்போன்றவர்கட்கு. அத்தகைய அஞ்ஞானத்தாற் சூழ்ந்த மூவாசையும் வாய்ப்பதற்கு முடியாதென் றெண்ணுவீர். அன்றியும்,

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நிஷ்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க
ணிமலன் றனை
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெருமளவும் பெரியசுகம்
கிடைக்கும் மாந்தர்
இஷ்டமதாய்த் தமதீருமை மைந்தருக்கு மணம்பேசி
விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங்
கவலை தானே.



என, கற்றுணர்ந்த கவிஞர்களாற் புகலரும் நீதிசாஸ்திரத்திற்கிணங்க, ஜனனமரண மென்னும் துன்பமின்றி சதா யோக நிலையிலிருக்கும் ஞானிகள் பரமசிவத்தில் ஐக்யமாகும் வரையில் பிர்மானந்தமாகவே யிருப்பர். அன்றி ஊழ்வினைப் பயனுற ஜனித்து கர்மானு சாரங்களை யனுபவிக்கும் மாந்தர்கட்கு மாயாமயக்க மென்னும் அன்னை தந்தையர் யாதாமொரு பெண்ணைத்தேடி திருமணம் புரிவராகில் அவன் ஆயுள் வரையினும் பந்தத்வ ஆசாபாசத்திற்சிக்கி வாழ்நாள் குறுகிய பின்னர் எமதூத ரேவிய பாசகயிற்றுற்சிக்கி பரதவித்து மரண மெய்திடினும் மனைவிமைந்த ராசையை மனதில் வகித்து மறுஜனனத்திலும் ஊழ்வினைக் கேற்ப காமபூமியில்வந்து பிறந்து துயரடைகுவர். ஆகையால், யான் இத்துயர அஞ்ஞான மார்க்கத்திற் பிரவேசிக்க மாட்டேன். நீங்கள் உமதிருப்பிடஞ் செல்வீரென்றனன். அவ்வார்த்தைகளைக்கேட்ட அரசன் மனவிசாரத்துடன் தனதுஅருந்தவப்புத்திரனுக்கு அநேக விதவிதமாகிய நீதிசாஸ்திர மனைத்தும் புகன்றும் செவியிற் கொள்ளாமல், இனி இவனை யிருந்தால் பாச பந்தத்தினால் அஞ்ஞானம் மேலிட்டு விஷயாதிகளின் விபரீத சேஷ்டையால் மனக்கூசாதும் பற்பல விதமாய்ச் சென்று துயருறச் செய்யுமென்று, ஆரண்யத்தை நாடிச் செல்வதாயினன். இங்ஙனம், மதிவதனனின்நிலை ஞானானந்தமா யிருப்பதைக் கவனித்த அரசன் மைந்தன்மனதைத் திருப்ப வசமின்றிய மனவிசாரத்துடன் தனது முதன்மந்திரியை அருகிலழைத்துச்சொல்வதாயினன்.

அரசன்:—மந்திரி! நீ எனதுமைந்தனுகிய மதிவதனனுடனே சென்று சமயத்திற்கேற்ற விதமாய் அவன் மனதைக் கலைத்து, யாதாமொரு கன்னிகையைத் திருமணம் புரிந்துகொள்ளும் விதமாய்த் தந்திரஞ்செய்து இன்னும் ஒரு மாதத்திற்குள் அரண்மனையில் அழைத்துக்கொண்டு வருகுவாய்.

என்று மொழிந்ததை யனைத்தும் வினவிய மந்திரியும், அவ்விதமே நன்றெனச் சம்மதித்து மதிவதனனுடன் செல்வதாயினன். அத்தருணம், அந்நகரத்தி லிருக்கும் ஓர் வைசியன் புத்திரியாகிய சுந்தரி யென்பவள் தனது தோழியருடனே மனோல்லாசமாய் நந்தவனத்தில்வந்து அங்ஙனம் அடர்ந்து செழித்து புஷ்பித்திருக்கும் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், அல்லி, அசோகு, கொன்றை, குரிவேர், தவனம், நந்தியாவட்டை, மகிழம், மனோரஞ்

சிதம், தாமரை முதலாகிய மணமலர்களைப் பறித்துச் செண்டாகப் புனைந்து பந்தாடிக்கொண் டிருக்கையில் அந்த நந்தவனத்தில் விசாலித்து,அடர்ந்து செழித்திருக்கும் மா,பலா, வில்வம்,கொய்யா, வாழை,தென்னை, கமுகு, மாதுளை, ஆல், அரசுமுதலாகியவிருக்ஷங்களின்கிளைகளில் வசித்துலாவும், மயில், குயில், காடை,கவுதாரி பஞ்சவர்ணக்கிளிகள்முதலாகியபறவையினங்கள்தமதுகுரலொலிதொனிக்கிசைந்த பற்பல ராகத்தாலும் சங்கீத சாஹித்யமாய்ப் பாடிக்கொண்டிருப்பதைச் செவிகுளிரக்கேட்டு ஆனந்தமுற்ற வைசியப் பெண்ணாகிய சுந்தரி மனமகிழ்ந்து தனது தோழிகளைப் பார்த்து, அம்மம்மா, இம்மானிலத்திற் ஜனிக்கிற் காணும் சுகம் யாதெனின் வாலிபதிசையில் மனதிற் கிசைந்த மணாளனுடனே வாழ்ந்திருப்பதே மனிதரியல் பெனினும் பறவை யினங்கட்கும் அவ்விதமே தோற்றுதென மனோல்லாசத்துடன் தனது அழகிய வாயைத்திறந்து முல்லையரும்பெனத் துலங்கும் பல் வரிசை பளபளவென ஜொலிக்கும்படியாய் குயிலினம்போற் சங்கீத சாஹித்ய மமைந்த திவ்யபாடல்களைப் பாடிக்கொண் டிருக்கையில் வேதாந்த விசாரணையிற் றேர்ந்து ஞான சொரூபியாய்ப் பாசபந்தமற்று ஆரண்ய மார்க்கமாய் வருகின்ற மதிவதனன் கண்டு ஆச்சர்ய முற்றவனாய் தன்வாழ்வினையிறுவல் அஞ்ஞானம் மேலிட்டு அருகிலிருக்கும் மந்திரியைப் பார்த்துச் சொல்லுவதாயினன்.

மதிவதனன்:—மந்திரி! இந்த மாதரசியின் முகவசீகர தேஜஸமைந்த ரூபசுந்தரத்தைப் பார்த்தனையா? காளமேகத்தை நிகர்த்த கூந்தலும், பூரணச் சந்திரன்போன்ற நெற்றியும், வேப்பிலை போன்ற புருவமும், சேற்கண்டை போன்ற இருவிழிகளும், குமிழ மலர்போன்ற நாசியும், வள்ளைக் கொடியில் மின்மினிப் பூச்சிகள் பிரகாசிப்பதுபோற் செவிகளி லணிந்திருக்கும் நவரத்தின கசிதமாகிய பொன்னாபரணந் துலங்க பொற்பதுமை போற் காண்போர் மனதை மயக்குந் தன்மையாய் முல்லையரும்பெனத் துலங்கும் பல் வரிசை பளபளவென ஜொலிப்ப, குயிலினம் பரவிக்குந் தன்மையாய்ப் பாடிக்கொண் டிருப்பதைக் கண்ணுறும் ககனத் தமரரும் மதிமயங்குவ ரெனின் மாநிலத்தோர் மனமெவ்வித மிருக்குமோ? அன்றியும், இத்தகைய முகவசீகர தேஜஸமைந்த ரூபசுந்தரியையும் பிரம்மதேவன் யாது காரணத்தாற் சிருஷ்டித்தனனோ?

மந்திரி:—இராஜபுத்திரா! உலகிற் ஜனித்த மாந்தர்கள் ஆனந்தமாய் வாழ்ந் திருப்பதற்கு பிரம்மதேவன் ஸ்திரீகளைச் சிருஷ்டித்



திருக்கின்றனர், ஆகையால், எத்தகைய தேவரும் முனிவர்களும் ரிஷிகளும் தமது மனதிற் கிசைந்த ஸ்திரீகளை மணம் புரிந்து மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பர். அன்றி, மணமில்லாதவர் மனிதரிற் பதரெனப்படுவர்.* ஆகையால், இராஜபுத்திரா! உன் வாழ்நாள் வீணாகாமல் இந்தக் கன்னிகையைத் திருமணம் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பீராகில் மிகவும் உத்தமமாயிருக்குமென் றுணர்வீர்.

மதிவதனன்:—மந்திரி!யானு மவ்விதமே யோசிக்கின்றேன். நீ! இதற்குத்தகுந்த முயற்சிசெய்து அக்கன்னிகையை எனக்குத் திருமணஞ்செய்துவைப்ப துமதுபேருதவியென நம்புகின்றேன்.

என, இராஜபுத்திரனாகிய மதிவதனன் புகன்றவை யனைத்துங் கவனித்த மந்திரியானவன் மனமகிழ்ந்து, அத்தருணமே அதிவேகமாய் அரண்மனையிற் சென்று அமிர்தவாசகமஹாராஜனிடம் கானகத்திலுற்ற காரணமனைத்தும் விபரமாய்ப் புகன்றனன். இங்ஙனம் மந்திரியின் வார்த்தையைக் கேள்வியுற்ற அமிர்தவாசக மஹாராஜன் மனமகிழ்ந்து, மந்திரி! நீ இத்தருணமே நமது அரண்மனைத் தோழிப் பெண்களிற் சிலரை அழைத்துச் சென்று நந்தவனத்திலிருக்கும் என் மைந்தன் மனதிற் கிசைந்த பெண்ணைத் தந்திரமாய் அழைத்து வருவாயென்று, நவரத்தின கசிதமாய்த் துலங்கும் முத்துப் பல்லக்கும் அனுப்பினன்.

இங்ஙனம் நிற்க, நந்தவனத்தில் வந்திருக்கும், சுந்தரியானவள் தனது தோழிப் பெண்களை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்லுந்தருணம், மதிவதனன் மனது ஆசாபாச மென்னும் காற்றிலகப்பட்ட தீபச் சுடர்போற் பற்பல விதமாய்ச் சிதறுண்டு இந்தப்பெண் நம்மைத் தனிமையாய் விடுத்துச் செல்கின்றனளே யென மனமெலிந்து, மனவிசாரத்துடன் அவர்களுடனே செல்லுவதாயினன். அத்தருணம் அரண்மனைத் தோழிப்பெண்களை அழைத்துக் கொண்டுவந்த மந்திரியானவன் ஓடிவந்து சுந்தரியைப் பார்த்து அம்மணி உம்மை இந்நகரத் தரசன் அழைத்துவரச் சொன்னாராகையால், இந்த முத்துப்பல்லக்கில் அமர்ந்து அரண்மனைக்கு வருகுவீரெனலும் சுந்தரியானவள் ஆச்சர்ய சந்தேகக் கலவரத்துடன் சொல்லுவதாயினள்.

* இங்ஙனம் மந்திரி இராஜகுமாரனை இல்வாழ்க்கையில் மனதைச் செலுத்த சமயோசிதமாய் புகன்றவையெனக் காண்க.

சுந்தரி:—ஐயா! இஃதென்ன ஆச்சர்யம்? வழியிற் செல்லும் என்னை உமது அரசன் யாது காரணமாக வரவழைத்தனர்.

மந்திரி:—அம்மணி! எமது இராஜ குமாரனாகிய இம்மஹானுபாவர் உன்னைத் திருமணம் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பதை இச்சித்தமையால் அரசன் உம்மை அழைத்து வரும்படியாக ஆக்ஞாபித்தனர்.

சுந்தரி:—ஐயா! நீர்சொல்வதைக் கவனிப்போர் ஆச்சர்யமெய்தாரன்றோ? அஃதெவ்விதமெனின் உமது இராஜ புத்திரனுக்கு திருமணம் புரிவதற்கு இராஜ வம்ஸத்தினர்களிற் பெண்களில்லையா? வைசியப் பெண்ணாகிய என்னைத்தானா விரும்புவது? இது நீதியல்லவென்று உமது அரசனுக்குத் தெரிவிப்பீர்.

மந்திரி:—அம்மணி! தானாகவரும் அதிர்ஷ்டானு கூலத்தைத் தள்ளிவிடுவது நன்கல்ல. உலகத்தில் ஸ்திரீகளாய் ஜனித்தவர்கள் யாதாமொரு புருஷனை மணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பதுதான் இல்லற மார்க்கத் தியல்பு. ஆகையால் நீ என் வார்த்தையைத் தடுக்காமல் அரண்மனைக்கு வருவாயம்மா.

என, மந்திரி மொழிந்தவை யனைத்துங் கவனித்த சுந்தரி மனோல்லாசமெய்தி, நாம் இத்தருணம் சம்மதியாவிடில் இவ்வளவு அதிர்ஷ்டானுகூலம் வாய்ப்பது அருமையென, தன்னுடன் வந்த தோழிப் பெண்களுடன் பல்லக்கில் அமர்ந்தனள். அப்பால், மந்திரி மனமகிழ்ந்து ஊழியர்களால் பல்லக்கை யெடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் போகும்படி ஆக்ஞாபித்துத் தானும் இராஜகுமாரனுடனே சென்று அமிர்தவாசக மஹாராஜனைக் கண்டு நிகழ்ந்தவை யனைத்தும் புகன்றனன்.

அப்பால், அமிர்தவாசக மஹாராஜன் சுந்தரியின் தாய் தந்தையரை அழைத்து அவர்கள் மனதிற் கிசைந்த விதமாய் சகல தேசத் தரசரையும் வரவழைத்து, அவரவர்க் கிசைந்த ஆசனமளித்து வீற்றிருக்கச்செய்து, கலியாண மண்டபம் ஜோடித்து மதிவதனனுக்கும், சுந்தரிக்கும் மங்கள ஸ்நானஞ் செய்வித்து நவரத்தின கசிதமாய் விளங்கும் ஆடையாபரணங்களால் சிங்காரித்து சுமங்கல்ய ஸ்திரீகளால் இருவரையும் மணவரையி லமர்த்தி பதி

...டுவித மேளவாத்திய முழங்க வேதவேதியர் ஆசீர்வதித்து ...க்ஷதைத்தூவ கலியாணச் சடங்குக ளனைத்தும் குறைவின்றி ...த்தி சுந்தரியின் கழுத்தில் மதிவதனனால் மங்கிலியந் சூட்டச் ...சய்து யாவரும் மனமகிழ்ந்து அக்ஷதைத்தூவி ஆசீர்வதித்தனர்.

இங்ஙனம், நிற்க, கலியாணத்திற்குவந்த இராஜ ராஜாக்கள் பந்தத்வ மித்திரரனைவரும் விருந்தமுதருந்தி அவரவ ரிருப் ...ட மேகினர். அப்பால், சிலநாட் சென்றபிறகு அமிர்வாசக மஹா ...ராஜன் தனது இராஜ்யத்தை மதிவதனனுக்கு மகுடாபிஷேகஞ் ...செய்வித்து வாழ்நாள் குறுகிய பின்னர் ஆவியகன்று அரன்பதி ...யணுகினன்.

அப்பால், மதிவதன மஹாராஜன் சிம்மாசனத்தி லமர்ந்து சந்ததமும் தெய்வ பக்தியிற் சிறந்தவனாய்த் தான தர்ம ...பரோபகாரம் புரிந்து துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனனென் றவனி ...யோர் புகழ்ந் துரைப்பக் குடிகள்மீது கருணைவாய்ந்து, சிற்றரசர் திறைசெலுத்த தீரவீரப்ரகாசமாய் அரசுரிமை புரிந்து தனது பத்தினியாகிய சுந்தரியுடன் மனோல்லாசமாய் வாழ்ந்துக்கொண் டிருக்கையில் சுந்தரி கர்ப்பவதியாகி ஓர் சுபதினத்தில் ஓர் ஆண்மகவை ...ன்றனள். அத்தருணம், தாதிகள் அரண்மனையில்வந்து சிம்மாசனத்தில் அமர்ந்து அரசுபுரியும் மதிவதன மஹாராஜனுக்குப் புகன்றனர். மதிவதன மஹாராஜன் மனமகிழ்ந்து மைந்தனுக்கு சந்திரவதனனென நாமகரணம் புனைந்து நகரவாசிகளுக்கு சர்க்கரை வழங்கி தான தர்ம பரோபகாரம் புரிந்து மைந்தனுக்கு ஐந்து வயதானபிறகு கல்வி முதலாகிய வித்தை யாவும் கற்பிக்கச் செய்தனர். அப்பால் சிலநாட் சென்றபிறகு சுந்தரிக்கு இரண்டு ஆண் குழந்தையும் இரண்டு பெண்குழந்தையும் பிறந்தனர். மதிவதனமஹாராஜனும் சுந்தரியும் பிள்ளைகள்மீது ஆசாபாசமாய் காப்பாற்றிக்கொண்டு மனமகிழ்ந்திருந்தனர்.

இங்ஙனம், நிற்க, மதிவதன மஹாராஜனுக்கு முன்னம் ஞானோபதேசஞ் செய்த ஆசிரியன் அரண்மனையில் வ... ...வுடனே மதிவதனமஹாராஜன் அவர் திருவடியில் வீழ்ந்து பய... விஸ்வாசத்துடன் ஸ்தோத்திரஞ்செய்து, சுவாமின்! அடியேன் ... ...பாசபந்தத்திற்சிக்கிப் பாதவிக்கின்றே... ஊழ்வினையா லுற்ற...

பாதகாரிரியன் கருணைபுரிந்து மதிவதனா! இனி புன்
ருகிய சந்திரவதனனுக்கு மணி மகுடம் புனைந்து இந்த கோசலே
சகரத்தைப் பரிபாலனஞ் செய்யும்படி ஆக்ஞாபித்து, உனது ம
யாளுடனே தபசிலே யணுகுவா யென்றனர். மதிவதனனும், அவ்
வமே நன்கெனச் சம்மதித்து ஓர் சுபதினத்தில் தனது புத்திரனுகி
சந்திரவதனனுக்கு மங்கள ஸ்நானஞ் செய்வித்து சிம்மாசனத்தி
வீற்றிருக்கச்செய்து நவரத்தின கசிதமாகிய மணிமகுடஞ் சிரசி
சூடி மாசிவம் புரப்பாயென் றாசிர்வதித்து, தனது பத்தினியுட
தபசிலேயணுகி, மனோவாக்குக்காய மிம்மூன்றினாலும் பகவத் பிரீ
யாகிய பக்தியானந்தமாய் பரமேஸ்வரனை குறித்து அருந்தபம் புரி
கையில் கருணாகரன் பிரசன்னமாகி உடன்குறையாத வரம்வேண்டுமோ
கேட்பீரெனலும் மதிவதனமஹாராஜனும் சுந்தரியும் பரமேஸ்வரனை
பார்த்துசுவாமின் அநேகவிதமாய் தோத்திரஞ்செய்து பார்வதிசமே
தா! பக்தரக்ஷகா! யாங்கள் ஜனன மரணமின்றி நித்தியானந்தமாய்
விளங்கும்படியாக பிரமானந்த பதவியருள்வீரெனக, கருணாகரனும்
அவ்விதமே நன்கெனச் சம்மதித்து மதிவதனமஹாராஜனும், சுந்தரி
யும்பிரமானந்த பதவியடையும்படியாக வரந்தந்து கைலைக்குச் செ
ன்றனர். சுபம்! சுபம்!! சுபம்!!!

மானிட வாழ்வானந்த மென்னும்

மதிப்பிரகாச விளக்கம்

முற்றுப்பெற்றது.

O-, 892 M-54, M
Nap
119423